# அன்பின் தன்மையை அறிந்த பின்னே...



ரமணிசந்திரன்

# அன்பின் தன்மையை அறிந்த பின்னே...

ரமணிசந்திரன்

அருணோதயம்
5/3, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை :: சென்னை - 600 014

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : அன்பின் தன்மையை அறிந்த பின்னே... |
| ஆசிரியர் | : ரமணிசந்திரன் |
| மொழி | : தமிழ் |
| முதற் பதிப்பு | : செப்டம்பர், 2000 |
| இரண்டாம் பதிப்பு | : செப்டம்பர், 2002 |
| மூன்றாம் பதிப்பு | : மார்ச், 2004 |
| நான்காம் பதிப்பு | : ஜனவரி, 2006 |
| ஐந்தாம் பதிப்பு | : செப்டம்பர், 2007 |
| ஆறாம் பதிப்பு | : ஜனவரி, 2009 |
| ஏழாம் பதிப்பு | : ஜூலை, 2010 |
| எட்டாம் பதிப்பு | : ஏப்ரல், 2012 |
| ஒன்பதாம் பதிப்பு | : ஏப்ரல், 2014 |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| தாளின் தன்மை | : 11.6 kg. வெள்ளைத் தாள் |
| அச்சு எழுத்து | : 10 புள்ளி |
| நூல் கட்டுமானம் | : சாதா அட்டை |
| மொத்தப் பக்கங்கள் | : 240 |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை, சென்னை-14. |

**விலை: ரூ.100.00**

| | |
|---|---|
| அச்சிட்டோர் | : ஜீ.எம்.கிராபிக்ஸ்,<br>சென்னை-14. |

அன்பின் தன்மையை
அறிந்த பின்னே...

# பதிப்புரை

நல்ல எழுத்துக்கள் என்றால் படிப்பவர்களின் மனத்தில் ஒரு நல்ல மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண உதவ வேண்டும்.

நல்ல எழுத்துக்கள் என்றால் எடுக்கும் முயற்சிகள் வெற்றி பெறத் தூண்ட வேண்டும்.

மனதிற்கு அமைதியும், நிம்மதியும், மகிழ்ச்சியும், தெம்பும் ஏற்பட வழி வகுக்க வேண்டும்.

இப்படிப்பட்ட வழிகாட்டுதலை ஏற்படுத்துகின்ற நவீனங்கள், கதைகள்தான் சிறந்த படைப்பிலக்கியங்கள் என்று வாசகர்களால் பெரிதும் வரவேற்கப்படுகிறது.

அப்படிப்பட்ட வரவேற்பைத்தான் உலகெங்கும் வாழும் தமிழர்கள் பெரும்பாலோரால் பெற்றிருக்கிறது திருமதி ரமணிசந்திரன் நூல்கள். நாளுக்கு நாள் பெருகி வரும் வாசகர்களும், அவர்களின் பாராட்டுக்களும், நல்ல நூல்களை தமிழ் மக்கள் எங்கிருந்தாலும் வரவேற்பார்கள் என்ற நல்ல நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. இந்த நாவல் உங்கள் மனதை மேலும் திருப்திப்படுத்தும்

**- அருணோதயம் அருணன்**

# அன்பின் தன்மையை அறிந்த பின்னே...

## 1

**க**ண்ணாடி முன் நின்று முகத்தைச் சீர் செய்து கொண்டிருந்த வசுந்தராவுக்கு உள்ளேயிருந்து உத்தர விட்டுக் கொண்டிருந்த தாயின் குரல், எரிச்சலூட்டியது.

'எப்படியாவது, இன்று வருகிறவனையாவது, விட்டு விடாமல் பிடித்துக் கொள்' என்று, கீறல் விழுந்த ரிக்கார்டு மாதிரி சொல்லிக் கொண்டே இருந்தால், என்ன அர்த்தம்? அவள் என்ன, வருகிறவனின் கையைப் பற்றியா, பிடித்து வைக்க முடியும்?

அல்லது, ஒவ்வொருவனாக வந்து, நன்றாக மூக்குப் பிடிக்க முழுங்கிவிட்டு, அவளைத் தட்டிக் கழித்து விட்டுச் செல்வதில்தான், அவளுக்குச் சந்தோஷமா?

அன்றி, இப்படி அடிக்கடி யார் முன்னேயாவது காட்சிப் பொருளாக நிற்பதில்தான், மகிழ்ச்சியா?

சொல்லப் போனால், முதலிலிருந்தே அவளுக்கு அதில் மிகவும் வெறுப்புதானே? அருவறுப்பும் தானே? அவளும், உயிரோடு உணர்ச்சியும் உள்ள, கூடவே சிந்திக்கவும் தெரிந்த ஒரு மனிதப் பிறவியாயிற்றே என்கிற எண்ணமே இல்லாமல், அவளது மூக்கு, முழி, நிறம் பற்றி விலாவாரியாகப் பேசி, அதற்கு மேல் நகை, தொகை பேரம் நடத்துவதைக் கேட்க, அவளுக்கும் தான் எப்படி இருக்குமாம்?

ஒருதரம் வந்தவர்களில், ஓர் அம்மாள், வசுவின் தலைமுடியை இழுத்துக் கூடப் பார்த்தாள். ஒட்டு முடியா என்று பரிசோதித்தாளாம். அதிர்ச்சியும் ஆத்திரமுமாக வசுந்தரா தலையை இழுத்துக் கொண்டு முறைக்க, 'சந்தையிலே மாடு பிடிக்கும்போதுகூடப் பல்லைப் பிடித்துப் பாராமல் ஓட்டி வருவது இல்லை, வீட்டுக்கு மருமகளைச் சும்மா இழுத்துக் கொண்டு போக முடியுமா?' என்று கேட்டாள், அந்தப் பெண்மணி.

இழுப்பதாமே?

'மாடும் நானும் ஒன்றா?' என்று கேட்கத் துடித்த நாவை, உறுத்து நோக்கி, உதட்டின் மீது கை வைத்துக் காட்டிய தாயின் சைகை அடக்க, வசுந்தரா வாயை மூடிக் கொண்டு பேசாதிருந்தாள்.

'இழுத்துக் கொண்டு போவது' என்று சொன்னதற்காக, அம்மாவுக்கே, அந்த அம்மாள் மேல் ஆத்திரம்

வந்திருக்க வேண்டும். அதைவிட்டு, மகளான அவளை அடக்குகிறார்களே என்று, உள்ளூரப் பொறுமிய போதும், தாயின் கோபத்துக்கு அஞ்சி, வசுந்தரா, தலையைக் குனிந்து, தரையைப் பார்த்தபடி சும்மா உட்கார்ந்திருந்தாள்.

ஆயினும், அவள் முறைத்துப் பார்த்ததே, பெரும் குற்றமாகி, இந்தத் திமிர் பிடித்த பெண் வேண்டாம் என்று, அந்தப் பிள்ளை வீட்டார் சென்றுவிட, வசுவுக்கு அவள் தாயிடமிருந்து நல்ல திட்டு கிடைத்தது.

பெண் என்றால் ஐம்புலன்களையும் அடக்க வேண்டுமாம், எரிச்சலைக் காட்டக் கூடாது, முகத்தைச் சுளிக்க கூடாது, நினைப்பதைப் பேசக் கூடாது, நிமிர்ந்து நோக்கக் கூடாது.

ஆனால், இந்த மாதிரி அறிவுரைகள் எல்லாம், அடுத்த பெண் விஷயத்தில் மட்டும், அம்மாவுக்கு நினைவிருப்பதே இல்லையே?

செல்லப் பெண் என்ன செய்தாலும் அது தான் சரியென்று, தோன்றி விடுகிறதே. அப்போதுதான், வசுந்தராவுக்கு மிகவும் மனதுக்குக் கஷ்டமாகிவிடும்.

மூத்த மகள் செய்யும் போது, தப்பு என்று சொல்லித் திட்டுகிறவள், அதையே இளைய மகள் செய்தால், ஒரு புன்னகையோடு கண்டு கொள்ளாமல் போய்விடுவாள்.

ஒருவேளை, அவளும், சௌந்தர்யாவைப் போல, அம்மாவைக் கொண்டு அதே அழகுடன், எலுமிச்சம்பழ நிறத்தில் பிறந்திருந்தால், அவளுக்கும் அம்மாவின்

'செல்லம்' கிடைத்திருக்கக் கூடும். ஆனால், வசு, அவள் அப்பாவின் வாரிசாக அல்லவா பிறந்து தொலைத்திருக் கிறாள். அதுதான், அம்மாவைப் பொறுத்தவரையில், வசுந்தரா செய்த பெரும் தவறாக ஆகிவிட்டது.

ஆனாலும், இது ரொம்பவும் அநியாயமாகத்தான், வசுந்தராவுக்குப் பட்டது.

ஒன்று, இந்த அம்மா, அவர்களைப் போலவே, அழகான ஒரு வெள்ளை வெளேர் மனிதரைப் பார்த்துக் கல்யாணம் செய்து கொண்டிருக்க வேண்டும். அதுதான் இல்லையென்றால், அப்பாவை மணந்தபிறகு, பிள் ளையே பெற்றிருக்கக் கூடாது.

குறைந்த பட்சமாக மூத்த மகள், தன்னைப் போல வெள்ளை நிறத்துப் பிள்ளை இல்லை என்று கண்டதும், அவளைக் கொன்றாவது போட்டிருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு இப்போது போய்...

எண்ணம் ஓடிய விதத்தில் வசுந்தரா, சட்டென்று திகைத்து விதிர் விதித்துப் போனாள்.

என்ன மடத்தனமான நினைப்பு இது?

இந்தப் 'பெண் பார்ப்பு' நாடகங்கள் இந்த அள வுக்கா அவளைப் பாதித்து விட்டிருக்கின்றன?

ஆனால், இது எட்டாவது தடவை!

நல்ல வேளையாக காஃபி டிபன் தூக்கி வருவது, எல்லோருக்கும் எடுத்துக் கொடுப்பது அப்புறம், கீழே விழுந்து வணங்குவது போன்றவற்றை எல்லாம், கொஞ்ச

மும் சுயமரியாதையில்லாத் தனம் என்று தந்தை ராகவன் தடுத்து விட்டிருந்தார்.

அதற்காக வீட்டில் ஒரு போராட்டமே நடந்தது.

லட்சணமே இல்லாத பெண், வருகிற மாப்பிள்ளை வீட்டார் சொல்லுகிறபடியெல்லாம் ஆடினால்தான், வசு வுக்குத் திருமணம் என்று, ஒன்று நடக்கும், அப்படி யிருக்க, இது முடியாது, அது கூடாது என்று சொல்லிக் காரியத்தைக் கெடுத்துவிடக் கூடாது என்று, சரசா எவ்வ ளவோ சொல்லிப் பார்த்தாள்.

ஆனால், பல விஷயங்களில், குடும்ப அமைதி கருதி விட்டுக் கொடுக்கும் ராகவன், தன்மானம் காப்ப தில், ஒரே பிடியாக நின்று விடவே, அந்த மாதிரிக் கேவலங்களில் இருந்து வசுந்தரா தப்பினாள்.

அது மட்டுமின்றி, ''என்ன பெரிதாய் லட்சண மில்லை என்று வசுவைச் சொல்லுகிறாய்? சின்னவளைப் போல, இவள் அலங்காரம் செய்து கொள்வதில்லை, அவள் அளவுக்கு வெள்ளையில்லை அவ்வளவுதானே? மற்றபடி, இவளும் நல்ல அழகுதான். அன்றைக்கு 'கிளப்'பில் பார்த்தபோது, சுந்தரம் கூடச் சொன்னார்.

'உனக்கென்னய்யா, இரண்டு பெண்களும் இரண்டு கிளிகள். ஒருத்தி பச்சைக் கிளி என்றால், அடுத்தவள் பஞ்சவர்ணக் கிளி, கொடுத்து வைத்தவன்யா நீ' என்று பாராட்டிப் பேசினார் தெரியுமா?'' என்று, தந்தை அடித் துப் பேசியதும், வசுவுக்கு பெரும் ஆறுதலை அளித்தது.

இதுவரை, வசுந்தராவையும், சௌந்தர்யாவையும் சேர்த்துப் பார்த்த எவரும், இப்படிச் சொன்னதே கிடை

யாது. எல்லோரும் தங்கையைப் பார்த்ததுமே 'அய்யோ என்ன அழகு' என்று அவள் புகழ் பாடத் தொடங்கி விடுவார்கள். பின்னணியில் ஒதுங்கித் தனியாக நிற்கும் பெரியவளை, எட்டிப் பார்க்கக் கூட மாட்டார்கள். அம்மா, சரசா உட்பட

எப்போதாவது, பெற்றவர் அதைச் சுட்டிக் காட்டி னால் கூட, 'அப்படிப் பார்த்துப் பெருமையாகப் பேச, உங்கள் பெண்ணிடம் சிறப்பாக என்ன இருக்கிறது?' என்று அசட்டையாக உச்சுக் கொட்டிவிட்டுப் போய் விடுவாள், தாயார்

காதில் விழுந்தால், மூத்த மகள் வருத்தப் படக் கூடும் என்கிற எண்ணம் கூடக் கிடையாது.

வசுந்தாரவும், தான் பெற்ற மகள்தான் என்பதே, சரசாவுக்குப் பெரும்பாலும் நினைவிருப்பது கிடையாது. 'என் பெண்' என வேண்டாம். 'நம் மகள்' என்று சொல்லலாமில்லையா? எப்போதும் 'உங்கள் மகள்' தான்..., என்னவோ வசுந்தரா, அவள் அப்பாவுக்கு, வேறு யாரிடமோ பிறந்தவள் போல, 'உங்கள் மகள், உங்கள் மகள்' என்றேதான் அவளை சரசா குறிப்பிடு வாள்.

அன்றும் அதைப் போலவே குறிப்பிட்டுவிட்டு, ''அந்த சுந்தரமே என்ன சொல்லியிருக்கிறார், பாருங்கள்! ஒருத்தி பச்சைக் கிளி என்றவர் அடுத்தவளைப் பஞ்சவர் ணக் கிளி என்றல்லவா புகழ்ந்திருக்கிறார். இதிலிருந்தே, உங்களுக்குப் புரியவில்லையா? சின்னவள் பேரழகி. அதை மட்டும் சொன்னால், உங்கள் மனம் வருத்தப்படும்

என்று, வசுவும் ஏதோ ஒருவிதமாய் அழகுதான் என்று சமாளித்திருக்கிறார். ஏனெனில் வசுந்தரா, உங்கள் சாயல் அல்லவா?'' என்று சரசா விளக்கியது வசுந்தராவின் காதுகளில் நன்றாகவே விழுந்து, அவளை வருந்த வைத்தது.

மகள் முகம் வாடிச் செல்லுவதைக் கவனித்துவிட்டு, ராகவன், மனைவியைக் கண்டித்தார். ''நீ சொல்லுகிற மாதிரியே வைத்துக் கொண்டாலும், சுந்தரத்துக்கு இருக்கும் நாசூக்கும் நாகரீகமும், உனக்கு இல்லை என்றல்லவா ஆகிறது? வசு காது கேட்க, அவளை இப்படிப் பேசினால், அவள் மனம் நோகாதா? யோசியாமல், உரக்கப் பேசுகிறாயே?'' என்று கேட்டார்.

தனக்கு நாகரீகம் இல்லை என்று, ஒருவர் சொல்லி, சொன்னவர் கணவரே என்றாலும், சரசா பொறுப்பாளா? ஆனால், ராகவனின் குற்றச் சாட்டு சரியே என்பதால், வேறுவிதமாய் வாதிட்டாள். ''தாய் அறியாத சூலா? என் மகள் மனது எனக்குத் தெரியாதா? என் மகள் உண்மையை ஒத்துக் கொள்ளுகிறவள். அதில், அவள் வருத்தப் படவே மாட்டாள். வெளி ஆட்கள் வேஷம் போட வேண்டியதுதான். ஆனால், அம்மாவும் அப்படியா இருப்பது, தாய் மகளுக்கிடையிலேயே, பொய்யை வளர்க்கப் பார்க்கிறீர்களே? பெற்றவளிடமே, உண்மையை ஏற்காதவள், மற்றவர்களிடம் எப்படித் தாங்குவாள்? வசுதான் என்ன, உண்மை அறியாதவளா? தினமும் கண்ணாடி பார்க்கிறவள்தானே? இல்லாத அழகை இருப்பதாகச் சொல்லிப் பொய்ப் பிரமை ஏற்று

வதா தாயின் கடமை? என்று அவள் பொலபொல வென்று ஏதேதோ கூறவும், ராகவன் திணறிப் போய். வாயை மூடிக் கொண்டார்.

ஆனால் ஒன்று, ராகவனின் கருத்தை மறுபடி மறுத்து அவரை எரிச்சல் படுத்த, சரசாவும் விரும்ப வில்லை. கணவர் நல்லமனநிலையில் இருப்பது, எத்தனையோ காரியங்களுக்கு மிக்க வசதி என்பது அவள் அனுபவத்தில் அறிந்தது.

வசுந்தராவுக்குச் சீக்கிரம் திருமணம் செய்து விடுவதில், சரசா, வெகு தீவிரமாக இருந்தாள் எனலாம்.

முதல் பெண்ணின் திருமணம் முடிந்தால்தானே, அடுத்தவளது கல்யாண வேலைகளைத் தொடங்க முடியும்?

பேரழகியான சௌந்தர்யாவை மணப்பதற்காக, பெரிய பெரிய பணக்காரர்கள் எல்லாம், போட்டா போட்டி போடுவது, சரசாவின் மனக்கண்ணின் முன், எப்போதும் தெரியும் தோற்றம். அழகும் அந்தஸ்தும் உடைய கோடீசுவரர்கள், அவளிடம் வந்து, மகளைக் கட்டித் தருமாறு கெஞ்சுவதும், அவர்களது அரண்மனையில் மகளோடு கூட வந்து வசிக்குமாறு இறைஞ்சுவதும், அவள் அன்றாடம் காணும் கனவு.

அவளுடைய பெற்றோர் செய்தது போல, அரசாங்க அதிகாரி என்று ஒரு மாதச் சம்பளக்காரனுக்கு அவன் எவ்வளவுதான் அதிகச் சம்பளம் வாங்கினாலும், அவனுக்குத் தன் சின்ன மகளைக் கட்டிக் கொடுக்க, சரசா

சற்றும் விரும்பவில்லை. சௌந்தர்யா, அரண்மனையில் தான் வாழ வேண்டும். வாழுவாள்!

ஆனால் இதெல்லாம் மூத்த மகளின் திருமணம் முடிந்தால் அல்லவோ நடக்கும்?

அதற்காகவே, சரசா, தன் பெரிய பெண்ணின் கல்யாணத்தை முடித்துவிட அவசரப்பட்டாள். ஆனால், அவளது அவசரம், வசுந்தராவை வந்து பார்த்த மனிதர் களுக்குப் புரியவே இல்லை. ஆளாளுக்கு, அது வேண் டும், இது வேண்டும் என்பதும், தாய் நிறம் மகள் இல்லையே என்று குறைப்படுவதும், கடைசியாக, சௌந் தர்யாவைப் பார்த்ததும், இளைய பெண்ணைத் தருகிறீர் களா, என்பதுமாகவே , இருந்தார்கள்.

ஆனால், இளையவளைக் கட்டித் தருமாறு, மாப் பிள்ளை வீட்டார் கேட்கக் கேட்க, அவள் கண்ட கனவு பலிப்பது, அவளுக்கு சர்வ நிச்சயம் ஆகி விட்டது.

ஏழு தரம், இப்படி நடந்து முடிந்த பின்னராக, இது எட்டாவது முயற்சி!

மனைவியின் மனது அறியாத ராகவன், ''இருவருக் கும் இரண்டே வயதுதானே வேறுபாடு? இருவருக்கும் சேர்த்தே பார்ப்போமா?'' என்று, ஆறாவது முயற்சியின் பின், அவளோடு கலந்து ஆலோசித்த போது, சரசாவுக் குப் பகீரென்று விட்டது.

மனதில் இருப்பதைச் சொன்னால் மனிதர் பாய்ந்து விடுவார்!

சௌந்தர்யா அறியாப் பெண், இரண்டு பெண்களையும் ஒன்றாகப் பிரிய நேர்ந்தால், பெற்றவளுக்குப் பைத்தியம் பிடித்து விடாதா? இப்படி அப்படி என்று, ஏதேதோ சொல்லி, அப்போதைக்குக் கணவனைச் சமாளித்தாள்.

இன்னொரு தரம், இதே கதை நடந்தால், கணவன் மீண்டும் இதே பேச்சை எடுக்கக் கூடும் என்பதால், அடுத்த 'பெண் பார்ப்'பின் போது, இளையவளை, ஏதோ காரணம் சொல்லி வெளியே அனுப்பி வைத்தாள்.

ஆனால், கிட்டத்தட்டத் திருமணம் முடிவாகிற வேளையில், சௌந்தர்யா திரும்பி வந்துவிடவே, அவளது கலகலப்பும், கலீர்ச் சிரிப்புமாக, எல்லாம், ஒரே குழப்படியாகி விட்டது.

வீட்டில், எல்லோரையும் நன்கு உணர்ந்திருந்த வசுந்தராவுக்கு, இதற்குக் காரணம் நன்றாகவே தெரிந்தது. ஆனால், அதை வெளிப்படையாகச் சொன்னால், வீட்டில் ஒரு புயல் அடிக்கும். அதில், எப்படியும், அவள் ஜெயிக்கப் போவது இல்லை எனும்போது, எதற்காக, அனாவசியமாய்?

சரசாவின் புலம்பலுக்கு பதிலே சொல்லாமல் எழுந்து சென்றவள், பட்டுச் சேலையைக் களைந்து வைத்து விட்டு, முகத்தைக் கழுவலானாள்.

இப்போது அடுத்த நாடகம்!

முந்திய தடவை போலவே, சௌந்தர்யாவை, ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி, நகரின் மறுகோடிக்கு,

சரசா அனுப்பியிருந்தாள். அவசரப்படாமல், நிதான மாகத் துணியைத் தேர்ந்தெடுத்து, அதைத் தைக்கக் கொடுத்து விட்டு வருமாறு, சின்ன மகளிடம் சரசா கூறியபோதே, வசுந்தராவுக்குச் சந்தேகம் தான்.

ஆனால் வெகுநேரம்....மாப்பிள்ளை வீட்டார் வந்து, பலகாரம் உண்டு, பெண்ணைப் பிடித்திருப்பதாக, ஜாடைமாடையாகச் சொல்லி, கேலியும் கிண்டலுமாகப் பேசத் தொடங்கும் வரையும், ஒன்றும் நடக்கவில்லை எனவும், வசுந்தராவுக்கு, இந்தக் கல்யாணம் நடந்து விடக் கூடும் என்று தோன்றத் தொடங்கியது.

எனவே, நாளைக்குக் கணவனாகப் போகிறவனைச் சற்றுக் கவனித்துப் பார்த்தாள்.

அப்படி ஒன்றும் பிரமாத அழகன் இல்லைதான். ஆனால், அவளும் கொஞ்சம் சாதாரண விதம்தானே? அதிலும், தங்கை சோனா-சௌந்தர்யாவின் செல்லப் பெயர் அதுதான், அவள் அருகில், வசு, படு சாதாரணம் தானே?

சட்டென, வசுவின் மனம் கலங்கிப் போயிற்று.

அப்படியானால், அவள் பார்வைக்கு நன்றாகவே இல்லையா?

சற்றுமுன் கண்ணாடியில் பார்த்தது நினைவு வர, 'சே, அப்படி ஒன்றும் இல்லை. நானும் நன்றாகத்தான், ரொம்ப நன்றாக என்று இல்லாவிட்டாலும், ஓரளவேனும் அழகாகத்தான் இருக்கிறேன்' என்று, தன்னைத் தானே தேற்றிக் கொண்டாள் அவள்.

அப்படிப் பார்த்தால், இந்த ஆள், அவளுக்கு ஈடு என்று சொல்லமுடியாதுதான். ஆனால், அவளுக்குச் சீக்கிரமாகக் கல்யாணத்தைச் செய்து முடித்து விட வேண் டும் என்ற வேகத்தில் இருக்கும் அம்மா, அதைப் பற்றி எண்ணிக்கூடப் பார்க்கப்போவது இல்லை. ஓரளவு நன் றாகச் சம்பாதிக்கும் அரசாங்க அதிகாரி என்பதற்கு மேலாக, அப்பாவும், தோற்றம் பற்றிக் கவலைப்படப் போவது இல்லை.

எனவே, இந்தப் பையனை மணப்பதற்கு, அவள் மனதைத் தயார் படுத்திக் கொள்வது நல்லது.

வசுந்தராவை, வரனைப் பார்த்ததைக் கவனித்த, பையனின் தந்தை, அதைக் குறிப்பிட்டுக் கேலி பண்ண, மாப்பிள்ளை வீரப் பார்வை பார்க்க, அங்கே சிரிப்பு, ஓர் அலையாகப் பரவியது.

கொடுக்கல், வாங்கலில் யாரும் அதிகக் கண்டிப்புக் காட்டாததால், திருமணப் பேச்சு திருப்திகரமாக முடிய, வந்தவர்கள் வெளிப்படையாகப் பேசிக் கலகலக்கத் தொடங்கினார்கள்.

'அண்ணியின் ஒரு பார்வையில், அண்ணன் சரணா கதி அடைந்து விட்டான்' என்று ஒருத்தி கூறியபோது, 'தெளிந்த நீர்த் தடாகம் போல, அந்தக் கண்களில் நான் ஒரேயடியாக முழுகி விட்டேன்' என்று மாப்பிள்ளைப் பையன் தயக்கமின்றிக் கூறவும், வசுந்தராவுக்கு, உள்ளே மகிழ்ச்சி துளிர் விடத் தொடங்கியது.

'உலக அழகி என் மனைவி' என்று சொல்லும் கணவன் இருந்தால், ஒரு பெண்ணுக்கு வேறு என்ன வேண்டும்?

எடுப்பான தோற்றமோ, கம்பீரமோ இல்லாத போதும், மனைவியை ரசிக்கிற மனம் இருப்பதே போதும்!

கன்னங்களில் ரோஜாக்கள் மெல்ல மலர, வசுந்தரா மெல்லிதாகப் புன்னகைத்தாள்.

அப்போது? வாயில் வராண்டாவில் செருப்பை அவசரமாக உதறிவிட்டு, யாரோ விரைந்து உள்ளே வரும் ஓசை கேட்டது.

வேறு யார்?

சோனாதான்.

வேகமாக உள்ளே வந்த சௌந்தர்யா, ஹாலில் அமர்ந்திருந்தவர்களைக் கண்டதும், இமைகளைப் பட படவென்று கொட்டினாள். வட்டக் கருவிழிகளை அகல விரித்து, ''மாப்பிள்ளை வீட்டாரா, அம்மா? அக்காவைப் பார்க்க வந்திருக்கிறார்களா?'' என்று அப்பாவியாகக் கேட்டபடி, பார்வையைத் தமக்கையிடம் திருப்பினாள்.

உதட்டை, எழிலுறக் குவித்து, ''அய்யோ, என்னக்கா நீ? கண்ணுக்கு, இந்த மாதிரி அழுத்தமாக மையைத் தீட்டாதே என்று, உனக்கு எத்தனை முறை சொல்வது? உனக்குச் சும்மாவே, சட்டி மாதிரிக் கொஞ்சம் அதிகப் படியான பெரிய கண், மை தீட்டினால், [illegible]டைக்கண் மாதிரி வெளியே துருத்திக் கொண்டு

தெரியும். வேண்டாம், வேண்டாம் என்றால், மறுபடியும், அதே முண்டைக் கண்ணுடனேயே நிற்கிறாயே!'' என்று மிகவும் வருத்தப்பட்டாள்.

மாப்பிள்ளைப் பையனின் ஆராய்ச்சிப் பார்வை, தன்புறம் திரும்புவதை உணர்ந்த வசுந்தரா, அலுப்பும், வெறுப்புமாக முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

## 2

தொடர்ந்து என்ன நடக்கும் என்பது, வசுந்தரா அறிந்த விஷயமே.

அவளது குறைகள் அத்தனையும், வரிசையாகப் பட்டியல் இடப்படும், அவளது அலங்காரங்கள் எல் லாம், அசட்டுத் தனமான அதிகப்படி ஒப்பனைகளாகி விடும், கடைசியாக வசுந்தரா, 'கான மயிலாடக் கண்டு தானும் அதுவாக எண்ணிச் சிறகு விரித்த வான்கோழியா கி' விடுவாள்!

கடைசியாக, ''அக்கா, உன்னைப் போலக் கறுப் பாக இருப்பவர்கள், வெள்ளையாகத் தோன்ற வேண்டும் என்று, இந்த நிறத்து 'ஃபவுண்டேஷன்' பயன்படுத்துவது தப்பு, அக்கா. பழைய காலத்துத் தெருக் கூத்தில் நடிப்ப வர்கள், அரிதாரம் பூசியது போல, ஆகி விடும். நீயே பார்'' என்று தன் பொன்னிறக் கையைத் தமக்கையின் புறங்கை மீது வைத்துக் காட்டினாள் தங்கை.

சோனா கூறியது போல, வசுந்தரா அவ்வளவு கறுப்பு கிடையாது. ஆனால், சின்னவள் அத்தனை

வெள்ளை என்பதோடு, ஒழுங்காகப் பார்லருக்கு சென்று, உச்சி முதல் உள்ளங்கால் வரை, அழகு படுத்திக் கொள்ளுகிறவள். அந்தச் செலவு பற்றி, சரசா கண்டு கொள்வதே இல்லை. வசுவுக்கு, அந்தச் சலுகைகள் கிடையாது என்பதோடு, பொதுவாக வெயில் பட்டுக் கறுக்கும் இடம் புறங்கை. அந்த இடத்தில், சோனா தன் கையை வைத்தால், வேறுபாடு, வெகு பளிச்சென்று தெரியும்படியாகி விட்டது.

தன்னையறியாமல் கையை இழுத்துக் கொள்ள முயன்ற வசுந்தரா, தங்கையின் கண்களைச் சந்தித்ததும், அந்த முயற்சியைக் கை விட்டாள்.

இவள் வேண்டும் என்றே, செய்கிறாள்! கையைக் கூட இழுத்துக் கொண்டு விடக்கூடாது என்று, இறுகவே பற்றியிருக்கிறாள். முயன்று இழுத்தால், அது கூட அசிங் கமாகத்தான் தோன்றும்.

மொழுமொழுவென்று இருக்கும், இந்தப் பொன் னிற விரல்கள், இவ்வளவு அழுத்தமாகக் கூடப் பற்றுமா?

உள்ளூர வருத்தத்துடன் எண்ணும்போதே, வசுந்த ராவின் கவனம், சோனாவின் கைவிரல்களின் மீது படிந்தது. என்ன ஒரு வழுவழுப்பு! அப்போதுதான் 'மேனிக்யூ' செய்தது போல

சட்டென, வசுவுக்கு எல்லாம் விளங்கிவிட்டது.

மெய்யாகவே சோனா அழகு நிலையத்திலிருந்து தான் வருகிறாள். இந்த நிறத்தை வைத்துக் கொண்டே, 'ப்ளீச்' வேறு, செய்திருக்கிறாள்!

இந்த நாடகத்தை மனதில் திட்டமிட்டு வைத்துக் கொண்டு தான் கைக்கு, 'மேனிக்யூர்' செய்திருக்கிறாள். கைக்கு மட்டுமல்ல. முகத்துக்கு 'ஃபேஷியல்', காலுக்கு 'பெடிக்யூர்' எல்லாமே.

இவை அனைத்தையுமே செய்து முடித்துக் கொண்டு வருவதற்குத்தான், இவ்வளவு நேரம் ஆகியி ருக்கிறது.

அது தெரியாமல், சோனாவுக்கு கூட அக்காவுக்குத் திருமணம் ஆக வேண்டும் என்கிற எண்ணம் வந்து விட்டது போலிருக்கிறதே, என்று சந்தோஷப்பட்டாளே! என்ன முட்டாள்த்தனம்!

ஆனால், ஏன்?

அவ்வளவு அழகிருக்கிறது, அம்மாவின் சலுகை இருக்கிறது, அம்மா, அப்பா இருவரிடமே, இச்சகம் பாடி, வாங்கிச் சேர்த்திருக்கும் எத்தனையோ அழகிய பொருட்கள் இருக்கின்றன.

இன்னும் அவளுக்கு மிக உயர்ந்ததோர் வருங்கா லத்தை அமைக்கத் திட்டமிடும் அம்மாவின் அளவு கடந்த அன்பு இருக்கிறது.

இத்தனையையும் வைத்துக் கொண்டு, சோனா வுக்கு, ஏன் இந்த அற்பத்தனம்?

எப்போதுமே, வசுவுக்கென்று, நல்லதாக, ஒரு சின்ன சாமான் வாங்கினாலும், மற்றவளுக்குப் பிடிக் காது. அதை எப்படியாவது எடுத்து, உடைத்துப் போட்டு விடுவாள்! உடைத்து விட்டு, 'அய்யோ, உடைந்து

விட்டதே' என்று, அவள் வருந்துகிற விதத்தில், சோனா வேண்டும் என்று உடைத்ததாகவே, யாருக்கும் தோன்றாது.

இழப்புக்கு ஆளான போதும், வசுந்தரா தங்கையின் நடிப்பில், பலமுறை ஏமாந்திருக்கிறாள்!

ஆனால், அப்போது, சின்ன வயது, இப்போது நிலைமை அப்படியில்லையே! இருவருமே வளர்ந்து விடவில்லையா? அத்தோடு, அவையெல்லாம், வெறும் பொருட்கள்!

இப்போது இவள் அழிக்க விரும்புவது, அழிப்பது, கூடப்பிறந்தவளின் எதிர்காலத்தையல்லவா?

இவள், இப்படியே செய்துகொண்டே இருந்தால் என்ன ஆகும்?

''உன்னை விட நான் உயர்த்தி'' என்று காட்டும் வெறியோடு, வசுந்தராவை ஒருவர் விரும்பித் திருமணம் செய்வதா என்கிற ஆங்காரமுமாக, சோனா, இந்த நாடகத்தை நடத்திக் கொண்டே இருக்க, இப்படிப் பெண் பார்க்க யாராவது வருவதும், பெண் பிடிக்கவில்லை என்றுரைத்துப் போவதுமாக, அதுவும் தொடர்கதையாக, மீண்டும், மீண்டும் நடக்கப் போகிறது.

இதை எவ்வளவு காலம், வசுந்தராவால் தாங்க முடியும்?

காலையில் எண்ணமிட்டது நினைவு வரவும். வசுந்தரா கொஞ்சம் கலங்கிப் போனாள்.

இத்தனைக்கும், அவள் ஒன்றும், திருமணத்துக்கு அவசரப்பட்டவள் அல்லவே. படிக்க வேண்டும் என்று தானே, பெற்றவளிடம் கேட்டாள்? என்னோடு படித்தவர்கள் எல்லோரும், எம்.பி.ஏ., எம்.சி.ஏ. என்று, மேலே படிக்கிறார்கள். நானும் படிக்கிறேன் என்று, கொஞ்சம் கெஞ்சிக் கூடக் கேட்டாளே! ஆனால், சோனாவை மணக்கப் பெரிய பெரிய கோடீசுவரர்கள் எல்லாம 'க்யூ'வில் நிற்கிறார்கள். மூத்தவளுக்கு மணமுடிக்காமல், இளையவளுக்குத் திருமணம் செய்ய, நம் சமூகத்தில் முடியாது. அவளுக்கு வரும் நல்ல வாழ்வை, நீ நந்தியாக நின்று, தடுக்கப் போகிறாயா? என்று, சரசா கேட்ட பிறகுதானே, திருமண முயற்சிக்கே, வசு சம்மதித்தது!

ஆனால், கல்யாணம் என்று பேசத் தொடங்கிய பிறகு, அதையொட்டிய மனக் கிளர்ச்சிகளோ, சலனங்களோ இல்லாதிருக்க, வசுந்தரா ஒன்றும், யோகினியோ, சன்னியாசினியோ அல்லதானே?

ஊகூம். இந்தத் தவிப்புகளையும், அவமானங்களையும் இதற்கு மேல் அவளால் தாங்கிக் கொள்ள முடியாது. எப்படியாவது, இந்தக் கதைகள் இனித் தொடராமல் நிறுத்தியே ஆக வேண்டும்!

எப்படி?

எப்படியாவது....

இதே யோசனையில் இருந்தவள், திடுமெனத் தாயின் அதட்டல் காதில் விழவும், திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

மாப்பிள்ளை வீட்டார், கிளம்பத் தயாராக எழுந்து, நின்று கொண்டிருந்தனர்.

இதில் அதிசயப்பட எதுவுமில்லை.

''சொல்லேன், வசு. 'போய், நல்லபடியாகக் கடிதம் எழுதுங்கள்' என்று சொல்லி வழியனுப்பேன்'' என்று உந்தினாள் தாயார்.

'தடாகத்தில் முழுகி விட்டேன்' என்று கவிதை பாடியவன், இப்போது பார்வையைத் தவிர்ப்பதைக் காணவும், அவனது பதில் எப்படி இருக்கும் என்று வசுந்தராவுக்குப் புரிந்து போயிற்று. அதற்குமேல், தாய் கூறுவதுபோல, எப்படிச் சொல்ல முடியும்?

இந்த இடைநாடகம் நடவாது, முதல் கதையை தொடர்ந்திருந்தால் கூட, இப்படித் திருமணம் பற்றிக் குறிப்புக் காட்டிப் பேச அவளால் முடியாது!

அதுவும், இப்போது முடியவே முடியாது!

சரசா உறுத்து நோக்குவதைக் கவனியாதவள் போல, வசு பேசாமல் நிற்க, வந்தவர்கள், எங்கெங்கோ பார்த்தபடி, விடை பெற்றுச் சென்றனர்.

ஹாலை விட்டு, எல்லோரும் வெளியேறும் வரை காத்திருந்த சௌந்தர்யா, ஒரு துள்ளலுடன் திரும்பி, ''நான் போய், மாப்பிள்ளையிடம், என் அக்காவைத் தான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று, சொல்லி விட்டு வருகிறேன், அம்மா.'' என்றுரைத்து, அவர்கள் பின்னே ஓடிச் சென்றாள்.

வசுந்தராவின் உதடுகள் ஏளனமாய்ப் பிதுங்கின.

சவப்பெட்டி மீது கடைசி ஆணியை அடிக்கப் போகிறாளாக்கும்!

'சே, கடைசி நேரத்தில் போய், இப்படியாகி விட்டதே! இவர்களும் சரி என்பார்கள் என்று, எனக்குத் தோன்றவில்லை! உங்கள் பெண்ணின் தலையில் என்ன தான் எழுதி வைத்திருக்கிறதோ, தெரியவில்லையே!'' என்று, சரசா அங்கலாய்த்தாள்.

''என் மகள் தலையில்தானே? எல்லாம் நன்றாகத் தான், எழுதியிருக்கும். வெறும் வெள்ளைத் தோலைக் கண்டதும், மனதை மாற்றிக் கொள்கிற ஒரு பச்சோந்தியிடமிருந்து, என் குழந்தை தப்பித்தாளே! அதுவே பெரிய விஷயம். விட்டுத் தள்ளு'' என்று முடித்தார் ராகவன்.

''வெறும் வெள்ளைத் தோலா? அதன்மகிமை, உங்களுக்கு என்ன தெரியும்? சோனா மாதிரி அழகியைக் கண்டால், எல்லோருக்குமே தலை சுற்றித்தான், போகும். கடவுளே, இவளும் சின்னவளைப் போலப் பிறந்திருக்கக் கூடாதா? இதற்குள் எவனாவது, கொத்திக் கொண்டு போயிருப்பானே..'' என்று பெற்ற மனம் புலம்ப, ராகவனுக்குக் கோபம் வந்து விட்டது.

''என்னடி உளறுகிறாய்? அப்படிப் பார்த்தால், வெள்ளையாக இல்லாதவர்களை, யாரும் நேசிக்க மாட்டார்கள் என்றா, சொல்லுகிறாய்? கிளியோபாட்ரா தெரியுமா? உலகப் பேரழகி. அவள் கறுப்புதான். அவளது ஒரு கடைக் கண் பார்வைக்காகப் பெரிய பெரிய ஆட்கள்

எல்லாம் காத்துக் கிடந்தார்கள் என்பது, வெறும் கதை அல்லம்மா, சரித்திரம், தெரிந்து கொள்!'' என்ற தகப்ப னாரைக் கைதட்டிப் பாராட்ட வேண்டும் போல இருந் தது, வசுந்தராவுக்கு.

அம்மா, அப்புறமாக ஆடி விடுவாளோ என்ற பயத்தில், முகம் மலர நோக்கியதோடு, நிறுத்திக் கொண் டாள்.

ஆனால், அதுவே உற்சாகம் அளிக்க, ''அது மட் டுமா? அழகுக்கு இலக்கணம் என்கிறார்களே, அந்த ரதியே, கறுப்பு என்றுதான் கூறுகிறார்கள். ஆதி பராசக்தி, அவளும் கறுப்புதான். கறுப்புக்கு நம்மவர்கள் அவ்வ ளவு மதிப்புக் கொடுத்திருக்கிறார்கள். உன் அம்மாவா னால், இப்படி உளறுகிறாள், பார்'' என்று முத்தாய்ப்பு வைத்தார் தந்தை.

அச்சோடா! அப்பா, இந்த 'அம்மா உளறுகிறா' ளைத் தவிர்த்திருக்கலாமே, என்று, வசுந்தரா எண்ணமி டும் போதே, சரசா, கோபத்துடன் தொடங்கி விட்டாள்.

''நான் உளறுகிறேனா? சரி, நான்தான் முட்டாள். உளறுகிறேன். இவளை வேண்டாம் என்று, சொல்லாமல் சொல்லி விட்டுப் போகிறானே, அவனிடம் போய், இந்தக் கதையையெல்லாம் அளப்பது தானே? இவ னோடு சேர்த்து, எட்டுப் பேர்! எட்டுப் பேருமா முட்டாள் கள்? அவர்கள் அத்தனை பேருக்கும், எதற்காக, உங்கள் பெண்ணைப் பிடிக்கவில்லையாம்? இவள் லட்சணமாக இல்லை என்றுதானே?

அடிபட்டுப் போனாள் வசுந்தரா.

பலரால் மறுதலிக்கப்பட்ட அவமானம் ஒரு புறம் தகிக்க, இந்த மறுப்புகளுக்கு மூலகாரணம், தங்கையல்லவா என்ற உண்மையும் சேர்ந்து, அவளுக்கு ஆத்திர மூட்டியது. இதைக் கூடப் புரிந்து கொள்ளாமல், அம்மாவாக இருந்தும், மகளையே மட்டம் தட்டிப் பேசி விட்டாளே! மனம் கொதித்தது அவளுக்கு.

இந்த நேரத்தில், விசும்பி அழுத வண்ணம், சௌந்தர்யா உள்ளே ஓடி வரவும், எல்லோர் கவனமும், அவளிடம் சென்றது.

முக்கியமாக, அவளுடைய பெற்றோரின் கவனம், முழுமையாக சோனாவுக்குக் கிடைத்தது. கரிசனமும் கூட.

ஆனால், தங்கையை நன்கு தெரிந்து வைத்திருந்த வசுந்தராவுக்கு, ஆத்திரம் தான் பெருகியது, எனலாம்.

அழுது கொண்டு ஓடி வந்த சோனா, நீண்ட சோஃபாவின் நடுவில், தொப்பென்று அமர்ந்து, முகத்தைக் கைகளால் மூடிக் கொண்டாள்.

இருபுறமும், அம்மாவும் அப்பாவும் அமர்ந்து, தேற்றுவதற்கு வசதியாக, இடம்விட்டு, உட்கார்ந்திருக்கிறாளாக்கும், என்று எண்ணினாள், வசுந்தரா. முகத்தை மூடியிருப்பது, தாள முடியாத துக்கம் என்று காட்டவா? ராட்சசி!

வசுந்தரா ஊகித்தது போலவே 'என்னம்மா, என்னம்மா' என்று, பெற்றவர்களைச் சற்று நேரம் பதற

வைத்துவிட்டு, சோனா அழுகையினூடே பேசினாள். ''என்னம்மா இது அநியாயம்? அப்பா, பாருங்கள், அப்பா அந்த மாப்பிள்ளை மனிதரிடம், நல்ல சேதி எழுதுங்கள் சார்'' என்று சொன்னால், ''இந்த வீட்டின் இரண்டாவது மாப்பிள்ளையாக வருகிறேன்'' என்று எழுதப் போவதாகச் சொல்லுகிறார். ஏம்பபா, அப்படி? ஏன் இப்படிப் பேசுகிறார், அந்த ஆள்? வசுவைப் பார்க்கவென்று வந்துவிட்டு, இந்த மாதிரிப் பேசினால் பாவம். அவளுக்கு மனதுக்கு, எவ்வளவு வேதனையாக இருக்கும்? நினைக்க நினைக்க, எனக்கு ஒரே அழுகை யாக வருகிறதுப்பா'' என்று, மீண்டும் விசும்பினாள், அவள்.

இது சினிமாவாக இருந்தால், குறைந்த பட்சம், மாநிலத்தின் இந்த ஆண்டுச் சிறந்த நடிகைக்கான பரிசா வது கிடைத்திருக்கும்! ஆனால், இவள், வீட்டிலல்லவா, நடிக்கிறாள்! கெடுப்பதையும் கெடுத்து விட்டு, அறியாத வள் போல், என்னமாய் வேஷம் போடுகிறாள்!

உள்ளே குமுறியபடி வசுந்தரா பார்த்துக் கொண்டு நிற்க, சௌந்தர்யா, மேலும் தொடர்ந்தாள்.

''போகிறான், விடும்மா. தகுதியற்ற பனாதைப் பயல்! வினாடிக்கு ஒன்று பேசும் இவனைப் போன்ற மண் குதிரையிடம் மாட்டிக் கொள்ளாமல் வசு தப்பி னாளே. அதுவே, பெரிது. இதற்காக, நீ அழுவானேன்? அழாதே'' என்று தந்தையும், ''ஆமாம், கண்ணு. அழுது அழுது, கண்ணையும் முகத்தையும் கெடுத்துக் கொள் ளாதே.'' என்று, தாயும் தேற்ற, சோனா, தமக்கையின் பக்கம் திரும்பினாள்.

''அக்கா, சாரிக்கா. நான் உனக்கு...என்னால், உனக்கு ஏதேனும் மனதுக்கு வருத்தம் நேர்ந்திருந்தால், தயவு பண்ணி, என்னை மன்னித்துவிடுக்கா. ப்ளீஸ்!'' என்று கெஞ்சிக் கேட்டாள்.

'அதனால் என்ன, பரவாயில்லை' என்று, வசு, முத்தாய்ப்பு வைக்க வேண்டுமாம்! இதுவும், ஏற்கனவே நடந்திருப்பதுதான்.

ஆனால் இன்று, தங்கையின் பசப்பு மேலும் ஆத்திர மூட்ட, ''எதற்கு மன்னிப்பு'' என்று வினவினாள், தமக்கை. ''மன்னிக்கும்படி நீ ஏதேனும், செய்தாயா என்ன?'' என்று, நிதானமாகக் கேட்டாள்.

ஒரு கணம் திகைத்து விட்டு, ''அக்கா, நான் உன் நல்லதற்காக. உன் நன்மையை எண்ணித்தான் சொன்னேன்....'' என்று இழுத்தாள், சௌந்தர்யா.

''அப்படியா?'' என்று புருவம்தூக்கிக் கேட்டாள் வசுந்தரா.

தந்தை, என்ன, என்பது போலச் சற்று யோசனை யோடே நோக்கவும், சோனா விழிகளை அகல விரித்து, ''ஆமாம், அக்கா நான் நினைப்பது, பேசுவது எல்லாமே, உன் நலனுக்காகத்தான். நான் இருப்பதே, உனக்காகத் தான், அக்கா உனக்காக, நான் உயிரைக்கூட விடுவேன், தெரியுமாக்கா?'' என்று உருக்கமாக மொழிந்தாள்.

என்னமாய் நடிக்கிறாள்?

தங்கையின் முகத்திரையைக் கிழித்து விடும் வேகத் தில், வசுந்தரா, ''ஐயோ, அவ்வளவெல்லாம் வேண்

டாம்மா, தாயே. ஆனால், இந்த மாதிரிச் சமயங்களில், இடையில் வந்து கெடுக்காமல், முழு நேரமும், எங்காவது போய்த் தொலைந்தாயானால் அதுவே, என் நலனுக்குப் போதுமானது!'' என்றாள் வெறுப்புடன்.

ஒவ்வொரு தரமும், சௌந்தர்யா இடையில் வந்து, ஏதாவது பேசித்தான், திருமணம் தடைப்படுகிறது, என்பதைப் பெற்றோருக்குக் காட்டி விடும் எண்ணத்தில் தான், வசுந்தரா, இவ்வளவு பேசியது.

ஆனால், நடந்தது, முற்றிலும், மாறானது.

## 3

**பொ**துவாக, இரண்டாவது பிள்ளைகளுக்குச் சூட்டிப்பு அதிகமாக இருக்கும் என்பார்கள். ''மூத்தது மோழை, இளையது காளை'' என்ற, பழமொழியே, இருக்கிறதே.

இந்தச் சகோதரிகளும் பெருமளவு அப்படித்தான் இருந்தார்கள். பெரியவளுக்குக் கொஞ்சம் பொறுமை அதிகம். பலதைப் 'போகிறது' என்று விட்டு விடுவாள். இளையவளுக்குத் தன்னலத்தோடு, சுறுசுறுப்பு, மிகவும் அதிகம். வினாடிக்குள் திட்டமிட்டுச் செயலாற்றியே முடித்து விடுவாள்.

இப்போதும், அதுதான் நடந்தது.

தமக்கை, தன்னைக் கண்டு கொண்டது மட்டுமின்றி, அம்மா, அப்பாவிடம் காட்டிக் கொடுக்கவும் துணிந்து விட்டாள் என்பதை, வசுந்தரா பேசத் தொடங்கியதுமே

புரிந்து கொண்டவள், மேற்கொண்டு, தமக்கை பேச இடம் கொடாமல் உடனேயே, கதறி அழத் தொடங்கி னாள்.

''கெடுத்தேனா? அய்யோ! நானா கெடுத்தேன்? உன் முகத்துக்கு என்னென்ன செய்தால் அழகாக இருக் கும் என்று, இந்த வேகாத வெய்யிலில் புனிதாக்காவி டம்.... அவள்தான் என் சினேகிதியுடைய அக்கா, அழகு நிலையத்தில் வேலை செய்கிறவள், அவளிடம் கேட்டு வந்து சொன்னால் கெடுக்கிறேன் என்று, கூசாமல் கூற, உனக்கு எப்படியக்கா, மனம் வந்தது? இப்படி பழி சுமத்துவதை விட என்னை, நீ கொன்றே போட்டிருக்க லாமே! அப்பா, நீங்கள் வேண்டுமானால், 'லட்சணா'வுக் குப் ஃபோன் செய்து, கேட்டுப் பாருங்கள், அப்பா நான், அங்கே வந்தேனா, இல்லையா என்று, அவர்களே சொல்லுவார்கள்.''

நிச்சயமாகச் சென்றிருக்கிறாள் தான். மற்றபடி, இந்த மாதிரிக் கூந்தல் அலங்காரமும், கை, கால், முக அழகு படுத்தல்கள் எல்லாம், எப்படி நடந்திருக்க முடி யும்?

நினைத்ததைச் சொல்ல விரும்பி ''லட்சணாவுக்குப் போனதென்னவோ...'' என்று, வசுந்தரா தொடங்கவும், நெஞ்சில் கை வைத்து, ''அய்யோ! என்று முனகினாள், சின்னவள்.

கலக்கத்துடன் நோக்கிய பெற்றோரிடம், ''அம்மா, அப்பா, எனக்கு என்னவோ பண்ணுகிறதே. நெஞ்செல் லாம் வலிக்கிற மாதிரி, வயிற்றுக்குள் பிசைகிற மாதிரி

இருக்கிறதே! கடவுளே... அக்கா, தயவு பண்ணி, என்னைத் தப்பா நினையாதே, அக்கா'' என்று தீனக் குரலில் இறைஞ்சியவள், தாயின் மடியில், அப்படியே சாய்ந்து விட்டாள்.

'என்னமாய் நடிக்கிறாய்' என்று பல்லைக் கடித்த வசுந்தரா, ''சும்மா, மரம் மாதிரி நின்று கொண்டிருக்கிறாயே! போய், ஒரு தம்ளர் தண்ணீர் எடுத்து வரத் தெரியாதா?'' என்று, தகப்பனார் அதட்டவும், திகைப்புடன் அவரைப் பார்த்தாள்.

இதை, நிஜம் என்றா, அப்பா எண்ணுகிறார்? சோனாவின் நடிப்பை, அவர் கூடக் கண்டு கொள்ளவில்லையா?

அவருக்கு, உண்மையை எடுத்துச் சொல்ல எண்ணி, ''சோனாவுக்கு ஒன்றுமில்லை, அப்பா...'' என்று தொடங்கிய மூத்த மகளை, ராகவன் ஆத்திரத்துடன், உறுத்து விழித்தார்.

''உன்னை, நல்ல பெண்.... கெட்டிக்காரி, என்று இதுவரை நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால், பொறாமை உன் அறிவுக் கண்ணை, இப்படி மறைக்கும் என்று, நான் சற்றும் எதிர்பார்க்கவே இல்லை. உன் தங்கை அதிக அழகு என்றால், அதில் நீ பெருமைப் படவேண்டாமா? அதை விட்டு, உனக்காக அலைந்து, திரிந்து விட்டு வந்தவளைப் பார்த்து, என்ன பேச்சுப் பேசுகிறாய்? சீச்சீ! உன்னிடம், இதை நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. தெரிந்து கொள்'' என்றார் கோபமாக.

தந்தைகூட, இப்படிப் பேசியது வசுந்தராவுக்குப் பெரும் அதிர்ச்சிதான்.

சரி, தப்பு என்பதே இல்லாமல், தாயார் எப்போதும், சின்ன மகள் பக்கம்தான் நிற்பாள். ஆனால், நடு நிலையை வகிப்பார் என்று அவள் எதிர்பார்த்திருந்த தகப்பனாருமா மூத்த மகள் கூறுவதைக் காது கொடுத்துக் கேட்கக் கூட தயாரில்லை என்று ஆகவும், அவளுக்கு மனம் வெறுத்து விட்டது.

சமயம் பார்த்து, 'ம்ம்' மென்று முனகியபடியே, தாயின் மடியிலிருந்த தலையை லேசாக அசைத்து, பெற்றோரின் கவனத்தைத் தன்புறம் ஈர்த்தாள், சோனா.

''என்னம்மா, என்னடா கண்ணு?'' என்று, சரசா உருக, வசுவின் பார்வையும், தங்கையிடம் சென்றது.

மயக்கமாம்! நிறம் வெளுக்கவில்லை. முகம் கொஞ்சம் கூட வாடவில்லை. உடம்பில், எந்த இடத்திலும் சோர்வு தெரியவில்லை. இவள் பாவலா செய்தால் மட்டும் என்ன, ஏது என்று கூடப்பாராமல் உடனே நம்பி விடுவதா?

உடன் பிறந்தவளைப் போல நடிக்கத் தெரியாத குற்றம், வசுந்தராவின் எரிச்சலை, அவளது முகம், 'அடுத்தது காட்டும் பளிங்கு' போலக் காட்டிவிட, அதற்கும், அவள் வாங்கிக் கட்டும்படியாயிற்று.

''என்ன பார்வை. இது? ஏதோ, தானாக மயக்கம் தெளிகிறதே என்று, சந்தோஷப்படாமல், முறைக்கிறாயே போ. முதலில், உன் அறைக்குப் போ. அங்கே, சற்று நேரம், தனியாக இருந்து யோசி. இனியேனும், இந்தச்

சின்ன புத்தியை விட்டு விட்டு, நல்லபடியாக, இருக்கப் பழகு'' என்று உத்திரவிட்டார், ராகவன்.

''ஆமாம், ஆமாம். இந்த வீட்டில் ஒருத்தியாவது அழகாகப் பிறந்திருக்கிறாளே! அதுவே பெரிது என்று எண்ணாமல், வயிற்றெரிச்சல் படாதே. அது, சோனுக் குட்டிக்கு, நல்லதல்ல. ஏன், உனக்கும் கூட, புத்தியோடு உடம்பும் சேர்ந்து கெட்டுப் போகும். அதனால்....ச்சு. நான் என்ன சொல்லிக் கொண்டே இருக்கிறேன். நீ பாட்டுக்கு சின்னவளை முறைத்துக் கொண்டே நிற்கி றாயே. போ. அப்பா சொல்வது போலத் தனியாக உட்கார்ந்து யோசி. அப்போதுதான் உனக்குப் புத்தி வரும்'' என்றாள் சரசா. கடுமையான குரலில்.

வசுந்தராவுக்கு உள்ளம், உலை நீராய்க் கொதித்தது.

சௌந்தர்யா, தினம் தினம் எதற்காவது, பிடிவாதம் பிடித்து, ஆர்ப்பாட்டம் செய்கிறவள். அப்பா, திட்டி விடுவார் என்பதால் சரசா, பெரும்பாலும் அதைக் கணவனிடமிருந்து மறைத்து விடுவாள்.

போகட்டும். அப்பாவுக்குத்தான் அவருடைய இளைய மகளின் சுயரூபம் தெரியாது. ஆனால், அம்மா? அம்மாவுக்கு எல்லாம் தெரியும்தானே? அப்படியும், அவர்களும் சேர்ந்து கொண்டு திட்டுகிறார்களே!

தன் செல்ல மகளின் சாயம் வெளுத்து விடுமோ என்று, அம்மாவுக்கும் பயம் வந்து விட்டது போல. சோனாவைக் காப்பாற்றத்தான் அம்மா எந்தத் தியாகமும் செய்வார்களே! மூத்த மகளின் நிம்மதி என்ன, வெறும்

தூசு! அருமை சோனா என்று வந்து விட்டால், வசுவுக்கு நியாயம் என்பது, அவசியமே இல்லாதது!

இவர்களிடம் நியாயம் கிடைக்கும் என்று எண்ணியது, அவளது மடத்தனம், முழுமுழு முட்டாள்த்தனம்!

சோனாவைப் பற்றிப் பெற்றோரிடம் பேசிப் பயனில்லை என்ற முடிவுக்கு வந்த போதும், வசுந்தராவுக்கு, விஷயத்தை அடியோடு, சும்மா விட்டு விடவும் மனமில்லை. இந்த மாதிரிச் சித்ரவதைகளை, அவள் ஏன், அனாவசியமாக அனுபவிக்க வேண்டும்? குறைந்த பட்சமாய், இதையாவது, நிறுத்தியாக வேண்டும்.

எனவே, ''இன்னுமா, இங்கே நிற்கிறாய்?'' என்று கேட்ட தாயிடம், போகிறேன். இதோ, போய்விடுகிறேன். ஆனால், அதற்கு முன் உங்களிடம் ஒன்று சொல்ல வேண்டும்'' என்றாள் மகள்.

''நீ ஒன்றும் சொல்ல வேண்டாம், போ'' என்று, விரட்டினாள் சரசா.

ஏளன முறுவல் ஒன்று தோன்றி மறைய, ''பயமே படாதீர்கள், அம்மா. உங்கள் மனதுக்குக் கஷ்டம் தரக்கூடிய எதையும், முக்கியமாக, சோனா பற்றி நான் எதையும், சொல்லவே போவதில்லை. அதனால், நீங்கள் தைரியமாகவே நான் சொல்லப் போவதைக் கேட்கலாம்'' என்றவளைத் தந்தை இடைமறித்தார்.

''வசு, என்ன, நீ ஒன்றுக்கொன்று சம்பந்தம் இல்லாமல் பேசிக் குழப்புகிறாய்? நீ, எதைப் பற்றி பேசினாலும், அதைக் கேட்க, அம்மாவுக்குப் பயம் எதற்கு?'' என்று விசாரித்தார்.

வசுந்தரா, ஒரு கணம் யோசித்தாள்.

தந்தை, இப்படித் தூண்டி துருவும்போது, ஓரளவு காது கொடுத்துக் கேட்பார். ஆனால், அதன்பின்? அம் மாவும் சோனாவும் சேர்ந்து கொண்டு வீட்டை நரகமாக்கி விடுவார்களே. அது மட்டுமல்ல. வசு சொல்லி முடிக்கு முன்பாகவே சௌந்தர்யா இன்னும் என்னென்ன நாடகம் ஆடுவாளோ? அப்பாவையே, எப்படியெப்படி மாற்றி விடுவாளோ?

அதுவும், அம்மாவின் துணை வேறு, அவளுக்குத் தான் என்று இருக்கையில், வீணாக முயன்று, நிலை மையை, இன்னமும் மோசமாக்கிக் கொள்ளுவானேன்?

யோசித்தபடியே, தங்கையைப் பார்த்தவளுக்கு, அவள் முகம் முதல் முறையாக வெளுத்திருப்பதைக் காண, மிகவும் ஆச்சரியமாக இருந்தது. கொஞ்சம் பரிதாபமாகவும் தான்.

சௌந்தர்யாவுக்கு, எல்லோரும் அவளைக் கொண் டாடியே, பழக்கம். இப்போது தந்தை திட்டி விடுவாரோ, என்று பயப்படுகிறாள் போல.

இடையூறின்றி வசுந்தராவால் எல்லாம் சொல்ல முடிந்து, முழு உண்மையையும் அறிந்து கொண்டு விட்டால், நிச்சயமாகத் தகப்பனார், வெகு கடுமையாகத் தான் நடப்பார். சோனாவுக்குக் கிடைக்கும் சலுகைகள் பலவும் ஏன், எல்லாமே கூட, நின்று போய்விடக் கூடும்.

பொதுவாகச் சரிசரி என்று விட்டுக் கொடுத்துப் போகிறவர்தான் என்றாலும், தண்டனை கொடுப்பது என்று நினைத்துவிட்டால், ராகவன், வெகு கடுமையாகத்

தான் நடந்து கொள்வார். அதற்காகவே, அம்மா, பல விஷயங்களை, அவர் காதுக்கு எட்ட விடுவதே கிடையாது.

இப்போது, காட்டிக் கொடுத்து விட்டால், அம்மா, சோனா இருவருக்குமே, சரியான மண்டகப்படி நடக்கும். அதற்கு மேலும் அப்பா,எந்தெந்த மாதிரித் தண்டிப்பார் என்றே, சொல்ல முடியாது. ஏதாவது ஒரு விஷயத்தில் நிச்சயம் நோகடித்து விடுவார்.

இன்னும் குறுக்கிட்டால், அதுவே அப்பாவின் ஐயத்தை வலுப்படுத்தி விடக் கூடுமோ, என்றஞ்சி, அன்னை, தங்கை இருவருமே கலக்கமுற்றிருப்பதைக் காணவும், வசுந்தராவின் மனம் இளகி விட்டது.

இவர்களை, இப்போது காட்டிக் கொடுப்பதால், என்ன பயன்? இவர்கள் கஷ்டப்பட்டால், அதனால், நடந்தது எதுவும் மாறி விடப் போகிறதா?

இவர்கள்தான், வேறு யார்? அவளைப் பெற்ற தாயும், அவளுடைய உடன் பிறந்த தங்கையும்தானே?

போகட்டும், அவர்களேனும் நிம்மதியாக இருந்து விட்டுப் போகட்டுமே, என்று, அவளுக்குத் தோன்றத் தொடங்கி விட்டது.

ஆனால், ஒன்பதாவது கதை ஒன்று முந்தைய எட்டுகளின் வழியில் தொடரக் கூடாது என்பதிலும், வசுந்தரா உறுதியாக இருந்தாள்.

எனவே, தாயாரை ஒரு தரம் நோக்கிவிட்டு, ''எனக்கு, இப்போது கல்யாணம் பண்ணிக் கொள்ள, விருப்பம் இல்லை, அப்பா...'' என்று தொடங்கினாள்.

''ஆனால், அதற்காக, அம்மா பயப்படுவானேன்?'' என்று, அதிலேயே நின்றார், தந்தை. ''உன் திருமண விஷயத்தில், அவள் பயப்பட என்ன இருக்கிறது?''

''என்ன உளறுகி....'' என்று மகளிடம் தொடங்கிய சரசா, அவள் ஒரு தினுசாக நோக்கவும், சற்றே தயங்கி, பின் வாயடைத்துப் போனாள்.

ராகவன், என்ன என்பது போல, விடாமல் பார்க்கவும், ''அதுதான் அப்பா. எனக்குச் சீக்கிரமே திருமணம் செய்து வைத்துவிட, அம்மாவுக்கு ஆசை. நான் மறுப்பேனோ என்கிற பயம்தான். அப்பா, ப்ளீஸ்ப்பா. கொஞ்ச நாளைக்கு, இதுபோல நாடகம் எல்லாம், வேண்டாம், அப்பா'' என்றாள், மகள் கெஞ்சலாக. ''வேண்டுமானால், பாருங்கள். அம்மாவுக்கே இன்று, போதும் போதும் என்று, ஆகியிருக்கும்! என்னம்மா?'' என்றபடி, மீண்டும், தாயை நேராக நோக்கினாள்.

மகளின் பார்வை சொன்ன சேதியை மறுக்க மாட்டாமல், ''ஆமாம், ஆமாம். இன்றைக்கு, அவர்கள் அடித்த கூத்து, எனக்கே வெறுப்பாகத்தான் இருந்தது. ஆனால், ஒருத்தர், இரண்டு பேரை வைத்து, எல்லோரையும் எடை போடக் கூடாது. அதனால், மாப்பிள்ளை பார்ப்பதை நிறுத்துவானேன் என்று, எனக்குத் தோன்றுகிறது...'' என்று இழுத்தாள் சரசா.

''ஆனால், சில பேர் மாறுவதே இல்லையே'' என்றாள் வசுந்தரா. சற்று அழுத்தமாக.

''யாரைச் சொல்லுகிறாய்? ஏற்கனவே வந்து, வேண்டாம் என்றவன் எவனையும் நாம் மீண்டும் அழைக்கப் போவது இல்லையே!'' என்றார் ராகவன்.

பேச்சு; மறுபடியும் அபாயத்தை நெருங்கவும், சரசா, அவசரமாகக் குறுக்கிட்டாள். ''வசு, அப்படி அர்த்தத்தில் சொல்லவில்லை. மாப்பிள்ளைப் பையன் என்று ஆகி விட்டாலே, இந்த அலை பாய்தல், அதிக அழகு தேடுதல், பேச்சு மாறுதல் எல்லாம் வந்து விடுகிறதே, என்று, அந்த அர்த்தத்தில் சொல்லுகிறாள்'' என்று, அன்னை விளக்கம் கொடுக்கவும், வசுவுக்குச் சிரிப்பு வந்தது.

''சரியாக மாட்டினீர்கள்'' என்று எண்ணியபடி, ''ஆமாம் அப்பா. அதனால்தான் திருமணம் என்றாலே, மனதுக்கு வெறுத்து விட்டது. அதனால் இனிமேல்... குறைந்த பட்சம், என் மனது, சரியாகும்வரை, கல்யாணப் பேச்சே, வேண்டாம், அப்பா'' என்று தான் விரும்பியதைச் சொல்லி முடித்தாள்.

அதிர்ச்சியுற்று, ''பிறகெப்படி...'' என்று தொடங்கிய சரசா, மனதில் நினைத்ததை, மேலே சொல்ல முடியாமல், வாயடைத்துப் போனாள்.

'உன்னை விரட்டிய பிறகுதானே, அடுத்தவளுக்குக் கோடீஸ்வர மாப்பிள்ளை பார்க்க முடியும்?'' என்று, வெளிப்படையாகச் சொல்ல முடியுமா, என்ன? அதுவும், அப்பாவின் முன்னிலையில்!

சரசாவின் தவிப்பு, உள்ளூர, வசுந்தராவுக்குத் திருப்தியாகவே, இருந்தது. மூத்த மகளின் மனம் நோகுமே என்ற அக்கறையே இல்லாமல், எத்தனை முறை, எண்ணியதையெல்லாம் பேசி, அவளை வருத்தப்படுத்தியிருக்கிறாள். இந்த அம்மா. இந்த ஒரு தரமாவது, கொஞ்சம், நாக்கை அடக்கிக் கொள்ளட்டுமே!

வாய்த்த தருணத்தை விட்டுவிடாமல், அவள் விரும்புகிற போதுதான், திருமணம் என்கிற வாக்குறுதியைத் தகப்பனாரிடம் பெற்றுக் கொண்ட பிறகுதான், வசுந்தரா அங்கிருந்து அகன்றாள்.

வெகு காலத்துக்குப் பிறகு, அன்று, அவள் வெகு நிம்மதியாகத் தூங்கினாள்!

ஆனால் அப்படி அவள் தூங்கியது அன்று மட்டும் தான்.

மறுநாளில், இருந்தே, இளைய மகளும், பெற்றவளுமாக, வசுந்தராவை, இரு மடங்காக வாட்டத் தொடங்கி விட்டார்கள்.

இருவருக்குமே, ஒவ்வொரு வகையில், ஆங்காரம்.

என்றைக்குமே, தானே நடுநாயகமாக இருந்து, தன் விருப்பப்படியே அனைத்தையும் நடத்திப் பழகியிருந்த சௌந்தர்யாவுக்கு, முந்திய நாள் நாடகத்தின் கடைசிப் பகுதி கொஞ்சமும் பிடிக்கவேயில்லை.

கண்ணீரை அடக்கிக் கொண்டு, குனிந்த தலை நிமிராமல் வசுந்தரா அசையாமல் உட்கார்ந்திருக்க, அம்மா, அழகில்லாதவளாய் ஒரு மகளைப் பெற்ற பாவத்தை நொந்து புலம்ப, தான் அழகாகப் பிறந்து தொலைத்த பாவத்தை எடுத்துச் சொல்லி, அதற்காக வருத்தப் படுவது போல, அவள் நடிக்க, 'யாரோ மடையர்கள், என்னவோ உளறினார்கள் என்று, நீ ஏனம்மா, அழகாக இருப்பதற்காக வருத்தப் படுகிறாய்?' என்று, தந்தை தன்னைத் தேற்ற, அதுதான், சௌந்தர்யா விரும்பிய முத்தாய்ப்பு.

அடக்க மாட்டாமல், வசுந்தரா, கொஞ்சம் அழுது வைத்தாள் என்றால், மிகமிகப் பொருத்தமான முடிவாக இருக்கும்! ஆனால், அது மட்டும், இதுவரை நடந்ததே இல்லை.

தமக்கை, கண்ணீர் சிந்தி அழுவதைக் காண வேண்டும் என்று, ஓர் ஆசை, சௌந்தர்யாவுக்கு, எப்போதுமே உண்டுதான்! வெகு நாளைய ஆசை! ஆனால், என்ன காரணமோ, வசு, அழவே மாட்டாள் அப்படி, ஒரு தரம், அவள் அழுது விட்டால் கூட, போகிறது என்று விட்டு விடலாம். ஆனால், என்னமோ, தானும் ஓர் அழகு ராணி தான் என்பது போல, அவள் அலங்காரம் செய்து கொண்டு நிற்பதைப் பார்க்கும் போதுதான், சௌந்தர்யா வுக்குப் பற்றிக் கொண்டு வந்துவிடும். அப்படியல்ல என்று காட்டி விடும் வெறியும் ஏற்பட்டு விடும். காட்டி யும் விடுவாள்.

கடைசியாக, 'பொன் மலர் நாற்றமுடைத்து' என்பது போல, அழகோடு, நல்ல குணமும் உடையவள் என்ற பெயரையும் தட்டிக் கொள்வாள்.

எல்லோரும் அவளைச் சுற்றி நின்று கொண்டு அவளைப் பற்றிப் புகழ்ந்து பேசுவதும், அவளோடு பேசத் துடிதுடிப்பதும், அவளுக்கு மிகவும் ஆனந்தம் அளிக்கும் நிகழ்ச்சிகள்.

அன்றைக்கும், முதலில் அப்படித்தான் தொடங்கி யது. ஆனால், பிறகு எல்லாம் மாறி விட்டது.

அசடு என்று, அவள் அலட்சியமாய் எண்ணி வந்த வசுந்தரா, அவளை இனம் கண்டு கொண்டது மட்டு மின்றி, அவளையும் அவளுக்கு எப்போதும், எதற்கும்

உறுதுணையாக இருக்கும் அம்மாவையும், மிரட்டி வாய டைக்கச் செய்து விட்டாளே!

மிரட்டல்! பெற்ற தாயையும் தங்கையையும் மிரட்ட, இந்த வசுவுக்கு, எவ்வளவு திமிர் இருக்க வேண்டும்? அதற்காகவே, அவளைக் கட்டிவைத்து உதைக்க வேண் டாமா?

அது மட்டுமா? அடுத்து, அந்த மாதிரி வெற்றிகளுக் கும், வெற்றி போதைகளுக்கும் வாய்ப்பே இல்லாமலே, செய்து விட்டாளே!

குறைந்த பட்சமாக, இப்போதைக்கு! 'இப் போதைக்கு' என்கிறாள். இந்த 'இப்போதைக்கு' எப் போது முடியும் என்று யார் கண்டார்கள்? அவள் பாட்டில், ஆண்டுக் கணக்கில், அதை நீட்டித்தால்?

அவளுக்காக, சோனாவும் கதாநாயகி வேஷமே இல்லாமல் காய்ந்து கிடக்க முடியுமா?

நினைக்க நினைக்க சௌந்தர்யாவுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

சௌந்தர்யாவின் எண்ணக் குமுறல்கள் இப்படியி ருக்க, சரசாவைப் பற்றியோ, சொல்லவே தேவை யில்லை! அவளது மனக்கோட்டைகள் எல்லாம், இப் போது, திரிசங்கு சொர்க்கம் என்பார்களே, அது போல, அந்தரத்தில் தொங்கிக் கொண்டு இருந்தன.

சௌந்தர்யாவைப்போல, வசுந்தராவை அவள் முட்டாள் என்று ஒரு நாளும் கருதியது இல்லை. முட்டாளாக இருந்தால், வீட்டு வேலைகளை இவ்வளவு கச்சிதமாக வசுவால் எப்படிச் செய்ய முடியும்? வகுப்பில்

எப்போதும், முதல் மாணவியாகத்தான், எப்படி வர முடியும்?

ஆனால் என்ன, முக்கியமான தேவையான அழகு இல்லாததற்கு, வசு பேசாமல் அம்மா சொல்வதைக் கேட்டு நடக்க வேண்டியது, அவள் கடமையல்லவா? 'நில்' என்றால் நின்று, 'உட்கார்' என்றால் உட்கார்ந்து, அம்மா சொல்லுகிறபடி செய்துவிட்டுப் போக வேண்டிய துதானே?

இதில் எவன் வேண்டும் என்றாலோ, வேண்டாம் என்றாலோ, இவளுக்கு என்ன வந்தது?

அதை விட்டு, மனது மண்ணாங்கட்டி என்று எண்ணிக் கொண்டு, அதுதான், சரசாவுக்கு எரிச்சலாக வந்தது.

இப்போதைக்கு மீண்டும் திருமணப் பேச்சை எடுக்க, ராகவன் சம்மதிக்க மாட்டார். வசுவாகப் பச்சைக் கொடி காட்டினால் தான் உண்டு.

ஆனால், அந்தக் கழுதை, ஜாடைமாடையாக ஏதாவது சொன்னால் கூட, முகத்தைத் திருப்பிக் கொண்டு போகிறாளே! தகப்பனாரிடம் வாக்கு பெற்று விட்ட திமிர்.

அந்த வாக்கை, மகள் எப்படிப் பெற்றாள் என்பதை நினைக்கும்போது, சரசாவுக்கும் உடம்பு எரியத்தான் செய்தது.

அந்தக் கோபத்தை, அந்த மகளிடம் காட்டாதிருக்க, அவளால் முடியவில்லை. காட்டாதிருக்க வேண்டும்

என்ற எண்ணமும், அவளுக்கு இல்லை. ஏனெனில், பல ஆண்டுகளாகவே, சரசாவின் கோப தாபங்களுக்கு வடிகாலே, வசுந்தராதானே!

எனவே, வசுந்தரா, தன் தாயிடம் சிடுசிடுப்பை மட்டுமே காண முடிந்தது எனலாம்.

அந்த வகையில் சௌந்தர்யா, பதினாறடி பாய்ந்தாள். எதற்கெடுத்தாலும் பேயாட்டம் ஆடினாள்.

தாயிடம், வசுந்தரா முறையிட்டுப் பயனில்லை. தந்தை முன்னிலையில் சின்னவள் போட்ட வேஷத்தில், பெரியவளால், வாய் திறக்கவே முடியாது போயிற்று.

ராகவன் வீட்டில் இல்லாத வேளைகளில், வசுந்தராவுக்கு வீடு நரகமாயிற்று என்று கூடச் சொல்லும் படியான நிலைமை என்றானது. வீட்டில் இருக்கும் போதும், விக்கித்து, வாய் மூடி நிற்க நேர்ந்தது பெரும் வேதனையாகத்தான் இருந்தது.

இந்த வீட்டை விட்டு எங்காவது தொலைதூரம் சென்று விட மாட்டோமா, என்று வசுந்தரா தவித்துக் கொண்டு இருந்தபோது, அப்படி ஒரு வாய்ப்பை நல்க, அந்த வீட்டுக்கு விருந்தாளி ஒருவர் வந்தார்!

## 4

**ரா**கவனுடைய தம்பி கேசவன். விரும்பி அவர் மருத்துவம் படித்த போது, குடும்பத்தில் எல்லோருக்கும், எதிர்பார்ப்புகள் அதிகம் இருந்தன.

எதிர்பார்ப்புகள் என்றால், அது அவருக்காகத்தான். ஏனெனில், வீட்டினருக்காக, அவர் செய்ய வேண்டிய கடமைகள் என்று, பெரிதாக எதுவும் இல்லை.

வரிசையாக, அவருடைய பெற்றோர், பெற்றுப் போட்டிருந்த ஐந்தாறு பெண்களுக்குத் திருமணம் செய் யவோ, வீட்டை, நிலத்தை விற்றுக் கடன் வாங்கிப் படிக்க வைத்த பெற்றோரின் கடன்தீர்க்கவோ, அவருக்கு அவசி யம் இருக்கவில்லை.

ஏனெனில், அண்ணனும் தம்பியுமாக, அந்தக் காலத்திலேயே, அவர்களுடைய பெற்றோர், அளவோடு தான் பெற்றிருந்தார்கள்.

'ஓகோ' என்று பெரிய பணக்காரர்கள் இல்லை யென்றாலும், பிள்ளைகள் விரும்பிய படிப்பைப் படிக்க வைக்க அவர்களுடைய பெற்றோரிடம் வசதியும் கூடவே மனமும் இருந்தது.

ராகவன், முதுநிலைப் பட்டதாரியாகி, அரசாங்க வேலையில் அமர்ந்த போது, குடும்பமே மிகவும் சந்தோ ஷப்பட்டது.

அவருக்கு, அழகான மனைவி அமைந்து, வசுந்தரா வும் அடுத்து சௌந்தர்யாவும் பிறந்துவிட, அவருக்குப் பெரிய வேலையும், நல்ல குடும்ப வாழ்வும், இலகுவாக அமைந்து போயின.

ராகவனுக்கும், கேசவனுக்கும் வயது வித்தியாசம் சற்று அதிகம். ராகவனுக்குச் சௌந்தர்யாவும் பிறந்து, இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு தான், கேசவன் மருத்து வப் படிப்பை முடித்தார்.

படிப்பை முடித்து, மேலே பயிற்சிப் பணியையும் அவர் நிறைவு செய்யும் போதே, நகரின் பெரிய மருத் துவ மனையொன்றில், கை நிறையச் சம்பளத்துடன் பணி புரியும் வாய்ப்பு, அவருக்காகக் காத்திருந்தது.

இந்த மகனுக்கும், மூத்தவனைப் போலவே, நிறை வான வாழ்வு அமையப் போகிறது என்று, எல்லோரும் ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த போதுதான், கேசவன் வக்கரித்துக் கொண்டார்.

நிறைவான வாழ்வு என்பதன் இலக்கணம், அவ ரைப் பொறுத்தவரையில் வேறு, என்றார்.

மருத்துவப் படிப்பின் அடிப்படையே மக்கள் சேவை, அதிலும் முக்கியமாகக் கிராம மக்களுக்குப் பணிபுரிவதே, தன் லட்சியம் என்று பிடிவாதம் பிடித்த வர், பெற்றோரோ, அண்ணனோ, யார் என்ன சொன்ன போதும் கேளாமல் ஒரே பிடியாகக் கிளம்பிச் சென்று விட்டார்.

ஒரு சிற்றூரில், 'போர்டை' மாட்டிக் கொண்டு தொழிலையும் தொடங்கினார்.

வருமானம் என்று, பெரிதாக ஒன்றும் இல்லைதான். ஆனால், டாக்டரின் வயிறு வாடாமல், சுற்று வட்டாரத்து மக்கள் பார்த்துக் கொண்டார்கள்.

வயிறு வாடும் நிலைமை ஏற்பட்டு, டாக்டர் வேறு பசிய நிலம் தேடிப் போய்விட்டால், அப்புறம் இந்த மாதிரி இரவு பகல் என்றில்லாமல், கூப்பிட்ட நேரத்தில் வந்து வைத்தியம் பார்க்கும், ஒரு நல்ல மலிவான மருத்துவர், அவர்களுக்கு எங்கே கிடைப்பார்?

எனவே, டாக்டருக்கு மரியாதை இருந்தது. கூடவே அவரைப் பொறுத்த வரையில், தேவைக்குமிஞ்சியே வருவாயும் இருந்தது.

வற்றாத சுனையும், சுனைக் கோயிலும், கோயிலைச் சுற்றிக் கானகமாய் அடர்ந்து உயர்ந்த மரங்களும், பெரிய குளங்களும், குளத்துப் பாசனத்தில் செழித்து வளர்ந்த பயிர்களுடன் கூடிய பசிய வயல்களும், எளிய மனிதர் களுமாக, அந்த ஊர் மிகவும் பிடித்துப் போனது.

ஆனால், டாக்டர் எழுதிய கடிதத்தைப் படித்து விட்டு, மகனைப் பார்க்க வந்த பெற்றோருக்கோ, பெற் றோருடன் கூட வந்த அண்ணனுக்கோ, டாக்டரின் வாழ்க்கை முறை, கொஞ்சமும் பிடிக்கவில்லை.

காரும், பங்களாவுமாக, ஒளிமிக்க, ஓர் உன்னத மான் வாழ்க்கையை உதறித் தள்ளி விட்டு, இந்தப் பட்டிக்காட்டில், புதைந்து போய் தன்னை நாசப்படுத்திக் கொண்டிருக்கிறான். பையன், என்று மிகவும் வருத்தப் பட்டார்கள்.

மீண்டும் ஒரு தரம், கேசவனிடம் சொல்லிப் பார்த்து அலுத்து விட்டு ''உன் தலைவிதி'' என்று, கை கழுவி விட்டு, மறுபடியும் சென்னை போய்ச் சேர்ந்தார்கள்.

ஒரு திருமணத்தைச் செய்து வைத்தால் மற்றதை மனைவி பார்த்துக் கொள்வாள் என்று, அதற்கு முயற்சி எடுத்தார்கள். ஆனால், திருமணத்தில் விருப்பமில்லை என்று, அந்த முயற்சிக்கும், கேசவன் முட்டுக்கட்டை போட்டு விட, அவரது எதிர்காலத்தைப் பற்றிய நம்

பிக்கை, அவருடைய குடும்பத்தாருக்கு, அற்றுப் போயிற்று.

ஏழெட்டு ஆண்டுகளுக்குப் பிறகு, திருமணம் செய்து கொள்ளப் போவதாக, ஒரு கடிதம் கேசவனிடமி ருந்து வந்தது.

பெண், அந்தப் பக்கமே என்றதும், எல்லோருக்கும் பாதி உற்சாகம் குறைந்து போயிற்று.

அங்கே போய் பெண்ணைப் பார்த்ததும், மிச்சமும் மறைந்து போயிற்று.

செல்வி, அந்த ஊர்க்காரியே. சின்னப் பண்ணை யார் மகள் என்றார்கள். வயது, சற்று அதிகம் போலத் தோன்றியது. அதுபற்றிக் கேட்டபோது, ஜாதகம் சரியில் லாமல் திருமணம் தட்டிக் கொண்டே போனதாகப் பெண்ணுடைய தாயார் சொன்னாள்.

மற்றபடி அங்கேயும், இந்தத் திருமணத்தில் அதிக மகிழ்ச்சி இருந்ததாகத் தெரியவில்லை.

பெண்ணின் பிடிவாதத்தினால் திருமணம் நடப்பதா கப் பேச்சு காதில் விழுந்தது. மாப்பிள்ளையின் கிராம சேவையே அவளைக் கவர்ந்ததாகக் கேள்விப் படவும், திருமண விழாவில் கலந்து கொண்டவர்கள், மணம் முடிந்த கையோடு, வாய் திறவாது, ஊர் திரும்பி விட்டார்கள்.

மேலும் நாலு ஆண்டுகள் கழித்து, கேசவனுடைய மகன் பிறந்தபோது, அவருடைய பெற்றோர்கள் இருவ ருமே மறைந்து விட்டிருந்தார்கள்.

சோகம் என்னவென்றால், கேசவனுடைய மனைவி யும் இறந்து போனதுதான்.

துக்கத்துக்காகச் சென்றிருந்த ராகவன், அப்போதே னும், நகர்ப் புறத்துக்குத் திரும்பும்படி தம்பியிடம், ஒரு தரம் சொல்லிப் பார்த்தார்.

ஆனால், நாற்பது வயதுக்குமேல், புதிதாக ஒரு வாழ்வை அமைப்பது கடினம் என்று கேசவன் மறுத்து விட்டார். அத்தோடு, கிராமமோ, நகரமோ, எல்லாம் ஒன்றுதான். என்று ஒரு சிரத்தையற்ற தன்மையும், அவ ருக்கு ஏற்பட்டுவிட்டிருந்தது.

வாழ்க்கைத் துணையை, அப்போது தான் இழந்தவ னுக்கு, எதிலும் ஆர்வம் உண்டாவது கடினம்தான் என்று தம்பியின் பதிலை எதிர்த்து வாக்குவாதம் செய்து கொண் டிராமல், ராகவன், அப்போது திரும்பிச் சென்று விட்டார்.

அப்புறம் மீண்டும், ஒன்றரை நாள் பயணம் செய்து, கிராமம் வரை சென்று, உடன் பிறந்தவனுடன் இது பற்றிப் பேச, அவருக்கு ஊக்கம் உண்டாகவில்லை.

ஒருவன் நல்லபடியாக வளர்ந்து மேல் மட்டத்தை அடைய வேண்டும் என்றால், அந்த உந்துதல், அவனுக் குள்ளாகவே, இருக்க வேண்டும். அதை விட்டு, 'கட்டிக் கொடுத்த சோறும், சொல்லிக் கொடுத்த வார்த்தையும்' எத்தனை நாளைக்கு?

அத்தோடு, தம்பிக்கும், நாற்பதுக்கு மேல், வயதாக வில்லையா? தனக்கு எது நல்லது, எது கெட்டது என்று அவனுக்காகத் தெரிய வேண்டாமா? அவனே யோசித் துச் செய்யட்டும்!

தனக்கு இல்லை என்றாலும், தன் பிள்ளையின் எதிர்கால நலனிலாவது ஒரு மனிதனுக்கு அக்கறை இராது? அக்கறை இருப்பவன், அதற்குத் தேவையான தையும், தானே செய்யாமலா, இருப்பான்?

ஏன் ராகவனுக்கே வேறு யார் வந்து செய்தார்கள்? அவரே படித்து, அவரே வேலை தேடிக் கொள்ளவில் லையா? படிப்பதற்குப் பணம் மட்டும்தானே, தகப்பனார் கொடுத்தார்? மற்றபடி முயற்சி, முன்னேற்றம் எல்லாம் அவரது சொந்த உழைப்புதானே?

இப்படியெல்லாம் எண்ணிக் கொண்ட போது, மன தின் சிறு மூலை உறுத்த, ராகவன், தம்பிக்கு, அவரது எதிர்காலத் திட்டம் என்ன என்று கேட்டு, ஒரு கடிதம் எழுதிப் போட்டார்.

அவர் எழுதிப் போட்டு, இரண்டு மாதங்களுக்குப் பிறகு, இப்படியே இருந்து விடப் போவதாகக் கேசவனி டமிருந்து அவருக்குப் பதில் வந்தது.

குழந்தையை, மாமனார் வீட்டில் நன்கு கவனித்துக் கொள்வதால், பிரச்சினை ஏதும் இல்லை என்றும், அதனால் வீணாகக் கவலைப்பட வேண்டாம் என்றும், அண்ணனுக்குத் தேறுதல் வேறு, பின் குறிப்பு வேறு, இணைக்கப்பட்டிருந்தது.

'எப்படியோ தொலையட்டும்' என்று, கடிதத்தைத் தூக்கிப் போட்டதோடு, ராகவன், தம்பியை மறந்தே போனார் எனலாம்.

அப்படி மறப்பது அவருக்குக் கடினமாகவும் இருக கவில்லை.

சொந்தக் குடும்பத்தின் தேவைகள், மகள்களின் படிப்பு, வளர்ச்சி, மாப்பிள்ளை தேடுதல், என்று வேறு எதையும் நினைக்க, அவருக்கு நேரமும் இருக்கவில்லை.

அவரே மறந்து விட்ட பிறகு, வீட்டில் மற்றவர்களுக் குக் கேசவனைப் பற்றிய நினைவு எப்படியிருக்கும்?

இவ்வாறு, அனைவருமே, மறந்து விட்ட ஒரு மனிதர், திடும் என்று வந்து நிற்கவும், எல்லோருக்குமே பிரமிப்பாய்த் தானிருந்தது.

முதலில் சுதாரித்துக் கொண்டு, ''வாருங்கள் சித்தப் பா'' என்று வரவேற்றவள் வசுந்தராதான்.

அதன் பிறகே, ''வாடா, வா. ஏது இவ்வளவு தூரம்? உன் சுனையூரும், அதன் சுற்றுவட்டார மக்களும், உன்னை, எப்படி இங்கே வர விட்டார்கள்? வா. உள்ளே வந்து உட்கார்.'' என்று உடன் பிறந்தவரை, ராகவன் உள்ளே அழைத்தார்.

''ஆமாம் உட்காருங்கள்'' என்று எல்லோரும் வர வேற்பில் இணைந்து கொள்ள, கேசவனும், ஹாலினுள் வந்து, சோஃபாவில் அமர்ந்தார்.

''என்ன சாப்பிடுகிறீர்கள்?'' என்று, இருந்த இடத்தை விட்டு அசையாமல் இருந்தபடியே கேட்டு விட்டு, மைத்துனன் பதில் சொல்லுமுன்பாகவே ''ஒரு கடிதம் கூட எழுதவில்லையா? நீங்கள், எங்களையெல் லாம் மறந்தே விட்டீர்கள் என்று நினைத்து விட்டேன்'' என்றார் சரசா.

''மறக்க முடியுமா அண்ணி, உட்கார்ந்து, எழுதத் தான் எனக்கு, நேரமே கிடைப்பதில்லை. 'டிஸ்பென்சரி', நோயாளிகள் என்று, பொழுது முழுதும் வேலையி லேயே, கழிந்து போய் விடுகிறது'' என்றார் கேசவன். கூடவே, 'தன்'னிலிருந்து பேச்சைத் திருப்பி, ''வசுவும், சௌ.சௌ..சௌந்தர்யாதானே, அடுத்தவள் பெயர்? இரண்டு பேரும் நன்றாக வளர்ந்து விட்டார்களே!'' என்றார் மெச்சுதலாக.

''ஆமாம், பெண்கள் இரண்டு பேரும், நல்ல வளர்த்தி. இருவ்ருமே உங்கள் அண்ணனைப் போல. ஆனால் சாயலில், சின்னவள் மட்டும் தான், என் ஜாடை!'' என்றாள் சரசா. பெருமையாக.

முதலிலேயே, கேசவன், 'அண்ணா, உன் இரண்டா வது மகள், என்ன அழகு' என்று வியந்திருக்க வேண் டும். அதுதான் இல்லையென்றாலும், தன் சாயலைக் குறிப்பிட்டு சரசா சொன்ன பிறகாவது 'ஆமாம், உங்க ளைப் போலவே சின்னவள், மிகவும் அழகு' என்று கூறியிருக்க வேண்டும்.

இரண்டையும் விட்டு விட்டு, குளிர் பானம் கொண்டு வந்து கொடுத்த வசுவிடம், ''ரொம்ப தாங்க்ஸ் அம்மா. தொண்டை வறண்டு போயிருந்தது. தேவையறிந்து, கொணர்ந்து கொடுத்தாய்! உன் பெரிய பெண். கெட்டிக்காரி, அண்ணா அருமையான குழந்தை!'' என்று அவர் பாராட்டியது மன்னிக்க முடி யாத குற்றமாக, சௌந்தர்யாவுக்குப் பட்டது.

ஆனால், தந்தையின் முன்னிலையில் எதையும் காட்டிக் கொள்ளக் கூடாது என்று, தாயார் சொல்லிக்

கொடுத்திருந்தது நினைவு வரவும், தன் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு, ''உங்கள் மகன் வரவில்லையா, சித்தப்பா? ஒருவேளை, பட்டிக் காட்டிலேயே இருந்து பழகி விட்டதால், பட்டணத்துக்கு வர, அவனுக்குப் பயமாக இருக்கிறதாமா?'' என்று, கேலி போலக் குத்தலா கக் கேட்டாள்.

''கருண் எதற்கும் பயப்பட மாட்டானம்மா'' என்று கேசவன் முகம் சட்டென வாடியது. தமையனிடம் திரும்பி, கருண் பற்றி, ''உன்னுடன் கலந்து ஆலோசிக்கத் தான், நான் இப்போது இங்கே வந்தேன், அண்ணா'' என்று கூறவும், சரசாவுக்கு வயிற்றில் புளியைக் கரைத் தது.

மைத்துனன் கிராமத்துப் பெண்ணை மணக்கப் போவதாகச் சொன்னதிலிருந்தே, சரசாவுக்கு, உள்ளூர, ஒரு பயம்தான்.

கிராமத்துப் பெண்ணுக்கு நாகரீகம் கற்றுக் கொடு, என்று அந்தப் பெண்ணை அவள் தலையில் கட்டி விட்டால்?

ஆனால், தங்களுக்கு நாகரீகம் போதாது என்று, அங்கே யாரும் எண்ணியதாகவே தெரியாததால், சரசா அஞ்சிய பிரச்சினை, எழவே இல்லை.

அடுத்து செல்வி இறந்த போது, குழந்தையைத் தன் தலையில் கட்டி விடுவார்களோ - முக்கியமாகக் கண வன், தானாகவே அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு விடுவாரோ என்று, அவள் கதி கலங்கிப் போயிருந்தாள்.

ஏனெனில், ராகவன் ஒரு மாதிரி மனிதர். வீட்டில் நடக்கும் பல விஷயங்களை, அவர்கண்ணில் படாமல் எளிதாகாவே மறைத்துவிடலாம். ஆனால் அவராக ஒன்று நினைத்து விட்டால், அதை மாற்றுவது, லேசில் முடியாது. 'லேசில்' என்ன? முடியவே முடியாது என்றே சொல்லி விடலாம்.

எப்படியோ, அப்போதும் ஒருவாறு தப்பித்தாள்.

பிள்ளையைப் பற்றிப் பேசத்தான் வந்திருப்பதாகச் கேசவன் கூறவும், இதற்காகத்தான் பிள்ளையை இங்கே கொண்டு வந்து விடப் போவதாகச் சொல்லத்தான் மைத்துனர் வந்திருப்பதாக அவளுக்கு நிச்சயமாகத் தெரிந்து விட்டது.

இதை, எப்படித் தவிர்ப்பது?

குறிப்பாகச் சொன்னால் கணவர்தான் புரிந்து கொள்ள மாட்டார். மைத்துனருமா, அப்படி?

இப்படி எண்ணிய சரசா, ''பட்டிக்காடு, என்ன பட்டிக்காடு? அந்தச் சுனை நீரும், வயல் வெளிகளும், கள்ளமில்லாத கிராமத்து மக்களும்... என்ன, அருமை யான இடம்? அதை விட்டு வர கருண் குட்டிக்கு எப்படி மனம் வரும்? அத்தோடு, உயிராய் வளர்க்கும் தாத்தா வும் பாட்டியும் அவர்களை விட்டு, அவன் வருவானாக் கும்? அப்படி வரச் சொல்ல, உன் சித்தப்பாதான், இரக்கமில்லாத ராட்சதனா?'' என்று அவசரமாக உரைத் தாள்.

'அண்ணனுக்கு நான் சளைத்தவனில்லை' என்பது போல, கேசவனும், சரசாவின் குறிப்பைக் கவனிக்கவே

இல்லை. மாறாக, "அவனுடைய தாத்தா, பாட்டிக்கு, அவன் உயிரைப் போலத்தான். அதற்காக, வயதாகி விட்ட அவர்களிடமே அவனை விட்டு வைக்க முடி யுமா? அவனும், இந்தப் பிள்ளைகளைப் போல, நாகரீக மாக வளர்ந்து, படித்துப் பட்டம் பெற வேண்டாமா?' என்று யாரிடமோ சண்டையிடுவது போலக் கேசவன் வாதாடத் தொடங்கவும் சரசாவுக்கு 'பகீர்' என்றது.

அய்யோ, இந்த மனிதர், தன் பிள்ளையை, அவள் தலையில் கட்டத்தான், சுனையூரிலிருந்து இவ்வளவு தூரம், தன் நோயாளிகளைக் கூட விட்டு விட்டு வந்திருக் கிறார்!

'என்னண்ணி, கருண் யார்? இவர்களுடைய சித் தப்பா மகன்தானே? அவனும், துடிப்பும் துள்ளலுமாக இதுபோல வளர வேண்டாமா? என்று, கேசவன் நேரடி யாக அவளிடம் கேட்டபோது, அவளுக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை.

இது போல என்றால்? இவர்களைப் போல நகரத் தில் வளர்வதா?

"ஆனால், இந்த நகர்ப்புற வாசமே வேண்டா மென்று தானே...நீங்கள்...." என்று இழுத்தாள்.

பெற்றோரும், தானுமாகத் திரும்பத் திரும்பத் தம்பி யிடம் வாதாடியதும், தோற்றதும் நினைவு வர, "அது தானே? அப்பா, அப்போது உன்னிடம், எவ்வளவு தூரம் எடுத்துச் சொன்னார்? நான் சொன்னதையும் கூடத்தான், நீ காதிலேயே போட்டுக் கொள்ளவில்லையே!" என்று அண்ணன் குறைப்பட்டார்.

சற்று நேரம் தலை குனிந்து அமர்ந்திருந்து விட்டு, ''இப்போதும், நான் கிராமத்துக்குப் போனதில், தப்பிருப் பதாக, எனக்குத் தோன்றவில்லை அண்ணா. செல்வி இருந்திருந்தால், அவள் பேச்சு, எப்படியும் எடுபட்டிருக் கும். பிள்ளைக்காக, அவளும் யோசித்திருப்பாள். அத் தோடு இப்படித் தாத்தா, பாட்டியுடன், கருண் வசிக்க வேண்டிய நிலைமையும், ஏற்பட்டிராது. இன்றையச் சிக்கலும், நேர்ந்திராது'' என்றார் தம்பி வறண்ட குரலில்.

''அப்படி என்ன பிரச்சினை. இப்போது நேர்ந்து விட்டது?'' என்று, தமையன் கேட்க, குண்டு வெடிப்ப தைத் தள்ளிப் போடும் எண்ணத்துடன், ''எத்தனையோ ஆண்டுகளுக்குப் பிறகு, உங்கள் தம்பி வந்திருக்கிறார். முதலில் உடம்பு, கிடம்பு கழுவி, ஏதாவது சாப்பிடட் டுமே, பசியோடு இருக்கும் போது, சின்னச் சின்னப் பிரச்சினைகள் எல்லாம், பூதமாகத் தோன்றும். நீங்கள் வருவது தெரியாது. ஆனாலும், ஏதோ இருப்பதை நிரவிச் சாப்பிடலாம். வயிறு நிறைந்து விட்டால், 'அட, இதற்குப் போயா, இப்படிப் பயந்தோம்?'' என்று, சிரிப்புக் கூட வரும். தானே இதைச் சமாளித்துக் கொள்ள லாமே என்று, சிக்கலை உங்களிடம் சொல்லாமலே, அவரது ஆருயிர்க் கிராமத்தை நோக்கிக் கிளம்பி விடு வார். உங்கள் தம்பி! ஹிஹி'' என்று வலுக்கட்டாயமாய்ச் சிரித்து வைத்தாள் சரசா.

அப்போதுதான், கேசவனுக்கு ஓரளவு விஷயம் புரிந்தது.

அவரது பிரச்சினையை அண்ணன் அறிவதில், அண்ணிக்கு இஷ்டமில்லை.

அதாவது, அண்ணன், அவருக்கு உதவி செய்வதில்!

ஏன் என்று புரியாமல் கேசவன் சில கணங்கள் திகைத்துத் தடுமாறினார்.

அண்ணியின் குணம் பற்றி, முன்பு வீட்டுப் பெரிய வர்கள் பேசியதையெல்லாம் யோசித்துப் பார்த்து விட்டு, அதன் பிறகுதானே, அண்ணனிடம் கலந்து ஆலோசிக்க வென்று, அவர் இங்கு வந்ததே!

வெறும் ஆலோசனை கூட, ஓர் அண்ணனிடம், உடன் பிறந்த தம்பி கேட்கக் கூடாதா? அவர் ஒன்றும், பணம் காசையோ, உடல் உழைப்பையோ, மூத்தவரிடம் கேட்டு விடவில்லை!

இந்த இரண்டையும் மற்றவர்களுக்காகச் செலவு செய்யத்தானே, அண்ணிக்குப் பிடிக்காது! அப்படித் தானே அம்மா சொல்வதுண்டு...என்று, யோசிக்கும் போதே, இந்த இரண்டையும் நாடி, அங்கே வரவில்லை என்பதை, தான் இன்னமும் தெளிவு படுத்தவில்லை என்பதைக் கேசவன் உணர்ந்தார்.

உடனே அவசரமாக, ''சாப்பாடு இருக்கட்டும் அண்ணி. எனக்குப் பசியே இல்லை. அத்தோடு, இது பசியாறும் வேளையும் இல்லை. வேளையற்ற வேளை யில், என்னால் உங்களுக்கு எதற்காக, வீண் சிரமம்? நான் வேறு வேலையாகச் சென்னைக்கு வந்தேன். அப்படியே, கருண் விஷயமாக, அண்ணனிடம், ஓர் ஆலோசனை மட்டும் கேட்டு விட்டுப் போகலாம் என்று

இங்கே வந்தேன்'' என்று சரசாவுக்கு, நிலைமையைத் தெளிவு படுத்தினார்.

சட்டென முகம் மலர, ''இல்லாவிட்டால் இந்தப் பக்கம் எட்டிக் கூடப் பார்த்திருக்க மாட்டீர்கள் போல. இது உங்கள் அண்ணன் வீடு. அடிக்கடி வந்து போய் இருக்க வேண்டாமா?'' என்று, போலியாகக் குறைப்பட்டாள்.

தாயை நன்கு அறிந்திருந்த வசுந்தராவுக்கு, அன்னையிடம், உள்ளூரக் கோபமும்; சிறிய தகப்பனாரிடம் மிகுந்த பரிதாபமும் ஏற்பட்டன. சிக்கல் என்று தவிப்புடன் வந்த மனிதரை, அதைச் சொல்லக் கூட விடாமல் விரட்ட முயற்சிக்கிறார்களே இந்த அம்மா!

சிறிய தந்தையை நோக்கி, ''என்ன பிரச்சினை சித்தப்பா? அதை, முதலில் சொல்லுங்கள்! அல்லது அப்பாவிடம், தனியாகச் சொல்ல வேண்டுமானால், நாங்கள் வெளியே போய் விடுகிறோம்!'' என்று, இனிய குரலில் வினவினாள்.

ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்த போதும், அதைக் காட்டிக் கொள்ள முடியாமல், ''ஆமாம்.. அண்ணனுக்கும் தம்பிக்கும் இடையே எத்தனையோ இருக்கும். நடுவில் நாங்கள் எதற்கு? வாங்கடி போகலாம்'' என்று, ஒரு மாதிரிக் கிண்டலாகக் கூறி, மகள்களை அழைத்தாள்.

''அதில்லை, அண்ணி...'' என்று இழுத்த தம்பியைத் தடுத்து, ''போகட்டும், விடு, கேசவா. எல்லாரும்

இருந்தால் உன்னால், லஃகுவாகப் பேச முடியாது. தேவைப்பட்டால், பிறகு சொல்லிக் கொள்ளலாம்...'' என்று ராகவன் முடித்து விட்ட பிறகு, அதற்கு மேலும் அங்கிருக்க முடியாமல், சரசா மகள்களோடு வெளியேறி னாள்.

செல்லுமுன், கேலி போல, ''உங்கள் அப்பா, அவர் தம்பியோடு, கொஞ்சிக் குலாவ வேண்டுமாம். இடை யில், பானகத் துரும்பு போல, நாம் எதற்கு? கிளம்புங் கள்'' என்று ஓர் அம்பை எய்துவிட்டுத்தான் சென்றாள்.

பதிலே சொல்லாமல், ராகவன் எழுந்து வந்து கதவைச் சாத்திக் கொண்டு விட, சரசா, மூத்த மகளிடம் பாய்ந்தாள். ''உன் சித்தப்பன் பேசுவதற்கு நீ என்னடி, நாட்டாமையா? பெரிய பண்பின் சிகரம் என்று, எண் ணமோ? அவனுக்கு எலுமிச்சைச் சாறு வேறு! தேவையா! நான் சொல்லாமல், உன்னை யாரடி, கொடுக் கச் சொன்னது? பாவி! அங்கே தனியாக, என்ன என்ன சொல்லப் போகிறானோ? ஒன்றுமே, தெரிய வில்லையே!'' என்று, ஆத்திரத்துடன், சரசா அங்கலாய்த் தாள்.

இந்தப் பாய்ச்சல், ஓரளவு வசுந்தரா எதிர்பார்த்தது தான். ஊர் வம்பில் நாட்டம் மிகுந்த தாயாருக்கு, அப்பா, சித்தப்பாவின் பேச்சைக் கேளாமல், எழுந்து வர நேர்ந் தது பிடிக்காது, என்பது, அவள் அறிந்ததுதான்.

அத்தோடு, அப்பா இல்லாத இடத்தில் காரணம் இன்றியே, வசுவைத் திட்டிக் கொண்டு இருப்பது, அன் னையின் பழக்கமாகிக் கொண்டு இருந்தது. சும்மாவே, ஆடுகிறவள், கொட்டுக் கண்டால், விடுவாளா?

இயன்ற மட்டும் அமைதியாக "அப்பாதான், தேவைப்பட்டால் சொல்லுவதாகச் சொன்னாரே அம்மா?'' என்று தணிந்த குரலிலேயே கேட்டாள்.

''அதென்னடி, 'தேவைப்பட்டால்?' புருஷன் பெண் டாட்டிக்கு இடையில் அதென்னடி ரகசியம்? கேட்க அசிங்கமாயில்லை? உன் அப்பாதான், ஒன்றும் தெரியா தவர். அந்த மனிதனுக்குத் தெரியாது? பெரிய டாக்ட ராம். மனிதர்களின் மனது பற்றித் தெரியாமல் இவன் என்ன மருந்து கொடுத்து, யாருக்குக் குணமாகும்? சும்மாவா, குக்கிராமத்தில் குப்பை கொட்டிக் கொண்டு கிடக்கிறான்? இங்கெல்லாம் வந்தால், சாயம் வெளுத்து விடுமே!'' என்று வாய்க்கு வந்தபடி, மைத்துனரை இளக்காரமாகப் பேசினாள் சரசா.

அற்புத உண்மையை அறிந்து கொண்டவள் போன்று, சோனா கண்களை அகல விரித்தாள். ''ஓகோ, இது தானாம்மா விஷயம்? ஆனாலும், உங்களுக்கு அறிவுக் கூர்மை அதிகம்மா! நான் கூட, உண்மையா கவே, சேவை மனப்பான்மை காரணமாகத்தான், சித் தப்பா, அங்கேயே விழுந்து கிடக்கிறாராக்கும் என்று எண்ணி விட்டேன். இங்கே வந்தால், வயிற்றுப் பாட் டுக்கே 'ததிங்கிணத்தோம்' போடும்படியாகி விடுமோ, என்கிற பயம்! அதுவே தானேம்மா? அய்யோ! எப்ப டிக் கண்டுபிடித்து விட்டீர்கள், அம்மா!'' என்று, குரலி லும், பாவனையிலும் ஏகப்பட்ட மாற்றங்களோடு சௌந் தர்யா சிலிர்த்து, சிலாகித்துப் பேச, சரசாவுக்கு, உச்சிக் குளிர்ந்து, மைத்துனனை, மேலும் மட்டம் தட்டிப் பேசலா னாள்.

சௌந்தர்யா கூடச் சேர்ந்து ஒத்து ஊதினாள்.

அம்மா, இளைய மகள், இருவருக்கும் இது வழக்கம் தான். யாராவது ஒருவரைப் பிடித்துக் கொண்டு, அவரை வாய்க்கு வந்தபடி வக்கணை பேசுவதும், ஒருவருக்கொருவர் ஒத்து ஓதுவதும் அவ்வப்போது வீட்டில் நடப்பதுதான்.

பேச்சு ரொம்பவும் அதிகப்படியாகப் போகவும், அதுவும் சிக்கல் என்று வந்திருக்கும் சித்தப்பாவைப் பற்றியதாக இருக்கவும் பொறுக்க முடியாமல் வசுந்தரா, அவர்கள் பேச்சில் குறுக்கிட்டாள்.

''நீங்கள் சொல்வது சரியில்லை அம்மா. சித்தப்பாவுக்கு, அங்கே மிக நல்ல பெயர். நாம் போயிருந்த போதுகூட, கைராசிக்காரர் என்று நம்மிடமே கூறினார்களே!'' என்று, அன்னைக்கு நினைவூட்டினாள்.

கோபமாக முறைத்துவிட்டு, ''அவ்வளவு பெரிய கைராசிக்காரர், கட்டின பெண்டாட்டியை ஏன் சாகக் கொடுத்தாராம்? அதிலேயே, மருத்துவத்தில், அவர் பெரிய கூமுட்டை என்று, உறுதியாகவில்லையா?'' என்று அதட்டிப் பேசினாள், பெற்றவள்.

''அநியாயமாகப் பழிக்காதீர்கள் அம்மா. சித்திக்கு, உடம்பு முடியாதபோது, சித்தப்பா, அங்கே இல்லவே இல்லையே? அத்தோடு, சித்திக்குக் கீழே விழுந்ததில் தலையில் பலத்த அடிபட்டல்லவா இறந்தார்கள்? அதைக் கூடச் சித்தப்பாவைச் சமயத்தில் கண்டுபிடிக்க முடிந்திருந்தால், அவர் காப்பாற்றியிருப்பார் என்று

தானே, எல்லோரும் பேசினார்கள்? பாவம் சும்மாவே சித்தப்பாவுக்கு வாழ்க்கையில் மிகப் பெரிய இழப்பு. இப்படித் தொழிலையும் கேவலப் படுத்தாதீர்கள்'' என்று ஆத்திரப் பட்டுப் பேசிவிட்டு உடனேயே வசுந்தரா நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

எவ்வளவு முயன்று, பயின்றாலும், அவ்வப்போது இந்த நாவடக்கம், இப்படிக் காலை வாரிவிட்டு விடுகிறதே. இனி, அம்மாவிடம் வாங்கிக் கட்டியாக வேண்டும், சோனாவும் கூடச் சேர்ந்து கொள்வாள். அவள்தான் எப்போதுமே, எங்கே, எங்கே என்று இருப்பவள் ஆயிற்றே.

வசுந்தரா அஞ்சியது போலத்தான் நடந்தது.

வசுந்தரா, தாய் சொல் கேளாத தறுதலையாம், சொல் கேளாத தறுதலையாக மட்டுமாக இல்லாமல், இப்போது தாயைப் பழித்த பாவியும் ஆகிவிட்டாளாம். அதுவும் யாருக்காக? அவளைப் போலவே, பெற்றவர் பேச்சுக்குக் கீழ்படியாத, வாழ்க்கையில் உருப்படாத சித்தப்பனுக்காகச் சொந்த அம்மாவை, அவமதித்து விட்டாளாம். அந்த சித்தப்பனைப் போலவே, அவளும் உருப்படப் போவதில்லையாம்.

தாயும் தங்கையுமாகப் பாடி முடித்த போது எத்தனையோ தடவைகள் பட்டு விட்ட பிறகும், வசுவுக்கு மனதுக்குக் கஷ்டமாகத் தான் இருந்தது.

எப்போதுமே, வசுவைக் குற்றம் சொல்ல, மற்ற இருவரும் சேர்ந்து கொள்வது வழக்கம், வழக்கம்தான்

என்றாலும், அவ்வபபோது நல்லபடியாகவும், மூவரும் பேசிக் கொண்டிருப்பது உண்டுதான்.

இப்போது, அந்த நல்லிணக்கம் அடியோடு மறைந்து, எந்நேரமும் வெறுப்பே தலை தூக்கி நிற்பதன் காரணம், வசுந்தரா அறிந்ததுதான்.

ஆனால், அதற்காக மீண்டும் பழைய மாதிரி, பெண் பார்க்கும் நாடகங்களுக்கு ஒப்புதல் அளித்துத் தன்னைத் தானே தாழ்த்திக் கொள்ள, அவளுக்குக் கொஞ்சமும் விருப்பம் இல்லை. அதைவிட இன்றைய வெறுத்த சூழ்நிலையே மேல்.

ஒருவேளை இங்கிருந்து கொஞ்சநாள், வேறு எங் காவது போய் வர முடிந்தால், தாய் தங்கையின் மனம் மாறக் கூடுமோ, என்றிருந்தது அவளுக்கு. ஆனால், அப்படி அவள் மட்டுமாக, எங்கே போக முடியும்? வெறும் கனவு, போகாத ஊருக்கு வழி?

தான் மட்டுமாக வெளியூர் செல்வதைப் போகாத ஊருக்கு வழி என்றுதான் வசுந்தரா, முதலில் எண்ணி யிருந்தாள். ஆனால், அது போகக் கூடிய ஊருக்கான வழியாக மாறிய போது அந்த வாய்ப்பை, அவள் விட்டு விடாமல் பற்றிக் கொண்டாள்.

## 5

**வ**சுவுக்கு அந்த வாய்ப்பை அளித்தவர், பல ஆண்டுகளுக்குப் பிறகு அவர்கள் வீட்டுக்கு வருகை தந்திருந்த சித்தப்பா கேசவன்தான்.

அன்று அண்ணனும் தம்பியுமாக வெகு நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு, சேர்ந்து வெளியே போய், ராகவன் மட்டும் திரும்பி வந்தார்.

மற்றவர் எங்கே என்ற கேள்விக்கு ''ஏற்கனவே, அவன் ஹோட்டலில் ரூம் போட்டிருக்கான். இப்போதும், அங்கேயே சாப்பிட்டு விடுவதாகச் சொல்லி இறங்கி விட்டான்'' என்றவர் மனைவியை நோக்கி, ''திடீர் என்று சாப்பாட்டுக்கு வந்து நின்றால் அண்ணிக்குக் கஷ்டம்'' என்றான். நீ முக்கி, முனகிக் கொண்டே செய்வது வீட்டில் எங்களுக்குப் பழகி விட்டது. அவனுக்கு அப்படியா? சாப்பாட்டை முடித்துக் கொண்டு, சாயங்காலமாய் வருகி றேன் என்றான். ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு வந்திருக் கிறான், கூடக் கொஞ்சம் பாசம் காட்டியிருக்கக் கூடாதா? அப்படி என்ன சாப்பிட்டுவிடப் போகிறான்?' என்று வருத்தத்துடன் இயம்பினார் அவர்.

ஒருகணம், முகம் கறுத்த போதும், உடனேயே ஆங்காரத்துடன் நிமிர்ந்து, ''ஏன், நான் அவரைச் சாப்பி டக் கூப்பிடவில்லையா? வந்ததும், ஜூஸ் கொடுத்தா யிற்று. அதற்கு மேல் ''சாப்பிடுங்கள்'' என்றும் சொல்லி யாயிற்று. 'சாப்பிடுகிற நேரம் இல்லை' என்று தட்டிக் கழித்தது உங்கள் தம்பிதானே? இப்போது வெளியே தனியே கூட்டிப் போய் உபதேசம் நடந்ததாக்கும்? இவ்வளவு காலம் கழித்து மனிதர் வந்திருக்கிறாரே, என்று பார்த்தால், கோள் மூட்டிக் கலகம் செய்யத்தானா? சே, என்ன மனிதர்கள்? உங்கள் வீட்டாருக்கு என்னைக் கண்டாலே ஆகாது. நான் என்ன செய்தாலும் திருப்தியே

கிடையாது என்பது, இன்று, நேற்று நடக்கிற விஷயமா? என்றைக்குமே அப்படித்தானே?'' என்று பொரிந்து கொட்டினாள்.

பழச்சாறு கொடுத்ததற்குத் திட்டியதை இலகுவாக மறந்து விட்டுத் தாயார், அது தன் உபசாரம் போலப் பேசுவதைப் பார்த்தபடி நின்ற வசுந்தரா, அசைவு உணர்ந்து, லேசாகத் திரும்பிப் பார்த்தாள்.

சௌந்தர்யாதான்.

அவளும், தமக்கையைப் போலவே எண்ணியவள் போன்று, தமக்கையைப் பார்த்துச் சன்னமாய்க் கண்ண டிக்கவும், பெரியவளுக்குச் சிரிப்பு வந்தது.

இது போன்ற சமயங்களில், சோனாவைப் பார்த் தால், எவ்வளவு நன்றாக இருக்கிறது?

ஆனால், இப்படி சகோதரி என்பதை, அவள் காட்டிக் கொள்வதே, வெகு அபூர்வமாக அல்லவா இருக்கிறது?

ஒருவேளை, கொஞ்ச காலம் பிரிந்திருந்தால், பாச உணர்வு தலை தூக்கக் கூடுமோ? பிரிவு அன்பைப் பெருக்கும் என்பார்களே!

ஆனால், எங்கே எப்படிப் போவது?

வசுந்தரா யோசித்துக் கொண்டிருந்த போது, அப்ப டியொரு வாய்ப்பு, அவளுக்குத் தானாக வாய்த்தது.

மனைவியின் சொல் மழையில் ராகவன், வழக்கம் போலவே சற்றுத் திணறிப் போனார். அத்தோடு, கேசவ

னுக்கு, ஜூஸ் கொடுத்ததும், சாப்பிட அழைத்ததும் உண்மைதானே? ஆனால்....

கொஞ்சம் குழம்பிவிட்டு ''இ..இல்லை நீ நினைக்கிற மாதிரி ஒன்றும் இல்லை. ஆனால், சரி சரி விடு, இப்போது கேசவனுக்கும் தான் நம்மை விட்டால் யார் இருக்கிறார்கள்? அத்தி பூத்தாற் போல வந்திருக்கிறானே என்று பார்த்தேன்...'' என்று இழுத்தார்.

''ஏன்? அருமை மைத்துனன் ஒருவன், பைத்தியமாய் அவருக்கு வால் பிடித்துக் கொண்டு அலைவானே, அவன் என்ன ஆனானாம்? அய்யோ அவனுக்கு என்னமோ என்று போன வருஷமே ஏதோ சொன்னீர்களே...''

''பாம்பு கடித்துச் செத்துப் போனான். பாவம். அதற்குப் பிறகு இவன் ஒரேயடியாகத் தனித்துப் போனான். பாவம்'' என்றார் ராகவன் வறண்ட குரலில்.

''அதற்கு நான் எப்படிப் பிணையாவேனாம்? நான் என்ன இவரை இங்கே வரவேண்டாம் என்றா சொன்னேன்? உங்கள் தம்பிக்குத்தான் அண்ணன் ஒருவர் இருப்பதே நினைவில்லாமல் போயிற்று. அவர் தப்புக்கு என்னை விரட்டுங்கள்'' என்று மேலும் சற்று விறைத்து விட்டு மெல்ல இறங்கி ''ஆமாம், திடீரென்று வந்திருக்கிறாரே என்ன விஷயமாம்?'' என்று உருக்கமாய் விவரம் கேட்டாள் மனைவி.

அந்த விவரம் தெரியாது போனால், மண்டை வெடித்துவிடாதா?

அது புரியாமல், மனைவி அக்கறையோடுதான் கேட்கிறாள் என்று எண்ணி, ராகவன், அவருடைய தம்பியின் கவலையைப் பற்றிக் கூறினார்.

தம்பியுடைய மைத்துனன் இறந்ததிலிருந்துதான், பிரச்சனை தொடங்கியதாம். தம்பி மகன் எப்போதுமே, தாத்தா வீட்டில்தான் வளர்ந்தான் என்றாலும், முன்னெல் லாம் மைத்துனன், தன்னோடு மருமகனை அழைத்து வந்து, டாக்டரோடு வெகு நேரம் உட்கார்ந்திருந்து விட்டுப் போவானாம். அவன் இறந்ததிலிருந்தே, தந்தை யிடம் மகன் வருவது மெல்லக் குறைந்து போய் இப் போது அடியோடு நின்று விட்டதாம். கேசவனாக போய்ப் பார்த்தபோது அவருக்கு பிள்ளை, அங்கே இருப்பது பிடிக்கவில்லையாம். கூட்டி வந்து விடலாம் என்றால் அந்தப் பேச்சுக்கே இடம் கொடுப்பது இல்லை யாம். இப்போதெல்லாம் முடிந்த அளவு, மகன் கருணை, அவர் கண்ணில் காட்டுவதே இல்லையாம். என்ன செய்வது என்று புரியாமல், திணறித் திண்டாடி விட்டு அங்கே வந்திருக்கிறார்.

''புரிவதற்கு இதில் என்ன இருக்கிறது? சித்தப்பா தானே, கருணா, வருணா, அந்தப் பையனுடைய அப்பா? போலீஸ் உதவியோடு போய்ப் பிள்ளையைக் கூட்டிவர வேண்டியதுதானே? அதற்குத் தைரியம் இல் லாமல், சின்னப் பிள்ளை மாதிரி 'ஞைஞை' என்று உங்களிடம் வருவானேன்?'' என்று அலட்சியமாகக் கேட்டாள் சௌந்தர்யா.

''சொத்துக்காக இருக்கும்'' என்றாள் சரசா. ''செல்வி வீடு அந்த ஊரில், பண்ணைக் குடும்பம் என்று

ஞாபகம். சண்டை போட்டால் பிள்ளைக்கு ஒன்றும் கிடைக்காமல் போய்விடுமோ, என்கிற பயமா யிருக்கும்.''

நம் சித்தப்பா இந்த மாதிரியெல்லாம் யோசித்தி ருக்க மாட்டார் என்று, எண்ணிய போதும், அதை வாய் விட்டுச் சொல்லாமல், உள்ளேயே அடக்கிக் கொண்டாள் வசுந்தரா. இப்போதுதானே பட்டிருக்கிறாள். இன்றைய 'கோட்டா'வுக்கு இது போதாதா?

''பணத்துக்காகப் பார்க்கிறவன், பட்டிக் காட்டில் டாக்டர் தொழிலை நடத்துவானா? யோசியாமல் எடுத் தெறிந்து பேசுகிறாயே? என்று மனைவியைக் கண்டித் தார் ராகவன். ''உன்னைப் போலவேதான் சோனாவும் அவசரப்பட்டு ஏதாவது சொல்லி விடுகிறாள். ஆனால், நீங்கள் இருவரும் சொன்ன மாதிரி இல்லை, விஷயம். அங்கேயுள்ளவர்களை, கேசவனால் அடியோடு விரோ தித்துக் கொள்ள முடியவில்லை. அப்படியும், பையனுக் காக வக்கீலைப் பார்த்துப் பேசினான். 'சின்னப் பிள்ளை, பெண்கள் இல்லாத வீட்டில் அவனை எப்படி வளர்க்க முடியும்?' என்று கேட்டால், என்ன செய்வது, என்று கேட்கிறார், சட்டப்படி இல்லையென்றாலும், மனிதாபி மான அடிப்படையில், இப்படி ஒரு கேள்வி எழக் கூடும் என்கிறார் அவர். நம் செந்தில் நாதன்தான். அவரிடம் தான், அழைத்துப் போனேன். அத்தோடு, சட்டம் நம் பக்கம் இருந்தாலும், கேசை இழுத்துக் கொண்டே போக முடியும். அப்படிப் போனால், அது பையனுக்கு நல்ல தில்லை என்கிறார். முடிந்த வரை, சமரசமாகப் போக,

முயற்சிப்பது மேல் என்று சொல்லுகிறார். முதலில், பிள்ளையைத் தம்பி பக்கம் இழுக்க வேண்டுமாம். பிள்ளைக்கு, அப்பா ஆசை வந்து விட்டால், அவர்களிடம் அடித்துப் பேச முடியுமாம். இவன் பாவம், தலை சுற்றிப் போய் உட்கார்ந்திருக்கிறான்'' என்று முடித்தார், அவர்.

''ஏனோ?'' என்று, தோளைக் குலுக்கினாள், சௌந்தர்யா. ''பிள்ளை என்றால், நம் அப்பா என்று இராதா? இதற்குக் கவலைப்படுவானேன்? மகன் கேட்டது எதையுமே வாங்கிக் கொடாமல், சித்தப்பா, கஞ்சப் பிசுநாறியாக இருந்திருப்பார். இப்போது, கவலைப்படுகிறார். பிள்ளைகளுக்கு வேண்டியதைச் செய்யாத அப்பாக்கள், கவலைப்பட வேண்டியவர்கள்தானே? நன்றாகப் படட்டும்'' என்று முடித்தாள், அவள்.

தந்தை முகம் சுளிக்கவும், ''அப்படியிராது சோனா. சித்தாப்பாவுக்குத்தான், கருண் பையனைப் பார்ப்பதே அரிதாக இருப்பதாக, அப்பா சொன்னார்களே, பார்க்கவே முடியாத போது, அவன் எதைக் கேட்டு, சித்தப்பா எதை, மறுக்கப் போகிறார், பாவம்! என்றாள், வசுந்தரா.

''அப்படித்தானாம்'' என்றார் ராகவன். ''அவன் மனைவி இருந்திருந்தால், எப்படியோ, இப்போது சும்மா அவர்கள் வீட்டிற்குள் நுழைந்து, மகனைத் தேடிச் சென்று, அவனோடு பேசிக் கொண்டிருக்க, இவனால் முடியவில்லை. கேசவன் வீடு திரும்பும் நேரத்தில், அவன் வீட்டிற்குப் பிள்ளையை அனுப்பும் எண்ணம் அவர்களுக்கு இல்லை. அனுப்பி, தகப்பனோடு பேரன்

பழகி விடக்கூடாது என்றே, அவர்கள் இப்படி நடந்து கொள்கிறார்கள் என்கிற சந்தேகம், கேசவனுக்கு. ஆனால் வெறும் சந்தேகத்தை மட்டும் வைத்துக் கொண்டு குற்றம் சாட்ட முடியாதே!''

''பின்னே, இதற்கு என்னதான் தீர்வு அப்பா?'' என்று, சித்தப்பாவுக்காக மனம் உருகியவாறு, வசுந்தரா வினவினாள்.

''அது தெரியாமல் தானே கேசவும் அலை பாய்கிறான். வீட்டில் யாராவது பெண்கள் இருந்தாலாவது, அந்த வீட்டினுள் சென்று, பையனின் பாட்டியோடு, சற்றுப் பேசி பார்க்கலாம். கருணோடும் பேசி விளையாடி, அப்படியே, அவன் தகப்பனோடு அவனுக்கு, நல்ல பழக்கமும் செய்து வைக்கலாம். இப்போதானால், தம்பி வீட்டில் பெண் வாசனையே இல்லை என்பதால் இதுவும் முடியாது....''

அந்த வினாடியில் வசுந்தராவுக்கு அந்த எண்ணம் உதித்தது.

கண் மூடித் திறக்கும் நேரத்தில், காடு மலை, கடல் எல்லாம் தாண்டி, இந்த உலகத்தையே சுற்றி வரும் வல்லமையுடையது அல்லவா, இந்த மனம்!

எண்ணம் தோன்றிய வினாடியிலேயே, அப்படிச் செல்வதின் பலாபலன்களையும், வசுந்தராவின் உள்ளம் வேகமாக, அலசி ஆராய்ந்து முடித்தது.

சீர்தூக்கிப் பார்க்கும் போது, நன்மைகளின் தட்டு, ஏகமாகத் தாழ்ந்து நின்று, அவளை விரைவாக முடிவெடுக்கவும் வைத்தது.

முதல் நன்மை, இப்போது வீட்டில் நிலவும் வெறுப்பான சூழ்நிலையிலிருந்து தப்பலாம். அடுத்ததாக, பிரிவினால், தாய் தங்கையின் அன்பு பெருகக்கூடும். அத்தோடு, மிக முக்கியமாக, செய்வதறியாது திகைத்து நிற்கும் அவளுடைய சிறிய தகப்பனாருக்கு, ஓர் அருமையான உதவி புரியலாம். தாய் தங்கை விஷயத்தில், மாற்றங்கள் வருமோ, வந்தாலும் நிலைக்குமோ, என்னவோ, சித்தப்பாவுக்கு இது நிச்சயம் நல்லதாகவே முடியும்!

சட்டெனத் தந்தையின் பக்கம் திரும்பி, ''அப்பா நான் வேண்டுமானால், சித்தப்பாவோடு போய், அவர் வீட்டில் கொஞ்ச நாள் இருந்து விட்டு வருகிறேனே. அங்கே, வீட்டுப் பெண்ணாக இருந்து, கருணோடு பழகி, சித்தப்பாவோடு அவனை ஒட்ட வைக்க முயற்சிக்கிறேனே'' என்றாள்.

''உக்கும்!'' என்று, முகவாய்க் கட்டையைத் தோளில் இடித்துக் கொண்டாள் சோனா. ''இந்தம்மா பெரிய சூப்பர் ஃபிக்ஸ்! சித்தப்பாவையும் கருணையும், பிரியாமல் ஒட்ட வைத்துவிடப் போகிறார்கள். பார்த்தும்மா, அப்புறம், இருவரையும் கத்தியால் வெட்டிப் பிரிக்கும்படி, ஆகிவிடப் போகிறது! என்றாள் ஏளனமாக.

எரிச்சலுற்று, ''நல்ல எண்ணத்தில் ஒருத்தி ஒன்று சொன்னால், இப்படியா, ஏளனம் செய்வது?'' என்று அவளைக் கண்டித்தார் ராகவன்.

செல்ல மகளைக் கண்டித்தது பொறுக்காமல், ''படு முட்டாள்தனமாக அவள் உளறினால், வேறென்ன செய்

வதாம்? நம் வீட்டுப் பெண், ஏதோ ஒரு குக்கிராமத்தில், கண்டவர் வீட்டில் வசிப்பதா? கேட்கச் சகிக்கவில்லை!'' என்றாள் சரசா ஆத்திரத்துடன்.

'கண்டவர்' என்று தன் தம்பியை, மனைவி குறிப் பிட்டது, மேலும் சீற்றமுட்ட, ராகவன் முடிவு செய்தார். ''வசு, நீ போய் உன் துணிமணிகளை எடுத்து வையம்மா. கொஞ்சம் நிறையவே, எடுத்து வை. இரண்டு, மூன்று மாதங்கள் ஆனாலும் பரவாயில்லை. அங்கேயே தங்கியி ருந்து, காரியத்தை வெற்றிகரமாக, முடித்துக் கொண்டே திரும்பி வா'' என்றார் மகளிடம்.

அந்தக் குரலில் அவர் ஒன்று சொல்வது, வெகு அபூர்வம். அப்படி, அவர் சொன்ன பிறகு, அதை எதிர்த்துப் பேசும் துணிச்சல், அந்த வீட்டில் யாருக்கும் இருந்ததுமில்லை, இருக்கவுமில்லை.

இப்படித்தான், வசுந்தரா சுனையூருக்குச் செல்வது என்பது தீர்மானமாயிற்று.

கேசவனுக்கு, மிகவும் சந்தோஷம்.

அவருக்காக, அண்ணன் மகள், நகர்ப்புற உல்லாசங் களையெல்லாம் தியாகம் செய்துவிட்டு, கிராமத்துக்கு வருகிறாளாம்.

அதுவும், அடிக்கடி பார்த்துக் கூட இராத சித்தப்பா வின் நிம்மதிக்காக!

சித்தப்பா மகனான தம்பி, அவனைப் பிறந்த ஒரு வாரக் குழந்தையாகத்தான், அவள் கடைசியாகப் பார்த் தது, அவன் நல்லபடியாக வளர வேண்டும் என்பதற்காக!

இதை, அவர் திரும்பத் திரும்பச் சொல்லவும், தான் ஏதோ புரட்சி வேலை செய்வது போல, ஓர் உணர்ச்சி, வசுந்தராவுக்கு உண்டாயிற்று. ஏனெனில், அவள், அவருக்காக மட்டுமாக, அங்கே செல்லவில்லையே!

அதையறியாமல் கேசவன் நன்றி சொல்லச் சொல்ல, எப்படியாவது, சித்தப்பா மகனை, அவருடன் சேர்த்து வைத்து, இந்த நன்றிக்கு, முழுத் தகுதியைப் பெற்று விட வேண்டும் என்ற உறுதி, அவளது உள்ளத்தில் உருவாகி நிலை பெற்றது.

பாடத்தை நன்றாகப் படித்தால்தானே, தேர்வில் வெற்றி பெற முடியும்?

எனவே, சுனையூரின் சூழ்நிலை பற்றி, அவளுடைய சிறிய தகப்பனாரிடம் விசாரித்து அறிந்து கொண்டாள். அவராகவும் நிறையவே சொன்னார்.

பாவம்! மனம் விட்டுப் பேச இதுவரை, அவருக்கு யாரும் ஆள் கிடைத்ததில்லை போலும்! இப்போது, அக்கறையுடன் கேட்க ஆள் கிடைத்ததும், கொட்டித் தள்ளி விட்டார்.

அப்போதுதான் 'புயலின் மையம்' என்பார்களே, அதுபோல இந்தப் பிரச்சினையின் முக்கிய சூத்திரதாரி - அவளது முதல் எதிரி, தனஞ்சயன் என்பது, அவளுக்குத் தெரிய வந்தது.

## 6

தனஞ்செயனைப் பற்றி அறியுமுன். வசுந்தரா, சுனையூரையும், அதன் சுற்று வட்டாரத்தையும் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டியிருந்தது.

சுனையூரில், ஒரு போதும் வற்றாத ஊற்றுச் சுனை ஒன்று இருந்தது. தொடர்ந்து மானம் பொய்த்து, வறட்சி மிகுதியாக இருக்கும் காலங்களிலும், சுனை நீர், ஓரளவே னும் சுரந்து கொண்டே தான் இருக்கும். அந்தச் சுனை யால், ஊரின் இரு குளங்களிலும், தண்ணீர் எப்போதும் இருக்கும்.

அத்தோடு, அந்த ஊரைச் சேர்ந்த இரு குளங்களுக் கும், பாசனத்துக்காக அணைக்கட்டிலிருந்தும், நீர் திறந்து விடுவார்கள்.

பாசனத்துக்குத் தண்ணீர் தடையின்றிக் கிடைப்ப தால், எப்போதும், பயிர்கள், பசேலென்று, செழித்து வளர்ந்திருக்கும். மண்ணும் சத்தானது. எனவே, விளைச் சலும் நன்றாகவே, இருக்கும்.

அப்பேர்பட்ட பூமியின் பெரும் பகுதி, அங்குள்ள இரு குடும்பங்களின் கையில் இருந்தது. அதுவும், அண் ணன் தம்பி இருவரிடம்தான்.

இரு குடும்பங்களிலும், வீட்டுக்கு ஒரு பையனும் இரண்டும், மூன்றுமாகப் பெண்களும்.

பெண்கள் திருமணமாகிக் கணவன் வீடு போய் விட, சொத்து விள்ளாமல் விரியாமல், அடுத்த தலை முறைப் பையன்களுக்கு வந்து சேர்ந்தது.

ஒன்று விட்ட சகோதரர்கள் இருவரும் உடன் பிறந்தவர்கள் போன்றே பழகி வந்தனர்.

அவர்களுள், தம்பியுடைய மகள்தான், செல்வி, கேசவனை விரும்பி மணந்து கொண்டவள். அண்ணன், தம்பி, இவருக்குமே, பல ஆண்டுகள் குழந்தையில்லாதி ருந்து, குடும்பத்தின் முதல் குழந்தையாகத் தம்பி தாமோ தரனின் வீட்டில் அவதரித்தவள். இரு வீட்டுக்கும் செல் லம். அவள் பிறந்து சில ஆண்டுகளுக்குப் பிறகே, மூத்தவளுக்கு ஒரு மகனும், அதன் பின் இளையவருக்கு ஒரு பிள்ளையும் பிறந்தனர்.

செல்வி திருமண வயதை எட்டும் வரை, எல்லாம் நன்றாகத்தான் இருந்தது.

திருமணத்துக்காக அவளது ஜாதகத்தைப் பார்த்த போதுதான், எல்லாருமே அதிர்ந்து போயினர்.

ஆளாளுக்கு, ஒவ்வொன்று சொல்லவும், அவளது திருமணம் பற்றி, மேலே எதைச் செய்யவும், எல்லாரும் பயந்து போயினர்.

'பூ' என்று, எல்லாவற்றையும் அலட்சியப்படுத்தி விட்டுத் தன் விருப்பம் போலச் சுற்றி கொண்டிருந்தவ ளுக்கு, எப்படியோ, கேசவனிடம் மனம் லயித்துப் போனது.

அவளுக்குத் திருமணம் செய்ய, பெற்றவர்களுக்கு மனமில்லைதான். ஆனால், செல்வியின் பிடிவாதம் உலகறிந்த ஒன்று.

கல்யாணம் என்ற எண்ணமே இல்லாதிருந்த கேசவனையே, அவள் தன்புறம் திருப்பி விட்டாள்.

அவரிடமும், செல்வியுடைய பெற்றோர், அவளது ஜாதகம் பற்றி மறையாது கூறத்தான் செய்தார்கள்.

ஆனால், கேசவனுக்கு, எப்போதுமே, இந்த ஜாதகம், ஜோசியம் போன்ற விஷயங்களில் நம்பிக்கை கிடையாது. சிலர், 'மாரகம் வந்து விட்டதாம், மருந்து வேண்டாம்' என்கையில் கொதித்துப் போவார். தான் மறுத்தால், செல்விக்கு இந்தப் பிறவியில், இவர்கள் திருமணம் செய்து வைக்கப் போவதில்லை என்று, தோன்றவும் உறுதியாக நின்று, அவளைக் கைப்பிடித்தார்.

பிறகு நடந்ததை, ஜாதகக் கோளாறு, திருமணம் செய்யாமல் இருந்திருந்தால், அவள் உயிரோடாவது இருந்திருப்பாள் என்று அவர்கள் சொன்னபோது, அதையும் அவர் ஒத்துக் கொள்ளவில்லை. செல்வி, கொஞ்சம் கவனமாக நடந்திருந்தால், ஒன்றுமே நேர்ந்திராது. எதிலும், அவளுக்கிருந்த வழக்கமான அலட்சியமே, அவளது உயிரைக் குடித்தது என்பதே, கேசவனின் முடிவு.

இந்த விஷயத்தில், இரு குடும்பங்களின் வாரிசுகளுமே, அவருடன் தான் ஒத்துப் போயினர்.

அண்ணன் தையல்பாகனுடைய மகன் தனஞ்சய னுக்கும், கேசவனைப் போலவே, ஜாதக சம்பிரதாயங்க ளில், அவ்வளவாக நம்பிக்கை கிடையாது. ஆனால், செல்வியின் குணம் அறிந்திருந்தும் குழந்தைப் பிறந்ததற் கான நாள், அவ்வளவு நெருக்கத்தில் இருந்த போது, கேசவன் அவளை விட்டு விட்டு, மற்ற நோயாளிகளைப் பார்க்கச் சென்றிருக்கக் கூடாது என்று, அவன் சொன்ன தாகக் கேள்வி.

மற்றவர்களிடம் அவன் சொன்னதாகக் கேட்டவர் கள், கேசவனிடம் வந்து சொன்னார்கள்.

''என்னிடம், நேரடியாக அவன் ஒன்றும் சொன்ன தில்லை. வசும்மா. ஆனால் முன்பு இருந்த அளவு, எங்கள் வீட்டுக்கு, அவன் வரவில்லை. அதைக் குறை கூறவும் முடியாது. அவன் அக்கா இருக்கும்போது, அவனோடு அரட்டை அடித்துக் கொண்டு கிடப்பார்கள். நான், இடையிடையே கலந்து கொள்வேன். பாதி நேரம், யாராவது நோய் என்று வருவார்கள். அல்லது, சிகிச்சைக் காக நான் வெளியே போக வேண்டியிருக்கும். அத னால், அவன் வராததைக் குறையாகக் கூற முடியாது... ஆனால்..''

''ஆனால், என்ன சித்தப்பா? வாயால் சொல்லா மல், செய்கையால் குற்றம் சாட்டுவது போல நடந்து கொண்டாராக்கும்? ச்சு சித்தப்பா. சித்தியுடைய சொந்தத் தம்பியும் ஒருவர் உண்டல்லவா. அ... அதாவது.... இருந்தார் அல்லவா? அவரும், இப்படித்தானா?'' என்று, வசுந்தரா விசாரிக்க, கேசவனின் முகத்தில் வருத் தம் பரவியது.

''இல்லையம்மா. முருகன் அப்படிப்பட்டவனே, அல்ல. எப்போதும், அவனுககு என்னிடம், ஒட்டுதல் அதிகம். இரவு நேரத்தில் தனியே போகாதீர்கள். அத் தான்'' என்று கூடவே வருவான். இரவு எந்நேரமானா லும், நான் திரும்பி வந்து, குளித்து முடிக்கும் போது, கருணோடு இங்கே இருப்பான். அவன் இருந்தபோது, தினமும் பிள்ளையைப் பார்க்க முடிந்தது. ஆனால், 'ஜாக்கிரதை, ஜாக்கிரதை' என்று எனக்கு எச்சரிக்கை செய்தவனே பாம்பு கடித்து மாள்வது என்றால், அவரவர் தலைவிதி என்று, ஒன்று இருக்கத்தான் செய்கிறது போலும்!'' என்று பெருமூச்செறிந்தார் டாக்டர்.

யோசனையோடு நோக்கியவள், ''சித்தி மறைவை விட, அவர்கள் தம்பியின் மரணத்துக்கு அதிகம் வருத்தப் படுகிறீர்கள் போலத் தெரிகிறதே, சித்தப்பா!'' என்று, மனதில் தோன்றியதைக் கேட்டுவிட்டு, நாக்கைக் கடித் துக் கொண்டாள், வசுந்தரா.

ஆறிவரும் ரணத்தைக் கீறிவிட்டு விட்டோமா, என்று அவள் மனம் உறுத்தியது.

பாவம், சித்தப்பா. இந்த நாலு ஆண்டுகளுக்குப் பின், ஒருவாறு, மனைவியின் பிரிவிலிருந்து, மீளத் தொடங்கியிருக்கலாம். அசட்டுத் தனமாகக் கேள்வி கேட்டு, அந்தத் துன்பத்தை மீண்டும் கிளப்பிவிட்டிருக்கக் கூடாதே, என்று அவள் மனம் துடித்தது.

ஆனால், கேசவன் சாதாரணமாகவே, பதில் சொன் னார், ''நீ சொன்னது, நிஜம்தானம்மா'' என்றுரைத்து, அவளை வியப்படைய வைத்துவிட்டு, விலகினார்.

''செல்வி இருந்திருந்தால், இந்தப் பிரச்னைகள் ஏதும் எழுந்திராது என்பது உண்மைதான் என்றாலும், அவளது மரணம், அத்தோடு முடிந்து போன விஷயம். அவ்வப்போது மனதுக்கு கஷ்டமாக இருக்கும் தான் என்றாலும் வேலையில் ஈடுபடும்போது, அந்த நினைவு ஒதுங்கிப் போய்விடும்''

''இந்த முருகன் விஷயமும் அப்படி முடிந்து போன துதானே, சித்தப்பா?''

''இல்லையம்மா. சித்தி இறந்த போது, அவள் இல்லை என்கிற வேதனை மட்டும்தான். முருகனின் மறைவு, ஒரு பிரியமான, நல்ல உறவினன் இறந்தான் என்பதோடு, பல்வேறு தொடர் பிரச்சினைகளுக்கும் அஸ்திவாரம் ஆகிவிட்டது. முக்கியமாக கருண்! அவன், அந்தக் குடும்பத்துக்கு, மிகவும் இன்றியமையாதவன் ஆகி விட்டான்... புரியவில்லையா? இதுவரை, முருகன், என் மாமனாருடைய வாரிசாக, அவரது சொத்துகளுக்கு எதிர்காலச் சொந்தக்காரனாக, அந்தக் குடும்பத்தின் வருங்காலப் பாதுகாவலனாக இருந்தான். ஆனால் இப் போது, அவர்களுக்கு யார் வாரிசாக முடியும் சொல்லு''

''ஒரு குழந்தையைத் தத்து எடுத்துக் கொண்டால், வாரிசு, தானாக ஏற்பட்டு விடுகிறது'' என்றாள் வசுந்தரா.

''தத்து எடுப்பதெல்லாம், இங்கே, அவ்வளவு எளி தாக ஏற்கப்படுகிற விஷயமல்ல, வசுந்தரா. அவரவர் ரத்தம் என்று, ரொம்பப் பார்ப்பார்கள். அப்படி, ரத்த வாரிசாகக் கருணாகர் இருக்கும்போது, தத்து எடுப்ப தற்கு அவசியம் தான், எங்கே வந்தது?''

''ஓகோ!'' என்று கண்களை அகல விழித்தாள் வசுந்தரா.

''இப்போ புரிகிறதில்லையா? கருணாகரை, அவர்களுடைய வாரிசாகத்தான், அவர்கள் வீட்டில் நினைக்கிறார்கள். அவர்களுடைய மகள்வழியே, அவர்களுடைய ரத்தம், அவன் சொத்துக்கும், அவர்களுக்கும் வாரிசு!'' என்று, கேசவன் விளக்கினார்.

''இருக்கட்டுமே, சித்தப்பா. அவர்கள் சொத்தை, அவர்கள் கருணுக்கே கொடுக்கட்டும் நல்லதுதான். கருண் இப்போதே, சொத்துக்காரனாக இருப்பான். அவர்களுக்கு வாரிசாகவும் ஏற்படுத்தி விடட்டும். கூடவே, அவன் உங்கள் மகனாகவும் இருப்பதில், அவர்களுக்கு என்ன ஆட்சேபம்? உங்களை ஏன், கருணைப் பார்க்க விட மாட்டேன் என்கிறார்கள்? அது எனக்குப் புரியவில்லையே!'' என்று, மேலும் விளக்கம் கேட்டாள் வசு.

''அம்மா, நான் யார்? ஒரு டாக்டர். என் பையனை, நான் என்ன படிப்பு படிக்க வைப்பேன்? மருத்துவம் தானே? 'ஸ்டெத்'தைப் பிடித்த கை, ரத்தத்தையும் சீழையும் தொட்டு வேலை செய்யக் கூடும். ஆனால், இவர்கள் தொழில் என்ன? பயிர்த் தொழில் சேற்றில் இறங்கி வேலை செய்ய வேண்டும். இவன் ஏன் செய்ய வேண்டும்? இவன் முதலாளிதானே என்று, கேட்காதே. 'உடையவன் பார்க்காவிட்டால், ஒரு முழம் கட்டை' என்று, பழமொழியே இருக்கிறது. முழம் என்றால், பழைய நீட்டலளவை. கட்டையாகி விடுவது, வயலைப் பாராதவனின் பயிர். விடுவார்களா? அத்தோடு, அப்பாவைப்

போல டாக்டராகி விட வேண்டும் என்று, பிள்ளைக்கு ஆசை வந்து விட்டால்? இந்த நிலம் நீச்சையெல்லாம் என்ன செய்வது? அதை விடவும், கருணுக்கு, 'அப்பா பாசம்' வந்து, அவர்களை விட, என் மீது அதிகமாக அன்பு ஏற்பட்டுவிட்டால்? அப்பாவுடன் தான், இருப் பேன் என்று விட்டால்? அதற்கெல்லாம், இடம் கொடுக் கக் கூடாது என்றுதான், இந்த முன்னெச்சரிக்கை'' என்று விவரம் கூறினார் கேசவன்.

''ஓகோ'' என்று மீண்டும் சொல்லி, சிறிய தந்தை சொன்னதையெல்லாம் ஜீரணித்துக் கொண்டாள், வசுந் தரா.

சற்று யோசித்து விட்டு, ''அந்த முருகன் இறந்து எவ்வளவு நாளாகிறது, சித்தப்பா?'' என்று விசாரித்தாள்.

''சுமார் ஓர் ஆண்டு, மேலே ஓரிரண்டு மாதங்களும் ஆகியிருக்கும்'' என்றார் கேசவன்.

''இந்தப் பதிநாலு மாதங்களில், கருணை நீங்கள் சந்திக்கவே இல்லையா சித்தப்பா?''

ஒரேயடியாக அப்படிச் சொல்லி விட முடியாது, வசும்மா. முருகன் செய்தது போலத் தினமும், கருண் இங்கே என் வீட்டுக்கு வரவில்லை. ஆனால் அவ்வப் போது யாராவது, அவனைத் தூக்கி வருவார்கள். பல சமயங்களில் அது அவன் தூங்குகிற நேரமாக இருக்கும். அப்புறம், கொஞ்ச காலம், 'டிஸ்பென்சரி' வைப்பதில், தீவிரமாய் ஈடுபட்டிருந்ததில் நானே, அவனைத் தேட வில்லை.

''நீங்கள், 'டிஸ்பென்சரி' கூட வைத்திருக்கிறீர்களா, சித்தப்பா?'' என்று, ஆர்வத்துடன் வினாவினாள், வசுந்தரா.

''ஆமாம்...'' என்று, இழுத்தபோது, கேசவனின் குரலில், பெருமையும், சந்தேகமும் கலந்து ஒலித்தது. ''மருந்துக்காக, இந்த மக்களை அலைய விடுவதை விட, இது நல்லது என்று, தனா சொன்னான்'' என்ற போதும், அவரது குரல் அப்படியேதான் இருந்தது.

''தனா'' என்றால்... அந்த ஒன்று விட்ட... இல்லை, இரண்டு விட்ட மைத்துனனா சித்தப்பா?''

''ஆமாம்மா... இப்போது, மருந்துகள் காலியாகக் காலியாக, அவைகளைப் பெரும்பாலும் வாங்கி வருவதும் கூட அவன்தான்'' என்றார் சுரத்தின்றி.

கேள்வியாய் நோக்கி, ''நல்ல காரியம்தானே, சித்தப்பா? உங்களுக்கு, அலைச்சல் மிச்சமாகும்தானே?'' என்று கேட்டாள் வசுந்தரா.

''செலவும் கூட. பல விலை உயர்ந்த மருந்துகள் இருக்கின்றன. பெரும்பான்மைக் குடியானவ மக்களால் பணம் கொடுத்து, வாங்க முடியாதவை. அவைகளைக் கொண்டு வந்து தந்துவிட்டுப் பணம் கூட வாங்கிக் கொள்ள மாட்டான். தேவைப் படுகிறவர்களுக்கு, இலவசமாகக் கொடுக்கச் சொல்லி விடுவான்'' என்றார் அவர் உணர்ச்சியற்ற குரலில்.

''அதுவும் நல்லதுதானே? ஆனால், உங்களுக்கு இது பிடிக்காத மாதிரித் தோன்றுகிறதே?'' என்று கேட்டாள். வசுந்தரா.

''பிடிக்காமல் இல்லையம்மா. ஆனால், கொஞ்ச நாளாக எனக்கு ஒரு சந்தேகம். என்னை, நன்றிக் கடன் படவைப்பதற்காகத் தனஞ்சயன் இதையெல்லாம் செய்கிறானோ... என்று...

''நன்றிக் கடன்....? ஓ. மிஸ்டர் தனஞ்சயனும், உங்கள் மாமனார் பக்கம்! அப்படித்தானே? திருக்குறளில், 'அவர் நாண நன்னயம் செய்து விடல்' என்று வருமே, இதுபோல, கருண் பற்றிய பேச்சையே, நீங்கள் எடுக்கத் தயங்கும் அளவுக்கு, இப்படி நல்லது செய்து விடுகிறாராக்கும்! பயங்கரமான ஆள் போலத் தெரிகிறாரே, சித்தப்பா? ஆனால், ஒன்று, அவரது அல்லது அவருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் வயல்களில் வேலை செய்யும் குடியானவர்களுக்குத் தானே, அவர் செய்வதெல்லாம்? உங்களுக்காக அல்லவே? அவர் ஆட்களுக்கு, அவர் செய்வது, உங்களை எப்படிக் கட்டுப்படுத்தும்? அவற்றிற்காக நீங்கள் எப்படி, நன்றிக் கடன் படுவீர்கள்? தேவையே இல்லை'' என்றாள் வசுந்தரா.

''ஒரேயடியாக, அப்படிச் சொல்ல முடியாதும்மா'' என்றார், கேசவன். ''என்னிடம் வைத்தியத்துக்கு வருகிறவர்கள், பண்ணைக் குடும்பத்தில் பணி புரிகிறவர்கள் மட்டும்தான் என்று, இல்லை. அக்கம் பக்கம், எல்லோருமே வருவார்கள். அத்தோடு, இப்படி ஓர் ஏற்பாடு செய்தால், பெரும்பாலும் அதிக வசதியற்ற இந்த மக்களுக்கு நன்றாயிருக்கும், என்று ஆசைப்பட்டவனும், அந்த ஆசையை, அவனிடம் சொன்னவனும் நானே

தானே? அப்படியிருக்க, இதற்காக நன்றிக் கடன் படத் தேவையில்லை என்று, எப்படிச் சொல்ல முடியும்?'' என்று கேட்டார், டாக்டர்.

''ஆக, ஒரு கல்லில், இரு மாங்காய் என்பதுபோல, அவரிடம் வேலை செய்கிறவர்களின், ஆரோக்கியத்துக் கும் வழி செய்து கொண்டார். அதே சமயத்தில் கருண் பற்றிப் பேசவே முடியாதபடி, உங்கள் வாயையும் அடைத்து விட்டாராக்கும்! சரியான வில்லன் என்று, சொல்லுங்கள்!'' என்று உதட்டைப் பிதுக்கினாள், வசு.

''சிரித்துச் சிரித்து, அவன் பேசுவதைக் கேட்டால், இப்படிச் சொல்ல மாட்டாய்''

''ஹி கேன் ஸ்மைல், அன்ட் ஸ்மைல், யெட் பி எ வில்லன்'' என்று, ஆங்கிலத்தில் படித்திருக்கிறேன். அது மாதிரி ஆள் போலிருக்கிறது.''

''ஆனால், தனா பேசும் போதும், நமக்காகவே, நம் நல்லதற்காகவே சொல்லுகிற மாதிரி இருக்கும். நமக்காக உருகுவது போலத்தான் தோன்றும்!''

''எல்லாம் நடிப்பு, சித்தப்பா. ஏன் இவ்வளவு நாளுமே, இந்த 'டிஸ்பென்சரி'யின் தேவை, உங்களுக்கு இருக்கத்தானே, செய்தது? நீங்களும், அது பற்றிப் பேசாமலே, இருந்திருக்க மாட்டீர்கள், இப்போது திடீ ரென்று இதைச் செய்து தருவானேன்? இருக்கட்டும், இவர் இந்த வழியில் போனால், நாம் இன்னொரு வழியில், போவோம். கருண் குட்டியை, 'அப்பா வேண் டும்' என்று விட்டால், அப்புறம் யார் என்ன செய்ய

முடியும்? நாம், அதற்கு முயற்சி செய்யலாம் சித்தப்பா. வேண்டுமானால், பாருங்கள் நமக்குத்தான் வெற்றி'' என்று, வசுந்தரா உற்சாகத்துடன் உரைக்க, கேசவனை யும், அது தொற்றிக் கொண்டது.

லேசாக முறுவல் செய்தவர், ''அப்பா வேண்டும் என்று மட்டும் சொன்னால் போதாது, மகளே. அப்பா தான் வேண்டும் அந்த வீடு வேண்டாம் என்றும் சொல்ல வேண்டும்'' என்றார்.

சற்றுத் திகைத்து ''ஏன் சித்தப்பா, அப்படி? அவன் பிறந்ததிலிருந்து அங்கேதானே, இருக்கிறான்? இப் போது, ஏன் அடியோடு வேண்டாம் என்கிறீர்கள்?'' என்று விசாரித்தாள்.

முகம் இறுக, ''அவனுடன் சற்று நேரம் பேசுவதும் பழகுவதும்... சே'' என்றார் வெறுப்புடன்.

வசுந்தரா கேள்வியாக நோக்கவும், கேசவனின் முகம் சற்று, கன்றிப் போயிற்று. சமாளித்துக் கொண்டு, ''செல்வியுடைய பெற்றோரை அப்படிச் சொல்லக் கூடாதுதான். ஆனால் நம் பிள்ளை வீணாகிறது, எனும் போது நாகரீகம் மறந்து போகிறது'' என்று விளக்கினார்.

வயதானவர்கள், துடிப்பான நாலு வயதுச் சிறுவ னுக்குச் சரியாக ஓடியாட முடியாமல், வேலைக்காரர்களி டம் வளர விட்டிருப்பார்கள், கண்ட கெட்ட வார்த்தை களும் பழகியிருப்பான். கேட்டதும், பெற்றவனுக்குப் பொத்துக் கொண்டு, ஆத்திரம் வருகிறது. என்று எண்ணி னாள், வசுந்தரா.

ஆனால், விஷயம் வேறு என்பது, சுனையூருக்குச் சென்று அவளுடைய சித்தப்பா மகனைப் பார்த்த பிறகு தான், அவளுக்குப் புரிந்தது.

அப்போதும், முதலில் அவளுக்குச் சிரிப்புதான் வந்தது. சற்றுப் பொறுத்தே, ஒரு தந்தையின் கவலையை, அவளால் உணர முடிந்தது!

## 7

ஆறு படை வீடுகளில் ஒன்றான திருச்செந்தூரில் ரயிலைவிட்டு இறங்கும்போது, உடம்பை, ஓர் உருட்டு உருட்டிக் கசக்கிப் பிழிந்தது போல, வசுந்தரா உணர்ந் தாள். கண்ணை மூடித் திறந்தால் இன்னமும் ரயிலில் இருப்பது போலவே, ஓர் ஆட்டம்.

''ஒரே ஓர் உடன் பிறந்தவராக இருந்தும், அண் ணன் வீடு என்று, நீங்கள் ஏன் வருவதே இல்லை. என்று, எனக்கு, இப்போது புரிகிறது சித்தப்பா. போக வர, இருமுறை, இந்தப் பயணம் தாங்க வேண்டுமே! ஆண் டுக் கணக்கில் எட்டிப் பாராமல் இருந்ததற்காக, உங்க ளைத் தாராளமாக மன்னிக்கலாம்'' என்று மனதை மறையாமல் சொன்னாள்.

''வராததற்குக் காரணம், பயணத்தின் துன்பம் மட் டும் காரணம் இல்லையம்மா. நோயாளிகளை விட்டுவர முடியாததுதான் முக்கியமான ஒன்று'' என்று சாமான்க ளைக் கணக்குப் பார்த்து விட்டுச் சொன்னார், கேசவன்.

''ம்ம்ம், இப்போது மட்டும்?'' என்று புருவம் உயர்த்திக் கேட்டாள் வசுந்தரா.

அருகில் வந்து கேட்ட போர்ட்டரிடம், ''டாக்சிப்பா. சுனையூருக்கு.'' என்று விட்டு, அண்ணன் மகளிடம், போர்ட்டரைப் பின் தொடர்ந்து நடக்குமாறு சைகை காட்டி நடந்தபடியே, ''இப்போது 'டிஸ்பென்சரி' வேறு இருப்பதால், இன்னொரு டாக்டரும், கம்பவுண்டரும், காலையிலிருந்து மாலை வரை, இருப்பார்கள். அவர்கள் பார்த்துக் கொள்வார்கள்'' என்றவரின் நடை, ஒரு கணம் தயங்கியது. ஏதோ யோசித்தபடி, ''இதுவும், தனஞ்சய னின் ஏற்பாடுதான்'' என்றவர், 'உச்'சென்று தோளைக் குலுக்கினார்.

''சந்தேகம் என்று வரத் தொடங்கியதும், எதையும் ஐயத்துடனேயே நோக்கத் தோன்றுகிறது, பார். சாதாரண சமாச்சாரத்தைக் கூட, இதில் என்ன சூதோ, என்று யோசிக்க வைத்து விடுகிறது. நான், வெளியே, எங்கே னும் செல்லும்போது, கிளினிக்கில், ஆள் இருக்கட்டும் என்று, தனஞ்செயன் முன்பு சொன்ன போது, தப்பாக எதுவும் தெரியவில்லை. இப்போது, என்னை இலகுவாக வெளியேற்ற வழியோ, என்றிருக்கிறது'' என்றார்.

''இருக்காது, சித்தப்பா.'' என்றாள் வசு, பளிச் சென்று. ''அப்படி வெளியேற நேர்ந்தால், கருணை விட்டு விட்டுப் போக மாட்டீர்கள் என்பது தெரியாதா? அவனை, அழைத்துப் போய் விடாமல் தடுப்பதற்காக வேனும் உங்களை, இங்கேயே பிடித்துப் போடத்தான், முயற்சிப்பார்கள்'' என்று அவள் தொடர்ந்து கூறவும் கேசவனின் முகம் ஒருவாறு, தெளிவுற்றது.

ரயில் நிலையத்துக்கு வெளியே, டாக்சி வைத்திருந் தவர், கேசவனைத் தெரிந்தவராக இருந்தார்.

''டாக்டர் சாருங்களா? சுனையூருக்குத்தானே? ஏறிக் கொள்ளுங்கள் சார். சாமானை, டிக்கியிலே போடுப்பா. பாப்பா, உங்க அண்ணன் மகளுங்களா? முகச்சாடை, அப்படியே இருக்குது. ஏறிக்குங்க, பாப்பா. ஆறுமுகம், டாக்டரைய்யாவையும், மகளையும், அலுங் காம, நலுங்காம பத்திரமாகக் கூட்டிப் போய் விட்டு விடு. பணம் எதுவும் வாங்காதே. ஏறிக்குங்க சார்'' என்று, ஏக உபசாரம் செய்தார்.

டீசல், டிரைவர் சம்பளத்துக்காகவேனும் பணம் பெற்றுக் கொள்ளும்படி கேசவன் வற்புறுத்தியபோது, மறுத்து விட்டு, ''பாருங்க பாப்பா அன்னைக்குச் சுனைக்கு, அய்யனார் கோயிலுக்குப் போன போது, மகளுக்குத் திடீர்னு, விஷக்கடி மாதிரி, உடம்பு சரியில் லாமப் போயிட்டுது. சார்தான் பார்த்தது. மருந்துக்குக் கூடப் பணமே வாங்கலை. இப்ப, இவர்கிட்டே பணம் வாங்கினால் நான் நன்றி கெட்டவன் ஆகி விட மாட் டேனா? சும்மா, போங்க சார். அப்படி என்ன, ரொம்ப தூரமா? ஒரு லிட்டர் டீசல் ஆகாது. இதைப் போய், உங்க கிட்டே வாங்கிக்கிட்டு? ஏறுங்க சார்'' என்று, பிடிவாதமாகப் பணம் வாங்க மறுத்து, அவர்களை அனுப்பி வைத்தார் டாக்சி உரிமையாளர்.

ரொம்பப் பெருமையாக இருந்தது வசுந்தராவுக்கு.

''பாதி நன்றி. தனாவுக்கு. மருந்து அவன் உபயம் தான்'' என்று கேசவன் சொன்னது கூட, அவளது மகிழ்ச்சியைக் குறைக்கவில்லை.

''அது, வெறும் கருவிதான், சித்தப்பா. இயந்திரத் தைச் சிறப்பாகப் பழுது பார்த்த 'மெக்கானிக்'கைப் புகழுவீர்களா, அல்லது அவர் பயன்படுத்திய ஸ்குரூ டிரைவர் ஸ்பானரையெல்லாம் பாராட்டிக் கொண்டு, இருப்பீர்களா? இங்கேயும், இன்ன நோய்க்கு இன்ன மருந்து என்று கணித்துக் கொடுத்துக் குணப்படுததும் மருத்துவருக்குத் தான், பாராட்டு உரியதே தவிர, மருந் தையோ, மருந்தை வாங்கிக் கொடுத்தவரையோ, யாரும் பாராட்டிக் கொண்டிருக்க மாட்டார்கள். விட்டால், மருந் தைத் தயாரித்த நிறுவனத்தைக் கூட பாராட்டச் சொல்லு வீர்கள், போலிருக்கிறதே!'' என்று அடித்துப் பேசினாள் வசுந்தரா.

கேசவன் வாய் விட்டுச் சிரிக்க, வசுந்தராவுக்குத் தன்னிடமே, வியப்பு உண்டாயிற்று.

இப்படியெல்லாம் பேசுவது, அவளேதானா? சென் னையிலிருந்து கிளம்பியதிலிருந்தே, ஏதோ, ஒரு வித உற்சாக உணர்வு, அவளுக்கு இருக்கத்தான் செய்தது. கட்டவிழ்ந்த கன்று என்பார்களே, அது போன்ற துள்ளல்.

எந்நேரமும், தங்கைக்கு கீழேதான், அவளது இடம் என்ற, எழுதாத சட்டத்திலிருந்து, கிடைத்த விடுதலை யின் எதிரொலி!

மீண்டும், ஒருநாள் திரும்பிச் சென்றுதானே ஆக வேண்டும் என்று, எண்ணும் போதே, அவளது முகம், சற்றே வாடிப் போயிற்று.

ஆனால், சொந்த வீட்டுக்குப் போவதற்கு வருத்தப் படுவது கூடாது. அது சரியல்ல என்பதோடு, அதற்குத்

தான் இன்னும் குறைந்த பட்சமாய்ச் சில மாதங்களேனும், இருக்கின்றனவே! அதுவரை, அவள் சுதந்திரப் பறவை தானே? இந்தச் சுதந்திரத்தை, முழுமையாக அனுபவிப் பதை விடுத்து, வேண்டாததை எல்லாம் நினைப்பா னேன்? எப்படியும், இப்போதைக்கு வேண்டாதது தானே?

வசுந்தரா, தன்னில் மூழ்கியிருக்க, ''உன்னிடம் பேசப் பேச கருண் பற்றி என் நம்பிக்கை வளர்ந்து கொண்டே, இருக்கிறது வசும்மா'' என்று அவளது பிரச்சினையை எண்ணினார் கேசவன்.

''வசு இங்கே வந்ததன் காரணமே, கருண் பிரச்சி னைதான். அதை மறந்து, கண்டதையும் நினைப்பதா?

உள்ளூரத் தன்னைக் கடிந்து கொண்டபடி, ''நிச்சய மாய், வெற்றி நமக்குத்தான், சித்தப்பா'' என்று அவருக் குத் தைரியமூட்டினாள் வசுந்தரா.

பெற்ற தகப்பனுக்கு, இல்லாத உரிமையா, என்றது, அவளது உள்ளம்.

அப்படிக் குரல் எழுப்பிக் கேட்க முடியாதபடி செய்யும் தனஞ்சயனைத்தான், எப்படியாவது அடக்க வேண்டும். இங்கிருப்பவர்கள், வயதானவர்கள் கிரா மத்து மக்கள் வேறு. சட்டம் பேசினாலே, பயந்து ஒதுங்கிக் கொள்வார்கள். இந்தத் தனஞ்செயன் மட்டும் குறுக்கிடாமல் இருந்தால்?

இந்த விஷயத்தில் அவன் ஏன் மூக்கை நுழைக்க வேண்டும்?

சொல்லப் போனால் கருண், அவன் அப்பாவோடு போய் விட்டால் தனஞ்செயனுக்குத்தானே, லாபம்? கருணின் அம்மா வழித் தாத்தாவுடைய, அடுத்த வாரிசு, அவன்தானே? பின்னே ஏன் இடைஞ்சல், பண்ணுகிறான்?

ஒருவேளை சித்தப்பா, பிள்ளையோடு சொத்தை யும் கேட்டுப் பெற்று விடுவாரோ என்ற எண்ணமாக இருக்கும்.

நிலம் நீச்சு என்று, இந்தச் சேற்றிலேயே உழல்பவர்க ளுக்கு இந்தச் சொத்தைவிடப் பிள்ளையைப் பெரிதாக எண்ணுபவர்கள் இருப்பார்கள் என்று, நம்பவே முடி யாது. ‘சொத்தே வேண்டாம் போடா’ என்று விட்டால் அதற்குமேல், அவன் தலையிட மாட்டான்.

ஆனால் சொத்துநிறைய என்றும் தெரிகிறது. உரிமை இருக்கையில், அவ்வளவு சொத்தையும், ஒட்டு மொத்தமாக விட்டு விடுவது, சரியாகுமா?

சித்தப்பா பிழைக்கத் தெரியாதவர் என்பது, குடும் பத்தின் மொத்தக் கருத்து. தாத்தா, பாட்டி அடிக்கடி சொல்லிச் சொல்லி வருத்தப்பட்ட விஷயம் அது. எனவே, சொத்தே வேண்டாம் என்று, சித்தப்பாவைப் போலவே எண்ணுவதை விடுத்து, அந்தத் தனஞ்சய னோடு, பேரம் பேசிப் பார்க்கலாம். பாதிக்குப் பாதியா வது... என்ன வந்தாலும் சித்தப்பாவுக்கு லாபம்தானே?

வசுவின் உள்ளம் வெகு தீவிரமாக யோசித்தது.

ஆனால், ‘யோசனையெல்லாம், கொஞ்ச நேரம் தான். அந்த ஆண்டு கோடை மழை நன்றாகப் பெய்திருந்

ததால், ஆங்காங்கே, குளங்கள் நிரம்பியிருக்க, வழி நெடுகப் பசேலென்ற வயல்களும், வெண்ணிறக் கொக்கு களுமாகப் பார்க்க, கண்ணுக்குக் குளிர்ச்சியாக மிகவும் அழகாக இருந்ததில், அவள் மற்றதையெல்லாம் மறந்தே போனாள் எனலாம்.

''சித்தப்பா எவ்வளவு அழகான காட்சிகள்! கண் ணைத் தட்டி விழிக்கக் கூட மனம் வரவில்லை. சித்தப்பா இங்கே, இவ்வளவு அழகாக இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. சித்தப்பா!'' என்று பலமுறை கூறி மகிழ்ந்தாள்.

லேசாக முறுவலித்து, ''இதையே அழகு என்றால், சுனையை என்ன சொல்லப் போகிறாய்?'' என்றார் கேசவன்.

''ஆக, இந்த அழகில் மயங்கித்தான். இங்கேயே இருந்து விட்டீர்களா சித்தப்பா?'' என்றாள் வசு.

''இம்ம்.... பார்வைக்கு மிக அழகுதான். ஆனால், நாளெல்லாம் வயலில் இறங்கி, வெளியில் நின்று வேலை செய்து விட்டு, சேற்றுப் புண், அது இது என்று, சரும வியாதிகளோடு வருவார்கள் பார், அப்போதுதான், பார்க்கப் பரிதாபமாக இருக்கும்'' என்றார் கேசவன் டாக்டராக.

வசுந்தராவின் முகம் வாடுவதைக் கண்ணாடியில் கண்டு ''டாக்டரையா உங்களைச் சும்மா மிரட்டுறாங் கம்மா. வயக்காட்டிலே, சுத்திச் சுத்தி, வாய்க்காலிலே, தண்ணி ஓடிக்கிட்டே இருக்கும். வேலை முடிஞ்சா,

கையக் காலைக் கழுவாம, யாரும் வரமாட்டாங்கம்மா. அதுவே போதும். மேலே கால் ஒரு மாதிரி இருந்தாக்க, படுக்கும் முன்னாலக் காலிலே, எண்ணையும் தேச்சுக்கிடு வாங்க. அதுக்கு மேலே, ஒண்ணும் வராதும்மா. ஏதோ, நாலஞ்சு சோம்பேறிக் கழுதைங்க, இதிலே, எதையுமே செய்யாம, என்னத்தையாவது இழுத்துக்கிட்டா, அதுக்கு நிலமா பொறுப்பு? ஆனா ஒண்ணும்மா. மழை இருந்த தாலே இந்த வருசம், இப்படி 'பச்'சுன்னு இருக்குது. இல்லையானா, இந்த நேரம் எல்லாம் காஞ்சு போய்க் கிடக்கும்' என்று விளக்கினான், காரோட்டி வந்தவன். ''ஆனா, சுனையூர் மட்டும் என்னைக்கும் செழிப்புதான்''

ஊருக்கு வெளியே, சற்றுத் தொலைவில் கேசவ னின் இல்லம் இருந்தது. கொஞ்ச தூரத்தில், வேறு பல வீடுகளும் கூட, இருந்தன. பெரும்பாலும், ஒற்றைத் தளமாக, ஓடு அல்லது ஓலைக்கூரை வேயப்பட்ட வீடு கள். சென்னையில் பல மாடிக் கட்டிடங்களுக்கு நேர் எதிர்மறை போல இருந்த அந்த வீடுகளும், மிக அழகா கவே, வசுவுக்குத் தோற்றமளித்தன.

யோசனையோடு சுற்று முற்றும் பார்த்தாள் வசுந் தரா. ''இதில், எந்த வீட்டில் கருண் இருக்கிறான், சித்தப்பா? அவர்கள்வீடு கூட, இப்படித்தான் இருக்கு மா?'' என வினவினாள்.

காரை ஓட்டி வந்தவனுடைய மனைவி கருவுற்றிருந் ததை விசாரித்து அறிந்து, அவளுக்குச் சில 'டானிக்' வகையாறாக்களைக் கொடுத்துக் கொண்டிருந்த கேச வன், அண்ணன் மகளிடம் திரும்பி, அவள் என்ன கேட்டாள், என்று விசாரித்தார்.

அவள், தன் கேள்வியைத் திரும்பிக் கூறியதும், ''ஊகூம். கருண் தாத்தா வீடு, கொஞ்சம் தள்ளித்தான் இருக்கிறது. வயல், தோப்பு, தாண்டி தோட்டத்தின் நடுவில் இருக்கிறது. இரண்டு அடுக்கு வீடு. அது முற்றங்கள், சுற்றுக் கட்டுத் தாழ்வாரங்கள், அறைகள், என்று பெரியதாக இருக்கும்'' என்றார் கேசவன். ''இந்த வீடுகளில் கூடக் குறைந்த பட்சமாக இரண்டு முற்றங்களும் தாழ்வாரங்களும் இருக்கும்.''

நன்றி உரைத்து விட்டு காரோட்டி சென்றபின், ''அதனால்தான், கருண் உள்ளே ஏதாவது அறையிலோ, பின்புறத் தோட்டத்திலோ இருந்தால் என்னால் அவனைப் பார்க்க முடியாமல் போயிற்று'' என்றார்.

வசுந்தராவின் முகத்தில் குழப்பத்தைக் காணவும், ''இங்கெல்லாம், வீட்டின் பின்பகுதி, பெரும்பாலும், பெண்கள் பகுதியாக இருக்கும். வீட்டுத் தலைவர், பிள்ளைகள் தவிர, வேறு ஆண்கள் யாரும் உள்ளே வரை உரிமையோடு செல்ல மாட்டார்கள். செல்வி இருக்கும் போதே, நான் அப்படிச் சென்றது இல்லை. இப்போது, எங்கே?'' என்று, விளக்கினார்.

''ஓகோ!'' என்று ஜீரணித்துக் கொண்டவள் சொன்னாள், ''ஆண்கள்தானே, செல்லக் கூடாது? நீங்கள், முன் அறையில் உட்கார்ந்திருங்கள், நான் போய், என் தம்பியைப் பார்க்கிறேன்!'' என்றாள் அழுத்தமான குரலில்.

ஆனால், அன்று மாலை கருணைப் பார்க்க, வசுந்தரா, தனியாகத்தான் செல்ல வேண்டியிருந்தது. கிளம்புகிற நேரத்தில், தவண் வெட்டுகிறேன் என்று, ஒருவன்

கையை வெட்டிக் கொண்டு வந்து நிற்கவே, ''வழி காட்டப் பரமனைக் கூட்டிக் கொண்டு நீ போம்மா'' என்றதோடு, நோயாளியைப் பார்க்கப் போய் விட்டார், கேசவன்.

பரமனும், அவன் மனைவி முத்துமாரியும் தான், கேசவன் வீட்டைப் பராமரித்து வந்தார்கள்.

வழி காட்ட மட்டுமின்றி தன்னை அறிமுகப்படுத் திக் கொள்வும், பரமன் தேவைப்படுவான் என்று எண்ணி யிருந்த வசுந்தராவுக்கு அங்கே ஓர் அதிர்ச்சி காத்திருந் தது. செல்வியுடைய பெற்றோர், இனம் கண்டு கொண் டது மட்டுமின்றி, எதிர்பார்த்தும் இருந்தார்கள்.

கண்ணில், கவலையும் பயமும் இருந்த போதும், அதைக் காட்டிக் கொள்ளாதிருக்க முயன்றபடி, அவளை, அவர்கள் வரவேற்றுப் பேசியபோது, தன்னையும் மீறி வசுந்தராவின் உள்ளம், அவர்கள் பால் உருகிப் போயிற்று.

''வாம்மா, உள்ளார வா. நாலு வருசத்துக்கு, முன்னே பார்த்ததுக்கு, இப்போ மூக்கும் முழியும் இன் னும் திருத்தமா, ரொம்ப லட்சணமா இருக்கேம்மா. எல்லாம் உங்க வீட்டு சாயல். நம்ப அப்புக் குட்டி கூட, இதே ஜாடைதான். உட்கார்ந்து காப்பி பலகாரம் சாப்பி டும்மா'' என்று உபசாரம் நடந்தது.

நாலு ஆண்டுகளுக்கு முன்பாக, எதற்காக வந்த போது என்ற நினைவில் வசுந்தரா மேலும் இளகினாள்.

இவர்கள் பேச்செல்லாம் ஒழுங்காகத்தானே, இருக் கிறது? நீட்டி இழுத்து, கொச்சையாக ஒன்றும் இல்

லையே! வெகுலேசான - அதுகூட, உன்னிப்பாய்க் கவனித்தால் மட்டுமே கண்டுபிடிக்கக் கூடிய அளவில், கிராமப்புற வாடை! சொல்லப்போனால் இதுவும் நன்றா கத்தானே இருக்கிறது. இவர்கள் போலத்தானே, கருணும் பேசுவான்? இதில் சித்தப்பா வருத்தப்பட என்ன இருக்கி றது?

சன்னமாக முறுவலித்து வசுந்தரா உட்கார, வாத மும், வயதும் அனுமதித்த அளவில், சிரமத்துடன் திண் ணையில், அவள் அருகே அமர்ந்தாள் கருணுடைய பாட்டி. மடக்கி வைக்க முடியாத கால்களை, மெல்ல நீட்டி வருடியபடி, ''வாதம்மா. எப்பவும் வலியும் உளைச்சலும் தாங்க முடியவில்லை'' என்று முனகினாள்.

''சித்தப்பாவிடம் காட்டியிருக்கலாமே'' என்றாள் வசுந்தரா.

''அய்யோ! மாப்பிள்ளை கிட்டே, கால் முட்டியைக் காட்டுகிறதா? அசிங்கம்!'' என்று உடல் சிலிர்த்தாள், பெரியம்மாள். ''நீ சாப்பிடும்மா. இந்த எள்ளுருண்டை சாப்பிட்டுப் பாரும்மா. உனக்காக, உப்புக் கருப்பட்டி போட்டு இடிக்கச் சொன்னேன். நல்லாயிருக்குதா?

''நான் வருவேன் என்று உங்களுக்குத் தெரியுமா?''

''பின்னே? பெரிய தம்பி, மெனக்கட்டு வந்து, நீ உன் சித்தப்பா கூட வந்திருக்கிறதைச் சொல்லி, இங்கே யும் வருவே, வரும்போது நல்லா கவனித்து... வந்து, செல்வியை நினைத்து வருத்தப்படாமல் அவள் இருந் தால் எப்படிக் கவனிப்பாளோ, அப்படிப் பார்த்துக்

கொள்ள வேணும் என்று, சொல்லிவிட்டுப் போனானே'' என்று விளக்கவும் சட்டென, வசுவுக்குச் சித்தப்பா சொன்னது புரிந்தது.

நமக்காக உருகுகிற மாதிரிதான் இருக்கும்.

எள்ளுருண்டையும், முறுக்கும் வாய் நிறைந்த உப சாரமும் இதில் இயங்கி, கருண் பற்றிய பிரச்சினையை வசுந்தரா மறந்து போய் விடுவாள், என்று நினைத் தானா? அல்லது, அதைத் தொடரத் தயங்குவாள் என்று எண்ணினானா?

சிறிய தந்தையின் சங்கடமும், சஞ்சலமும் சற்றுப் புரிய, ''கருண் எங்கே?'' என்று சற்று அழுத்தமாகக் கேட்டாள் வசுந்தரா. ''நான் அவனைப் பார்க்க வேண் டும்'' என்று எழுந்தாள்.

சற்றே விலகியிருந்த கவலையும், பயமும், லட்சுமி அம்மாளின் முகத்தில் மீண்டும் தலை காட்டியது.

சிற்றுண்டி உண்ண, வசுந்தரா உட்கார்ந்ததும், வெளியே சென்ற கணவன் திரும்பி வந்துவிட மாட் டாரா, என்பது போல, அவர் சென்ற திக்கை ஏக்கத்துடன் நோக்கிவிட்டு, ஒரு பெருமூச்சுடன், ''பேச்சீ'' என்று குரல் கொடுத்தாள்.

அந்த வேலைக்காரியுடன், இரண்டு சுற்றுக் கட்டு முற்றங்களைத் தாண்டிச் சென்று பார்த்தபோது, அவளு டைய சித்தப்பா மகன் கருண் ஒரு குறுங்கட்டிலில் கால் நீட்டி அமர்ந்திருக்க, ஒரு வேலைக்காரச் சிறுவன், அவனுக்குக் கால் தடவிக் கொண்டிருந்தான்.

இவர்கள் வருவதை உணர்ந்து, நிமிர்ந்து பார்த்தவ னின் கண்கள், வசுந்தராவிடம் நிலைத்து விரிந்தன. ''ஐ நீங்கதான், வசுந்தரா அக்காவா? மாமா சொன்ன மாதி ரியே அழகாய் இருககிறீங்களே!'' என்று மகிழ்ச்சியோடு உரைத்தான்.

தன்னை மீறி உள்ளம் குளிர்ந்த போதும், ''மாமா என்றால்? சித்திக்கு, அண்ணன் தம்பி முறையில்... அந்த தனஞ்சயனா? அழகு என்றானாமே! அவன் எப்போது, அவளைப் பார்த்தான்?...'' என்றெல்லாம் வசுவின் சிந் தனை ஓடிற்று.

கூடவே, காலை நீட்டி, கருண் அமர்ந்திருந்த நிலை, கவலையூட்ட, ''காலில் என்னம்மா கருண்? எங்கேனும் விழுந்து அடி பட்டுவிட்டதா?'' என்று கலக்கத்துடன் வினவினாள்.

''இதுவா?'' என்று அலுப்புடன் கேட்டவாறு காலைப் பார்த்த சிறுவன், வேலைக்காரப் பையனின் தலையில் ஒரு தட்டுத் தட்டி ''எலே, காலைத் தடவாம, எங்கடா வாய் பார்க்கிறே?'' என்று அதட்டினான்.

மீண்டும் வசுந்தராவின் பக்கம் திரும்பி, ''எல்லாம், இந்த வாதம்தான்க்கா. உளைச்சல் தாங்க முடியலை!'' என்று கருண் கூறவும், அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

''வாதமா? உளைச்சலா?!?'' என்று திகைத்தாள்.

''ஆமாம்க்கா!'' என்று சலித்துக் கொண்டான் பையன். ''எந்நேரமும் குடைச்சலும் வலியும்தான்.

உட்கார்ந்தா, எழுந்திரிக்க முடியலை. எழுந்திருந்தா நடக்க முடியாதபடி இழுப்பு! ச்சு! அதான் தடவி விடச் சொன்னேன்'' என்று அலுப்பும், களைப்புமாக, அவன் பேசிய விதத்தில் வசுந்தராவுக்கு முதலில் சிரிப்புதான் வந்தது.

கூடவே, அவனுடைய பாட்டி மாதிரியே பேசுகிறானே, என்று எண்ணமிட்டவள், சட்டென, அதிர்ந்தாள். சித்தப்பா வெறுப்புடன் குறிப்பிட்டது. இதைத்தான்! ஓடியாடி விளையாட வேண்டிய, இந்த வயதில் இவன் இப்படிச் சோர்ந்து கிடந்தால் எப்படி?

பிள்ளை வீணாகிப் போய் விடுவானோ, என்று அவன் தந்தை கலங்குவது நியாயம்தானே?

''ம்ம் உட்காருங்க, அக்கா...'' என்று லேசான முனகலுடன், கருண் தன் பாட்டியைப் போலவே, மேலே பேசவும், கொஞ்சம் இளகியிருந்த வசுந்தராவின் மனம் மீண்டும் கடினப்பட்டது.

''வருகிறாயா கருண்? எனக்கு இந்த வீட்டின் தோட்டத்தையெல்லாம் சுற்றிக் காட்டுகிறாயா? பழ மரங்கள் நல்ல நல்ல ஜாதியாய், இங்கே நிறைய உண்டாமே! எனக்குக் காட்டேன்!'' என்று தம்பியை அழைத்தாள். இவன் இப்படிச் சோர்ந்து கிடக்க விடக்கூடாது!

''தோட்டத்தையா? ஐயோ!'' என்றான் சிறுவன். ''அவ்வளவு தூரம் எப்படி நடப்பது? கால் வலிக்குமேக்கா'' என்றான் சோர்வோடு.

வேண்டுமென்றே தப்பாகப் புரிந்து கொண்டு, ''இல்லையே! வலிக்காதே! எனக்கு எவ்வளவு தூரம் நடந்தா

லும், கால் வலிக்கவே வலிக்காது நீ சும்மா வா'' என்றாள் தமக்கை.

''அச்சச்சோ, நான் என் காலைச் சொன்னேன் அக்கா'' என்றான். இளவல். ''எனக்கு வாதம், இருக்கு தில்லையா'' நடப்பது கஷ்டம்!'' என்று விளக்கினான்.

''அடடா, உனக்கு வாதமா? ஆனால், சின்னப் பிள்ளைகளுக்கு வாதம் என்றால், நிறைய நடந்து, ஓடியாடினால்தானே சரியாகும் என்பார்கள்! உன் பாட்டியே இவ்வளவு நடக்கும்போது.... இப்படி உட்கார்ந்தே இருந்தால் வாதம், அதிகமாகி விடாதா?''

நம்புவானோ, மாட்டானோ என்று வசுந்தரா யோசிக்கும்போதே, ''நிஜமாகவா, அக்கா? நடந்தாலே நல்லா ஆகி விடுமா?'' என்று ஐயமும், ஆர்வமுமாகக் கேட்டான் சின்னவன்.

வசுந்தராவுக்கும் அது பற்றி ஒன்றும் தெரியாது தான். ஆனாலும், தன் அறியாமையைக் காட்டிக் கொள் ளாமல் ''மெய்யாகவே, அப்படித்தான் கருண்!'' என்று அடித்துச் சொல்லி விட்டாள்.

எப்படியும், இந்தப் பையனை, அவனது வயதுக் கேற்றபடி, உருவாக்கியாக வேண்டுமே!

அவனும், உடனேயே கிளம்பி வந்து விடவில்லை. தன்னால் நடக்க முடியுமா என்றே சந்தேகப்பட்டு விட்டு அவனால் முடியாவிட்டால், தூக்கி வருவதாக வசுந்தரா அளித்த உறுதி மொழியின் பேரில்தான், ஒருவாறு எழுந்தான்.

முதலில், முக்கி முனகியபோதும், மிகவும் சின்ன வயதுதான் என்பதால், உடனேயே, வாதம், வலியெல் லாம் மறந்து, வசுந்தராவோடு கருண் விளையாடத் தொடங்கி விட்டான்.

ஆனால் கொஞ்ச நேரம் விளையாடும் முன்பா கவே, சாயந்திரக் கஞ்சி குடிக்க வருமாறு, வீட்டிலிருந்து, ஆள் வந்து விட்டது.

வயதுக்கேற்றவாறு, விளையாட்டில் மூழ்கியிருந்த கருண் கெஞ்சுவது போலத் தமக்கையை நோக்கினான்.

வந்த முதல் நாளே, கீழ்ப்படியாமையைத் தூண்டி னாள் என்று இருப்பது சரியல்ல என்றெண்ணிய வசுந் தரா, தம்பியைத் திரும்பக் கூட்டி வந்து விட்டாள்.

வெளிப்படையாக, எதையும் காட்டிக் கொள்ளாத போதும், இருட்டத் தொடங்கிய பிறகு, பழக்கமற்ற பாதையில் ஸ்கூட்டரில் செல்ல வேண்டாம் என்று, பிடிவாதமாகத் தடுத்து, வில்வண்டி பூட்டி, அவளை அனுப்பிய போதும், பெரியவர்கள் பழைய மாதிரிப் பழக வில்லை என்பது வசுந்தராவுக்கு, நன்றாகவே, தெரிந்தது.

கண்ணைப் பாராமலேதான், இருவருமே பேசினார் கள்.

சற்று யோசித்துவிட்டுக் காரணம் புரியாமல், தோளைக் குலுக்கினாள் அவள்.

ஒருவேளை, அவள் வந்த நோக்கத்தைப் புரிந்து கொண்டு விட்டார்களோ, என்னவோ?

ஆனால், அதற்கென்ன செய்ய முடியும் என்று மீண்டும் தோளைக் குலுக்கிக் கொண்ட போதும், உள்ளூர அவளுக்குச் சற்று சங்கடமாகவும் இருந்தது.

கருணனை அனுப்பி விட்டால் அப்புறம் அந்த முதியவர்களின் வாழ்வுக்கு, என்ன ஆதாரம் இருக்க முடியும்?

ஆனால் மகனைப் பற்றிய சின்னச்சின்ன விஷயங்களைக் கூட, கேசவன் ஆர்வத்துடன், மீண்டும் மீண்டும் கேட்டுத் தெரிந்து கொண்ட போது, முதியவர்களைப் பற்றிய நினைவு அவளுக்கு, அடியோடு மறந்து போயிற்று.

மறுநாள் காலையில், பறவைகளின் ஒலியைக் கேட்டபடி, கண்விழித்து; எழும்போதே, வசுந்தராவுக்கு காற்றில் பறப்பது போல, மிகவும் உற்சாகமாக இருந்தது.

சற்று நேரம், அந்த ஓசையை ரசித்தபடி படுத்துக் கிடந்தவள், அறைக்கு வெளியே அரவம் கேட்டு எழுந்தாள்.

வெளியே சென்று பார்த்த போது, கேசவன் ஷூவை மாட்டிக் கொண்டிருந்தார்.

மகளைக் கண்டதும், ''கொஞ்ச தூரம் நடந்து வரப் போகிறேன் வசும்மா'' என்று எழுந்தார்.

''காலை வாக்கிங்''கா? நானும் வரட்டுமா. சித்தப்பா? அல்லது உங்களுக்குத் தாமதமாகி விடுமா? அல்லது இன்று நீங்கள் போங்கள், சித்தப்பா. நாளையிலிருந்து, நான் வருகிறேன்'' என்றாள் அவள்.

''தாமதம் என்று ஒன்றுமில்லையம்மா. நகரத்தில் மாதிரி இங்கெல்லாம், நிமிடக் கணக்கு பார்த்து வேலை நடப்பதில்லை. ஒரு பத்து நிமிஷம் முன்னே, பின்னே ஆவதினால், குடி முழுகிப் போவதும் எதுவுமில்லை. புரிகிறதில்லையா? பத்து நிமிஷத்தில், தயாராகி விடு வாய் என்றால் உனக்காகக் காத்திருக்க, நான் தயார்'' என்றார் கேசவன்.

''இதோ!'' என்று சிட்டாய்ப் பறந்து சென்றவள், சொன்ன நேரத்துக்குள்ளாகவே தயாராகி வந்துவிடவே, அது பற்றிக் கிண்டலடித்தவாறே கேசவன், அவளைக் கூட்டிச் சென்றார்.

பெட்ரோல் புகையோ, தூசியோ இல்லாத, பரிசுத்த மான காற்று, முகத்தில் மோதும்போதும், அருவி நீரில் குளித்தாற் போலப் புத்துணர்ச்சி தோன்றுவதை, வசுந்தரா உணர்ந்தாள்.

கொஞ்ச நேரம் நடந்த பின், சற்றுத் தொலைவில் உயரமான மரங்கள் அடர்ந்த பகுதியைக் கேசவன் சுட்டிக் காட்டினார். ''அதுதானம்மா, சுனைப் பகுதி நாளைக்குப் பார்க்கலாம். இன்றைக்கு நேரமாகி....'' என்று தொடங்கியவர், பெண்ணின் முகத்தைப் பார்த்து விட்டு, ''நீ வேண்டுமானால், போய் பார்த்து விட்டு, வருகிறாயா? இதற்கு மேல் தாமதம் ஆனால், எனக்கு கிளீனிக் செல்லத் தாமதமாகி விடும். செல்லும்போது, பாதையிலேயே நட. புதர், பொந்து எதிலும், கை, காலை வைத்து விடாதே'' என்று அனுப்பி வைத்தார்.

அருகில் செல்லச் செல்லத்தான், அந்த மரங்கள் எவ்வளவு உயரம் என்பதை வசுந்தராவால், தெரிந்து கொள்ள முடிந்தது.

நடுவில், கோயிலும், ஒரு தீபகற்பம் போல, கோயிலை முப்புறமும் சூழ்ந்திருந்த குளமும், குளக்கரை யில் கப்பும் கிளையுமாக வானளாவ வளர்ந்திருந்த மரங்களும், பார்க்கப் பார்க்கத் தெவிட்டவில்லை, அவ ளுக்கு.

மீண்டும், ஒரு மரத்தடியில் போய் நின்று கொண்டு, அண்ணாந்து, மர உச்சியைப் பார்த்த போதுதான், வசு வுக்குத் தான் தனியாக இல்லை என்ற உணர்ச்சி உண்டா யிற்று.

மார்பின் குறுக்கே கைகளைக் கட்டியவாறு ஒரு மரத் தண்டின் மீது, லேசாகச் சாய்ந்து நின்ற ஒருவன், அவள் திரும்பியதும், ''இந்த இடத்தில், இந்த மரங்கள் இவ்வ ளவு உயரமாக வளர்ந்திருக்கின்றனவே, இதேவகை மரக்கன்றுகளை, வேறெங்கே கொண்டு போய் வளர்த்தா லும், இந்த மாதிரி, இவ்வளவு உயரமாய் வளருவ தில்லை தெரியுமா?'' என்று கேட்டான்.

யாரென்று, யாரும் அறிமுகம் செய்யாமலே, அவன்தான் தனஞ்சயன் என்று அவளுக்குத் தெரிந்து போயிற்று.

## 8

அவன், தனஞ்சயன்தான் என்று, அவளுக்கு ஏன் தோன்றியது என்பது, வசுந்தராவுக்கே, ஆச்சரியம்தான்!

ஏன், அப்படித் தோன்றியது?

அவளை, அவ்வளவு தைரியமாகப் பார்த்துக் கொண்டு நின்றதோடல்லாமல், அவளிடம் துணிச்சலா கப் பேச்சும் கொடுத்ததாலா?

அதைத்தான், இந்தக் காலத்தில் எத்தனையோ பேர் செய்வார்களே! அவளிடமே, பல ஆண்கள் பேச முயன் றது உண்டுதான். சௌந்தர்யா அருகில் இருக்கும் போது, எல்லோர் கவனமும், அவளிடம் சென்று விடுமே தவிர, தனியாக நிற்கையில், பலரின் பார்வை, வசுந்தராவுக்கு, வெறுப்பூட்டியது. உண்டுதான். எனவே, ஓர் இளைஞன் அவளிடம் பேசியதாலேயே, அவன் தனஞ்சயனாக இருக்க வேண்டியதில்லை.

மரங்கள் பற்றிச் சொன்னது கூடப் பொதுப் படையா கவும் சொல்லக் கூடியதுதான்.

ஆனால், அவன் தனஞ்சயன் என்று உணர்ந்தது போலவே, அந்தப் பேச்சு கருண் பற்றிக் குறிப்புக் கொடுத்துப் பேசிய வார்த்தைகளே என்றும் நிச்சயமாகத் தோன்றி விட, இந்தக் குறிப்பைப் புரிந்து கொண்டது போலக் காட்டிக் கொள்ளக் கூடாது என்று முடிவு செய்து, ''மிஸ்டர் தனஞ்சயன்?'' என்று வினவலாய் அழைத் தாள்.

அவனைத் திகைக்க வைக்கத் திட்டமிட்ட அளவில், அவளுக்கும், ஏமாற்றம்தான்.

நிதானமாக நிமிர்ந்து, புன்னகையோடு அவளை நெருங்கி வந்து, ஒப்புதலாய்த் தலையசைத்து ''மிஸ் வசுந்தராதானே?'' என்று கையை நீட்டினான் அவன்.

இப்போது, வசுந்தராதான் சற்றுத் திகைத்துப் போனாள். இந்தப் பட்டிக் காட்டு பண்ணையார் கை குலுக்குவதுதான் பட்டணத்தார் நாகரீகம் என்று எண்ணிக் கொண்டான் போலத் தெரிகிறதே என்று நினைத்தாள். ஆனால், ஓர் அன்னியனுடன் கை குலுக்க அவளுக்குக் கொஞ்சமும் விருப்பம் இல்லாததால், இதிலிருந்து, இலகுவாக எப்படி மீள்வது என்று, ஒரு கணம் சிந்தித்து அழகாக முறுவலித்தாள்.

இனிய குரலில், ''இங்கே நீங்கள் கிராமத்தில் உள்ளவர்கள் எல்லாம், மேல் நாட்டு நாகரீகத்தைக் கடைப்பிடிக்கத் தொடங்கி விட்டீர்கள் போலத் தெரிகிறதே! வேடிக்கை பாருங்கள்! அங்கே, நாங்கள் இந்தியக் கலாசாரம் காப்பதாக, இப்படிப் பழகிக் கொண்டிருக்கிறோம்!'' என்றுரைத்து, தாமரை மொட்டாய்க் கரம் குவித்தாள்.

சட்டெனச் சிரித்து விட்டு, பதில் வணக்கம் தெரிவித்தான் தனஞ்சயன்!

தன்னை மீறி, வசுவின் முகமும், மலர்ந்தது.

''அந்தப் பக்கம், வளைந்து, தழைந்த கிளைகளுடன் ஒரு மரம் இருக்கிறதே, பார்த்தாயா, சிறு வயதில் அதன்

மீது ஏறி நாங்கள் ஆடுவோம். இருபுறமும் கால்களைப் போட்டுக் கொண்டு குதிரை ஓட்டுவது போலக் கற்பனை! பெரியவர்கள் யாராவது பார்த்தால், 'கவனம், கவனம்' என்பார்கள். ஆனால், அவர்கள் பேச்சை, யார் கேட்டார் கள்?''

ரொம்பப் பழகியவரிடம் போல, அவன் சொல்லிக் கொண்டே நடக்க, புதியவன் என்கிற எண்ணம் இல்லா மல், அவளும் அவன் பேச்சைக் கேட்டபடி, உடன் நடந்தாள்.

அவன் எதிரி என்பது, அப்போது அவளுக்குச் சுத்தமாய் நினைவே இல்லை!

கோயிலைச் சுற்றிக் கொண்டு அந்த மரத்தின் அருகே அழைத்துச் சென்று, வளைந்த கிளையைக் காட்டினான்.

மரத்தின் தூர்ப்பக்கம் கரையில் இருந்தாலும், கிளை, முழுக்க முழுக்கத் தண்ணீரின் மேலேயே இருந் தது. கிளையின் வளைவுப் பகுதிக்குச் செல்வதும் கடி னம். அதில் அமர்ந்து, ஆடுவதும் அப்படித்தான்.

''விழுந்து விட மாட்டீர்களா?''

''விழுவோமே!'' என்றான், அவன் அலட்சியமாக. ''பாதி, விழுவதற்காகத்தான் ஏறுவதே. அப்புறம், விளை யாட ஏறி விழுந்ததில் துணி நனைந்து விட்டது என்று, நன்றாக தண்ணீரில் துழாவிக் குளித்து விட்டுப் போவோம். சில சமயம் மணிக் கணக்காகக் கூட குளிப்போம்!'' என்று பெருமையாகப் பேசினான், தனஞ் சயன்.

''நாங்கள் என்றால் யாரெல்லாம்?''

''அக்காவும் நானும் தான். அப்புறம் முருகனும்'' என்றபோது, அவன் குரலில் சிறு வலி தெரிந்தது. அதை, உடனே சமாளிப்பவன் போன்று, ''அக்கா என்றால் யாரென்று தெரியவில்லையா? செல்வியக்கா, உன் சித்தி'' என்று விளக்கம் கொடுத்த போது, அவன் குரல் அன்னியமாகி விட்டிருந்தது.

''சித்தி தான் என்பது தெரிகிறது. ஆனால், இது கிராமப்புறம் இங்கே, பெண்களுக்கு இவ்வளவு சுதந்திரம் இருக்கிறதா? அதுதான் ஆச்சரியம்!''

''பொதுவாகக் கிடையாதுதான். ஆனால், அக்காவை யார், தடுப்பது? அவள், ஒன்று நினைத்து விட்டால் அதை மாற்ற யாராலும் முடியாது'' என்றவனின் முகம் சட்டென இருண்டது. ''சாவைத் தவிர'' என்று, எங்கோ வானத்தைப் பார்த்தான்.

செல்வியைத் தன் சொந்த சகோதரியாகவே, நினைத்து வந்தவன் இவன்! அவளது இழப்பு இவனை இன்னமும் மிகவும் வருத்துகிறது!

மனம் இளகிப் போனாள் வசுந்தரா, அவனது துக்கத்தைக் குறைக்க விரும்பி, மெல்லப் பேச்சுக் கொடுத்தாள்.''

''சித்தி, நன்றாக நீந்துவார்களா?''

''நீந்துவாளாவா? நீச்சலில், அக்கா வாளை மீன் தான். தண்ணீரில் அவளைப் பிடிக்கவே, முடியாது. தெரியுமா?'' என்று பெருமையடித்தவன், திடுக்கிட்டாற்

போல, ''உனக்கு, நீந்தத் தெரியுமா?'' என்று விசாரித்தான்.

''தெரியும்'' என்றாள் வசுந்தரா. சுருக்கமாக.

தண்ணீரில் விழுந்தால், மூழ்கி விட மாட்டாள், அவ்வளவே. சும்மா, ஒரு தரம் கல்லூரியில், வகுப்பு மாணவிகள் எல்லோருமாகச் சேர்ந்து பயின்றது. அதற்கு மேல், நீச்சல் பயிற்சியைத் தொடர, அவளுக்கு வாய்ப்பு இருக்கவில்லை. இதையெல்லாம், இவனிடம் ஏன் சொல்லிக் கொண்டு இருக்க வேண்டும்? அதுவும், 'வாளை மீனாக நீந்திய' அக்காவுடன் நீச்சலில் போட்டி போட்டவனிடம்!

''எதற்குக் கேட்கிறேன் என்றால், இங்கே நீரின் அடியில் தாமரைக் கொடிகள் பின்னிக் கொண்டு கிடக்கும். நமக்குத்தான் நீச்சல் தெரியுமே என்று, தண்ணீரில் இறங்கி, கொடிகளில் மாட்டிக் கொண்டு விடக் கூடாதே என்று எச்சரிப்பதற்காகத்தான். யாராவது, துணைக்கு இல்லாமல் சுனையில் இறங்கி விட வேண்டாம் என்ன?''

நல்லதற்குத்தான் சொல்லுகிறான். ஆயினும் அவனிடம் சரியென்று ஒத்துக் கொள்ள மனமின்றி, ''இந்தத் தண்ணீர் தேங்கியல்லவா, கிடக்கிறது? இதில் எப்படிக் குளிப்பதாம்?'' என்றாள் அவள்.

''இதைப் பார்த்தால், தேங்கிக் கிடக்கிற நீர் போல, அழுக்காகவா, இருக்கிறது? சுனை ஊற்றோடு, அணைக் கட்டிலிருந்து மடைகள் வழியே, புதுத் தண்ணீர் வந்து கொண்டே இருக்க, பாசனத்துக்காக, வாய்க்கால்கள்

மூலம் இன்னொரு பக்கம் நீர் போய்க் கொண்டேயும் இருக்கும். இதைப் போய்த் தேங்கிக் கிடக்கிற தண்ணீர் என்று இனியொருதரம் சொல்லாதே'' என்றான் அவன், சற்றே இறுகின குரலில்.

இவன் இந்த மண்ணை நேசிக்கிறவன். இதைப் பற்றி, நியாயமான குறைகளைக் கூட ஏற்கக் கூடியவனாகத் தோன்றாத போது, இந்த ஊர் பற்றி, இவனிடம் சற்று எச்சரிக்கையோடுதான் பேச வேண்டும்!

சும்மாவே, முக்கியப் பிரச்சினையில் எதிரெதிர்த் தரப்பில் நிற்கப் போகிறார்கள், சின்னச்சின்ன விஷயங்களில் எதிரிட்டு, இப்போதே, இவனை விரோதியாக்கிக் கொள்ளுவானேன்?

''நீங்கள் சொன்ன விவரம் எனக்குத் தெரியாதில்லையா? வெறுமனே, கொட்டிக் கிடக்கிற தண்ணீர் என்று நினைத்து விட்டேன்'' என்றாள், ஒரு தன்னிலை விளக்கமாக.

அதை, அப்படியே ஏற்காமல், தனஞ்சயன் அவளைக் கூர்ந்து நோக்கவும், ''இப்போது கூட, நீங்கள் மடை, அதன் வழியே தண்ணீர் வருவது எல்லாம், எனக்கு அவ்வளவாகப் புரியவில்லைதான். அது என்ன என்றும் சொல்லுங்களேன்'' என்று மேற்கொண்டு விவரம் கேட்டுப் பேச்சை மாற்றினாள்.

இந்தப் பட்டிக் காட்டு பண்ணையார், அகப்பட்டாள் ஒருத்தி என்று, மழை பெய்து, நதியாகி, என்று தொடங்கி, நதி வெள்ளம் அணைக்கட்டுகள் மூலம்

கடைசியாக எப்படிப் பயிர்களுக்குப் பயன்படுகிறது என்று விலாவாரியாக விளக்கப் போகிறான் என்று, குறைந்தது ஒரு மணி நேரப் போரடிப்புக்குத் தன்னைத் தயார்ப் படுத்திக் கொண்டிருக்கும் போது, ''அணைக்கட்டுகளில் தேக்கப்பட்டிருக்கும் நீரைப் பாசனத்துக்கு வசதியாக, இந்த மாதிரிக் குளங்களுக்குக் கொண்டு வரும் நீர் வழிகள்தான் மடைகள்'' என்று முடித்துவிட்டு, ''இங்கே பார்க்க வேண்டியது எல்லாம் முடிந்து விட்டால், உன்னை வீட்டில் கொண்டு விடப்போகிறேன்'' என்றான் தனஞ்சயன்.

மண்டையில், ஒரு மெல்லிய தட்டு தட்டி வைத்தாற் போன்ற உணர்வு லேசாக உறுத்த, ''கொண்டு விடுவதா? வழி தெரியாது என்று எண்ணினீர்களா? அப்படி யொன்றுமில்லை. நான் வந்தது போலவே, போய்க் கொள்ளுவேன். நீங்கள் வேண்டுமானால்... என்னால், உங்கள் வேலை கெட வேண்டாம். நீங்கள் போங்கள்.'' என்று திரும்பினாள்.

திரும்பியபோது சற்றுத் தொலைவில், ஒரு புதரின் மீது படர்ந்திருந்த கொடியில் பூத்திருந்த, அழகிய நீல வண்ண மலர் ஒன்று கண்ணில் பட, வேகமாகச் சென்று, அதைப் பறிக்கக் கையை நீட்டினாள்.

அவளது கருத்தை அறிந்தவன் போல, அவளோடு கூடவே வந்து, பூவைப் பறிக்குமுன், அவளைப் பற்றி பின்புறம் இழுத்து நிறுத்தினான், தனஞ்சயன்.

பூவைப் பறிக்க விடாதது கூட, வசுந்தராவுக்குப் பெரிதாகப் படவில்லை, இங்கே, பூப்பறிக்கக் கூடாது என்று எழுதாத சட்டம் எதுவும் இருக்கலாம்.

ஆனால், அவளைத் தொட்டு இழுத்தாக வேண் டுமா? அதுவும் இவ்வளவு முரட்டுத் தனமாக!

பூவைப் பறிக்க வேண்டாம் என்று வாயால் சொல் லியிருக்கக் கூடாது?

வெட்டி விடுபவள் போல முறைத்தவளைப் பதி லுக்கு முறைத்தான், தனஞ்சயன். ''இந்தப் புதரில் பூ மட்டும்தான் இருக்கிறதா, பூவின் மறைவில், பாம்பும் பதுங்கியிருக்கிறதா, என்று உனக்குத் தெரியுமா?'' என்று அவன் கோபமாகக் கூறவும், அவளுக்கு விதிர் விதிர்த் துப் போயிற்று.

''பா...பாம்பா? இ..இங்கெல்லாம் கூடப் பாம்பு இருக்குமா?...'' என்று தடுமாற்றத்துடன் வினவினாள்.

''பின்னே இருக்காதா? பாம்புகள் இருக்குமிடம், புற்று, புதர் இப்படித்தானே?

''ஆனால், இங்கே, கோயில், குளம் எல்லாம் இருக்கின்றனவே? குளிக்க, கும்பிட என்று, எவ்வளவு நபர்கள் வருவார்கள்? அவர்களுச்கெல்லாம் ஆபத்து தானே?'' என்றாள் அவள் சுதாரித்துக் கொண்டு.

''அப்படி வருகிறவர்களுக்கெல்லாம் இங்கே, எப் படி நடந்து கொள்ள வேண்டும் என்று தெரியும். எங் கெங்கே கை வைக்கலாம், எங்கெங்கே கால் வைக்கலாம் என்று யோசித்துச் செய்வார்கள். இப்படிப் புதர்மேலே இருக்கும் பூவை பறிக்க மாட்டார்கள். அப்படியே பறிப்ப தானாலும், ஒரு குச்சியின் உதவி கொண்டு, தள்ளி நின்று பறிப்பார்கள்.'' என்றான் அவன். இன்னமும் கடுப்பா கவே.

வசுந்தராவின் பார்வை, மீண்டும் அந்தப் புதரிடம் பாய்ந்தது.

காற்றில், இளம் இலைகளும் மலர்களும் லேசாக ஆட, அழகாய் இருந்தது புதர். பல்லில் நஞ்சு நிறைந்த பாம்புகளை இது தன்னுள் பதுக்கி வைத்திருக்க முடியுமா?

''ஆட்கள் நடமாடுகிற இடம்தானே? அவ்வளவு சாதாரணமாகப் பாம்பு இங்கே வருமா?'' என்று யோசனையோடு கேட்டாள்.

பொறுமையிழந்த ஒரு வேக மூச்சுடன், ''வராதா? பாரம்மா, இது கிராமப்புறம், வயல் சூழ்ந்த பிரதேசம். வயலில் விளையும் கதிர்களைத் தின்ன, எலிவரும். எலியைத் தின்ன பாம்பு, பறவை எல்லாம் வராதா? அதுவாக நம் பாதையில் குறுக்கிடுவதில்லை. ஆனால், நாம் அது இருக்கும் இடத்தில் கையை வைத்தால், சும்மா இருக்குமா? தற்காப்புக்காவது ஒரு போடு போடாதா? அதுவே, கரு நாகம் போலக் கடுமையான விஷம் உள்ளதாக இருந்தால்...?'' என்று கேட்டான் அவன்.

இருக்கக் கூடும் தான். இந்த வயல் எலிகளால், ஆண்டொன்றுக்கு எத்தனை கோடி டன் உணவுத் தானியம் நஷ்டப்படுகிறது என்று பாடத்திலேயே வருமே! எலியைத் தொடர்ந்து பாம்பு வருவது இயல்புதானே? அது விஷநாகமாக இருக்கவும் கூடும்தான்.

கோபம் காட்டினாலும், இவ்வளவு நேரப் பேச்சில், நன்மை அவளுக்குத்தான். நன்றி சொல்லத்தான்

வேண்டும். இவன் இல்லாவிட்டால் இந்நேரம் வாயில் நுரை தள்ள, அவள் விழுந்து கிடக்கவும் கூடும்.

கற்பனை காட்டிய காட்சியால், உடல் நடுங்க, ஓரேட்டு பின்னடைந்து மெல்லிய குரலில் 'ஸாரி' என்றாள் அவள்.

ஓர் 'உச்சு'டன் அவளது 'ஸாரி'யை அலட்சியப் படுத்தினான், தனஞ்சயன். ''கிராமப் புறத்துக்குத் தனியாக வந்திருக்கிறாய். இதையெல்லாம் சொல்லிக் கவனப் படுத்தி அனுப்ப வேண்டும், என்பது இல்லையே! கவனக் குறைவால், குடும்பத்தில் இரண்டு துக்கம் அனுபவித்த பிறகும், டாக்டருக்கு இது கூடத் தோன்றவில்லையே! நோய் நீக்குவது மட்டுமே, வாழ்க்கையாகி விட முடியுமா? அல்லது அதை மட்டுமே, பார்க்க வேண்டும். இப்படியெல்லாம், அழைத்து வரக் கூடாது.'' என்று படபடத்தான்.

தனியே அனுப்புகையில், கேசவன் எச்சரித்ததை, அவனிடம் எடுத்துச் சொல்லும் போதே, அவனது வார்த்தைகளுக்கு, இன்னோர் அர்த்தம் இருக்கிறதோ என்ற சந்தேகம் அவளுக்கு ஏற்பட்டது.

அது என்ன?

தனஞ்சயனின் வார்த்தைகளில் மறைந்திருந்தது என்ன என்று, வசுந்தரா யோசிக்க முனைந்தபோது, அதற்கு இடம் தராமல், ''ஓகோ, அப்படிச் சொல்லியிருந்தும் தான், அம்மையார், புதரில் பூப்பறிக்க முயன்றீர்களாக்கும்?'' என்று ஏளனமாகக் கேட்டான் அவன்.

உதவினானே, என்று பார்த்தால், ஓட ஓட விரட்டு கிறானே என்று, அவளுக்கும் கோபம் வந்தது.

நீ யார் கேட்க என்று கேட்டுவிட, அவள் வாயைத் திறந்தபோது, அவனே, சற்று இறங்கி வந்து பேசினான். ''உன்னிடம் கோபப்பட்டு என்ன பயன்? இது என்ன மாதிரி இடம், என்னென்ன நடமாடக் கூடும் என்று தெரிந்திராத போது, சும்மா, பொந்து, புதர் தொடாதே, என்றால், அது மனதில் பதிந்தே இராது. அதை விளக்க மாகச் சொல்ல வேண்டும் என்று டாக்டருக்கும் தோன்றி யிராது. விடு. இப்போது வீடு திரும்பலாமா?'' என்று கேட்டான்.

மீண்டும் தனஞ்சயன், சித்தப்பாவைக் குறை கூறு கிறானோ என்று தோன்றவும், ''உங்களுக்கு ஏன் வீண் சிரமம்? நானே போய்க் கொள்ளுவேன்.'' என்றாள் அவள்.

''சிரமம் என்ன? நானே, அவரைப் பார்க்க வேண்டி யிருக்கிறது. இன்னொரு தரம் வருவதற்குப் பதிலாக இப்போது உனக்குத் துணையாக வந்து விட்டுப் போகி றேன்'' என்றபடி, உடன் நடந்தான் அவன்.

துணை! உள்ளூரப் பல்லைக் கடித்தாள், அவள். அவளுக்கு உதவி செய்ததாகக் காட்டியே ஆக வேண்டு மாக்கும்? ஆனால், அதற்காக, இந்த 'உதவி'க் கடன் பட்டதற்காக, நான் ஒன்றும், என் குறிக்கோளைக் கைவிட்டு விட மாட்டேன் என்று எண்ணிக் கொண்டாள், வசுந்தரா.

வசுந்தரா எண்ணி வந்த காரியத்துக்கு, முக்கிய எதிரி, இந்த தனஞ்சயன்தான். இவனோடுதான், அவள் வாதாடி, வெற்றியடைய வேண்டும். இந்தப் போராட் டத்தை எப்படித் தொடங்குவது என்று, அவள் யோசித் துக் கொண்டிருந்தபோது அதற்கான வாய்ப்பு ஒன்று, வெகு விரைவிலேயே அவளுக்குக் கிடைத்தது.

சுனைக்கு வந்தபோது போலவே, அங்கிருந்து திரும்பிச் செல்லும் போதும் சுற்றியிருந்த பசுமைச் சூழல், வசுந்தராவுக்குப் பரவசமூட்டியது.

அதை, மறையாமல், தனஞ்செயனிடமும் சொன் னாள். ''ஆண்டு முழுவதும், இந்தப் பசுமை இருப்பது முடியாததுதான். ஆனால், இப்போதைய காட்சி, ரொம்ப வுமே, மனதுக்கு ரம்மியமாக இருக்கிறது. பார்த்துக் கொண்டே இருந்தால், பசியே எடுக்காது. என்று தோன் றுகிறது! என்று மனதாரக் கூறினாள்.

''தட்டையே மாற்றுகிறாயே!'' என்று அவன் கடகட வென்று சிரிக்கவும், நின்று, அவனைக் கேள்வியாய் நோக்கினாள்.

சிரிப்பினூடே ''பின் என்ன? பசியைப் போக்கத் தானே, இந்தப் பயிர் செய்வதே. அப்படியிருக்க இதைப் பார்த்தால் பசியே எடுக்காது என்கிறாயே. அப்புறம், இந்த விவசாயத்துக்கே அர்த்தமில்லையே! என்று அவன் விளக்க, அவளுக்கும் சிரிப்பு வந்தது.

முறுவலித்தபடி, ''வார்த்தைக்கு வார்த்தை, அப்ப டியே, அர்த்தம் எடுப்பீர்களா? மிக மிக அழகு என்பதை,

அப்படிச் சொன்னேன். நீங்களானால், அதை மெய்யாக நினைத்துப் பட்டினி போட்டு விடுவீர்கள் போலல்லவா தோன்றுகிறது? நல்ல வேளை, நான் உங்கள் வீட்டு விருந்தாளியில்லை!'' என்று அவள் இலகுவாகப் பேசவும், தனஞ்சயன் மீண்டும் நகைத்தான்.

''ரொம்பவும் அப்படி நம்பிக் கொண்டிருக்க வேண்டாம். டாக்டருடைய அண்ணன் மகள் வந்திருக்கிறாள் என்றால், எங்கள் அம்மா, நிச்சயமாக, விருந்துக்குக் கூப்பிடுவார்கள். தயாராயிரு'' என்றான் அவன். மிரட்டுவது போல.

''கூப்பிடுவது, உங்கள் அம்மாவாயிற்றே! நீங்..'' என்று தொடங்கியவளுக்குத் திடுமென, அவனுக்குத் திருமணம் ஆகிவிட்டதா என்று அறிந்து கொள்ள வேண்டும்போல இருந்தது. என்ன ஏது என்று யோசியாமல், ''நீங்களோ, உங்கள் மனைவியோ அழைத்தால்தான், யோசித்து வர வேண்டும்'' என்றாள் வேடிக்கைபோல.

புன்னகை செய்து, ''மனைவி ஒருத்தி இன்னமும் அமையாததால் வீட்டுத் தலைவியாக, அம்மாதான் அழைப்பு விடுப்பார்கள். அதனால், நீ தைரியமாக வரலாம்.'' என்று, தனஞ்சயன் கூற, வசுந்தராவுக்கு, ரொம்பச் சிரிப்பு வந்தது.

உள்ளூர ஆச்சரியமாகவும் இருந்தது.

ஓர் இளைஞனுடன் இப்படித் தனியாகச் சிரித்துப் பேசிக் கொண்டு செல்வது, அவளேதானா?

அதுவும், அன்று காலையில்தான், மிஞ்சி மிஞ்சி, அவனைச் சந்தித்து, ஒரு மணி நேரம் ஆகியிருக்கக் கூடும். அவனோடு, சர்வ சாதாரணமாய்ப் பேசிச் சிரிக்க அவளால் எப்படி முடிகிறது?

இவனைப் பற்றிச் சித்தப்பா நிறையப் பேசியதால், ரொம்பப் பழகியவன் போலத் தோன்றி விட்டதா?

அல்லது, இவனது கெட்டிக்காரத்தனமா?

அது பற்றியும், கேசவன் சொல்லித்தான் இருக்கி றார். 'நமக்காக உருகுவது போல'ப் பேசுவான் என்று! சற்று முன் கூட அவளது உயிருக்காகத்தானே, அவன் ஆத்திரப்பட்டது. அல்லது, ஆத்திரப்பட்டது போல நடித் தது?

மெய்யாக அது நடிப்பாக இருக்க முடியுமா?

ஓரக் கண்ணால், அவள் பார்த்தபோது, அவனும் ஏதோ யோசனையில் ஆழ்ந்திருப்பது போலத்தான் தோன்றியது.

என்ன யோசிக்கிறான்?

இவளை, இன்னும் எப்படி ஏமாற்றுவது, என்றா?

என்னவோ, இந்த மாதிரி எண்ணமிடுவது, அவ ளுக்கு மனதுக்குக் கஷ்டமாக இருந்தது. ஆனால், அவ ளது மனதுக்கு துன்பம் தந்தது என்பதாலேயே ஒரு விஷயம் பொய்யாகி விடமுடியாதே!

இவன் மெய்யாகவே எதிரி என்றால், இனிக்கப் பேசித் தன் காரியம் சாதிக்கிற குணமுடையவனே என்

றால், அவளுடைய வருத்தத்துக்காக, அது ஒரு போதும், மாறிவிடப் போவதில்லை. எனவே, இதற்காகவெல்லாம் வருத்தப் படாதிருக்க, அவள்தான் பயின்று கொள்ள வேண்டும்!

அவள் யோசனையிலேயே மூழ்கியிருக்க "உன் சித்தப்பா வீட்டுக்கு, இப்படியே வண்டிப் பாதை வழியா கவும் போகலாம். வயலில் இறங்கி, வரப்புகளின் ஊடே நடந்தும் போகலாம். உனக்கு, எது விருப்பம், சொல்லு. ஆனால், ஒன்று, வயல் வரப்பில் போவது என்றால், செருப்பைக் கையில் தூக்கிக் கொள்ள வேண்டும்." என்றான் தனஞ்சயன்.

கிண்டலடிக்கிறானோ, என்று தோன்றிவிட, "காலில் அணியும் செருப்பைக் கையில் தூக்குவதா? உங்கள் ஊர் நாகரீகம், ரொம்பப் புது மாதிரியாக இருக்கிறதே!" என்று ஏளனமாகச் சிரித்தாள், வசுந்தரா.

"புது நாகரீகமில்லை. ரொம்ப ரொம்பப் பழைய காலத்திலிருந்து கடைப்பிடிக்கப்பட்டு வரும், நல்ல தொரு பழக்கம். இந்த வயல்களில் விளைவது, பெரும் பாலும், உணவுப் பொருட்கள். உணவு தானியத்தை, அன்ன லட்சுமி என்பார்கள். அன்ன லட்சுமி விளையும் இடத்தைச் செருப்பால் மிதிக்கலாமா? அதனால்தான், இப்படியொரு கட்டுப்பாடு! என்று, அவன் விளிக்கவும், மறு பேச்சின்றிச் செருப்பைக் கழற்றிக் கையில் தூக்கிக் கொண்டாள் வசுந்தரா.

"பரவாயில்லையே" என்று லேசாகப் பல் வரிசை தெரிய முறுவலித்தான், தனஞ்சயன். "நான் பெரியதாய்

ஒரு வாக்கு வாதத்தை எதிர் பார்த்தேன்.'' என்றபடியே, தன் செருப்பைக் கழற்றிக் கையில் எடுத்துக் கொண்டு, வரப்பில் இறங்கினான்.

இவன் சிரிக்கும்போதே, அதுவும் பல் தெரியச் சிரிக்கும்போது, பார்க்க, நன்றாய்த்தான் இருக்கிறது. என்ன பற்பசை பயன்படுத்துகிறீர்கள் என்று கேட்கத் தூண்டும் அளவு நன்றாக இருக்கிறது. ஆனால், அப்படிக் கேட்டுவிடக் கூடாது. கேட்டால், கர்வம் தலைக்கேறி விடும் என்பதோடு, அவளை, ஒரு மாதிரிப் பட்டவளாக, அவன் எண்ணவும் கூடும்....!

மனது தன் பாட்டில், ஏதேதோ அசை போட, செருப்புகளைக் கையில் ஏந்திய வண்ணம், வசுந்தராவும், அவனைப் பின் தொடர்ந்தாள்.

''என்ன, வாதாடப் போவதாகவே இல்லையா.''

''எ... எதற்காக வாதாடுவது?''

''அதுதான், அன்னலட்சுமி விஷயம். தானியமாவது, கடவுள் ஆவதாவது? அப்படிப் பார்த்தால் ஒரு வயலில், எத்தனை கோடி அன்ன லட்சுமிகள்?... இது போன்ற வாதங்கள்!''

''சாப்பிடுகிற தட்டில் கையை உதறினாலே, 'அன்னம் லட்சுமி, அதை உதறாதே' என்று எங்கள் அம்மா வழிப்பாட்டி திட்டுவார்கள். அப்படியிருக்க, நான் ஏன் இதுபோல வாதாடப் போகிறேன்?'' என்றவள் தொடர்ந்து, ''ஆனால், எனக்கென்னவோ, இந்தப் பழக்கத்தின் மூல காரணம், அன்னலட்சுமி'க்கு அவமரியாதை

என்பதாக இருக்காது, என்று தோன்றுகிறது. இந்த ஈர வரப்பில், செருப்புக் கால் வழுக்கிவிடும், கழற்றி விடு, என்று சும்மா சொன்னால் கேட்க மாட்டார்கள் என்று, கடவுள் பெயரைச் சொல்லி மிரட்டி வைத்தார்களோ, என்னவோ?'' என்றாள்.

ஆச்சரியப் படத்தக்க விதமாக, ''நானும் இதே போல எண்ணியதுண்டு.'' என்றான் அவன், வியந்த குரலில்.

வசுந்தராவுக்கும், வியப்புதான். இந்தக் கிராமத்திலேயே பிறந்து வளர்ந்தவன் கூட, இப்படியெல்லாம் யோசித்திருக்கிறானே!

அதுவும், அவளைப் போலவே!

இதே போலக் கருண் விஷயத்திலும், இவன், அவளைப் போலவே நினைக்கத் தொடங்கிவிட்டால், எவ்வளவு நன்றாக இருக்கும்?

நினைப்பான். நினைக்க வைப்பாள், இந்த வசுந்தரா!

உள்ளூரச் சூளுரைத்த வண்ணம், தனஞ்சயனைப் பின் தொடர்ந்தாள் அவள்.

வரப்பை ஒட்டிச் சென்ற வாய்க்காலில், சலசல வென்று ஓடிய நீரும், நீரில் எதிரிட்டுப் பாய்ந்து ஓடிய சிறு மீன் கூட்டமும், முகத்தில் மோதிய சிலுசிலுவென்ற காற்றும், மற்ற எண்ணங்களைப் பின்னே தள்ளின.

சுற்றுப் புறத்தை ரசித்தவாறே, செல்லுகையில், அவன் நின்று, ''இங்கே, நீர் விலக்கி வைத்திருக்கிறார்கள். உன்னால் தாண்ட முடியுமோ, என்னவோ?'' என்று யோசித்தான்.

''நீரை விலக்குவதா? அதெப்படி?'' என்றாள், வசுந்தரா.

''இப்படித்தான்.'' என்றவன், பெரிய எட்டு எடுத்துத் தாண்டி நின்று, வாய்க்காலில் இருந்து, வயலுக்கு நீர் பாய்வதைக் காட்டினான். ''வாய்க்காலில் இருந்து, வயலுக்கு நீர் பாய்ச்ச, வெட்டி விட்டிருக்கிறார்கள். இப்போது உன்னால் என்னைப் போலத் தாண்ட முடியுமா? அல்லது, உன்னைத் தூக்கி, இந்தப் பக்கம் விடட்டுமா? என்று அவன் கேட்கவும் வசுந்தரா, ஒரு கணம் திகைத்தாள்.

ரொம்ப அகலமாக வெட்டியிருக்கவில்லை. ஆனாலும், தாண்ட முயன்று வழுக்கி விழுந்தால், அசிங்கம்.

சற்றே யோசித்தவள், சட்டென முகம் தெளிய, ஆழமற்ற வாய்க்காலில் இறங்கி நடக்கத் தொடங்கவும், ''பலே!'' என்று சிரித்தான் அவன்.

அவளும் சிரித்தபடியே, மீண்டும் வரப்பில் ஏறினாள்.

பலர் வயல்களில் வேலை செய்யத் தொடங்கியிருந்தார்கள். கிட்டத் தட்ட, வேலை செய்தவர்கள் எல்லோருமே, தனஞ்சயனுக்குத் தெரிந்தவர்களாகவே, இருந்தார்கள்.

இடையிடையே, வேலை செய்வோரில் யாரையாவது விளித்து, தனஞ்சயன் ஏதாவது பேசினான்.

பெரும்பாலும், அவர்களுடைய குடும்பத்தினர் பற்றிய குசல விசாரிப்பாக, அந்தப் பேச்சு இருந்தது. வசுந்தராவுக்கு, மேலும் வியப்பளித்தது. வேலை, கூலியோடு முடிந்து விடாமல், குடியானவர்களின் குடும்பம் பற்றியும், அறிந்து வைத்திருக்கிறானே!

தனஞ்சயன் விசாரிக்க, விசாரிக்க, அந்தக் குடியானவர்களின் முகம் மலர்வதையும், அவனோடு பேச விரும்பித் தானாகவே முன் வந்து, ஏதாவது சொல்வதையும் கண்ட போது, அவளுக்கு, மகிழ்ச்சியாகக் கூட, இருந்தது.

இந்த அளவு மனிதாபிமானம் இருப்பவன், ஒரு தந்தையின் தவிப்பைப் புரிந்து கொள்ள மாட்டானா?

ஆனால், இது மனிதாபிமானமாக இருந்தால் சரி, வேலையாட்களின் உழைப்புத் திறமையை ஊக்குவிப்பதற்காகச் சொல்வது என்றால்?

கிட்டத்தட்ட வரப்புகளைக் கடந்து, மறு புறத்து வண்டித் தடத்தை, அப்போது, அவர்கள் அணுகியிருந்தார்கள்.

கடந்து கொண்டிருந்த வயலில் நடந்த வேலையைக் கண்ணுற்றபடி, ''இவர்கள், விதையை விதைக்காமல், செடியை நடுகிறார்களே!'' என்று, தனஞ்சயனிடம் கேட்டாள், அவள்.

''செடி அல்ல. நாற்று'' என்றான் அவன்.

அவள், கேள்வியாக நோக்கவும், ''இதையெல்லாம் படித்ததே இல்லையா? நல்லவேளை! அரிசி காய்க்கிற மரம் எங்கே இருக்கிறது? என்று கேளாமல் விட்டாயே!'' என்று முதலில் கிண்டலடித்துவிட்டு, அவன் விளக்கினான். ''அவர்கள் நடுவது, நெல் நாற்று. விதை நெல்லை, நாற்றங்காலில் நெருக்கமாகத் தூவி விதைப்பார்கள். சரியாக இருபத்தியிரண்டு நாட்களில், விதை நெல் முளைத்து, இந்த அளவு வளர்ந்திருக்கும். அந்த நாற்றுகளை எடுத்து வந்து, ஏற்கனவே உரமிட்டு, உழுது, தயார் நிலையில் இருக்கும் வயல்களில், இப்படி உரிய இடைவெளி விட்டு, சீராக நடுவார்கள். இதை நடவு என்பார்கள்.''

''ஏன்?''

''ஏன் என்றால்?''

''இல்லை, நேராக அரிசியை.. இல்லையில்லை, நெல்லையே நேராக நட்டுவிட வேண்டியதுதானே? எதற்காக இப்படி இரட்டை வேலை?'' என்று மேலும் விளக்கம் கேட்டாள், வசுந்தரா.

வயல் வரப்பிலிருந்து, கவனத்துடன் வண்டிப் பாதையில் ஏறியவளை, ஒரு பார்வை பார்த்துவிட்டு, ''இப்படிச் செய்வதால் தான் மேனி நிறையக் காணும். அதாவது, நாற்று செழித்து வளர்ந்து, மகசூல் அதிகமாகக் கிடைக்கும்.'' என்றவனை விழி விரித்துப் பார்ததாள் அவள்.

''அதாவது, ஒரு செடியை, அது முளைத்த இடத்தி லிருந்து பிடுங்கி எடுத்து, வேறிடத்தில் நட்டால், செடி பட்டுப் போகாமல், செழித்து வளரும் என்கிறீர்கள் சரிதானே?'' என்று வசுந்தரா, நிதானமாகக் கேட்கவும், தனஞ்சயன், திரும்பி நின்ற அவளை நேராக நோக்கி னான்.

''உன் பேச்சு ஒரு மாதிரி பொடி வைத்துப் பேசுவது போல இருக்கிறதே'' என்று நேரடியாகவே கேட்டான்.

''பாம்பின் கால் பாம்பறியும்''

''மேலே சொல்லு'' என்றான் அவன் இறுகிய குரலில்.

அவன் பேச்சைக் கொண்டே அவனை மடக்கி விட்ட மகிழ்ச்சியில் அவள், இன்னும் சொன்னாள். ''தான் திருடன், பிறரை நம்பான்' என்றுகூட, ஒரு பழமொழி இருக்கிறது. அர்த்தமும் சொல்லட்டுமா? ஒரு தப்பு, செய்கிறவன், அதே தப்பை அடுத்தவர்களிடமும் எதிர்பார்ப்பானாம்!'' என்று முடித்தாள்.

''அதாவது, பொடி வைத்துப் பேசியதை ஒத்துக் கொள்ளுகிறாய்!'' என்றான் அவன்.

''நீங்கள் முதலில் பேசியது அப்படித்தான் என்றால், என் பேச்சையும் அதே போலவே, எடுத்துக் கொள்ள லாம்.''

''ஆகட்டும். நாம் வெளிப்படையாகவே பேசலாம். கருண், இங்கே அவனுடைய தாத்தா பாட்டியிடம்

வளர்வதுதான் சரி என்கிறேன், நான்'' என்றான் தனஞ்சயன், அழுத்தம் திருத்தமாக.

''இல்லை என்கிறேன் நான். கருண், அவனுடைய தந்தையான, என் சித்தப்பாவிடம் தான் வளர வேண்டும்'' என்றாள் வசுந்தரா, உறுதியான குரலில்.

சண்டைக் கோழிகள் போன்று இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

இருவரும், பார்வை தளராமல் நின்றது, பல நிமிஷங்களாகவும் இருக்கலாம், சில வினாடிக் காலமாகவும் இருக்கலாம்.

அயனான அந்த நேரத்தில் வண்டிச் சாலையில் வேகமாக வந்த சைக்கிள் ஒன்று, சட்டென நின்றது. ''உங்களைத் தேடித்தான் வந்துகிட்டிருந்தேன் சின்னய்யா, நாத்துக் கட்டு, ரெண்டு மரக்கால் விதைப்பாட்டுக்கு அவசரமா வேணும்யா, நீங்க சொன்னாத்தான் தருவேன்னிட்டாரு கணக்கு. ஒரு வார்த்தை சொல்லி அனுப்பினீங்கன்னா...'' என்று தலையைச் சொறிந்தான், சைக்கிளில் வந்தவன்.

''ம்..ம், நாற்று யாருக்கடா?'' என்று, தனஞ்சயன் கேட்க, ''நம்ம பூவிளைக்காரய்யாவுக்குங்க. அய்யா கிட்டேதான் நாத்து நல்லா இருக்குமின்னு வந்தேங்கய்யா,'' என்று குழைந்தான், வந்தவன்

நடவு வேலையை மேல் பார்த்துக் கொண்டிருந்தவனை அழைத்து சைக்கிளில் வந்தவனோடு கூடச் சென்று கணக்குப் பிள்ளையிடம், போய்வருமாறு கூறி

னான் தனஞ்சயன். ''சைக்கிளில், உடனே கூட்டி வந்து விட்டு விட்டு, அப்புறமாப் போய், நாற்றுக் கட்டை எடுத்துக் கொள். இங்கே, வேலை வீணாகி விடக் கூடாது'' என்று சொல்லியனுப்பிவிட்டு வசுந்தராவிடம் திரும்பிப் ''போகலாமா?'' என்றான்.

''வரப்பில் குறுக்கும் நெடுக்குமாக வந்ததில், கொஞ்சம் குழம்பி விட்டது. எது வழி என்று மட்டும் சொன்னீர்கள் என்றால், நானே போய்க் கொள்வேன். நீங்கள் வீணாக, உடன் வர வேண்டியிராது.'' என்றாள் வசுந்தரா, எங்கோ பார்த்தபடி.

''வீணாக, என்ன? நானும்தான் டாக்டரைப் பார்க்க வேண்டியிருக்கிறது. என்றேனே.''

''அதுவும்தான் எதற்காக?''

''அவருக்கும் எனக்கும் இடையே, எத்தனையோ இருக்கும், ஏன் டிஸ்பென்சரிக்கு, மருந்து வாங்குவது பற்றிக் கூடத்தான் பேச வேண்டும்.''

''அதுவும்தான், 'எதற்காக' என்றேன். எப்படியும் சித்தப்பா மகனைக் கேட்கப் போகிறார். நீங்கள், மருந்தும் கிருந்தும் வாங்கிக் கொடுத்து, ஒரு பயனும் இல்லை.'' என்று வசுந்தரா விளக்கினாள்.

அவளை ஒரு மாதிரிப் பார்த்துவிட்டு, ''மனிதர்களிடம் நல்லதை எதிர்பார்க்க, அவரவரிடமும் கொஞ்சமாவது நல்லது இருக்க வேண்டும் என்பது மெய்தானோ என்று தோன்றுகிறது. சற்று முன், சொன்னாயே, 'தான் திருடன், பிறரை நம்பான்' என்றாயே. அதுபோல, நீயும்

என்னைத் தவறாக எண்ணிவிட்டாய் போல. எங்கள் வீட்டில் தருமத்துக்கு, எவ்வளவோ செலவு செய்வார் கள். இந்த மருந்து வாங்கிக் கொடுப்பதை, நான் ஒரு தர்ம காரியமாகத்தான் செய்கிறேன் என்றால், உன்னால் புரிந்து கொள்ள முடியுமா என்பதே எனக்கு இப்போது சந்தேகமாக இருக்கிறது.'' என்ற அவன் வரண்ட குரலில் கூறவும், வசுந்தராவின் தலை தாழ்ந்து விட்டது.

''சாரி! என்றாள் சன்னக் குரலில், அவள். ''கருண் விஷயத்தில் நீங்கள் மிகவும் தீவிரமாக இருப்பதாகச் சித்தப்பா ரொம்பவும் சொன்னாரா, உங்கள் சொல், செயல் எல்லாவற்றையுமே, அதனுடன் சம்பந்தப்படுத் தியே நினைக்கத் தொடங்கிவிட்டேன். அதற்காக, என்ன செலவு வேண்டுமானாலும் செய்வீர்கள் என்று...''

மேலே பேச மாட்டாமல், தொண்டை அடைக்கவும் வசுந்தரா பேச்சை நிறுத்தி விட்டாள்.

இவனது கோபம், இவ்வளவு தூரம் அவளைப் பாதிக்கக் கூடுமா? அல்லது வீட்டை விட்டுப் பிரிந்திருப் பது, அந்தத் தனிமை, அவளை அறியாமலே, அவளைப் பாதிக்கிறதா?

சட்டென அவன்முகம் இளகியது. ''சரி, விடு. நாம் இருவரும் இன்றுதானே சந்தித்திருக்கிறோம். அதற்குள், என்னைப் பற்றி, உனக்கு என்ன தெரிந்து விடமுடியும்? ஆனால், பரவாயில்லை, எதையும் மனதில் வைத்து வளர்த்து கடுகை மலையாக்காமல் பட்டென்று போட்டு உடைத்தாயே, அதுவே பெரிது.'' என்று, சமாதானமாகப் பேசினான். தொடர்ந்து, ''ஆனால், நீ சொன்னதில் ஒன்று

சரியான கணிப்புதான். கருணுக்காக, நான் எவ்வளவு செலவு செய்யவும் தயார்தான். அவனை என் சித்தப்பா வோடு இருக்கச் செய்வதற்காகப் பணம் செலவு செய்ய நேர்ந்தால், அது எவ்வளவு என்று, கணக்கே பார்க்க மாட்டேன் செய்வேன்.'' என்றான் உறுதியாக, ஆனால் கனிந்த குரலில்.

சற்று யோசித்து, ''நான் தப்பாகச் சொன்னால், திருத்துங்கள். நீங்கள், இப்போது கோர்ட் செலவு பற்றிக் கூட மிரட்டவில்லையே?'' என்று, வசுந்தரா விசாரித் தாள்.

''மிரட்ட' என்று எண்ணிச் சொல்லவில்லை. ஆனால், கோர்ட் வரை சென்றால், அந்தச் செலவை நான் ஒரு பொருட்டாகக் கருதப் போவது இல்லை என்பதும், அந்த பேச்சுக்குள் அடக்கம்தான்.''

இது மிரட்டலில்லாமல் என்னவாம்?

அவன் மிரட்டும் நோக்கம் இன்றி, யதார்த்தமாகவே சொல்லியிருக்கக் கூடும்.

ஆனால், மிரள வைப்பதாகத்தானே இருக்கிறது?

அத்தோடு, யதார்த்தமாக, இன்னொன்னும் சொல்ல லாமே!

''கோர்ட்டுக்குப் போனால், உங்கள் பக்கம்தான் பலவீனமானது. அப்பா, பிள்ளைக்கு அடுத்ததுதான், மற்ற எந்த உறவானாலும்'' என்றாள் அவள். ''இதை, நானும் மிரட்டுவதற்காகச் சொல்லவில்லை. இதுதான் உண்மை என்பதால் சொன்னேன்.''

''அதனால்தான், கோர்ட்டுக்குப் போகாமல். விஷயத்தை நான் சுமூகமாகவே முடிக்க விரும்புகிறேன். அத்தோடு, கோர்ட் என்று போனால், எத்தனை ஆண்டுகள், வழக்கை இழுத்தடிக்கலாம், தெரியுமா? அதெல்லாம், கருணுக்கு நல்லதா?

''இதுகூட மிரட்டல் இல்லையாக்கும்?''

''ஊகூம், இயல்பான நடப்பு. யதார்த்தம். அத்தோடு முதலில் கோர்ட் பேச்சை எடுத்தது, நானில்லை, நீதான்.'' என்று குற்றத்தை அவள் பேரிலேயே திருப்பினான், தனஞ்சயன்.

கேசவனின் வீடு கண்ணுக்குத் தெரிகையில் யோசனையில் மூழ்கினாற்போல, இருவரிடமும் பேச்சு குறைந்து, நின்று போயிற்று.

பணம் பத்தும் செய்யும். நீதிபதியை விலைக்கு வாங்குகிற, அல்லது மிரட்டுகிற அளவுக்கு அயோக்கியர்களாகத் தெரியவில்லை என்றாலும், வாய்தா, வாய்தா என்று, இழுத்தடிக்கலாமே. அவன் சொன்னதுபோல ஆண்டுக் கணக்கில் வழக்கு நடந்தால், சித்தப்பாவால், செலவு தாங்க முடியுமா!

அவர் அப்படியொன்றும், இந்த மருத்துவத் தொழிலில், சம்பாதித்துச் சேர்த்து வைத்த மாதிரித் தெரியவில்லையே!

அதைவிடவும், இவ்வளவு சின்னப் பையன், கருணின் மனம் என்ன பாடுபடும்? வழக்கு நடக்கும்போது, அவன் எங்கே இருப்பான்? என்ன செய்வான்?

அத்தோடு, வழக்கு என்று ஒன்று நடந்தால், தந்தை அல்லது தாத்தாபாட்டி ஆகிய இரு உறவுகளில், ஒன்று அடியோடு கெட்டுப் போய்விடும்.

இதையெல்லாம் யோசிக்கும்போது கருண் விஷயத்தில், அவளது நிலை பற்றி, இந்தத் தனஞ்சயனிடமே பேசி, அவன் மனதையும் அவன் மூலமாக, அவனுடைய சித்தப்பா, சித்தி மனதையும் மாற்றுவதுதான் நல்லது.

நல்லவேளையாக, இவன் முசுடு அல்ல. கொஞ்சம் நியாயம் பார்க்கிறவனாகவும் தெரிகிறது. எனவே, இவனிடம் பேசிப் பார்க்கலாம்.

வசுந்தரா முடிவெடுத்து, எடுத்த முடிவைத் தனஞ்சயனிடம் தெரிவிக்க எண்ணித் திரும்புகையில், அவனே, 'ஒரு நிமிஷம். கருண் விஷயம் பற்றி, இப்போதைக்கு, டாக்டரிடம் எதுவும் சொல்ல வேண்டாம். நாம் இருவரும், அது பற்றி விவரமாகப் பேசி முடித்த பிறகு தெரிவித்துக் கொள்ளலாம்.'' என்று கூறவும் அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

## (10)

என்ன இது?

அவனிடம் சொல்ல வேண்டும் என்று, அவள் மனதில் நினைத்த, அதே வார்த்தைகள்.

அவள் சொல்ல நினைத்ததையே, அவனும் சொல்வது என்றால், 'மைண்ட்ரீடிங்' என்பார்களே, அது

போலத் தனஞ்சயன் அடுத்தவர் மனதை அறியப் பயின்ற வனா? அல்லது, அவளைப் போலவே, அவனும் யோசித்தானா? அவளை மாற்றி அவள் மூலம், அவளு டைய சித்தப்பா மனதை மாற்றுவது என்று...

பின்னதாக இருந்தால், அப்படித்தான் இருக்க வேண்டும். மற்றபடி, அவள் மனதை அறிவதற்கு, அவன், அவள் முகத்தைக் கவனித்துப் பார்ப்பதற்குக் கூட வழியில்லாமல், இருவரும் நடந்து கொண்டே அல்லவா இருந்தார்கள். எனவே, அவளைப் போலவே, தனஞ்சயனும் யோசித்திருக்கிறான் என்பதுதான் உண்மை.

பிரச்சினையைப் பொறுத்த வரையில், நேர் எதிராக நின்றாலும், அதை, அணுகும் முறை பற்றி இருவருமே, ஒரே மாதிரி யோசித்திருக்கிறார்கள் என்பது, வசுந்தரா வுக்கு ஏனோ மனதுக்கு இதமாக இருந்தது.

தனஞ்சயனும், வசுந்தராவும், வீட்டினுள் சென்ற போது, கேசவன் வெளியே செல்லத் தயாராக இருந்தார்.

''அய்யா, சின்னம்மா வந்துட்டாங்கய்யா என்று, பரமன் மகிழ்ச்சியோடு அறிவித்தான். ''தேடிக் கிட்டு வரலாமின்னு இருந்தேங்கம்மா.'' என்றான், வசுந்தராவி டம்.

பல்லெல்லாம் காட்டி, தனஞ்சயனுக்கும் வரவேற்பு நடந்தது.

''வராமல், எங்கேடா போக முடியும்? இதென்ன, பயங்கரவாதிகள் சுற்றுகிற இடமா? அல்லது காட்டு

மிருகங்கள் அலையும் காடா? வழி தவறினால் கூட விசாரித்து வந்து விட மாட்டாயா? உன்னைக் காணோம், காணோம் என்று, இருவருமாக என் காதைத் துளைத்து விட்டார்கள். போம்மா, போய்க் குளித்துவிட்டுச் சாப்பிடு'' என்று, கேசவன் சர்வ சாதாரணமாகக் கூறிய போது வசுந்தராவுக்குக் கொஞ்சம் ஒரு மாதிரி இருந்தது.

சித்தப்பா, இன்னும் கொஞ்சம், அக்கறை காட்டியி ருக்கலாமோ? எந்த வித ரத்தத் தொடர்பும் இல்லாத ஒருவன், வீடுவரை துணையாக வரும்போது, சொந்தச் சித்தப்பா, அவளைப் பற்றிச் சற்றேனும் கவலைப்பட்டி ருக்க வேண்டாமா? துணை வந்தவன் என்ன நினைப் பான்?

நல்லவேளையாகக் கேசவனின் பேச்சை, அவன் கவனிக்க முடியாமல், 'இருந்து பலகாரம் பண்ணி விட் டுப் போகுமாறு, பரமன் தம்பதியர், அவனை வற்புறுத் திக் கொண்டிருந்தனர்.

இந்த உபசாரம், சித்தப்பாதான் செய்திருக்க வேண் டும்.

மனதைக் காட்டிக் கொள்ளாமல், ''மிஸ்டர் தனஞ் செயன், எனக்குத் துணையாக வந்தார், சித்தப்பா'' என்றாள்.

''யார், தனாதானே? பார்த்தேன். எனக்கு மருந்து 'லிஸ்ட்' எழுதி வைத்திருக்கிறேன், தனா. இந்தா, இதில் கடைசியாக இருப்பது சற்று விலை உயர்ந்த ரகம். மந்திரம் மருமகளுக்குக் கடைசி முயற்சியாக, இதைக்

கொடுத்துப் பார்க்கலாம் என்று இருக்கிறேன். இங்கே, கிடைப்பது கஷ்டம். உடனே வேண்டியது என்று இல்லை. எப்படியாவது, திருநெல்வேலி சென்றாவது வாங்கி வந்து விடுகிறாயா?'' என்று தனஞ்சயனிடம், அவர் கேட்கவும் வசுந்தரா திகைத்தாள்.

ஆனால், உடனேயே, ''தனா, இந்த மருந்துகளுக்கு ஆகிற செலவை, நீ என்னிடம் கேட்டு வாங்கிக் கொண்டால், எனக்குக் கொஞ்சம் நன்றாக இருக்கும்பா. இந்த மாதிரி விலையுயர்ந்த மருந்துகளைச் சொல்ல, யோசிக்க வேண்டியிருக்காது.'' என்று கூறவும் அவள் மனம் தெளிந்தது.

தயங்கித்தான் சொல்லியிருக்கிறார்.

இந்தத் தயக்கத்தின் காரணமே, அவள்தானோ என்று எண்ணுவதுபோல, வசுந்தராவை ஒரு பார்வை பார்த்துவிட்டு, ''பாதிப் பேருக்கு, நீங்கள் இலவச வைத்தியம்தானே, அத்தான், செய்கிறீர்கள்? மருந்தாவது, என் உபயமாக இருக்கட்டும். ஒரு வேளை புண்ணியத்தில் பங்கு கொடுக்க வேண்டியதாகி விடுமோ என்று, பயமாக இருக்கிறதா? என்று, சிறு கேலிபோலத் தனஞ்சயன் கூறினான்.

ஒரு சங்கடமான அமைதியின் பின், ''சரி, உன்னிஷ்டம். ஆனால், கொஞ்சத்துக்குக் கொஞ்சமாவது வாங்கிக் கொண்டாய் என்றால், எனக்குக் கொஞ்சம், மனதுக்கு அமைதியாக இருக்கும். இப்போது, ஏதோ, கடன்பட்ட உணர்வு உறுத்திக் கொண்டே, இருக்கிறது.'' என்றார் கேசவன்.

இதைவிட வெளிப்படையாக, விஷயத்தைச் சொல்ல முடியாது.

இந்தச் செலவுகள் எல்லாம், என் மகனுக்காக கொடுக்கப்படும் விலையா, வேண்டாமே என்று, ஒரு தந்தையாய் சித்தப்பா, தவிப்பாய்த் தவிப்பது புரிய, வசுந்தராவின் விழிகளில், நீர் திரையிட்டது.

இது, தனஞ்சனுக்கும் புரியத்தானே, செய்யும்? அணுவளவேனும் உறுத்தாதா?

ஆனால், தனஞ்சயன் பேசியபோது, எந்த உறுத்தலும் அவனுக்கு இருந்ததாகவே தோன்றவில்லை. எனக்காக, நீங்கள் என்னென்னவோ செய்ய மாட்டீர்களா? ஒன்றும் இல்லாததற்கெல்லாம், மனதைப் போட்டு, உழப்பிக் கொண்டு இராதீர்கள், அத்தான். இந்தப் பேச்சையும், இத்தோடு, விடுங்கள். முதலில் லிஸ்டை, என்னிடம் கொடுங்கள்.'' என்றான் தனஞ்சயன்.

பேச்சில், இவன் கெட்டிக்காரன்தான். நடிப்பிலும், சித்தப்பாவின் தவிப்பை அறிந்தும், அறியாதவன் போல, எவ்வளவு ஜாலக்காகப் பேசுகிறான்.

அவன் கேட்டால், சித்தப்பா, அவனுக்காகச் செய்வாராம். அதாவது, செய்தாக வேண்டும். ஆனால், அவர் செய்ய வேண்டியது என்ன என்று, சிறு குறிப்புக் கூடக் கொடுக்கவில்லை. அப்படி, அவன் எதையும் கேட்கப் போவது இல்லை என்பது போலப் பாவனை.

அத்தான், அத்தான் என்று, அது வேறு, மகா உருக்கம்.

இருக்கட்டும். இதனால் எல்லாம், சித்தப்பாவைத் தான், ஏமாற்ற முடியும். இந்த வசுந்தராவை அல்ல.

ஏற்கனவே, எழுதி வைத்திருந்த மருந்துப் பட்டிய லைத் தனஞ்சயனிடம் கொடுத்து விட்டு, ''இருந்து சாப்பிட்டு விட்டுப் போப்பா. நீ சாப்பிடாமல், போய்விட் டால் முத்துமாரி மனம் உடைந்து போவாள் அத்தோடு,' என்று, குரலைத் தணித்து, ''நன்றாயிருக்கிறது என்றும், ஒரு வார்த்தை சொல்லு. பிறவிப் பயன் பெற்றது போல, அக மகிழ்ந்து போவாள்.'' என்றார்.

தனஞ்செயன் முறுவலிக்கவும், ''ஊகூம். சிரித்து மழுப்பிவிட்டுக் கிளம்பி விடாதே. இன்றைக்கு வசுவுக்கா கச் சிறப்புச் சமையல் வேறு. வசும்மா, சாப்பிடாமல் இவனை விட்டுவிடாதே. இவன் உன் சித்தியுடைய தம்பி. உனக்கு... உனக்கு..'' என்று அவர் தடுமாற, ''மாமாங்கய்யா, முறைக்காரரு.'' என்று சிரி.த்தாள், முத்துமாரி.

''உறவுமுறை விஷயமெல்லாம், முத்துமாரிக்குத் தான் அத்துப்படி. அவளிடமே கேட்டுக் கொள். இப் போது எனக்கு நேரமாகிவிட்டது. அடடா! ஒன்பதுக்கே வருவதாக, வெற்றியிடம் சொல்லியிருந்தேனே. மேலே, பத்து நிமிஷம் ஆகிவிட்டதே!'' என்றவர், அதற்கு மேல், யாரிடமும், எதுவும் பேசாமல், கைப்பெட்டியை எடுத் துக் கொண்டு கிளம்பிவிட்டார்.

என்னவோ, எல்லாவற்றையும் அரைகுறையாக, சிறிய தந்தை, இடையில் விட்டுவிட்டுச் சென்ற மாதிரி ஓர் உணர்வு வசுந்தராவுக்கு.

ஆனால், அவரது குணம் அங்கிருந்த மற்ற எல்லோருக்கும் பழக்கம்போல, அவரவர் வேலையை அவரவர் பார்த்தனர்.

''பலகாரம் எடுத்து வைக்கிறேன், கையைக்கழுவிக் கிட்டு வாங்கய்யா. அம்மா, நீங்களும் சாப்பிடுறீங்களா?'' என்று கேட்டாள், முத்துமாரி.

''தண்ணி, எடுத்தாரனுங்கய்யா.'' என்று, ஓடினான், பரமன்

''இன்று, என்ன ஸ்பெஷல், முத்து?'' என்று, வினவினான், தனஞ்சயன்.

''குழிப் பணியாரமுங்க, சின்னய்யா. இட்லிக்கும், சென்னாப் பொடி போட்டு, மிளகாப் பொடி இடிச்சிருக்கேன். அதுவும், அய்யாவுக்குப் பிடித்தம்தானுங்களே! என்று, பல ஆண்டு பழகிய, பழைய தலைமுறை வேலைக்காரி கூறினாள்.

லேசாகத் தலையசைத்து, ''கொஞ்சமாக எடுத்து வை. வீட்டில் அம்மாவும் எதையாவது வைத்துக் கொண்டு காத்திருப்பார்கள்.'' என்று கை கழுவச் சென்றான் தனஞ்சயன்.

உண்ண அமர்ந்தவன், வசுந்தராவின் முன்னே தட்டு இல்லாதிருக்கக் கண்டு, ''நீ சாப்பிடவில்லை? இவ்வளவு நேரத்துக்கு, உனக்குப் பசித்திருக்குமே. கிராமத்துக் காற்று வேறு, இந்தக் குழிப் பணியாரம், சூடாகச் சாப்பிட நன்றாக இருக்கும். நீயும், சாப்பிடு'' என்று, உடையவன் போல, உபசாரம் செய்தான்.

யார் வீட்டில் யார், யாரை உபசரிப்பது, என்று எண்ணிய போதே, அந்த அளவுக்கு, இவன் இங்கே, அடிக்கடி வருகிறவன் என்று உணர்ந்தாள்.

சித்தப்பா, என்ன என்ன செய்கிறார் என்று கண்கா ணிக்கவா?

சொடக்குப் போட்டு, ''ஹல்லோ, சாப்பிட வருகி றாயா, என்று கேட்டேன்.'' என்றான் அவன்.

''இல்லை, வியர்வைக் கசகசப்பு மாற, நன்றாகக் குளித்துவிட்டுத்தான் உணவு'' என்றவள் தலை சரித்து நோக்கி, ''ஆமாம், நேரில், அத்தான், அத்தான் என்று குழைகிறீர்கள், ஆனால், வெளியே, 'டாக்டர்' என்று குறிப்பிடுகிறீர்களே! என்றாள், கேள்விக் குரலில்.

''எனக்கு உன் சித்தப்பா, அத்தான்தான். ஆனால், வெளியே எங்கள் உறவு முறை அறியாதவர்களும், இருக்கக் கூடும். அவர்கள், டாக்டர், என்றால், உடனே புரிந்து கொள்வார்கள், இல்லையா?''

அவனது விளக்கம் சரியாகத்தான் தோன்றியது.

அக்காவுடைய கணவன் என்றால், நெருங்கிய உறவுதான். ஆயினும், அந்த அக்கா, உடன் பிறந்த தமக்கையில்லை எனும்போது, சொந்த அண்ணன் மகளை விடவும், நெருங்கிய உறவு என்று சொல்ல முடியாதல்லவா? எனவே, வீட்டு மனுஷியாக, உபசாரம் செய்யும் உரிமையும் அவளுக்குத்தானே உரியது?

கொஞ்சம் அசட்டுத் தனமாக யோசிக்கிறோம் என்று, அவளுக்குப் புரியாமல் இல்லை. என்னதான்

அண்ணன் மகள் என்றாலும், கடந்த பத்துப் பன்னி ரெண்டு ஆண்டுகளாக, இந்தத் தனஞ்சயன் அளவுக்கு வசுந்தரா கேசவனைப் பார்த்துப் பழகியதில்லை. எனவே, அவன் டாக்டர் வீட்டில் அதிக உரிமையோடு பழகுவதிலும், தப்பு சொல்ல முடியாதுதான்.

ஆனாலும், என்னவோ, தனஞ்சயனோடு போட்டி போடுவது, அவளுக்குத் தனி உற்சாகத்தை அளித்தது. அவனை வெல்லவேண்டும், கொஞ்சம் கூட அவனுக்கு விட்டுக் கொடுக்கக் கூடாது என்றெல்லாம், வேகம் வந்தது.

இதன் காரண காரியங்களை ஆராய்ந்து கொண்டி ருக்க, அவளுக்கு விருப்பமில்லை.

இப்போதைக்கு அவனோடு மல்லுக் கட்டுவது, பெரிய சாதனை போல, அவளுக்கு நன்றாக இருந்தது. அதில், தப்பு எதுவும் இருப்பதாகவும் தெரியவில்லை. சித்தப்பாவுக்காகத் தனஞ்சயனை வெல்வது, அவசிய மும் தானே?

எனவே, அந்த வீட்டுப் பெண்ணாய், உரிமை யோடு, தனஞ்சயனுக்கு விருந்துபசாரம் செய்யத் தொடங்கினாள்.

''போதும், இத்தோடு நிச்சயமாகப் போதும்.'' என்று அவன் பிடிவாதமாக மறுத்துவிட்டு எழுந்தபோது, ''இன்று மாலையில், கருணை, இங்கே, இவன் தகப்பனா ரைப் பார்க்க அழைத்து வரப் போகிறேன்.'' என்று அவனிடம் அறிவித்தாள்.

''நிலைக்க முடியாத பழக்கம். அனாவசியமாகத் தொடங்கி, பிள்ளை மனதை அலைக்கழிப்பானேன்? அத்தோடு, நாம் இருவரும் இது பற்றிப் பேசி முடிவு செய்யலாம் என்று திட்டமிட்டோமே.'' என்று, நினை வூட்டினான் தனஞ்சயன்.

''நன்றாக நினைவிருக்கிறது. அதன் முதல் கட்ட மாக, நீங்களும், என்னோடு, உங்கள் சித்தப்பா வீட்டுக்கு வாருங்களேன். பிறகு நான், ஒரு வார்த்தை சொல்லாமல், நீங்களாகவே, என் பக்கம் வருவீர்கள் என்று அதுபோல, நீங்களும் மனதில் நினைப்பதைச் சொல்ல வேண்டியது தானே?'' என்று, வசுந்தரா வற்புறுத்தவும், கண்ணில் சிரிப்புடன் அவன் மீண்டும் தலையசைத்தான்.

அவள் அலுப்புடன் 'உச்'சுக் கொட்டவும், ''சொல்கி றேன், வசு. கட்டாயம் சொல்கிறேன். உன்னிடம் சொல் லாமல், வேறு யாரிடம் சொல்லப் போகிறேன்? ஆனால், இப்போதல்ல, கொஞ்ச நாள் கழித்துச் சொல்லுகிறேன்.'' என்றான் தனஞ்சயன்.

''ஏன்? இப்போதே சொன்னால் என்ன? பூதம் பிடித்துக் கொள்ளுமா?''

மீண்டும், அவனது கண்கள், ரகசியச் சிரிப்பில் மலர்ந்தன. ''இப்போது சொன்னால், நீ அடிக்க வந்தா லும் வருவாய்.'' என்றுரைத்து, அவன் வாய்விட்டுச் சிரிக்க, அவளுக்கும் சிரிப்பு வந்தது.

சிரிப்பினூடே, அவன், முத்துமாரியை அழைத்து, குழிப்பணியாரம் மிக ருசியென்று பாராட்ட, அவள்

மகிழ்ச்சியில் பூரித்து, வாய் குழற, குழிப்பணியாரம் செய்யும் முறையை விளக்க, இருவருக்கும், இன்னமும் சிரிப்பு பீறிட, சிரித்து முடித்து விட்டு, மாலையில் தன் சித்தப்பா வீட்டுக்கு அழைத்துப் போக வருவதாகக் கூறி தனஞ்சயன் விடை பெற்றுச் சென்றான்.

அவன் சென்றபின், சுகமான குளியலில் ஈடுபட்டிருந்த போதுதான், தன் வியப்பின் காரணத்தைத் தனஞ்சயன் சொல்லவே இல்லை என்பது வசுந்தராவுக்கு நினைவு வந்தது.

அதுமட்டுமல்ல.

அவன் அவளை 'வசு' என்று அழைத்ததும் கூட.

நெருங்கிய உறவினர் போல, அவள் பெயரைச் சுருக்கி அழைக்கும் உரிமையை அவனுக்கு யார் கொடுத்தது.

யார் கொடுத்தாலும், யாரும் கொடுக்காமல் அவனாகவே எடுத்துக் கொண்டாலும், அவன், அப்படி 'வசு' என்று அழைத்தது அவளுக்குச் சுகமாய்த்தான் இருந்தது.

## 11

அன்று மாலையில், சித்தி செல்வியுடைய தந்தையும், தனஞ்சயனுடைய ஒன்றுவிட்ட சித்தப்பாவுமான, சின்னப்பண்ணையார் வீட்டுக்குத் தனஞ்சயனோடு செல்வது பற்றி, மதிய உணவின்போது, தன் சித்தப்பாவிடம் வசுந்தரா, கூறினாள்.

''நேற்றுப் போனபோதே, கொஞ்சம் பயமும், கவலையுமாகப் பார்த்தார்கள். கருணனைப் பார்க்க வேண்டும் என்று, அழுத்திச் சொன்னதில், சங்கடப்பட்டுக் கொண்டேதான், அனுமதித்தார்கள். இன்று, இங்கேயே அழைத்து வரலாம் என்று இருக்கிறேன். என்ன சொல்லப் போகிறார்களோ?'' என்றாள்.

சட்டென முகம் மலர, ''இங்கே, நம் வீட்டுக்கா?'' என்று, ஆர்வத்தோடு கேட்டார் அவர். உடனே யோசனையோடு, ''மாமா, அதுதான், செல்வியுடைய அப்பா, முடியாது என்று, அடித்துப் பேச மாட்டார். அவள் அம்மாவும், வழவழ, கொழகொழ வென்று, தள்ளிப் போடத்தான் முயற்சிப்பார்கள். இருவருக்கும் மாப்பிள்ளை என்கிற மரியாதை உள்ளூர உண்டு. ஆனால், தனாவும் கூட வருகிறான் என்கிறாயே, அதுதான் உதைக்கிறது.'' என்றார் அவர்.

''என்ன சித்தப்பா, நேரில் பார்த்தால், வாப்பா, போப்பா, சாப்பிடுப்பா என்று பிரியமாகப் பேசுகிறீர்கள், இல்லாதபோது, பொல்லாத வில்லனாகச் சித்தரிக்கிறீர்களே!'' என்று ஆட்சேபித்தாள், பெண்.

''பிரியம்தான். எப்போதுமே, பிரியம்தான். செல்வியிடம் இவனுக்கு, உயிர். அவள் இருக்கும்போது இவனும் முருகனும் இங்கேயேதான் கிடப்பார்கள். இப்போதும் என்னைப் பொறுத்தவரை, பிரியமாகத்தான் இருப்பான். ஆனால், கருண் விஷயத்தில் மட்டும் முழு வித்தியாசம். அவன், என் பக்கம் சாய்ந்து விடக் கூடாது என்பதில், ஏதோ ஒரே பிடியாக இருக்கிறான்.'' என்றார் கேசவன்.

''ஏன் என்று கேட்டீர்களா?''

''நேரடியாகக் கேட்கவில்லை. அவனிடம் அந்தப் பேச்சு எடுக்கவே, முடிவதில்லை. தனாவைப் பொறுத்த வரையில், அவனாக விரும்பாதபடி, எதையும் சொல்ல வைப்பது கடினம்.'' என்றார் அவர்.

என்னிடம் அதெல்லாம் நடவாது, என்று எண்ணும் போதே, காலையில் அவன் மழுப்பிவிட்டுப் போனது, வசுந்தராவுக்கு நினைவு வந்தது.

ஆனால், அடியோடு சொல்லமாட்டேன் என்று, அவன் சொல்லவில்லையே. கொஞ்ச நாள் கழித்துச் சொல்லுவதாக, அவனே ஒத்துக் கொண்டிருக்கிறானே. பார்க்கலாம்.

மீண்டும், கேசவன் 'கிளினிக்'குக்குக் கிளம்புமுன், கருணுடைய பாட்டியின் கால் வலிக்கு அவரிடம் விவரம் சொல்லி, மருந்து வாங்கி வைத்துக் கொண்டாள்.

''எப்படியும், குட்டிப் பையனைக் கூட்டி வருவேன் சித்தப்பா.'' என்று, கூறியனுப்பினாள்.

மாலையில், அவளைக் கூட்டிப் போகத் தனஞ்சயன், காரில் வந்திருந்தான்.

வியப்புடன் நோக்கியவளிடம், ''என்ன, இந்தப் பட்டிக்காட்டானிடம், கார் வேறு இருக்கிறதா என்று பட்டணத்தம்மாளுக்குத் தோன்றுகிறதாக்கும்!'' என்றான் கேலியாக.

திகைப்பை முகத்தில் காட்டியிருக்கக் கூடாது என்று, தன்னைத்தானே, கண்டித்துக் கொண்டவள்,

''நான் அப்படி எதுவும் சொன்னேனா? உடல் பயிற்சி மாதிரி நடந்து போகிற தூரம்தானே, இதற்குக் காரைக் கொணர்ந்திருக்கிறீர்களே, என்று நினைத்தேன்.'' என் றாள் அவனிடம்.

''நீயும் நானும் நடந்துவிடலாம். ஆனால், கருண்? அவனை, இங்கே கூட்டி வரப் போவதாகச் சொன் னாயே, அதற்குள் மறந்துவிட்டதா? அல்லது கூட்டி வரும் எண்ணமே இல்லாமல், சும்மா சென்னதா?'' என்று அவன் கேட்கவும், வசுந்தரா மீண்டும் திகைத்தாள்.

இவன்தான் முக்கியத் தடையாக இருப்பான் என்று எண்ணினால், உதவவே முன்வருகிறானே!

''நேற்று மாதிரி அவர்கள் ஏதோ ஒரு வண்டி பூட்டி அனுப்புவார்கள் என்று நினைத்தேன்.'' என்று, மறுபடி யும் ஒருவாறு சமாளித்தாள்.

''அதன் பெயர், வில்வண்டி. சாலையின் மேடு பள்ளங்கள் அதிகம் பாதிக்காமல் இருப்பதற்காக, அதில் 'ஸ்ப்ரிங்' நிறையப் பயன்படுத்தியிருப்பார்கள். வீட்டினர் செல்வதற்காக என்றே தயாரிக்கப்படும் வண்டி'' என்று விளக்கம் கொடுத்தான், அவன்.

முத்துமாரியிடம் சொல்லிவிட்டுக் காரில் ஏறி, ''உங் கள் சித்தப்பா வீட்டில் கார் இல்லையா?'' என்று கேட்ட படி, கார் கதவைச் சாத்தினாள், வசுந்தரா.

சும்மா, உரையாட ஒரு விஷயம் என்றுதான், அவள் தொடங்கியது. ஆனால், ''இருந்தது. செல்வி

யக்கா கருவுற்றதும், அவள் பயன்படுத்துவதற்காக என்றே, வாங்கினார்கள். ஆனால், அப்புறம் அவளைக் கொண்டு வந்தது. அதே வண்டியில்தான். அதற்குப் பிறகு, வைத்திருக்க மனமில்லாமல், காரை விற்று விட்டார்கள்.'' என்று, தனஞ்சயன் ஓர் உணர்வு வறண்ட குரலில் விவரம் கூறவும், அவளுக்கு, ஏன் கேட்டோம் என்று ஆகிவிட்டது.

இது, வெறும் மாண்டுவிட்ட மகள் மேலுள்ள பாசத்தின் கதை மட்டுமல்ல. அந்த மகள் விட்டுச் சென்ற தளிரின் மீது, அந்தப் பெற்றோருக்கு இருக்கும் பிரியத்தின் அளவையும், அதற்கு அளிக்க வேண்டிய மதிப்பையும் கூட., எடுத்துச் சொல்வது.

மதிக்க முடியாதது என்பது மனிதத் தன்மையே ஆகாது.

உதட்டைக் கடித்துக் கொண்டு, அவள் பேசாதிருக்க, சற்று நேரம் அங்கே, மௌனம் நிலவியது.

ஓரிரு நிமிடங்களுக்குள் மனமிரங்கினாற்போலத் தனஞ்சயனே பேசத் தொடங்கினான். ''இடப்புறமாகத் தூரத்தில் பார் வசுந்தரா, உயரத்தில் புகை வருவது தெரிகிறதா? என்று காட்டினான்.

கூர்ந்து பார்த்துவிட்டு, ''ம் தெரிகிறதே. ஏதோ தொழிற்சாலை. தொழிற்சாலையா? அங்கே, என்ன செய்கிறார்கள்?'' என்று ஆவலாக விசாரித்தாள் வசுந்தரா. வேறு பேச்சுப் பேச வாய்ப்புக் கிடைத்ததே அவளுக்குப் பெரியதாக இருந்தது.

''கரும்பாலை. நம்முடையதுதான். சாதாரண ஆலைகளைவிடச் சற்றுப் பெரியது. அச்சு வெல்லம், கல்கண்டு எல்லாம் செய்கிறோம். கரும்புச் சாகுபடியை அதிகப் படுத்திக் கொண்டு, ஒரு சர்க்கரை ஆலை வைக்கத் திட்டம் இருக்கிறது. சர்க்காருக்கு, ஏற்கனவே, மனுப் போட்டுவிட்டேன்'' என்றான் தனஞ்சயன்.

ஓர் இறுக்கமான சூழ்நிலையை மாற்றவென்று தொடங்கி, அவன் சொன்ன விவரங்களின் விளைவை, அவன் அப்போது அறிந்திருந்தால், இது பற்றி அவன் வாயைத் திறந்திருக்கவே மாட்டான்.

ஆனால், வருங்காலம் பற்றி அறிந்திருக்க வாய்ப் பில்லாததால், சர்க்கரை ஆலைக்குத் தேவையான நிலம், கரும்பு, தொழிலாளர்கள், முதலீடு போன்றவை குறித்து, விலாவாரியாகப் பேசியவாறே, இருவரும், தனஞ்சயனு டைய சிறிய தந்தை தாமோதரனின் வீட்டுக்குச் சென்ற னர்.

காரை விட்டு இறங்கும்போது, ''தொழிற்சாலை பற்றி, உனக்கு, இவ்வளவு தெரிந்திருக்கும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை.'' என்றான் தனஞ்சயன்.

லேசாகத் தலையைச் சிலுப்பி, ''நானும் ஒரு கிராமத் துக் கனவானிடம், இவ்வளவு தூரம் தொழில் வளர்ச்சித் சிந்தனைகளை எதிர்பார்க்கவில்லைதான்'' என்றாள் அவள், பதிலுக்கு.

''பட்டிக்காட்டுப் பண்ணையார் என்று எண்ணி யிருப்பாய்''

''பட்டணத்துப் பட்டாம் பூச்சி என்று எண்ணியிருப் பாய்''

அவ்வளவு நேரம் இருந்த இலகுத் தன்மை மறைந்து இருவரும், ஒருவரை ஒருவர் முறைத்தனர்.

முறைக்கும் போதே, அவன் சொன்னது போல நினைத்தது மெய்தானே என்று, வசுந்தராவின் மனம் சுட்டது.

அவனது கோபமும் மனதை உறுத்த, ''சாரி'' சொல்ல, அவள் வாயைத் திறந்த போது, ''சாரிம்மா'' என்று மறுபடியும் முந்திக் கொண்டான் தனஞ்சயன். ''நான், முதலில் உன்னை அப்படித் தவறாக எண்ணியது உண்மைதான். ஆனால், வெகு விரைவிலேயே அந்த எண்ணம் மாறிவிட்டது'' என்றான் வெளிப்படையாக.

அவனது வெளிப்படையான பேச்சு, அவளது வாய்ப் பூட்டையும் அகற்றிவிட, ''நானும்... நானும் அப்படித்தான் சாரி.'' என்று அவளும் ஒத்துக் கொள்ள, இருவர் முகங்களும் இயல்பு நிலைக்குத் திரும்பின.

இவனோடு, சச்சரவின்றி இருந்தால், நன்றாகத்தான் இருந்தது. ஆனால், இது நிலைக்கக் கூடியது அல்ல என்பது வருத்தத்தை அளித்த போதும், அவளது நியா யத்தை அவனுக்குப் புரிய வைத்துவிட்டால் அப்புறம் சச்சரவு ஏன் வரப்போகிறது?

புது வேகத்தோடு, வீட்டுப் பக்கம் திரும்பினாள், வசுந்தரா.

''உள்ளே போகலாமா?'' என்று கேட்டபடி, தனஞ்சயனும் நடக்க, அவனும் தன்னைப் போலவே நினைத்தானா எனத் தோன்றவும், வசுந்தராவுக்குத் தன்னையறியாது சிரிப்பு வந்தது.

இருவரும் உள்ளே சென்றபோது, ''கார் வந்து, நேரமாச்சுதுடா. தனாவைக் காணலையே! வேறு யாராவது என்று பார்த்துவிட்டு வா'' என்று வேலையாளை ஏவிக் கொண்டிருந்தாள். தனஞ்சயனுடைய சிற்றன்னை, லட்சுமி.

''இதோ, நானே வந்துவிட்டேன், சித்தி'' என்ற குரல் கேட்டு மகிழ்ச்சியோடு திரும்பியவளின் முகம், பிள்ளையோடு கூட, வசுந்தராவையும் காணவும், சட்டெனக் கலங்கியது.

வினாடிக்குள் சமாளித்துக் கொண்டு, ''வாம்மா'' என்று அவளையும் வரவேற்ற போதும், அவளது கலக்கம் இருவர் கண்களிலும் பட்டுவிட, 'பார்த்தாயா?' என்று பார்வையாலேயே கேட்டான், தனஞ்சயன்.

ஒரு கணம் உருகிய போதும் அவன் அப்படிப் பார்த்ததுமே வசுவின் மனம் உறுதியடைந்தது.

பேரனை விட்டுவிட நேருமோ என்று, கவலையாகத்தான் இருக்கும். ஆனால், அதற்காகவென்று, கருணனின் எதிர்காலத்தை வீணடிக்க முடியுமா?

''கருண் எங்கே? அவனைப் போய்ப் பார்த்துவிட்டு வருவோமா?'' என்று கேட்டு, தனஞ்சயனை அழைத்துக் கொண்டு முன்தினம் சிறுவன் இருந்த இடம் நோக்கிச் சென்றாள், வசுந்தரா.

இரண்டு முற்றங்கள் தாண்டி, மூன்றாவது முற்றத்தை அவர்கள் அடையும் போது, சிறுவன் கருணே, அவனோடு எப்போதும் இருக்கும் வேலைக்காரப் பையனோடு, எதிரே வந்துவிட்டான்.

''அக்கா, மாமா கூட நீ வந்தாயா? மாமா, கார் வந்த சத்தம் கேட்டு, இவ்வளவு நேரம் ஆகியும் உங்களைக் காணோமே, பெரிய பாட்டியும் நீங்களும், முன் கட்டிலேயே இருக்கிறீர்களோ என்று பார்க்க வந்தேன்'' என்ற ஆவலான வரவேற்பை விட, கூட வந்த சிறுவனைப் பிடித்துக் கொண்டு, முக்கி முனகியவாறு, காலை நீட்டி மடக்கி நடக்க இயலாதவன் போல அவன் காலைச் சாய்த்து வந்த விதமே, இருவர் மனதிலும் பதிந்தது.

அருகில் வந்து நின்றதும், ''யம்மா, இந்த வாதம்..'' என்று முனகி, அவன் முத்தாய்ப்பு வைக்க, இப்போது கண்களால் கேள்வி கேட்டது வசுந்தரா.

## 12

**வ**சுந்தராவின் பார்வை கேட்ட கேள்விக்கு உடனடியாகத் தனஞ்சயனால் பதில் கூற இயலவில்லை. நாலு வயதுச் சிறுவன் அறுபது வயதானவன் போல நடந்தால், அதற்கு நல்லபடியாக, என்ன விளக்கம் கொடுக்க முடியும்? எனவே, பதிலுரைப்பதைவிட, அக்கா மகனிடம் வேறு முகத்தைக் காட்ட முயன்றான்.

சட்டெனப் பார்வையை விலக்கிக் கொண்டு, சிறு வனை, இருகைகளாலும் உயரத் தூக்க, அவன் அடக்க மாட்டாமல் சிரித்தான்.

''மாமா, சாக்கலேட்?'' என்று, தனஞ்சயனின் கழுத்தைக் கட்டிக் கொண்டு கெஞ்சினான், கருண்.

''ரொம்பச் சாக்லேட் சாப்பிடக் கூடாதும்மா. பல் கெட்டுவிடும்.'' என்றவாறே, பாண்ட் பாக்கெட்டிலிருந்து, ஒரு நீளச் சாக்கலேட் பாரை எடுத்து, அவனிடம் கொடுக்க, அவன் உற்சாகத்துடன் கை கொட்டினான்.

''அய்யா, எனக்கு ரெண்டு சாக்கலேட். நேற்று அக்கா கொடுத்தது, ஒண்ணு. இப்போ மாமா கொடுத்தது ஒண்ணு. அக்கா நீ இன்னைக்கும் கொண்டு வந்திருக்கியா?'' என்று, தூண்டில் போட்டான் கருண்.

''கொண்டு வந்திருந்தாலும், அதை நான் உனக்கு, இப்போது தரமாட்டேன். ஒரு நாளைக்கு எத்தனை தரம் சாக்கலேட் சாப்பிடுவது?'' என்றாள் அவள், பொய்யான கண்டிப்புடன்.

முகம் வாட, முன்தினம் கூடச் சேர்ந்து விளையாடிய அக்கா, இப்போது மிரட்டுவது ஏன் என்று குழம்பி, கூம்பிய தாமரையாகக் கருண் நிற்க, வசுந்தராவால், அதற்கு மேல் தாங்கமுடியவில்லை.

கைப்பையிலிருந்து சாக்கலேட்டை எடுத்துக் கொடுத்துவிட்டு, ''இப்போதே, இதையும் சாப்பிட்டு விடாதே. இதெல்லாம் ஒரு நாளைக்கு ஒன்றுதான்''

என்று அவள் சொன்னதை, அவன் காதிலேயே வாங்க வில்லை.

அவனுக்கு 'கம்பானிய'னாக அமர்த்தப் பட்டிருந்த சிறுவனிடம், ''இதெல்லாம் ரொம்ப நல்லா இருக்கும்டா. என்னைக் கூட்டிக்கிட்டுப் போ. காக்காக் கடிகடித்து, உனக்கும் கொடுக்கிறேன்.'' என்று கூறிக் கொண்டிருந் தான்.

சிறுவர்கள் இருவருமாகச் செல்வதைப் பார்த்தபடி பெரியவர்கள் இருவரும் நின்றனர்.

''பார்த்தீர்களா? இந்த வயதிலேயே, வாதம் வலி என்று, அவன் உட்காருவதா? உங்கள் பெரியவர்க ளையே பார்த்துக் கொண்டு, அவர்களிடமே வளர்ந்தால், கருண் பத்து வயதிலேயே, கட்டிலோடு சுருண்டு விடு வான். தேவையா?'' என்றாள், வசுந்தரா.

''அதற்காக? உன் சித்தப்பாவிடம் வளர்ந்தால், பத்திரமாக இருப்பானாமா? பாதி ராத்திரியில் யாராவது குழந்தைக்கு வெட்டுகிறது என்பார்கள். பிள்ளை தனி யாக இருப்பானே என்பதே இல்லாமல், கிளம்பிவிடு வார். எந்த நம்பிக்கையில், கருணை அவரிடம் விடுவது?'' என்று, பதிலுக்குக் கேட்டான் தனஞ்சயன்.

''அதற்காக? மருத்துவர்கள் யாரும் பிள்ளையே பெற்றுக் கொள்ளக் கூடாது, என்கிறீர்களா?''

இருவரும் ஆத்திரத்துடன், ஒருவரை ஒருவர் பார்த் துக் கொண்டனர்.

நேரடிப்போர் தொடங்கிவிட்டது. இனிப் பேசித் தான் ஆக வேண்டும். இவனோடு சுமூகமாகப் பழகி னால், நன்றாக இருக்கிறதென்று, பிள்ளையின் நலனைக் காற்றில் பறக்கவிட முடியாது.

''பெற்ற பிள்ளையைப் பாதுகாத்துப் பராமரிக்கத் தெரிந்தவர்கள், பெற்றுக் கொள்ளலாம். மற்றவர்கள் பெற்றாலும், வளர்க்கத் தெரிந்தவர்களிடம் விட்டுவிட வேண்டியதுதான்.'' என்று, அப்போதும் முந்திக் கொண் டான், தனஞ்சயன்.

''வளர்க்கத் தெரிந்தவர்களா? அவர்கள் வளர்த்த விதம்தான் பார்த்தோமே!'' என்றாள் அவள் ஏளனமாக.

அவன் பதில் கூறுமுன், ''சின்னய்யா, அம்மா பலகாரம் தின்ன வரச் சொன்னாங்க.'' என்று, ஒரு வேலைக்காரி வந்து நின்றாள்.

''நீ போ, நாங்கள் இதோ வருகிறோம்.'' என்று, அவளை அனுப்பிவிட்டு, ''நம் பேச்சை அப்புறம் வைத் துக்கொள்ளலாம். மனதில் என்ன நினைத்தாலும், சித்தியி டம், அதைக் காட்டிவிட மாட்டாய் என்று நம்புகிறேன். பாவம் அவர்கள் சும்மாவே கலங்கிப் போய் இருக்கிறார் கள்.'' என்றான் தனஞ்செயன்.

''மனிதப் பண்பு பற்றி எனக்குத் தெரியும். நான் ஒன்றும் காட்டுமிராண்டி அல்ல. கொஞ்சம் வழியை விட்டு விலகிக் கொண்டீர்களானால், நான் உங்கள் சித்தியிடம் போகிறேன். பெரியவர்கள் கூப்பிட்டு அனுப் பிய பிறகு, நாம் இப்படிப் பேசிக்கொண்டு நிற்பது மரியாதையல்ல.'' என்றாள் அவள், பதிலுக்கு.

தன்னை மீறி முறுவலித்து, "வா, போவோம்." என்றான் அவன்.

இன்றும், தட்டில் எள்ளுருண்டை இருந்தது. கூடவே, வேறு சிலவகைகளும் இருந்தன.

இருவரையும் புன்னகையால் வரவேற்று, "பெரிய தம்பிக்குப் பிடிக்குமென்று, இன்றைக்கும் எள்ளு ருண்டை எடுத்து வைத்தேன்மா. உனக்குப் பிடிக்காட்டி, விட்டுவிடும்மா. அதிரசமும், முறுக்கும் எடுத்துக்கோ." என்றாள், அந்த அம்மாள்.

இழந்துவிட்ட மகளையோ, மகனையோ பற்றி, லட்சுமி அம்மாள், ஒரு வார்த்தை குறிப்பால் கூடக் கூறவில்லை. ஆனால், அந்த முதியவளின் கண்ணில் நிரந்தரமாக இருந்த சோகமும், உள்ளே மரண காயத்தை வைத்துக் கொண்டே விருந்துபசாரம் செய்ததும், வசுந்த ராவை, உருக வைத்தன.

இந்தப் பெண்மணியிடமிருந்து, பேரனையும் பிரிப் பதா என்று கூட, அவளுக்குத் தோன்றியது.

ஆனால், அவள் ஒன்றும், கருணுக்குத் தாத்தா பாட்டியே வேண்டாம் என்று சொல்லவில்லையே! அவனை வளர்க்கும் உரிமை சித்தப்பாவுக்கு வேண்டும் என்றுதானே....

இருக்கட்டும். அதைப் பிற்பாடு பார்த்துக் கொள்ள லாம். இப்போது, இந்தப் பெண்மணியின் மனதுக்குச் சற்று இதமாக நடந்து கொள்ள வேண்டும் என்று தீர்மா னித்து, "நேற்றுத் தந்தீர்களே, அதே எள்ளுருண்டை தானே? நேற்றே அதன் ருசி, எனக்குப் பிடிக்கத்தான்

செய்தது, அம்மா. ஆனால், கருணைப் பார்க்கும் ஆசை யில், சரியாகச் சாப்பிடாமல் ஓடிவிட்டேன். நேற்றைக் கும் சேர்த்து, இன்றைக்குச் சாப்பிடப் போகிறேன், பாருங்கள்.'' என்று, எடுத்துக் கொண்டாள்.

ஒன்றைக் கடித்துச் சுவைத்த வண்ணம், ''இது தானேம்மா, ஏதோ, உப்புக் கருப்பட்டி போட்டு இடித்தது என்றீர்கள்? கருப்பட்டியும், உப்பும் சேர்த்துப் போட்டு இடிப்பதா? ஆனால், இதில் உப்பின் சுவையே தெரிய வில்லையே!'' என்று, வசுந்தரா கேட்டபோது, லட்சுமி அம்மாளின் முகத்தில் புன்னகை மலர, தனஞ்சயனுக்குச் சிரிப்பில் புரையேறி விட்டது.

''என்ன?'' என்று, புரியாமல் கேட்டவளிடம், ''விட்டால், மைசூர்ப் பாகில், மைசூரைக் கொண்டுவரச் சொல்லுவாய் போல இருக்கிறது! என்று, தனஞ்சயன் மீண்டும் சிரித்தான்.

தொத்திக் கொண்ட புன்னகையோடு, ''ஒன்றும் புரியவில்லை. அம்மா, நீங்கள் சொல்லுங்கள், அம்மா.'' பெரியவளிடம் சலுகையாகக் கேட்டாள், வசுந்தரா.

வேலைக்காரியை அழைத்து ஒரு உப்புக் கருப்பட் டிப் பானையை எடுத்து வருமாறு, பணித்துவிட்டு லட் சுமி அம்மாள் வசுவிடம் திரும்பினாள்.

''நான் உனக்கு அம்மா முறை இல்லையம்மா. இவனுக்கும் இவன் அக்கா தம்பிக்கும்தான் அப்படி. செல்விக்கு, நீ மகள் உறவு. அதனால், அப்புக் குட்டிக்குப் போல, உனக்கும் நான் பாட்டிதான். அவனைப் போலப் பாட்டி என்றே கூப்பிடு.'' என்று, சிறு கரகரப்புடன் அந்த

மூதாட்டி கூறியபோது, வசுந்தராவுக்குப் பேச முடியாமல் தொண்டையடைத்தது.

நல்ல வேளையாக, அவள் வாய் திறந்து பேச அவசியமற்று, உப்புக் கருப்பட்டிப் பானை வந்து சேர்ந் தது.

பானையில், பாதிக்கும் மேலாக, லேசான படிகப் பளபளப்புடன், தேன்நிறத்தில், கெட்டியாக ஏதோ இருந் தது.

கேள்வியாக நோக்கியவளிடம், ஒரு சுரண்டி கொண்டு, தனஞ்சயன் அதைச் சுரண்டிக் காட்டினான்.

மணல் மாதிரி சிறு படிகங்கள் உதிரியாக வரவும், கையில் எடுத்து, அவளிடம் கொஞ்சம் கொடுத்தான். ''சாப்பிட்டுப் பார்.''

அவள் சந்தேகமாக லட்சுமி அம்மாளைப் பார்க்க வும், புன்னகை மேலும் விரிய, 'செய்' என்பது போலச் சைகை செய்தாள் அந்த அம்மாள்.

வசுந்தரா அதை, ருசி பார்க்கையில், ''இதுதா னம்மா, உப்புக் கருப்பட்டி, கருப்பட்டி போல, இதையும் பதநீரில் தான் செய்வது. தெளிந்த பதநீரைப் பதமாகக் காய்ச்சி, இப்படிப் பானைகளில் ஊற்றி வைத்து விடு வோம். கொஞ்ச நாளில், கள்ளனை வடியவைத்து, இப்படி எடுத்து வைத்து விடுவது. முன்னெல்லாம், சர்க்கரைக்குப் பதிலாக, இதைத்தான் பயன்படுத்துவது. காப்பிக்குகூட. ஆனால், இப்போது சர்க்கரை நன்றாகக் கிடைப்பதால், இதைப் போட்டுக் கஷ்டப்பட்டுச் செய்வா

னேன் என்று, நிறையப்பேர் விட்டு விட்டார்கள். சத்து என்று நான் எப்போதும் செய்து வைத்திருப்பேன்.'' என்று விவரமும் தெரிவித்தாள்.

''நல்ல ஐடியா. உப்பு மாதிரிப் படிகங்களாக இருப்ப தால், உப்புக் கருப்பட்டி என்ற பெயரும் வந்திருக்கலாம். உப்பைவிட மெல்லிசான படிகங்களாக, சர்க்கரை போலவே இருப்பதால், கருப்பட்டிச் சர்க்கரை என்றால், இன்னும் பொருத்தமாக இருந்திருக்கும். ஒருவேளை, இது, சர்க்கரை காலத்துக் கெல்லாம் ரொம்ப முந்தியதாக வும் இருக்கலாம். ஆனால், இதில் ஒரு விஷயம்தான், எனக்குக் கொஞ்சமும் புரியவில்லை. இந்த உப்புக் கருப்பட்டிக்குள், கள்ளன் எங்கே வந்தான்? கள்ளன், திருடன் எல்லாம், வீட்டுக்குள், கடைக்குள் எல்லாம் வருவார்கள், திருடுவார்கள், தெரியும். ஆனால், கருப் பட்டிப் பானைக்குள் கள்ளன் எப்படி வந்தான்? என் ன...?''

எதிரில் இருந்த இருவரும் சிரிக்கத் தொடங்கிவிட வும், வசுந்தராவின் கேள்வி, ஒரு திகைத்த இழுப்பில் முடிந்தது.

வேலைக்காரி கூட, வாயை மூடிக் கொண்டு நகைத் தாள்.

வசுந்தரா, விழி விரித்து நோக்கவும், ஒருவாறு சிரிப்பை அடக்கிக் கொண்டு, ''இந்தக் கள்ளன் வெளியி லிருந்து வருகிறவன் அல்ல. கருப்பட்டிப் பானைக்குள் ளேயே இருப்பவன்...'' என்றான், தனஞ்சயன், மர்மக் குரலில்.

''டேய் தனா, இப்படிச் சொன்னால், அவளுக்கு எப்படிப் புரியும்? பாரம்மா, இந்த உப்புக் கருப்பட்டி உறையும்போது, ஒரு சிறு பகுதி உறையாது. அதைத் தான் கள்ளன் என்பது.'' என்றால் லட்சுமி அம்மாள், புன்னகையோடு.

''இப்போது, புரிகிறதா? கள்ளன் எதுவென்று?'' என்று, தனஞ்சயன் கேலிக் குரலில் கேட்கவும், ''எங்கே? நீங்கள்தான் நினைத்ததையெல்லாம் கள்ளன் என்று விடு கிறீர்களே! இன்றைக்கு, முத்துமாரி வாழைப்பூ ஆய்ந்து கொண்டிருந்தாள். அதில் எதையோ, கள்ளன் என்று, பிய்த்துப் போட்டாள்! என்று உதட்டைப் பிதுக்கினாள், வசுந்தரா.

''வேண்டாதது. உதவாதது கள்ளன்'' என்றான், தனஞ்சயன்.

''என்னவோ சொல்லுங்கள்! இப்போதைக்கு, எனக்கு ஒன்று மட்டும் தெளிவு. இந்த எள்ளுருண்டை, எனக்கு வேண்டியது. அதனால், இது கள்ளனில்லை! என்றவள், இன்னுமொன்றைக் கையில் எடுத்தாள்.

முறுவல் விரிய, எள் உருண்டைத் தட்டை அவள் புறம் தள்ளி வைத்தாள் லட்சுமி அம்மாள்!

இதோ வருவதாகக் கூறி, அந்தப் பெரியவர் உள்ளே சென்றிருந்த போது, தனஞ்சயன், வசுந்தராவுக்கு நன்றி தெரிவித்தான். ''நாலு ஆண்டுகளாக, என் சித்தி நன்றாகச் சிரித்தது கிடையாது. அதிலும், இந்த ஆண்டு, முருகன் மறைந்த பிறகு, உதட்டளவுதான். அவர்களைச் சிரிக்கவைத்தாய். அதற்காகத்தான்.''

ஒரு கணம் நெகிழ்ந்தவளுக்கு, இந்தச் சிரிப்பை அழித்துவிடாதே என்று, மறைமுகமாக எச்சரிக்கிறானோ என்று தோன்றியது. குறைந்த பட்சம், கேட்பதே தப்பு போலக் கூச வைப்பது!

ஆனால், இதற்கெல்லாம் மசிந்துவிடக் கூடாது மனதை, திடப்படுத்திக் கொண்டாள் அவள். அந்தத் திடம் தேவையாகவும் இருந்தது.

ஏனெனில், உள்ளே சென்ற லட்சுமி அம்மாள், திரும்பி வந்த போது, கையோடு கொணர்ந்த தட்டில், ஒரு பட்டுச் சேலையும், ரவிக்கையும் பூச்சரத்தோடு அமர்ந்திருந்தன.

வாங்கிக் கொள்ளத் தயங்கியவளிடம், ''எங்கள் செல்விக்கு, நீ மகள் முறை. பெரிய பெண்ணாக நீ இப்படி வரும்போது, அவள் இருந்திருந்தால், இது செய்யாமல், இருப்பாளா? அதற்குக் கொடுப்பினை இல்லை. பாட்டி, நானாவது, செய்ய வேண்டாமா? அதுதான். உன் தாத்தாவிடம் வாங்கி வரச் சொன்னேன். எடுத்துக் கொள்ளம்மா.'' என்ற போது, வசுவினால், மறுக்கவும் முடியவில்லை.

ஆனால், அப்போதும் விடாமல், கருணாகரைக் கூட்டிப்போய், தன்னோடு சற்று நேரம் வைத்திருந்து விட்டு அனுப்புவதாக, வசுந்தரா சொன்னபோது, மறுக்க மாட்டாமல், கம்பளிச் சட்டையும், போர்வையும் சுற்றிப் பேரனைக் கலக்கத்துடன் அனுப்பி வைத்தாள், பெரியம் மாள்.

கவலை தோய்ந்த அந்த முகத்தை நேராகப் பார்க்க முடியாமல், தரையைப் பார்த்தபடி விடை பெற்றுக் கொண்டு, தம்பியுடன் வந்தால், வீட்டில் கேசவன் இருக்க வில்லை.

வீடு பூட்டியிருந்தது.

ஏளனமாகச் சிரித்தான், தனஞ்சயன்.

## 13

பூட்டியிருந்த வீட்டைப் பார்த்ததும், வசுந்தரா வுக்குச் சற்று நேரம், ஒன்றுமே ஓடவில்லை.

மாலையில் திரும்பி வரும்போது, கருணோடு வரப் போவதாக, கேசவனிடம் ஏற்கனவே அவள் சொல்லி யிருந்தாள்.

மகன், மகன் என்று உருகினாரே!

இப்போது, அந்த மகன் வரும்போது, அவனைப் பார்க்க ஆவலோடு காத்திருக்காமல், இந்தச் சித்தப்பா எங்கே சென்றிருக்கக் கூடும்?

இப்படிச் செய்தால், கருணுக்கே, தந்தை''பிடம் எப்ப டிப் பாசம் ஏற்படும்?

அப்பாவைப் பார்க்கப் போவதாகக் கருணிடம் சொல்ல வேண்டாம் என்று, தனஞ்சயன் பிடிவாதமாகச் சொன்னதை, வேண்டா வெறுப்பாக ஏற்றது எவ்வளவு நல்லதாகி விட்டது, என்று எண்ணும்போதே, அவ ளுக்கு, மிகவும் தலைக்குனிவாகவும் இருந்தது.

அண்ணன் மகளான அவளை விடவும், அவனல்லவா, கேசவனை நன்கு தெரிந்து வைத்திருப்பது போல் ஆகிறது?

சித்தப்பா மட்டுமில்லாமல், பரமனையும் முத்துமாரியையும் கூடக் காணோமே!

தானும் தம்பியும் வெளியே நிற்க வேண்டியிருக்கிறதே என்பதெல்லாம் அவளுக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. பக்கத்தில் நிற்கும், இந்தத் தனஞ்சயன் என்ன நினைப்பான்?

தனஞ்சயன் என்ன நினைத்தான் என்பதை, அவனது ஏளனச் சிரிப்பே துல்லியமாகக் காட்டிவிட, இப்படிப் பட்ட சித்தப்பாவை நம்பி, நாலே வயதுச் சிறுவன் கருணனை, இங்கே வசிக்கச் செய்வது, சரியாகுமா, என்ற ஐயம், வசுந்தராவுக்கே உண்டாகி விட்டது.

அக்கம் பக்கத்தில் வீடுகள் ஏதும் இல்லை எனும் போது, யாரிடம் கேட்பது, என்ன செய்வது என்பது அறியாமல், வசுந்தரா சற்று நேரம் மலைத்து நின்றாள்!

முக்கி முனகிக் கொண்டு, காரிலிருந்து இறங்கிய கருண், சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு, "இது என் அப்பா வீடு மாதிரி இருக்கே! அப்பா எங்கே?" என்று கேட்டு, எரிகிற நெருப்பில் எண்ணையை ஊற்றினான்.

சற்று மனமிரங்கினாற்போல, அருகில் வந்து, "நேராகத் திரும்பிப்போகப் பிடிக்காவிட்டால், வேண்டுமானால், காரில் கொஞ்ச நேரம் சுற்றி விட்டுப் போவோமா?" என்று, தனஞ்சயன் கேட்டதும் அவளுக்கு வெறுப்பாகத்தான் இருந்தது.

ஆனால், அவன் அப்படிக் கேட்டது ரோஷமூட்ட, வசுந்தரா வேகமாக யோசித்தாள்.

பெற்ற மகனையும், ஊருக்குப் புதியவளான அவளையும், நடுத்தெருவில் நிற்க விடுகிற அளவு, சித்தப்பா மோசமாக இருக்க முடியாது. அதுவும், பரமனும் அவன் மனைவியும் கூட இல்லாமல் கதவைப் பூட்டிக் கொண்டு.

வீட்டைப் பூட்டிச் சாவியைக் கொடுக்க அண்டை அயலார் இல்லாதபோது, சித்தப்பா என்ன செய்திருக்கக் கூடும்?

விடுவிடென்று வாயில் கதவை அணுகி, அங்கே சாவி வைக்கக் கூடிய இடங்களைத் தேடலானாள்.

அந்தப் பழைய காலக் கதவின் நிலைக்குமேல் கையை விட்டுத் தேட அவள் முயற்சித்தபோது, தனஞ்சயன் சட்டென, அவள் கையைப் பற்றித் தடுத்தான்.

"இது, கிராமம் என்று சொன்னேனில்லையா? தேள், நட்டுவாக்காலி ஏதாவது இருந்து, கொட்டி வைத்தால், என்ன செய்வாய்?" என்று அதட்டிவிட்டு, "டாக்டர் சாவி வைக்கும் இடம் எனக்குத் தெரியும்." என்றபடி, சற்றுத் தள்ளி, ஒரு குச்சியில் தொங்கிக் கொண்டிருந்த சாவியை எடுத்து, வீட்டைத் திறந்தான்.

"வா, கருண். உள்ளே வா." என்று, தம்பியை உள்ளே அழைத்துச் சென்று, அவனுக்காக அவள் சென்னையிலிருந்து வாங்கி வந்திருந்த விளையாட்டுச் சாமான்களில் சிலதை எடுத்துக் கொடுத்து, விளையாட வைத்த பிறகு, வசுந்தரா, தனஞ்சயனிடம் திரும்பினாள்.

''சாவி வைக்கும் இடம் தெரிந்திருந்தும், முதலி லேயே ஏன் சொல்லவில்லை?'' என்று அடிக் குரலில் சீறினாள்.

தோளைக் குலுக்கினான், அவன், ''இது ஒன்றும் ராமராஜ்யமில்லை. இப்படிச் சாவியை வைக்க வேண் டாம் என்று, எத்தனையோ முறை, உன் சித்தப்பாவிடம், சொல்லியுமாயிற்று. உள்ளிருக்கும் சாமானைப் பற்றித் தான், அக்கறையில்லை. வயதுப் பெண் ஒருத்தியைக் கூட்டி வந்திருக்கும் போதாவது, எச்சரிக்கை இருக்கக் கூடும் என்று நினைத்தேன். பொறுப்பு, எச்சரிக்கைக்கும் டாக்டருக்கும் வெகு தூரம் என்று, எனக்குத் தெரியும். அது, உனக்கும் தெரிய வேண்டாமா?''

ஒரு கணம் வாயடைத்து நின்றுவிட்டு, ''உங்களுக் குத் தான், சாவி இருக்குமிடம் தெரியுமே என்று நினைத் திருப்பார்.'' என்றாள், வசுந்தரா.

''சும்மா, பேச்சுக்காகச் சொல்லக் கூடாது. நான் உங்கள் கூட வராமல், வில் வண்டியில் ஏற்றி அனுப்பி யிருந்தால்? அப்போது என்ன செய்வாயாம்?''

''சும்மா பேச்சுக்குச் சொல்வது, நீங்கள்தான். அப்ப டிக் கருணை என்னோடு இங்கே அனுப்பிவிட்டு, நீங்கள் பேசாமல் விலகிப் போய்விடுவீர்களாக்கும்? மீண்டும், அவனை உங்கள் சித்தப்பா வீட்டுக்குக் கூட்டிப் போய், உங்கள் சித்தியிடம் ஒப்படைக்கும்வரை, அவன் கூடவே இருந்து, அடைகாக்க மாட்டீர்களா? என்றவள், 'குபுக்' கெனச் சிரித்தாள்.

''என்ன என்ன' என்று விடாமல் கேட்டவனிடம், 'இல்லை, திடும் என்று கற்பனையில் ஒரு காட்சி... நீங்கள் பறவை போலக் கருணனை அடை காக்கிற மாதிரி...'' என்றவளுக்கு மீண்டும் சிரிப்பு வந்தது.

''என்னையா அப்படிச் சொல்லுகிறாய்? உன்னை...'' என்று கையை ஓங்கி மிரட்டியபோதும், அவன் முகத்திலும், முறுவல்தான் இருந்தது.

சண்டையும் சிரிப்புமாகத் தனஞ்சயனோடு உரையாடிய போதெல்லாம், வசுந்தராவின் பார்வை, வீட்டை அலசிக் கொண்டேதான் இருந்தது. கேசவனின் ஏதாவது ஒரு செய்திக்காக.

கடைசியாக, அவளது கண்கள், அதைக் கண்டும் பிடித்தன.

அண்ணன் மகளுக்கு, ஒரு காகிதத்தில் விவரம் எழுதி, மேஜை மீது வைத்தவர், அதன் மேல்கனத்துக்கு எதையும் வைக்காததால், காகிதம் பறந்து போய், ஒரு மூலையில் விழுந்து கிடந்தது.

பரமன், முத்துமாரி தம்பதியரின் தலைப் பேரன், எங்கேயோ விழுந்து தலையில் அடி பட்டுவிட்டதால், சிகிச்சைக்காக கேசவனும், பேரனைப் பார்க்கவென்று பரமன், முத்துமாரியும் பேயன்விளை செல்வதாகக் கடிதம் தெரிவித்தது.

''பார்த்தீர்களா, காரணம் இல்லாமல், என் சித்தப்பா, போகவில்லை!'' என்று தனஞ்சயனிடம், கடிதத்தைக் காட்டினாள் அவள்.

படித்து விட்டு, உதட்டைப் பிதுக்கினான், அவன். ''யாரோடும், ஓடிப்பிடித்து விளையாடவோ, குறட்டை விட்டுத் தூங்கவோ, டாக்டர் சென்றிருப்பார் என்று, நானும் சொல்லவில்லையே! இப்படிச் செல்லும்போது, வீட்டுக்கு வர இருந்த உங்கள் இருவருக்கும் அவர் என்ன ஏற்பாடு செய்தார்? அதுதான் என் கேள்வி!

''அந்த நேரம் என்ன செய்ய முடியுமாம்?''

''எத்தனையோ! பேயன்விளை செல்லுமுன், வழியில் ஒரு பையனைப் பிடித்து, சின்னப் பண்ணை வீட்டில் கொடுக்கும்படி கடிதத்தை அனுப்பியிருக்கலாம். இரண்டு வீடுகளிலும் ஃபோன் இருக்கிறது. கூப்பிட்டு உன்னிடமே விஷயத்தைச் சொல்லியிருக்கலாம். டாக்டருக்கு விசுவாசமானவர்கள், நிறையப் பேர் உண்டு. அவர்களில் யாரிடமாவது சாவியைக் கொடுத்து, வெளியே உட்காரச் சொல்லியிருக்கலாம்.... இப்படி 'இருக்கலாம்' கள் நிறைய உண்டு. ஆனால், இவைகளில் எதுவுமே, டாக்டருக்குத் தோன்றாமல் போவதுதான், துரதிருஷ்டம்!'' என்று கடுமையான குரலில் கூறி முடித்தான், தனஞ்சயன்.

பதில் கூற முடியாமல், வசுந்தராவாயடைத்து நிற்கையில், ''இப்படிப் பட்டவரை நம்பி, பிள்ளையை எப்படி விடுவது? என்று கேட்டான் அவன்.

தனஞ்சயன் சொன்னது எல்லாமே, வசுந்தராவுக்கும் சரியாகத்தான் தோன்றியது. ஆனால், இக்கட்டில் இருக்கும்போது, அவன் அந்த விஷயத்தை வலியுறுத்தி பது, ஆத்திரமூட்ட, ''அதற்காக, அவன் அங்கேயே

இருந்து, பத்து வயதில் கிழமாகிச் சாவதா?'' என்றாள் பதிலுக்கு.

''கீறல் விழுந்த கிராமஃபோன் ரிக்கார்டு மாதிரி, அதையே பிடித்துக் கொண்டு அறுக்காதே. அதெல்லாம் வெறும் பழக்கங்கள். எளிதில் மாறிவிடக் கூடியவை.

''எப்படிமாறும்? சூழ்நிலை மாறினால்தானே, அது மாற முடியும்? அப்படி மாற வேண்டும் என்பதுதானே, என் வாதமும்!

''சூழ்நிலை, ஒரேயடியாக, நிலையாக மாற வேண்டும் என்று, நான் சொல்லவில்லை. நாலு நாள், இங்குமங்கும் போய் வந்தாலே, போதுமானது.

''மீண்டும் பழைய சூழ்நிலையில் அடைபட்டதும், பழைய புத்தி வந்துவிடும்.''

''இப்படியே பேசினால், இதற்கு முடிவே கிடையாதா.''

''ஏனில்லை? கருணனைச் சித்தப்பாவிடம் அனுப்பிவிட்டால், பிரச்சினை தீர்ந்துவிடும்.

''அதெப்படி முடியும்? கருண், என் சித்தப்பாவுக்கு, ஒரே பேரன்.''

''என் சித்தப்பாவுக்கு அவன் ஒரே பிள்ளை.''

''ம்? உன் சித்தப்பாவுக்கு, இன்னொரு திருமணம் செய்து வைத்து, வேறுபிள்ளை பெற்றுக் கொள்ளச் சொல்லு. பிரச்சினை தீர்ந்துவிடும்.''

''நல்ல கருத்து. சித்தப்பாவிடம் சொல்லுகிறேன். ஆனால், எத்தனை பிள்ளை பெற்றாலும், தலைப் பிள்ளை கருண்தான். நினைவிருக்கட்டும். அவன் எக்கேடும், கெடட்டும் என்று நாங்கள் விட முடியாது.

''அதுவேதான் எங்கள் கருத்தும். தெரிந்து கொள்! கருண் எக்கேடும் கெடட்டும் என்று, எங்களாலும் விட முடியாது.''

இந்த வாக்கு வாதத்துக்கு முடிவு ஏது? அத்தோடு, இப்படிச் சண்டை போட்டுத் தனஞ்சயனை எப்படி, இங்கத்திய நியாயத்தை ஏற்க வைப்பது?

சற்று யோசித்து விட்டு, ''இருக்கட்டும், தனஞ்சயன். ஒரே நாளில் நாம் இதற்கு விடை கண்டுவிட முடியாது. இப்போதைக்குக் கருண் பாவம், தனியாக என்ன செய்கிறான் என்று பார்ப்போம்.'' என்றாள் வசுந்தரா.

ஒப்புதலாய்த் தலையசைத்து உடன் நடந்தபடி, ''என்னை அழைக்கும்விதம், இன்னும் குழப்பமாகவே இருக்கிறதா வசு?'' என்று மென்மையான குரலில் வினவினான் அவன்.

அவள் உதட்டைக் கடித்துக் கொண்டு, பேசாதிருக்கவும், ''முத்து சொன்னதுபோல, நான் உனக்கு மாமா முறை தானே? அப்படியே கூப்பிடலாமே!'' என்று அவன் கூறவும், அவளது விழிகள் பளிச்சிட்டன.

''ஒரு தரம், பழைய பாட்டுகள் வைத்துக் கொண்டிருந்த போது, ''மாமா, மாமா, மக்குமாமா'' என்று, ஒரு பாட்டுக் கேட்டேன்...'' என்று இழுத்தாள்.

அவனும் உடனே சமாளித்து, ''ஓகோ! அதனால் தான், இந்தத் திணறலா? மாமாவோடு, 'மக்கை'ச் சேர்த்தே நினைத்துப் பழகி விட்டதால், என்னை 'மாமா' என்று அழைக்க முடியவில்லையாக்கும்? பாராட்டுக்கு மிக்க நன்றி! ஆனால், இந்தத் 'த.த தனஞ்சய'னைவிட, மற்ற நெருங்கியவர்களைப் போல, என்னைத் 'தனா' என்றே கூப்பிடலாமே!'' என்று கூறவும், அவளுக்குக் கைதட்டலாம் போலத்தான் இருந்தது.

அத்தோடு, தானாக உரிமை எடுத்துக் கொள்ளத் தயங்கிக் கொண்டிருந்தவளுக்கு அவனை எப்படி அழைப்பது என்ற பிரச்சினையும் தீர்ந்தது.

வியர்த்து வழிந்து கொண்டிருந்த கருணனின், ஸ்வெட்டர், ஷால், எல்லாவற்றையும் எடுத்துப் போட்டு விட்டு, அவனோடு, இருவருமாகச் சற்று நேரம் விளை யாடிக் கொண்டிருந்த போதே, கேசவன்வந்து விட்டார்.

''கிணற்றில் குதித்து நீந்தி விளையாடியிருக்கிறார் கள். கால்வழுக்கியதில், தண்ணீருக்குப் பதில் கிணற்றுச் சுவரில் போய் முட்டியிருக்கிறான். நல்லவேளை! மண்டை ஓட்டில் படவில்லை. தோலளவு காயம்தான். எதற்கும் இரண்டு நாள் கண்காணிப்பில் இருக்கட்டும் என்று, திருச்செந்தூர் மருத்துவமனையில் சேர்த்துவிட்டு வந்தேன். உங்களுக்கெல்லாம் சாப்பாடும், கருண் குட் டிக்குப் பிடிக்குமே என்று, 'மாக்கரோ'னும் வாங்கி வந்தேன். இந்தா, கண்ணா'' என்று, மகனை மடி மீதுவைத்து ஊட்டினார்.

''பார்த்தாயா?'' என்றது, வசுந்தராவின் பார்வை.

சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தபின், ''நாளைக் குத் திருநெல்வேலி போக வேண்டியிருக்கிறது அத்தான். அப்படியே, உங்கள் மருந்துகளையும் வாங்கி வந்து விடுகிறேன். நீங்கள் 'கிளினிக்'க்குச் சென்றுவிட்டால், வசுந்தரா சும்மாதானே இருப்பாள்? அவளையும் அழைத்துப் போகட்டுமா? அவள் வந்தால், கருண் குட்டியையும் கூட்டிப் போகலாம் என்று ஐடியா.'' என்றான் தனஞ்சயன்.

சந்தித்து இரண்டு நாளாகவில்லை. அதற்குள், அவ னோடு வெளியூரா? வசுந்தரா திகைத்தாள்.

ஆனால், ''நல்லஐடியா! என்றார் கேசவன். ''இது போல நாலு இடங்களுக்குப் போய்வருவது கருணுக்கு மிகவும் நல்லது. நீ என்னம்மா சொல்லுகிறாய்?'' என்று அவளிடம், அப்போதே, தனஞ்சயன் முன்னிலையி லேயே, அவர் கேட்கவும், வசுந்தரா, சற்றுத் தடுமாறிப் போனாள்.

''அது திருநெல்வேலியில் என்ன இருக்கிறது, சித் தப்பா?''

''அந்த ஊருக்கு அந்தப் பெயரைக் கொடுத்த நெல்லையப்பர் கோயில் இருக்கிறது. சரித்திரப் புகழ் பெற்ற, பெரிய சிவன் கோயில். தாமிரபரணி ஆறு ஓடுகிறது. ஆற்றின் கரையில் அழகான சிந்து பூந்துறை யும், முருகன் கோயிலும் இருக்கின்றன. எல்லாவற்றுக் கும் மேலாக, நீ 'ஷாப்பிங்' பண்ண அருமையான இடம். திருநெல்வேலியில் கிடைக்காதது, சென்னையில் கூடக் கிடைக்காது.'' என்றான், தனஞ்சயன்.

''திருநெல்வேலியை விற்கப் போகிறவர் மாதிரி அடுக்குகிறீர்களே! என்று கிண்டல் போலச் சொல்லி விட்டு, ''நீங்கள் போகலாம் என்றால், சரி சித்தப்பா.'' என்று வசு ஒத்துக் கொண்டதோடு, அப்போதைக்கு விஷயம் முடிந்தது.

ஆனால், விஷயம் அத்தோடு நிற்கவில்லை.

கிளம்புமுன், அப்பாவும் பிள்ளையும் ஏதோ கதை பேச, இவர்கள் இருவரும் சற்று நேரம் தனியே நிற்க நேர்ந்தது.

அப்போ, ''அதென்ன, என்னோடு திருநெல் வேலிக்கு வர அவ்வளவு தயக்கம்? என்று, தனஞ்சயன் கேட்டான். ''இன்றைக்கு இரண்டுதரம் வந்தாய்தானே?''

''இது ஊருக்குள். திருநெல்வேலி வெளியூர்.''

''பெரிய வெளியூர்! அரைமணி நேரத்தில் போய் விடலாம். ஏன், அண்ணா நகரிலிருந்து, தாம்பரம் போக, எவ்வளவு நேரம் ஆகும்? அதை, உள்ளூர், பரவா யில்லை என்பாயா?'' என்றான் சற்றுக் கோபமாக.

என்ன பதில் சொல்வது என்று அறியாமல், வசுந் தரா பேசாமல் நிற்கவும், ''ஓகோ! அங்கேயானால், முழுத் தூரமும், வீடு, கடைகள் இருக்கும் போக்குவரத் தும் இருக்கும். இங்கே அப்படியில்லையே! ஆள் நட மாட்டம் இல்லாத காட்டுப் பகுதியில் காரைநிறுத்தி, உன்னிடம் காதல் புரியத் தொடங்கி விடுவேனோ, என்று பயந்துவிட்டாய் போல! என்று ஏளனமாகக் கேட்டான், அவன்.

''அப்படியில்லை....'' என்று விளக்கத் தொடங்கிய வசுந்தரா, சட்டெனத் திகைத்தாள். ஏனெனில், தனஞ்சயன் காதல் செய்வது, எப்படி இருக்கும், என்ற கற்பனை திடுமென அவள் மனதில் தோன்றி விட்டிருந்தது!

பாதி வாக்கியத்தில் பேச்சை நிறுத்திவிட்டு, மலைத்து நின்றவளின்முன் சொடக்கு போட்டு, அவளது கவனத்தைக் கவர்ந்தது. 'என்ன' என்று, தனஞ்சயன் கேட்கவும், வசுந்தராவின் முகம் செக்கச் சிவந்து சூடாகி விட, அவசரமாக, உள்ளேஓடி விட்டாள் அவள்.

மற்றபடி, அங்கே நின்று, ''உன் காதலைப் பற்றிக் கற்பனை செய்து கொண்டிருந்தேன்.'' என்று, அவனிடம் உண்மையைச் சொல்ல முடியுமா, என்ன?

## 14

கேசவனுக்கு, மிகுந்த மகிழ்ச்சி.

அண்ணன் மகள்என்ன செய்தாளோ, எப்படிச் செய்தாளோ, மகனை, இங்கே இழுத்து வந்துவிட்டாளே! அதுவும், அவள் வந்த மறுநாளே!

அதை, அவர் வாய் விட்டுச் சொன்ன பிறகுதான், இங்கு வந்து, இன்னும் முழுசாக இரண்டு தினங்கள் கூட முடியவில்லை. அதிலும் தனஞ்சயனைச் சந்தித்து, ஒரு நாளைக்குரிய இருபத்து நாலு மணிநேரம் கூடக் கழியவில்லை என்பது வசுந்தராவுக்கு உறைத்தது.

காலை, மாலை இரு வேளையும் சந்தித்ததாலேயே, ஈராண்டு காலம் பழகிய சொந்தம், ஏற்பட்டு விடக் கூடுமா?

அதற்குள் காதல் கற்பனை வேறா?

இந்த இருபத்தியிரண்டு வருட வாழ்வில், காதல் கற்பனையே, அவளுக்கு வந்தது இல்லை என்று சொல்ல முடியாது. அதிலும், பெண் பார்க்க வருகிறார்கள் எனும் போது, அது போன்ற எண்ணங்கள் தோன்றாமல் இருப்ப தும் இயல்பல்ல.

ஆனால், முகமறியாத ஓர் உருவம் தவிர, குறிப் பிட்ட எந்த ஆணுடனும் அவள் தன்னை இணைத்து, எண்ணிப் பார்த்தது கூடக் கிடையாது. இவனோடு மட்டும் எப்படி?

ஒருவேளை, இதுதான் காதலா? என்ன பைத்தியக் காரத்தனம்!

பழைய திரைப்படங்களில், ‘கண்டதும் காதல்’ கொள்வதைப் பற்றி, எவ்வளவு கேலியாகப் பேசியிருப் பாள்! அவளுக்கே கண்டதும் காதலா?

அப்படியொன்றும் தனஞ்சயனைக் கண்டதுமே, அவள் காதல் கொண்டுவிட வில்லையே, நாள் முழுவ தும் அவனோடு பேசிப்பழகிய பிறகுதானே... என்று உள்ளம் அசட்டுத்தனமாக வாதாடத் தொடங்கிய பிறகு தான், வசுந்தராவுக்கு, முழுமையாக விழிப்பு வந்தது.

கடவுளே! இது போலெல்லாம் வசுந்தரா நினைத் தாள் என்று மட்டும் தெரிந்தால், அப்புறம் தனஞ்சயன், இந்தப் பக்கம் தலை காட்டவே மாட்டான்.

அவன் பாவம். அவனுடைய சித்தப்பா குடும்பத் துக்காக, அவளிடம் நின்று நின்று வாதாடினால், அதைப்

போய்... சே நினைக்கவே, அவமானமாக இருந்தது, அவளுக்கு.

''..என்னம்மா, பேசினாயா?'' என்று, கேசவன் சற்று உரக்கக் கேட்டபிறகே, நடப்புக்கு வந்து, 'என்ன சித்தப்பா?'' என்று கேட்டாள். அவள்.

கேசவன், அதை ஒன்றும் தப்பாய் எடுத்துக் கொள் ளவில்லை. ''நாளைக்கு, தனாவுடன் எப்படி வாதாடுவது என்று யோசித்துக் கொண்டிருந்தாயாமமா?'' என்று தானே, ஒரு காரணம் கண்டுபிடித்து மகிழ்ந்தபடி, மீண் டும், தன் கேள்வியைக் கேட்டார். ''நல்லபடியாக வந் தோம் என்று, வீட்டுக்கு ஃபோன் செய்தாயாம்மா?''

வசுந்தராவுக்கு, மீண்டும் ஒருதரம் விழிப்பு வந்தது. வீட்டைப் பற்றி, அவள் நினைக்கவே இல்லையே!

''இ..இரவில் ஃபோன் கட்டணம் குறைவு என்று..''

''அப்படி என்னம்மா, செலவாகிவிடப் போகிறது? சும்மா பேசு.'' என்று அவர் கூறவும், வசுந்தரா வீட்டு எண்ணுக்கு ஃபோன் செய்தாள்.

முதலில் ஃபோனை எடுத்தது சரசா.

மகள் குரலைக் கேட்டதும், ''கிளம்பி இரண்டுநாள் ஆகி, இப்போதுதான் ஃபோன் பண்ணத் தோன்றியதா, வசு? என்றபோது தாயின் குரல் தழுதழுத்தது போல, வசுந்தராவுக்குத் தோன்றியது.

அவள் எண்ணியது போலப் பிரிவு அன்பை வளர்க் கிறதா?

அவள் எண்ணமிடும் போதே, தாயிடமிருந்து ரீசிவரை வாங்கி, சௌந்தர்யா பேசினாள். ''அப்பாவிடம் ஜாலம்செய்து, வெளியூர் சென்றுவிட்ட பெருமை பேச நினைத்தாயாக்கும்? நீ ஒன்றும் லண்டனுக்குப் போய் விடவில்லை. வெறும் குப்பை மேட்டுக் கிராமத்துக்குத் தான் போயிருக்கிறாய். அந்தப் பட்டிக் காட்டுப் பெருமை எதையும் இங்கே, எங்களிடம் அளக்கத் தேவையில்லை ஃபோனை வை.'' என்ற அதட்டலோடு, ரிசீவரை வைத்து விட்டாள்.

இவள் மனம் மட்டும் எப்போதும் கல்லாகவே இருந்து விடுமா?

சற்று நேரம் தங்கையின் போக்கை எண்ணி வருந்தியவள், இன்னொருதரம், இவள் இப்படி நோகடிக்க இடம் தரக் கூடாது என்று முடிவு செய்தாள்.

டெலிஃபோன் செய்தால்தானே, இப்படி? பேசாமல், கடிதம் எழுதிப் போட்டுவிட்டால்?

அப்பா, அம்மாவுக்கு விஷயம் போய்ச் சேர்ந்த மாதிரியும் இருக்கும். வீணான வேதனையும் இராது!

இப்படித்தான் வசுந்தரா, வீட்டுக்கு கடிதம் எழுதத் தொடங்கியது. இரண்டு மூன்று நாட்களுக்கு ஒருதரம், தான் பார்த்தது, கேட்டது பற்றி, அவள் தாயாருக்கு ஒரு கடிதம் எழுதிப் போட்டுவிடுவது, அவளுக்கு வழக்கம் ஆயிற்று. பள்ளியில் நடந்ததையெல்லாம், மாலையில், அன்னையிடம் ஒப்புவிப்பது போல, தன் உள் மனதை ஒளியாது வெளிப்படுத்த முடியாத காரணத்தினாலேயே, வெளி விஷயங்களை, மேலும் விளக்கமாக எழுதினாள்.

எவ்வளவோ மனதைக் கட்டுப் படுத்திவைத்திருந்த போதும், கருணாகருடன், தனஞ்சயன் காரில் வந்த போது, வசுந்தராவுக்கு, உள்ளம் துள்ளத்தான் செய்தது.

தம்பியுடன் அளவளாவப் போகிறோம், புதிய ஊரைப் பார்க்கப் போகிறோம் என்பதால் வந்த உற்சாகம் என்று, தனக்குத் தானே சொல்லிக் கொண்டு, காரில் ஏறிய வசுந்தரா, முதலில் கருணுடன்தான் அதிகம் பேசிக் கொண்டிருந்தாள்.

ஆனால், அவன் வெறும் நாலே வயது நிரம்பிய சிறுவன். வீட்டை விட்டு அதிகம் வெளியேசென்று அறியாதவனும் கூட. எனவே, வெகு விரைவில் அலுத் துப் போய் அவள் மடியிலேயே தூங்கிவிட்டான்.

காரை நிறுத்தி, அவனைப் பின்சீட்டில் வசதியாகப் படுக்க வைத்த பிறகு இருவரும்தான் பேச வேண்டியிருந் தது.

முதலில், தனஞ்சயன்தான் தொடங்கினான்.

முதலில், சாதாரணமாக, அவளுடைய குடும்பத் தைப் பற்றி விசாரித்தான்.

''என் தங்கை, பேரழகி'' என்று, அவள் சொன்ன போது, 'உன்னை விடவா?'' என்ற அவனது கேள்வி, வசுந்தராவுக்கு மிகவும் இதமாக இருந்த போதும், சோனாவை நேரில் பார்த்தால், இவன் என்ன சொல்லு வானோ, என்ற கலக்கத்தையும் ஏற்படுத்தியது.

எனவே, பேச்சை மாற்றுவதற்காக, ''நீங்கள் ஒற் றைப் பிள்ளை என்பதால், மகாசெல்லமாக இருந்திருக்

கும். வீட்டில் ராஜ தர்பார்தான் நடந்தியிருப்பீர்கள்! என்றாள் வசுந்தரா.

'அதுதான் இல்லை.'' என்றான் தனஞ்சயன். ''கண் டிப்பு இல்லாமல்வளர்ந்து, கெட்டுவிடக் கூடாது என்றே எனக்குக் கண்டிப்பு எப்போதுமே, கொஞ்சம் அதிகம் தான். அத்தோடு, குடும்பத்தில் முதல் குழந்தை, செல்வி யக்காதானே, அக்காவுக்குத்தான் செல்லம் எல்லாம்.''

''ஆனால், கிராமப் புறங்களில், பெண் குழந்தை களை அடக்கி வளர்ப்பார்கள் என்று சொல்லுவார்களே.''

''அதெப்படிமயா? எங்கள் வீடுகளில் நடந்ததே, வேறு. இரு குடும்பங்களிலும் பிள்ளைத் தவமிருந்து பிறந்த முதல் மகவு என்பதோடு அவள் பெண் குழந்தை. எப்படியும் திருமணமாகி அடுத்த வீடு செல்லப் போகிற வள். அங்கே, எப்படி, எப்படி இருக்குமோ? இங்கே இருக்கிறவரை விருப்பம்போல இருக்கட்டும் என்று தான் வளர்த்தார்கள். ஜாதகம் பார்த்ததில், சிறு வயதி லேயே இறந்து விடுவாள் என்று, அறிந்து, அதனாலும் செல்லம் கொடுத்தார்களோ, என்னவோ? அது மட்டு மல்ல, அக்காவுக்கும் எனக்கும் வயது வித்தியாசம் எட்டு ஆண்டுகள். அதுவரை, இரு வீட்டுக்கும் ஒரே அடுத்த தலைமுறை அவள்தானே? எப்போதும் வீட்டின் செல் லப் பிள்ளை, அக்காதான்...'' என்றான், அவன்.

''நான் பிறந்து, வளர்ந்தது, பெரும்பாலும் அக்கா முகம் பார்த்துத்தான். தம்பி தம்பி என்று, தூக்கிக் கொள்ளுவாளாம். வளர, வளர, நான் அக்கா பின் னேயே சுற்றுவேன். அப்புறம், முருகன். அவனும்

அப்படித்தான். என்ன? எங்கள் கதை, ரொம்ப போரடிக் கிறதா?

''ச்சே! இல்லையே'' என்று மறுத்தாள் அவள். ''சொந்தப் பெரியப்பா, சித்தப்பா பிள்ளைகளே, ஒருவ ரையொருவர் கண்டு கொள்வது இல்லை. இரண்டு தலைமுறை முந்திய சகோதரர்களின் வம்சாவளி, இவ்வ ளவு நெருக்கமாக இருப்பது. கேட்கவே நன்றாக இருக்கி றது என்று மனதில் பட்டதைச் சொன்னாள்.

''ஆனால், இன்றையப் பிரச்சினைக்கு, அதுவும் ஒரு காரணமாகி விட்டது.'' என்றான், தனஞ்சயன், வருத்தத்துடன்.

சுற்றி வளைத்து, இதற்கு வந்துவிட்டானா?

''எப்படி?''

''சொந்தத் தம்பியாகக் கருதியதால்தான், பிழைக்க மாட்டோம் என்று தோன்றியதும், செல்வியக்கா, என் னைக் கூப்பிட்டு, கருண் விஷயமாக என்னிடம் வாக்குக் கேட்டாள்.''

ஆக, இவ்வளவு விலாவாரியாக, அவனைப் பற் றிய விவரம் தெரிவித்ததெல்லாம், இதற்காகத்தான் என்று அறியவும், அவளுக்குச் சுள்ளென்று கோபம் வந்தது.

''அப்படி உங்கள் அக்காவுக்கு, அதாவது என் சித்திக்கு, என்ன வாக்குக் கொடுத்தீர்கள்?'' என்று, வேண்டும் என்றே தன் உறவையும் குறிப்பிட்டுக் கேட் டாள். ''எப்படியும் என் சித்தப்பாவிடமிருந்து மகனைப் பிரித்தாக வேண்டும் என்று அவர்கள் சொல்லியிருக்க மாட்டார்கள்.''

''இல்லை. அப்படி அக்கா சொல்லவே இல்லை தான். ஆனால், அத்தானுக்கு, மருத்துவம் தான் மற்ற எல்லாவற்றையும் விட முக்கியம். குழந்தையைச் சரிவர, அவரால் பார்க்க முடியாது. அதனால், பிள்ளையை அப்பா, அம்மா வளர்க்கட்டும் என்றாள்'' என்றான், தாழ்ந்த குரலில் தனஞ்சயன்.

அன்றைய நினைவில் மீண்டும் வாழ்கிறான்! பாவம் தான். ஆனால், அதற்காக?

''அதற்காக, பெற்ற அப்பாவையே, ஒதுக்கி விடுவதா?''

சட்டென நிமிர்ந்து, ''அப்படி என்ன 'இனிஷிய' லையா, மாற்றி விட்டோம்?'' என்று பதிலுக்கு, ஆத்திரமாகக் கேட்டான், அவன். உடனேயே குரலைத் தணித்து, ''பார், வசு, இறந்தவளுக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டாமா?'' என்றான், தன்னிலை விளக்கமாக.

''ஆனால், இறந்தவர்களுக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக, உயிரோடு இருப்பவர்களை நோகடிப்பது சரியாகுமா? நீங்களே சொல்லுங்கள்?''

ஒரு கணம் தயங்கிவிட்டு, அவன் விளக்கினான். ''அதற்கு ஒரு முக்கியமான காரணம் இருக்கிறது. வசுந்தரா. உயிரோடு இருப்பவர்களிடம், நம் நிலையை எடுத்துச் சொல்லி, ஒத்துக் கொள்ளச் செய்ய முடியும். ஆனால் இறந்தவர்களுக்கு என்ன விளக்கம் கொடுக்க முடியும்? அது முடியாதபோது நம்மை, நம்பிப்

பொறுப்பை ஒப்படைத்தவர்களை ஏமாற்றின மாதிரி ஆகாதா?

''நீங்கள் சொல்வது, ஒரு வகையில் உண்மைதான். ஆனால், இது சித்தப்பாவும் சம்பந்தப்பட்ட விஷயம். அவருடன் கலந்து ஆலோசித்து, அவரைக் கேட்டு, நீங்கள் இந்த வாக்குக் கொடுக்கவில்லை. அப்படி யிருக்க, உங்கள் வாக்குறுதியை, அவரும் சேர்ந்து காப்பாற்ற வேண்டும் என்று நீங்கள் எப்படி எதிர்பார்க்க லாம்?'' என்று வசுந்தரா, ஒரு தெளிவுடன் கேட்டபோது, அவனால், பதில் கூற முடியவில்லை.

எனவே, ''நீ வக்கீலுக்குப் படித்திருக்க வேண்டும்.'' என்றான் எரிச்சலுடன்.

விடாமல், ''நியாயமான கேள்வியைக் கேட்க, யாரும் வக்கீலுக்குப் படிக்கத் தேவையில்லை'' என்றாள், அவள், பதிலுக்கு. ''உங்களால் பதில் சொல்ல முடிய வில்லை என்றால், அதற்காக கோபப் படுவதா? என்று, மேலும் கேட்டாள்.

காரினுள் கொஞ்ச நேரம் நிசப்தம் நிலவியது.

சற்றுப் பொருத்து, ''உங்களுக்குக் கோபமோ என்று தோன்றுகிறது. ஆனால், நான் சொன்னதில், தப்பு எது வும் இருப்பதாகவும் எனக்குத் தெரியவில்லையே!'' என்றாள் வசுந்தரா.

லேசாகத் தலையசைத்தான், தனஞ்சயன். ''ஒரு வகையில் பார்த்தால், நீ சொன்னது சரிதான். ஆனால், இதில், இன்னும் பல விஷயம் யோசிக்க வேண்டும். இருக்கட்டும், அதெல்லாம், பிறகு பார்ப்போம். இப்

போது முதன் முதலாக, இந்தப் பக்கம் வந்திருக்கிறாய். பார்த்து, கேட்டு ரசிப்பதை விட்டு மற்றதை நினைத்து மனதைக் குழப்பிக் கொண்டிருக்க வேண்டாம்.'' என் றான், தனஞ்சயன்.

வசுந்தரா, ஆவலோடு பார்க்கவும், காரை ஒதுக்கி நிறுத்தி, ''பார், எதிரே இருப்பது சுலோசன முதலியார் பாலம். கீழே ஓடுவது, தாமிரபரணி ஆறு. பொதுவாக, இந்தச் சமயத்தில், இவ்வளவு தண்ணீர் இராது. இந்த ஆண்டு மழை நன்றாகப் பெய்ததால், ஆறும், இருகரை தொட்டு அழகாக ஓடுகிறது. அங்கே, இடப்புறமாய் இன்னும் தள்ளிப் பார். ஆற்றின் கரையிலேயே ஒரு கோபுரம், அதுதான் குறுக்குத்துறை முருகன் கோயில். அதற்குச் செல்லும் வழி, சிந்து பூந்துறை. பெயரே அழகாக இருக்கிறதல்லவா? இடமும் மிக அழகாக இருக்கும். நேரம் இருந்தால், அதையும் இன்றே பார்த்து விடுவோம். அல்லது, அடுத்த தடவையில் வைத்துக் கொள்வோம்...'' என்று அவன் சொல்லிக் கொண்டே போக, அடுத்த தடவையும் அவளை அழைத்து வருவ தாக இருக்கின்றானா? என்று வியந்து மகிழ்ந்தது, அவ ளது உள்ளம்!

மீண்டும் காரில் ஏறும்போது, அவன் சொன்னதில் ஒன்று நினைவு வர, ''பார்த்து, கேட்டு ரசிக்க என்றீர் களே, கேட்பதற்கு ஏதாவது சங்கீத நிகழ்ச்சிக்குப் போகப் போகிறோமா?'' என்று வினவினாள்.

''அதற்கெல்லாம் நேரமே இல்லையே. சும்மா, காதைத் திறந்து வைத்துக் கொள். உனக்கே புரியும். சின்னூண்டு வாண்டுகூட, 'பெருசு, வா, போ', என்று

சென்னையில் கேட்டுப் பழகியிருப்பாய். ஆனால், இங்கே அடிக்கடி மரியாதைப் பன்மை விகுதிகளைக் கேட்கலாம். அண்ணாச்சி, தங்கச்சி, பெரியவரே. இப்படி யெல்லாம் முறை வைத்து, மரியாதையாக...'' என்று அவன் பெருமைப் பட்டுக் கொண்டிருக்கும் போதே. ''எலே நாயே'' என்று கடுங்குரலில் யாரோ அழைப்பது கேட்டது.

''அது எந்த ஊர் மரியாதை?''

வசுந்தரா அப்பாவி போலக் கேட்டுவிட்டுக் கலீர் என்று நகைக்க, அசடு வழிந்துவிட்டு, ''அவ்வப்போது 'சுள்'ளென்று வெயில் அடித்தால்தானே, நிழலின் அருமை நன்றாகத் தெரியும்?'' என்று சமாளித்தான் அவன்.

கருண் விழித்தெழுந்து, பசிப்பதாகச் சொல்ல, மூவரும் ஹோட்டலுக்குப் போனார்கள்.

தனஞ்சயன் இரண்டு மூன்று பேரிடம் டெலிஃபோனில் பேசினான்.

நெல்லையப்பர் கோயிலின் சங்கீதத் தூண்கள், நீள அகலங்களைக் கண்டு வியந்துவிட்டு, அழகிய காந்திமதி அம்மனைப் பக்தியுடன் தரிசித்துவிட்டுத் திரும்பினார்கள்.

அவ்வளவு நேரமும் கருண் கால்வலி, வாதம் என்று, சொல்லவே இல்லை என்பதைவிட, அவன் சொல்ல தனஞ்சயன் விடவும் இல்லை என்பதை வசுந்தரா கவனித்தாள்.

முழு நேரமும், அவன் கவனம் சிறுவனிடம்தான் இருந்தது.

ஒன்று, கோயிலுக்குள் அங்குமிங்கும் ஓடிய பூனைக் குட்டியிலிருந்து, அவன், அங்கே உற்சாகமாகப் பார்க்கக் கூடியவற்றைக் காட்டி ரசிக்க வைத்தான். அதிக நடையி னால் பிள்ளையில் கால் தளரும் போலத் தோன்றிய போதெல்லாம், 'உயரத்தில் இருந்து பார்' என்று விளை யாட்டுக் காட்டுவது போலத் தூக்கிக் கொண்டு நடந்தான்.

விளைவு, கருணுக்குக் கால்வலியின் நினைப்பே இல்லை.

காரில் தனஞ்சயன் குறிப்பிட்ட பல விஷயங்களில், இதுவும் ஒன்று ஆகப் போகிறது என்று உணர்ந்த வசுந்தராவுக்கு, அதுவரை இருந்த மகிழ்ச்சி கொஞ்சம் மங்கிப் போயிற்று.

நல்ல வேளையாகத் தமக்கை மகனிடம் முழுக் கவனத்தையும் செலுத்தியிருந்த தனஞ்சயன், அதைக் கவனிக்கவில்லை.

எனவே, இதற்குப் பதிலாக என்ன சொல்லலாம் என்று, வசுந்தராவால் யோசித்து வைக்கவும் முடிந்தது.

## 15

திருநெல்வேலியிலிருந்து, திரும்பி வருமுன், கேச வன் குறித்துக் கொடுத்திருந்த மருந்துகளை வாங்கிப் பத்திரப்படுத்திவிட்டு, இயந்திரப் பகுதிகள் போலத் தோன்றிய பலகனமான இரும்புச் 'சாமான்களை' 'டிக்கி'

யில் அடுக்கித் தனஞ்சயன் பூட்டியபோதுதான், திருநெல் வேலியில் அவனது முக்கிய வேலை இதுதான் என்று வசுந்தரா புரிந்து கொண்டாள்.

முக்கியமான வேலையோடு, மற்றவற்றையும் திட்ட மிட்டுச் சேர்த்து, ஒரே அலைச்சலில் எல்லாவற்றையும் முடித்துவிட்டான்!

பாராட்டத்தான் தோன்றியது, அவளுக்கு.

அந்த மலர்ச்சியோடு, அவை என்ன இயந்திரங்க ளுக்காக என்று விசாரித்தாள்.

அவள் அக்கறையாகக் கேட்டது அவனுக்குப் பிடித் திருந்தது போல, அவனும் புன்னகையுடனேயே பதில ளித்தான்.

டிராக்டர், பம்பு செட், மோட்டார் இவற்றின் உதிரிப் பாகங்கள் என்று அவன் கூற, அதைத் தொடர்ந்து, அவனது பண்ணையில் பல டிராக்டர்களும், பம்பு செட்டுகளும் சொந்தப் பயன் போக, வாடகைக்கு விடப் படுகின்றன என்பதும் அவளுக்குத் தெரிய வந்தது.

ஆச்சரியமாய் நோக்கி, ''பரவாயில்லையே, பரம் பரை நிலம் இருக்கிறது. அதை வைத்து விவசாயம் மட்டும்தான் செய்கிறீர்கள் என்று நினைத்தால், அது தொடர்பாகவே, நிறைய வழிகளில் சம்பாதிப்பீர்கள் போலத் தெரிகிறது! என்று வியந்தாள்.

''பின்னே வேண்டாமா? தலைமுறை தலைமுறை யாக, அதே நிலத்தில் அதே மாதிரிப் பயிரிட்டு. அதே வருமானத்தில் வாழ்வதா? இன்னும் நிறைய சம்பாதிக்க

இயலும் என்கிறபோது, அதைப் பயன்படுத்தாமல் இருப் பது தப்பு அல்லவா?

தாய் தங்கையின் நினைவுவர, வசுந்தராவின் முகம் வாடியது. ''அதற்காக, ஒரேயடியாய்ப் பணம், பணம் என்று பறப்பதும், தப்புதானே?''

''ஒரேயடியாக என்றால், என்ன அர்த்தம் என்று எனக்குப் புரியவில்லை. இப்போது, இந்த டிராக்டர் பம்புசெட் வாடகைக்கு விடுகிறேன். அரிசி மில் ஓட்டு கிறோம், கரும்பாலை இருக்கிறது. எல்லாவற்றிலும் பணம் வருகிறது. இதற்கு மேல், சர்க்கரை மில்லுக்கு ஏற்பாடு செய்து, அதிலும் சம்பாதிப்பதில் என்ன தப்பு? கையில் காசு இருந்தால்தானே, கணக்குப் பாராமல் செலவு செய்யவும் முடியும்? என் அப்பா ஓர் இலவசப் பள்ளிக் கூடமே நடத்துகிறார். எவ்வளவு ஆகும் என்று நினைக்கிறாய்? இதோ, இன்று வாங்கிய மருந்துகள் என்ன விலை தெரியுமா? சும்மா டாக்டர் பாதிப் பணமா வது பெற்றுக் கொள் என்கிறார். அதை, அவரால் கொடுக்க முடியுமா? அவருக்கு மருத்துவ மனையே கட்டிக் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறேன். அதிகப் படியாகச் சம்பாதித்தால்தானே அதெல்லாம் செய்ய முடி யும்?''

தனஞ்சயனின் படபடவென்று பேச்சு, அவள் சொன்னதை, அவன் தப்பாகப் புரிந்து கொண்டான் என்பதை வசுவுக்குத் தெரிவித்தது. அவனது வருத்தம், கோபம் எதையும் தாங்க முடியாமல், ''நான் நியாயமான பொருளீட்டலை, அப்படிச் சொல்லவில்லை, தனா. இந்த ... கடத்தல், திருட்டு, ஏமாற்றுவேலை... இதிலெல்லாம்

சம்பாதிக்கிறார்களே அவர்களை அல்லவா சொன் னேன்'' என்றாள் சமாதானமாக.

''இதை முதலிலேயே விளக்கமாகச் சொல்லியிருக்க லாம். போகட்டும். உன் 'தனா'வுக்காக, இப்போதும் இதை ஏற்றுக் கொள்கிறேன்'' என்று தனஞ்சயன், லேசாகி விட்ட குரலில் கூறவும், உலகம் மீண்டும் அழகுமயமாயிற்று.

சற்றுப் பொறுத்து, எதையோ சொல்ல வாயெடுத்து விட்டு, அவனே வேண்டாம். இப்போதைக்கு மனது நன்றாக இருக்கிறது. இதற்குமேல், இன்றைக்கு நாம் எந்தப் பிரச்சினை குறித்தும் பேச வேண்டாம். பிறகு பார்த்துக் கொள்வோம்'' என்றுவிட, அவளும் சம்மத மாய்த் தலையாட்டினாள்.

அதன்பின் இருவரும், இந்தப் பயணத்தினால் சற் றுக் களைத்திருந்த கருணனுக்கு உற்சாகமூட்டும் விதமாக அவனோடு பேசலாயினர்.

மூவரும் வந்து சேர்ந்த போது கேசவன் வீட்டில் இல்லை.

ஆனால், முத்துமாரியும், அவள் கணவனும் திரும்பி வந்திருந்தனர். அவர்களுடைய பேரனுக்குப் பெரியதாக ஒன்றுமில்லையாம். நாளைக்கு வீட்டுக்கு அனுப்பி விடுவார்களாம். ''கழுதப்பய ஒருநாளு முளு சுக்கும் வயித்தக் கலக்கிட்டாம்மா.'' என்று அங்க லாய்த்து விட்டு வேலைகளைப் பார்க்கப் போனாள், அவள்.

அவள் சென்றதும், ''மருந்துகளை, டிஸ்பென்சரியில் கொடுத்துவிட்டுப் போகிறேன். வாங்கிவந்த உதிரிப் பாகங்களை மாட்டி எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்தி ஓடவிட, இரண்டு நாட்கள் ஆகும். அதன்பிறகு வருகிறேன். அதற்குள், ஊரிலிருந்து அம்மா திரும்பிவந்துவிட்டால், அம்மாவின் அழைப்போடு வருவேன். நீ, கருண் குட்டியைப் பார்க்கப் போவாய் என்று தெரியும். ஆனால், சித்தியிடம் எதுவும் பேச வேண்டாம். என்ன?'' என்றான் தனஞ்சயன்.

வசுந்தராவும் அதற்கு ஒத்துக் கொள்ள, கருணனும் அவனும் விடைபெற்றுச் சென்றனர்.

தனஞ்சயனைச் சந்தித்தும் இரண்டு நாட்கள்தான் ஆகியிருந்தன. ஆனால், அந்த இரு தினங்களிலுமே பகல் பொழுதின் பெரும்பான்மைப் பகுதி, அவனுடனேயே கழிந்ததாலோ, என்னவோ, அவனோடு வெகு காலம் பழகிவிட்ட உணர்வு, வசுவுக்கு ஏற்பட்டிருந்தது. இப்போது அவனைப் பாராது இருக்கப் போகும், இரு தினங்களும் கூட, பெரிதான, நீண்ட காலம் போலத்தான் அவளுக்குத் தோன்றியது.

என்னென்ன செய்த போதும், தனஞ்சயனின் நினைவே வந்து குறுக்கிடவும், கையிலிருந்த 'பிரேசோ' வையும் பாலீஷ் செய்து கொண்டிருந்த பித்தளைக் கிண்ணத்தையும் தூக்கி ஓரமாய் வைத்துவிட்டு, அவனைப் பற்றி, ஒரு நீண்ட கடிதத்தை, வசுந்தரா அவளுடைய அன்னைக்கு எழுதி முடித்தாள்.

அதன் பின் ஒரு நல்ல விஷயத்தை தாயோடு பகிர்ந்து கொண்ட நிம்மதியோடு, வேலையைப் பார்க்கப் போனாள்.

மறுநாள் மாலையில், தம்பியைப் பார்ப்பதற்காக, அவள் தனஞ்சயனுடைய சித்தப்பா தாமோதரனின் வீட்டுக்குப் போன போது, அங்கே, ஒரு புதிய மனிதனைச் சந்தித்தாள்.

இரண்டாம் கட்டு தாழ்வாரத்தில், குறுங்கட்டிலில் அமர்ந்து, லட்சுமி அம்மாளோடு, பேசிக் கொண்டிருந்தான் அவன். இதுவரை வந்திருந்தால், நெருங்கிய உறவாகத்தான் இருக்க வேண்டும்.

வசுந்தராவைக் கண்டதும், முறுவலித்து வரவேற்று, ''கால் வலி, ரொம்ப குணம், அம்மா'' என்றாள். அந்தப் பெண்மணி. பிறகு, கருணை அழைத்து வருமாறு ஆள் அனுப்பி விட்டு, வந்திருந்த புதிய விருந்தாளியை, அவளுக்கு அறிமுகம் செய்து வைத்தாள்.

வந்திருந்தவன், லட்சுமி அம்மாளுடைய தங்கை மகன். அவனுக்கும், விவசாயம்தான் தொழில். சுற்று வட்டாரத்தில் ஒரு சிற்றூர்தான் அவன் வீடும். பொன்னுதுரை என்ற பெயர், அவனுக்குப் பொருத்தமாகவே இருந்தது. ஏனெனில், ஆறு விரல்களில் மோதிரங்கள், தடிமனான கைச் சங்கிலி, கழுத்தில் புலிநக டாலருடன் மைனர் செயின் என்று, முடிந்த அளவு தங்கத்தை அவன் தன் உடம்பில் அணிந்திருந்தான்.

தன்னை மீறி, கைக் கடிகாரம் தவிர, வேறு எந்த ஆபரணமும் பூண்டிராத தனஞ்சயனின் தோற்றம், முழு பாரத்துடன் முன்னே வந்து நின்றது. உழைப்பில் இறுகிய உடலும், நேரான பார்வையும்!

இந்தப் பொன்னுதுரை, அவளையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பதை, வசுந்தராவால்

உணர முடிந்தது. ஆனால், அவள், அவன் இருந்த திசைக்குத் திரும்பினாலே, அவன் சட்டெனப் பார்வையைத் திருப்பி, முற்றத்து வழியே வானத்தை வெறித்தான்.

இந்த நிலை வசுந்தராவுக்குச் சங்கடமாக இருந்தது. கருணுடன் கூட, இயல்பாகப் பேச இயலவில்லை.

இங்கிருந்து போய்விடலாமா என்று முயற்சித்தாலும், நேற்று முழுவதும் சுற்றியதில் கால்வலி என்று கருண் அசைய மறுத்து விட்டான். ''பாட்டியோட மருந்தைக் கேட்டா.. தர மாட்டாங்களாம் அக்கா. அது வயசானவங்க தடவுகிறதாம். நான் சின்னப் பிள்ளையாம். எனக்கெல்லாம், தானாகச் சரியாகிவிடுமாம் அப்படியாக்கா?'' என்று அவன் கேட்டபோது, தனஞ்சயனின் வேலை என்று வசுந்தரா உணர்ந்தாள்.

அவனுடைய சிறிய தாயிடம் பேசியிருக்கிறான்! அதற்குப் பலனும் தெரிகிறது.

ஆனால், இதற்காகவெல்லாம், சித்தப்பா, மகனிடம் அவரது உரிமையைவிட்டு விடவேண்டும் என்று எதிர்பார்ப்பது நியாயமில்லையே!

''அக்கா, அக்கா...'' என்ற கருணுடன் கூட எதையும் பேச முடியாமல், பொன்னுதுரையின் திருட்டுப் பார்வை அவளுக்கு எரிச்சலூட்டியது.

சற்றுப் பொறுத்துப் பார்த்துவிட்டு, திரும்பி அவனை நேராகப் பார்த்து, ''அந்த நாலு விரல்களை மட்டும் ஏன் விட்டுவிட்டீர்கள், மிஸ்டர் பொன்னுத்துரை?'' என்று கேட்டாள்.

டாக்டர் வீட்டுப் பட்டணத்துப் பெண், இப்படித் தன்னிடம் நேரே பேசக் கூடும் என்று எதிர்பார்த்திராத பொன்னுதுரை, திணறித் திண்டாடிப் போனான். ''என.. என்னையா கேட்டீங்... கேகேட்டாய்? என்ன கேட்.... வந்து எஎன்ன விரல்?'' என்று தடுமாறினான்.

''நாலு விரல்கள்.'' என்றாள், வசுந்தரா, அவனது தடுமாற்றத்தில் திருப்தியுற்று, ''கட்டை விரலர்வது மோதிரம் விழுந்து விடுமோ, என்று போடாமல் இருக்கலாம். ஆனால், நடு விரலையும் விட்டுவிட்டீர்களே, ஏன்?''

''அய்யோ, அது பாம்பு விரலாச்சே! அதில் மோதிரம் போட்டா, அது கொத்திருமில்ல? ஒனக்குத் தெரியாதா? என்று, பெரிய விஷயம் போல, அவன் கூறிய விதத்தில் அவளுக்குச் சிரிப்பு வந்தது.

அடக்கிக் கொண்டு, ''நாம் அந்த விரலில் மோதிரம் போடுவது, பாம்புக்கு எப்படித் தெரியும் மிஸ்டர் பொன்னுதுரை?'' என்று அவள் அப்பாவிபோலக் கேட்க, அவன்சற்று யோசித்துவிட்டு, ''நாகராஜாவுக்கு, ஆயிரம் கண்ணு, இருந்த இடத்தில் இருந்தே, எல்லாத்தையும் பார்க்கற சக்தியிலே பார்த்து ஒரு அடியாள் கிட்டே சொன்னா வந்து 'பொட்'டுன்னு கொத்திட்டுப் போயிரும்.'' என்று விளக்கினான்.

வசுந்தராவுக்கு மீண்டும் சிரிப்பு வந்தது. ''மனிதர்கள்தான், அடியாள் வைத்துக் கொள்கிறார்கள் என்று பார்த்தால், பாம்புமா?'' என்று நகைத்தாள்.

நாள் முழுவதும் போரடித்துக் கிடந்ததற்கு, இப்படிச் சிரிக்க முடிவது, நன்றாகக்கூட இருந்தது.

வசுந்தரா நேரடியாகப்பேசிய பிறகு, திருட்டுப் பார்வை பார்க்கத் தேவையில்லாமல் போகவே, அந்தப் பிரச்சினையும் தீர்ந்தது, அவனது அசட்டு நம்பிக்கைகள், அவளுக்குப் பொழுது போக்காகவும் இருந்தன.

ஆனால், தனஞ்சயன் இருந்து, அவனிடம் பேசிக் கொண்டிருந்தால் பொழுது தானாகப் போய்விடும். யாரும், அதை வலியப் போக்கத் தேவையிராது!

எல்லாமே, கடைசியாகத் தனஞ்சயனிடமே வந்து நிற்கவும், வசுந்தராவுக்கு, மனம் குழம்பியது. யார் அப்படி வரச் சொன்னார்கள், என்று சலித்துக் கொண்ட போதும், இன்றும் அவன் வந்து விடமாட்டானா என்ற ஏக்கத்தை அவளால் தவிர்க்க முடியவில்லை.

ஏக்கத்தை மறைத்தபடி சற்றுநேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு, வசுந்தரா கிளம்பினாள்.

லட்சுமி அம்மாள், வில்வண்டியைப் பூட்டச் சொல்லுகையில் பொன்னுதுரை, அதைத் தடுத்து, தன் ரேக்ளா வண்டியில், வசுந்தராவைக் கூட்டிப் போவதாகக் கூறினான்.

''ரேக்ளா வண்டியா? அதென்ன?'' என்று வசுந்தரா விசாரித்தாள். ''வில் வண்டி மாதிரி, கொஞ்சம் வித்தியாசமாய் இருக்குமா?''

''ரேக்ளா தெரியாது?'' என்று விழி தெறித்துவிடும் போலப் பொன்னுதுரை ஆச்சர்யப்பட்டான். ''ரேஸ் விடுவாங்களே, பார்த்ததில்லையா? பழைய சினிமாக்களிலே கூட வருமே, இங்கல்லாம், ஒவ்வொரு வருசமும், ரேக்ளா ரேஸ் நடக்கும். அடுத்த மாசம் கூட இருக்குது.

நான்தான் செயிப்பேன். மூணு வருசமா நான்தான் செயிச்சுக்கிட்டு இருக்கேன். தெரியுமா.'' என்றான் பெரு மையாக.

வசந்தரா மற்றவர்களைப் பார்க்க, ''ஆமாம்மா, இவனுக்கு அது ஒரு கிறுக்கு. கீழே விழுந்து அடிகிடி பட்டு விடுமோன்னு இவன் அம்மா பயப்படுவாள். ஆனால், இவன் கேட்கவே மாட்டான்.'' என்று அந்த அம்மாள் கூற அவனது வீரத்துக்கு, அது ஒரு புகழாரம் போலப் பெருமையாக முறுவலித்தான் அவன்.

அந்தச் சிறு வண்டியையும், அதில் கட்டவென்று இழுத்துவரப்பட்ட கன்றையும் பார்த்துவிட்டு, அதில் ஏற, வசந்தரா மிகவும் தயங்கினாள்.

அது கன்று அல்ல. இதற்காகவே வளர்க்கப்படும், முழு வளர்ச்சியடைந்த காளைதான் என்று பொன்னு துரை உறுதியளித்த பிறகே, அதில் ஏறினாள்.

''பூப்போல'' அவளைக் கொண்டு விடுவதாக, அவன் சொன்னது அதிகப்படியே என்ற போதும், வண்டி கூடை சாய்ந்து விடாமல், பத்திரமாகவே வீடு வந்து சேர்ந்தாள் அவள்.

''நீ பயந்திருவியோன்னு மெதுவா, ஓட்டினேன், இல்லாட்டா, இவ்வளுண்டு தூரத்துக்கு ஒரு 'நிமிட்'கூட ஆகாது'' என்று, பொன்னுதுரை பெருமையடித்தான்.

விசித்திரமான அனுபவம், விழுந்து விடாமல் இரு புறமும் பிடித்து, சமாளித்துக் கொண்டு வந்ததில், பய மற்ற ஏக்கங்கள், அவளது பக்கத்தில் கூட வரவில்லை.

மறுநாளும் பொன்னுதுரை, தன் பெரியம்மா வீட்டில் விருந்தாடிக் கொண்டுதான் இருந்தான்.

அன்று சஷ்டி என்பதால், திருச்செந்தூர் கோயிலுக்குச் செல்ல, லட்சுமி அம்மாள் ஏற்கனவே, வசுந்தராவை அழைத்திருந்தாள். வசுவும், அதுபற்றிக் கேசவனிடம் கூறி, அனுமதி பெற்றுத்தான் சென்றிருந்தாள்.

இப்போது பொன்னுத்துரையும் உடன் வந்தான்.

அவன் வந்ததும் ஒரு வகையில் நன்மையாகவே அமைந்தது. அலை மோதிய பெரும் கூட்டம், பெண்களையும் கருணையும் இடித்துத் தள்ளவிடாமல், அவ்வப்போது அவர்களுக்கு அரணாக இருந்து காப்பாற்றினான்.

ஆனால், என்னவோ பெரிய ரெளடிக் கூட்டத்தில் இருந்து, அவர்களைக் காப்பாற்றியது போல, அவன் அதைப் பற்றிப் பெருமை அடித்ததுதான், சற்று அருவருப்பாக இருந்தது.

முட்டி மோதிய மக்கள் கூட்டமும், பணம் பணம் என்றதும், மனதைப் பாதித்த போதும், திருநீற்று அபிஷேகத்துடன் முறுவலித்த முருகனின் முகம், மற்றதை மறக்க வைத்தது.

தரிசனத்தை முடித்துக் கொண்டு திரும்பும்போது விளக்கின் ஒளியில் லட்சுமி அம்மாளின் கண்கள் கசிந்திருப்பதைக் கண்டு, வசுந்தராவுக்கு, நெஞ்சுக்குள் வலித்தது.

இரு தரப்பாருக்கும் பொதுவாக, ஏதாவது ஒரு வழி இருக்குமா என்று, யோசிக்கத் தோன்றியது.

இரவெல்லாம், இதே யோசனைதான். தனஞ்சயன் வந்ததும், அவனையும் இதைப் பற்றி சிந்திக்கச் சொல்ல வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்தவளுக்கு, அவன் வந்ததும், வராததுமாகப் பேசியபேச்சு, மிகவும் ஆத்திரமூட்டியது. இந்த இடைப்பட்ட வழி தேடும் யோசனையை, அடியோடு மறக்க வைத்தது.

## 16

தனஞ்சயன் சொல்லியிருந்த இரண்டு நாட்களும் முடிந்து, மூன்றாம் நாள் அதிகாலையிலேயே, வசுவுக்கு விழிப்போடு கூட அவன் நினைவும் வந்துவிட்டது.

அவனிடம் எவ்வளவு சொல்ல வேண்டியிருக்கிறது!

ரேக்ளா வண்டிப் பயணம், திருச்செந்தூர் சென்றது, கருண் பற்றிப் புதிய ஆலோசனை...

தனா எப்போது வருவானோ?

ஒருவேளை, முதல் நாள் மாதிரி, சுனைக்கு 'வாக்கிங்' போவானோ, என்று தோன்றவும், சுனைப் பக்கமாக நடந்துவிட்டு வருவதாக, முத்துவிடம் சொல்லி விட்டுக் கிளம்பி விட்டாள்.

அவள் எதிர்பார்த்தது போல, தனஞ்சயனும் அங்கே வந்திருந்தான்.

ஆனால், அவனது பேச்சுதான், தீயாய் அவளைச் சுட்டு விட்டது.

அவளது புன்னகையைக் கொஞ்சமும் கண்டு கொள்ளாததோடு, முகம் சுளித்து, ''சென்னையிலிருந்து வந்ததாலேயே, மகா புதுமைப் பெண், என்ன கூத்து வேண்டுமானாலும் அடிக்கலாம் என்று, எண்ணிக் கொண்டிருக்கிறாயா? இங்கெல்லாம், கொஞ்சம் ஒழுங் குக்குக் கட்டுப்பட்டுத்தான் வாழ வேண்டும்'' என்று, அவன் கூறவும், வசுந்தரா, திகைத்துப் போனாள்.

இவன் இவ்வளவு கோபப்படும்படி, அவள் என்ன செய்துவிட்டாள்?

''நான் ஒன்றும்...'' என்று தொடங்கியவளுக்கு அப்படியே அவள் தப்பே செய்தாலும் கூட, அதைக் கண்டிக்கும் உரிமை இவனுக்கு ஏது என்று தோன்றிவிட, ''என்ன உளறுகிறீர்கள்?'' என்றாள் பதிலுக்குக் கோபத்து டன்.

''ஆமாம், உண்மையைச் சொன்னால், உளறலாகத் தானே தோன்றும்!''

''முதலில், உங்களுடைய அந்த மகா உண்மை என்ன என்று, சொல்லுங்கள். அது உளறலா, அல்லவா என்று, அப்புறமாக நான் சொல்லுகிறேன்'' என்றாள் அவள் அலட்சியமாக.

தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்ட சில கணங்க ளின் பின், சற்றுத் தணிந்த குரலில், ''கண்டவனோடு ஊர் சுற்றுவதா?'' என்று கேட்டான், தனஞ்சயன்.

''புரியவில்லையே! நான் எப்போது, யாரோடு ஊர் சுற்றினேன்?''

''ரேக்ளா வண்டியில் வலம் வருவதும், கோயிலுக்குக் கூடப் போவதும்...''

வியந்து நோக்கினாள், வசுந்தரா. ''எப்படித் தெரியும்? என்னை உளவு பார்க்க, இல்லை என் சித்தப்பா வீட்டை உளவு பார்க்க யாரையேனும் வைத்திருக்கிறீர்களா? முன்பு கூட, நான் வந்த அன்றே. உங்கள் சித்திக்குத் தகவல் கொடுத்தீர்கள்''

''இது சின்ன ஊர். பார்த்தவர்கள் வந்து சொல்ல மாட்டார்களா?''

''சொல்லுவார்கள்தான் ஆனால், அழகு எப்படி இப்படி என்றெல்லாம் சொல்லுவார்களா?''

''சரி, வழியில் நான்தான் பார்த்தேன். அழகாய்த் தோன்றினாள், சொன்னேன். இப்போது அதற்கென்ன? இன்றையப் பிரச்னையே வேறு அதற்குப் பதில் சொல்லு'' என்று, சற்று அழுத்தத்துடன் அவன் கேட்ட விதம், அவளை நிமிர வைத்தது.

தலையைச் சரித்து, ''என்ன பிரச்சினை? கண்டவனோடு சுற்றியதா? 'அந்தக் கண்டவன்' தான் எனக்குப் புரியவே இல்லை. சரியாகப் பார்த்தால், மிஸ்டர் பொன்னுதுரையும் எனக்கு மாமா உறவுதானாமே? பாட்டி சொன்னார்கள். நீங்களாவது, சித்திக்கு, இரண்டு தலைமுறை தாண்டி வந்த தம்பிதானே, அவர் என் சித்திக்கு நேர் சித்தி மகனாமே...'' அவன் குறுக்கிட்டான்.

''அதற்காக?''

''உங்களை விட அவர் நெருங்கிய உறவு. உங்களோடு, திருநெல்வேலி வரை வரும்போது, அவரோடு திருச்செந்தூருக்குப் போகக் கூடாதா, என்ன?''

''அவனும் நானும் ஒன்றா?''

காரணம் இல்லாமல் அதட்டினால், கோபப்பட வேண்டியதுதான் என்று எண்ணியபடி, ''இல்லையே! அவர் கொஞ்சம் உயரம் குறைச்சல். அப்புறம், நீங்கள் கார் வைத்திருக்கிறீர்கள். அவர் ரேக்ளா...'' என்று அடுக்கத் தொடங்கினாள், அவள்.

செய்வது அறியாதவன் போலத் தலையைக் கோதி விட்டுக் கொண்டான், தனஞ்சயன்.

சிறு மவுனத்தின் பின், ''நீ வேண்டும் என்றே பேசுகிறாய் என்று, நினைக்கிறேன். ஆனால், உன் நன்மைக்காகத்தான் சொல்லுகிறேன். பொன்னுதுரையோடு காணப்படுவது உனக்கு நல்லதல்ல. அவன் குணம் சரியில்லை. வேண்டுமானால், உன் சித்தப்பாவிடமே கேட்டுப்பார்'' என்றான்.

இருக்கலாம். கோயிலில், கூட்டத்திடமிருந்து அவளைக் காக்கும் முயற்சியில், பொன்னுதுரையின் உடல், அவள் மீது படத்தான் செய்தது. ஆனால், அந்தக் கூட்டத்தில், அதைத் தவிர்ப்பதும் முடியாத காரியம்! அதை, யாராவது பார்த்து வந்து, இவனிடம் சொல்லியிருப்பதும் சாத்தியமே. ஆனால், அதற்காக அவளிடம், இவன் எப்படி, இப்படிப் பேசலாம்?

''என்னைப் பார்த்துக் கொள்ள, எனக்குத் தெரியும்?'' என்றாள், அவள் சுருக்கமாக.

மீண்டும் ஒரு சங்கடமான மவுனம் நிலவியது.

இவன் வரவுக்காகவா, இவ்வளவு ஏங்கினோம் என்றிருந்தது, வசுந்தராவுக்கு.

பேசாமல் திரும்பிப் போய் விடலாமா என்று அவள் எண்ணியபோது, தொண்டையைக் கனைத்துக் கொண்டு, தனஞ்சயன் கேட்டான், ''கருண் விஷயமாக யோசித்தாயா?''

இடையில் எண்ணிப் பார்த்தையெல்லாம் ஆத்திரமாய் ஒதுக்கி விட்டு, ''அவனைப் பற்றி நினைக்க என்ன இருக்கிறது?'' என்றாள் அவள்.

''அன்றைக்கு நடந்தது நினைவில்லையா?'' என்றான், அவன் எரிச்சலை உள்ளடக்கிய குரலில்.

''அன்றைக்கு நடந்தது, ஒரு விதி விலக்கு. இனிமேல், கருணனுக்கு வேண்டிய ஏற்பாடு செய்து விட்டுத்தான், சித்தப்பா வெளியே போவார்!'' என்றாள் வசுந்தரா, மரத்த குரலில்.

''ஆமாம் செய்தாரே, சொந்த மனைவிக்கு! அது போலத்தானே?'' என்று, அவன் குத்தலாகக் கேட்கவும், வசுந்தராவும் பொங்கி விட்டாள்.

சொந்த மனைவி சாகட்டும் என்று எவனாவது, விட்டுவிட்டுப் போவானா? அதிலும், ஒரு மருத்துவர்? திருப்பிக் குத்தும் வேகத்தில், ''அப்படிப் பார்த்தால் இந்தக் கிராமத்திலேயே கிடந்து, சித்தியுடைய தம்பியைப் போலக் கருணனும் பாம்பு கடித்துச் சாக வேண்டும் என்கிறீர்களா?'' என்று கேட்டு விட்டாள்.

''ஏய்...!'' என்று, கத்தி விட்டான் தனஞ்சயன்.

கன்றிச் சிவந்து விட்ட அவன் முகத்தைப் பார்த்ததும் பயமும் திகைப்புமாக, வசுந்தரா, அப்படியே நின்று விட்டாள்!

ரத்தக் களறியாய்த் தோன்றிய கண்களையும், கை முஷ்டிகளையும், இறுக மூடிக் கொண்டு, தனஞ்சயன், சற்று நேரம் அசையாமல் நின்றான்.

அவனது உதட்டோரம் தசை துடிப்பதையும், கைகளில் நரம்பு எடுப்பதையும், மெல்ல மெல்ல அவன் சமனப்டுவதையும், செயலற்ற பிரமிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள், அவள்.

சற்றுப் பொறுத்து, ஒரு பெருமூச்சுடன், தனஞ்சயன் கண்களைத் திறந்தான்.

அப்போதும், சிவந்திருந்த விழிகளால், அவளை நோக்கி, ''இந்தப் படிக்கட்டில் சற்று உட்கார், வசு'' என்று அவளை அழைத்துச் சென்று அமர வைத்தான்.

தானும் அருகமர்ந்து, சில வினாடி நேரம், சுனையின் நீர்ப்பரப்பை வெறித்தான். பிறகு, அவள் புறம் திரும்பி, அமர்ந்த குரலில் கூறினான். ''பார் வசு, இனி ஒரு தரம், முருகனின் மரணம் குறித்து, இப்படித் தூக்கி எறிந்தாற்போலப் பேசி விடக் கூடாது என்பதற்காக, அதிலும் முக்கியமாகச் சித்தியின் முன்னிலையில், முருகன் பற்றிப் பேசவே கூடாது என்பதற்காகத்தான், நான், இதை உனக்குச் சொல்லுகிறேன்'' என்று தொடங்கிச் சொல்லலானான்.

''முருகனைப் பாம்பு எப்படிக் கடித்தது தெரியுமா? சித்தி, கொல்லையில் பூசணிக்காய் எடுக்கப் போயிருக்கிறார்கள். குச்சி கொண்டு தட்டி, கொடியை இழுத்துத்தான் பறித்திருக்கிறார்கள். ஆனால், அந்தப் பாம்பு முட்டையிட்டு அதைக் காக்கும் பாம்பு. இரை தேடி விட்டுத் திரும்பியிருக்கிறது. அப்போதும், அசையாமல் இருந்திருந்தால், அது, தன் போக்கில் போயிருக்கும். ஆனால், பெற்றவள் அருகே, பாம்பைக் காணவும், முருகன் பதறிவிட்டான். சட்டென அதன் வாலைப் பிடித்து, அவன் இழுத்த வேகத்தில் திரும்பி.... கழுத்திலேயே போட்டு பதறி விட்டான். பிறகு, ஒன்றுமே செய்ய முடியவில்லை. சில நிமிஷம்தான்... அதற்குள் எல்லாம் முடிந்து விட்டது.

''வேலையாட்கள், அந்தப் பாம்பு, முட்டைகள் எல்லாவற்றையும் துவம்சம் பண்ணிவிட்டார்கள். ஆனால், என்ன லாபம்? சொல்லு.

''சித்தியின் கண்களைக் கவனித்திருக்கிறாயா? அந்த சோகம்! ஒரு மகனுக்காகத் தாய் உயிரை விடலாம். அது பரவாயில்லை. கொஞ்ச காலத்தில், மனைவி மக்கள் என்று, அவன் துக்கம் ஆறி விடும். ஆனால் தாய்க்காக, மகன் உயிரை இழக்கும் போது, பெற்றவளின் வருங்காலமே, இருண்டு போய் விடுகிறது! மருகி மருகி.... பாவம்!''

தனஞ்சயன் கூறி முடித்த பின், வெகு நேரம் இருவராலும் பேச முடியவில்லை.

கோயிலில் பார்த்த, லட்சுமி அம்மாளின் கலங்கிய கண்கள் நினைவு வர, வசுந்தராவால், கண்ணீரை அடக்க முடியவில்லை.

சற்று நேரம் அவள் அழுவதைப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு, தன் கைக்குட்டையை எடுத்து, அவளிடம், தனஞ்சயன் கொடுத்தான்.

''போய், சுனையில் முகம் கழுவி விட்டு, கைக் குட்டையால் துடைத்துக் கொள். ஊர் விழித்து எழுந்தாயிற்று. யாராவது வந்து, நீ அழுது கொண்டிருப்பதைப் பார்த்தால், நன்றாயிராது''

மறுப்பின்றி, அவன் சொன்னதைச் செய்தாள், அவள்.

இருவருமாக, அதிகப் பேச்சின்றியே, வீடு திரும்பினர்.

அன்றையப் பேச்சின் விளைவாக, வசுந்தரா லட்சுமி அம்மாளிடம் நெருங்கிப் பழகத் தொடங்கினாள்.

அவ்வப்போது, பொன்னுதுரை வந்துபோகும் போது அவனோடு, அந்த இறுக்கமும் போய் விடும்.

அன்றையத் தினத்தின் பின் ஒரு போதும், கடுமையாகவோ, குத்தலாகவோ பேசாததோடு, அன்றையப் பேச்சுக்காகத் தனஞ்சயன், ஒரு மாதிரி மன்னிப்பும் கேட்டுக் கொள்ளவே, எல்லாம் சரியாகிப் போயிற்று.

வசுந்தரா நினைத்தது போலவே, கோயிலில் பார்த்த ஒருவர், அவனிடம் போய்ச் சொன்னதுதான். ''பாதுகாக்கிறேன் பேர்வழி! என்று, அவளை அவ்வப்போது தொட்டதோடு, கண்டபடி, பார்வையாலும் மேய்ந்து கொண்டிருந்தானாம்.

படிப்பு முழுவதும், ஆண்-பெண் சேர்ந்து படிக்கும் பள்ளி, கல்லூரியில் முடித்தவளுக்குச் சமாளிக்கத் தெரியாதா, என்று முடித்து விட்டாள், அவள்.

மற்றபடி, கருணின் பிரச்சினை, பிரச்சினையாகவே இருந்தது.

ஆனால், தனஞ்சயனின் எற்பாடாக, கருணன், அவனுடைய தந்தை வீட்டுக்கும் அடிக்கடி வந்து சற்று நேரம் தங்கிப் போகத் தொடங்கினான்.

இருந்த போதும், அடிப்படைத் தகராறில், தீர்மான மாய் ஒரு முடிவு காண்பது கடினமாகவே, இருந்தது.

ஒருநாள், தன் சித்தப்பாவின் சொத்து பத்துக்களைப் பற்றி. வசுந்தராவிடம் தனஞ்சயன் எடுத்துச் சொன்னான். கருணனுக்குத் தானே, இவையனைத்தும் சேர வேண்டும்? அவன், கேசவனிடம் போய் விட்டால், இதை யார் கவனிப்பது?

''என் சித்தப்பாவின் மருத்துவத் தொழில் எவ்வளவு புனிதமானது? அதை, மகனும் படிக்க வேண்டும் என்று, அவருக்கு இராதா?'' என்று, வசு வினவினாள்.

''ஷ்.. எப்போதும், உன் சித்தப்பாவுக்காகவே பேசுகிறாயே!'' என்று, தனா அலுத்துக் கொண்டான்.

கண்கள் பளிச்சிட, ''நீங்கள் செய்தால் சரி, நான் செய்தால் மட்டும் தப்பா?'' என்றாள் அவள்.

''நா...ன் செய்ததா? நீ என்ன சொல்கிறாய்?''

தலையைச் சரித்து நோக்கி, ''நீங்கள், உங்கள் சித்தப்பாவுக்காகப் பேசுகிறீர்கள். அதேபோல, நான் என்

சித்தப்பாவுக்கு வக்காலத்து வாங்குகிறேன்'' என்றுரைத்துச் சிரித்தாள் வசுந்தரா.

உரக்க நகைத்துவிட்டு, ''அப்படியானால் இதே மாதிரி, எதிலும் என்னைப் பின்பற்றத் தயார் தானா?'' என்று, கேட்டான் தனா.

பேச்சின் போக்கில், ''அடியாள் பாக்கியம்!'' என்று சொல்லிவிட்டு நாக்கைக் கடித்துக் கொண்டாள். அவள் உடனே முகம் சிவந்து, ''சும்மா விளையாட்டாய், பேச்சு வேகத்தில் சொல்லி விட்டேன். தப்பாக எடுத்துக் கொள்ளாதீர்கள்'' என்று சின்னக்குரலில் வேண்டினாள்.

கூர்மையான பார்வையால், அவளை நேராக நோக்கி, ''தப்பு ஏதும் இருக்கிறதா?'' என்று, மென் குரலில் கேட்டான், அவன்.

அவள் உதட்டைக் கடித்துக் கொண்டு பேசாதிருக்கவும், அவனே தொடர்ந்து பேசினான், ''கருண் விஷயம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டால், இது பற்றி, இலகுவாகப் பேசலாம். இப்போதைக்கு சும்மாதான் இருந்தாக வேண்டும், இல்லையா?'' என்று, அவள் பெரு மூச்சு விட, அவளுள் ஏதேதோ இனிய கற்பனைகள் மலர்ந்தன.

''யோசி, வசு. டாக்டரின் முக்கியமான வாதம். இங்கே இருந்து, வயதான தாத்தா, பாட்டியோடு பழகி, அதே பாவனை, அவனுள் ஊறி விடக் கூடாது என்பது தான், இல்லையா? இப்போது, என்னை எடுத்துக் கொள். எனக்குக் கொஞ்சம் கட்டுத் திட்டமான வளர்ப்பு என்றேனே, நினைவிருக்கிறதா? அந்த மாதிரி, அவனை வளர்த்தால் என்ன? நான் படித்ததெல்லாம், வெளியூரில்.

பள்ளி, கல்லூரி ஹாஸ்டல்களில் தங்கியிருந்துதான். என் பழக்க வழக்கங்களைக் குறை சொல்ல மாட்டாய் என்று நம்புகிறேன்... என்ன, அப்படித்தானே?''

கண்ணீர் சிரிப்புடன், ''இப்படி நேரடியாகக் கேட்டால், என்ன பதில் சொல்வது? மரியாதைக்காகவாவது, குறைந்தது, பரவாயில்லை என்றாவது, சொல்லித்தானே, ஆகவேண்டும்?'' என்று, அவள் பயந்த பாவனையுடன் கூற, இருவருமாகச் சேர்ந்து நகைத்தனர்.

சிரித்து முடித்த பிறகு, ''இது பற்றி, நான் சற்று நிதானமாகச் சித்தப்பாவிடம் பேசி விட்டு, அப்புறம் சொல்லுகிறேன், தனா'' என்றாள், வசுந்தரா.

அடுத்த இரு தினங்களில், தனஞ்சயனுடைய தாயார், ஊரிலிருந்து, திரும்பி வந்துவிட, விருந்துண்ண வருமாறு, வசுந்தராவுக்கும், அவளுடைய சிறிய தகப்பனாருக்கும் அழைப்பு வந்தது.

பெரிய விருந்துதான். கருண், அவனுடைய தாத்தா, பாட்டியும் கூட வந்திருந்தனர்.

இங்கும் வசுந்தராவுக்கும், ஒரு பட்டுச் சேலை கிடைத்தது.

பழம் தேங்காயுடன், சேலையை வைத்துக் கொடுத்து விட்டு, ''அடுத்து, இதை விட நல்ல, விலை உயர்ந்த சேலை கொடுக்கும் வாய்ப்பைக் கடவுள் அருளட்டும்'' என்று, அந்த அம்மாள் ஆசி கூற, வசுந்தராவின் உள்ளம், துள்ளாட்டம் போடலாயிற்று.

தரை மீது கால் படுகிற உணர்வே இல்லை. எங்கோ, வானத்தில் பறக்கிற மாதிரி, ஓர் உற்சாகம்!

உல்லாச வானில், உயரப் பறந்து கொண்டிருந்தவளைத் தரைக்குக் கொண்டு வந்து சேர்ப்பது போல, மறுநாள், அவளுக்குத் தாயிடமிருந்து, ஒரு கடிதம் வந்தது!

அவளுடைய தங்கை சௌந்தர்யா, அந்த கிராமத்துக்கு வருகை தரப் போவதாக, அது தெரிவித்தது.

## 17

முதலில், வசுந்தரவால், அந்த கடிதத்தை நம்பவே முடியவில்லை!

சௌந்தர்யா இங்கேயா?

குப்பை மேடு, பட்டிக்காடு, என்றெல்லாம் சொன்னவள், ஏன் இங்கே வருகிறாள்?

வருகிறவள் தங்கை, அவள் வருகிறாள் என்றால், ஆனந்தப்பட வேண்டுமே தவிர, என்ன செய்யப் போகிறாளோ என்று, அஞ்சுவது தவறு... என்றெல்லாம் தனக்குத் தானே அறிவுறுத்திக் கொண்ட போதும், வசுவுக்குக் கலக்கமாகத்தான், இருந்தது. சூடு பட்ட பூனையைப் போல.

பொதுவாக, சௌந்தர்யா ஒரு காரியம் செய்வது என்றால், அதற்கு இரண்டு காரணங்கள் இருக்கும். ஒன்று, அவளை மிகவும் உயர்த்திக் காட்டுவது. அடுத்தது, வசுந்தராவை, முடிந்த அளவு தாழ்த்திக் காட்டுவது.

ஒரு கல்லில் இரு மாங்காய் என்பது போல, இவை இரண்டையும் சேர்த்துக் கொள்ள முடிந்தால், அவளுக்கு இரட்டிப்பு சந்தோஷம்!

இப்போது, தங்கை எதற்காக வருகிறாள்?

அவளையே உயர்த்திக் கொள்ளவா? அக்காவைத் தாழ்த்தவா? அல்லது, இரண்டையுமே, சேர்த்துச் செய் யவா?

ஒதுங்கிப் போனாலும், பின்னோடு துரத்தி வந்து, துன்புறுத்தியே, ஆக வேண்டுமா?

இது போன்ற சிந்தனைகளோடு சற்று நேரம் சோர்வு டன் அமர்ந்திருந்த வசுந்தரா, தன்னைத் தானே, உலுக்கி விட்டுக் கொண்டு எழுந்தாள்.

ஏன் கெடுதலையே நினைக்க வேண்டும்? ஒரு வேளை சோனாவும் மாறியிருக்கலாம்.

பிரிவு அன்பை வளர்க்கும் என்று, அவள் முன்பு எண்ணியதே நடந்திருக்கலாம்.

அன்றைக்கு, அம்மாவின் குரல் தழுதழுக்கவில் லையா? இவள் மனம் கொஞ்சம் தாமதமாக மாறியிருக்கி றது. மாறி, அக்காவைப் பார்க்க வேண்டும் என்று, தோன்றியிருக்கும், உடனே கிளம்பி விட்டாள்!

இதற்குப் போய்க் கவலைப் பட்டுக் கொண்டு!

தங்கை எப்போது வரப்போகிறாள் என்பதை அறி யக் கடிதத்தை மீண்டும் படித்தபோது, வசுந்தராவுக்கு அடுத்த அதிர்ச்சி! அந்தச் சமயம் சோனா, ரயிலில் வந்து கொண்டிருந்தாள்!

சரசாவின் கடிதம் சுருக்கமாக இருந்தது. 'நல்மாயி ருப்பாய் என்று நம்புகிறேன்' என்ற ஒரு வாக்கியம் மட்டுமே, வசுவுக்கு ஆறுதல். மற்றபடி, சோனா ரயிலில் திருநெல்வேலி வரை வருவதும், பெட்டிகளை எடுத்து வைத்து, அடுத்த ரயில் மாற, அவளால் முடியாது என்பதால் வசுந்தரா, அங்கு சென்று தங்கையை அழைத் துச் செல்ல வேண்டும் என்கிற உத்திரவும் மட்டும்தான் கடிதத்தில் இருந்தது.

சுனையூர்த் தபால் மாலையில்தான் வரும். வசுந்தரா வின் பெயருக்குக் கடிதம் வந்ததும், அதை 'கிளினிக்' பையன் மூலம் கேசவன் அனுப்பியிருந்தார்.

தங்கையின் வருகை பற்றி தாயாரிடம் பேசலாமா, என்று யோசித்து விட்டு அந்த யோசனையை, வசு உடனே கைவிட்டாள். ஏதாவது விஷயம் என்றால் இவள் கேட்பதே, சரசாவுக்குத் தப்பாகி விடும்!

எப்படியும், சோனா வந்ததும் தானாகத் தெரிந்து விடப் போகிறது!

கடிதம் உத்திரவிட்டது போல, சௌந்தர்யாவைத் திருநெல்வேலியிலிருந்து அழைத்து வருவது எப்படி என்று யோசிக்கத் தொடங்கினாள் வசுந்தரா.

தனஞ்சயன் ஊரில் இல்லை. அவனது சர்க்கரை ஆலை விஷயமாக, அவன் சென்னைக்குச் சென்றிருந் தான். அப்படியே, அவன் ஊரில் இருந்தாலும், அவனி டம் உதவி கேட்டு, அவனையும், சோனாவையும், அதற்குள் சந்திக்க வைக்க, அவளுக்குக் கொஞ்சமும் மனம் வரவில்லை.

எப்படியும் சுனையூரில் சந்திக்கத்தான் போகிறார்கள். அப்போது, என்ன நடக்குமோ, கடவுளுக்குத்தான் வெளிச்சம்! இப்போது, அந்தச் சந்திப்பை, அவளே, விரைவுபடுத்துவானேன்?

குழம்பிக் கொண்டே உட்கார்ந்திருந்தால், காரியம் ஆகாது என்று உணர்ந்தவளாய், செருப்பை மாட்டிக் கொண்டு, கேசவனின் 'கிளினிக்' நோக்கி நடந்தாள் வசுந்தரா.

பத்து எட்டு எடுத்து வைக்குமுன், ரேக்ளா வண்டியோடு, வந்து சேர்ந்தான் பொன்னுதுரை.

சும்மா அவளைப் பார்க்க வந்தவன், விவரம் அறிந்ததும், வற்புறுத்தித் தன் வண்டியில் ஏற்றி, அவளைக் கேசவனிடம் கூட்டிச் சென்றான்.

அவர் ஒரு டாக்சிக்கு ஏற்பாடு செய்தார்.

ஆனால், நெல்லை வரை, வசுந்தரா தனியே போக வேண்டுமே, என்று அவர் யோசித்த போது, வசுந்தராவை பார்த்தபடி, கூடவே நின்று கொண்டிருந்த பொன்னுதுரை, தான் துணை போக முன்வந்தான்.

''நான் கூடப் போனால் ஒரு பயல் வாலாட்ட மாட்டான், சார். உங்கள் பெண்ணைப் பத்திரமாகக் கூட்டிப் போய் வருகிறேன். நீங்கள் கவலைப் படாமல் நிம்மதியாக இருக்கலாம்'' என்றான் பெருமையாக.

''எவனும் வாலாட்டுவான் என்று, இல்லை. ஆனால், நம்மவர் என்று யாராவது இருந்தால், நல்லது. அவ்வளவுதான்'' என்று, கேசவன் கூற, ''அதுதான்,

கவலையே வேண்டாம் என்றேனே, சார்'' என்று, அடித்துப் பேசினான், பொன்னுதுரை.

முதல் முதலாக, அவர்களைச் சுனையூருக்குக் கூட்டி வந்த டாக்சிதான் வந்தது. அதே டிரைவரும் கூட. வசுந்தராவைக் கண்டதும் மரியாதையுடன் கார் கதவைத் திறந்து விட்டு, குசலம் விசாரிக்கவும், வெகு பவ்விய மாக, தானாகவே முன்புறம் ஏறி அமர்ந்தான் பொன்னு துரை.

ரயிலில் இருந்து இறங்கிய தங்கையைப் பார்த்ததும், வசுந்தரா, திகைத்துப் போனாள்.

'அல்ட்ரா மாடர்ன்' என்பார்களே, அது போல, இன்றைய என்று கூடச் சொல்ல முடியாது. நாளைய நாகரீகத்தின் பிரதிநிதியாக வந்திருந்தாள்.

சற்று அருவருப்பாகக் காட்டும் அளவுக்கு அதி நாகரீகம்!

ஒரு தரம் விழி தெறித்து விடும் போலப் பார்த்து விட்டு, பொன்னுதுரையே தலையைத் திருப்பிக் கொள்ள வும், ''இது என்ன உடை, சோனா? இது கிராமம். இங்கெல்லாம், இதுபோல, அணிந்தால் நன்றாயிராதே'' என்றாள், தணிந்த குரலில் வசுந்தரா.

''எலலாம் எனக்குத் தெரியும்!'' என்று, கழுத்தை வெட்டினாள், சௌந்தர்யா. ''நீ முதலில் என் பெட்டி களை, இறக்குகிற வழியைப் பார். மொத்தம் பத்து. நகைப் பெட்டியுடன் சேர்த்துப் பதினொன்று!''

நடுத்தர அளவுப் பெட்டி தவிர, கொஞ்சம் பெரிய தாக ஒரு தோள்பை. கேட்டதற்கு, அந்தப் பட்டிக் காட்டுக்கு கொண்டு போக, இது போதாதா, என்று, இருவருமாக, எவ்வளவு பேசினார்கள்! இப்போது 'நகைப் பெட்டியுடன், பதினொன்றா? என்ன நியாயம், இது? ஆனால், அவள் வீட்டில் என்றைக்கு நியாய, அநியாயம், பார்த்தார்கள்?

சுமைகூலி பேசும் போது அடித்துப் பேசி, கூலி யைப் பாதியாக்கி, தான் உடன் வந்ததை, நியாயப்படுத் திக் கொண்டான், பொன்னுதுரை.

தள்ளுவண்டி எடுத்து வருவதாகச் சென்ற போர்ட் டர் திரும்பி வருவதற்காக, மூவரும் காத்திருந்த போது, ''வசு, இங்கே எங்கே நீ?'' என்று வியந்த குரலைக் கேட்டு, வசுந்தரா மகிழ்ச்சியும், பயமுமாக, திரும்பிப் பார்த்தாள்.

தனஞ்சயன் தான்!

இவன். இங்கிருந்து, இன்றைக்குத்தானா, தனஞ்சய னும் திரும்பி வர வேண்டும்?

வேறு வழியின்றி, தங்கைக்கும், தனஞ்சயனுக்கும், அறிமுகம் செய்து வைத்தாள்.

''வசு தங்கையா? 'என் தங்கை அழகு' என்று, அவ்வப்போது பீற்றுவாள். உண்மைதான் போல. ஊரில் அப்பா, அம்மா எல்லாம் சுகமா?'' என்று, முறைப்படி குசலம் விசாரித்தான் அவன்.

பிறகு, அருகில் நின்று கொண்டிருந்த பொன்னு துரையைப் பார்த்து, ''நீ எங்கேப்பா, இங்கே?'' என்று கேட்டான், தனஞ்சயன்.

''நம்ம வசுவுக்குத் துணையாக வந்தேன், அண்ணே. வேறே யாரை நம்பி, டாக்டர் சார் மகளை, இவ்வளவு தூரம், அனுப்புவாரு? நல்லவேளை! டாக்சி பேசியபோது, நானும் பக்கத்திலேயே இருந்தேனா, வசதியாகிப் போயிற்று'' என்றான், அவன் பெருமையாக.

''ஓகோ!'' என்று திரும்பினான், தனஞ்சயன். அதன் பின், அவன் வசுவின் பக்கம் பார்க்கவில்லை.

வேறு டாக்சி பிடித்துச் செல்லுவதற்குப் பதிலாக, அவர்களுடனேயே வந்து விடுவதாகத் தனஞ்சயன் கூறி யது, வசுந்தராவுக்கு ஆச்சரியம்தான்.

ஆனால், சோனாவின் கர்வப் பார்வையைக் கண்ட தும், அவள் உள்ளூர, நொறுங்கத் தொடங்கினாள்.

அடுத்தொரு பழைய கதையா? மற்றதைப் போல, இதைத் தாங்க முடியுமா? ஆனால் தனஞ்சயன் கூடவா?

சௌந்தர்யாவின் பெட்டிகள், காரின் 'டிக்கி' கொள் ளாது, உட்காருமிடத்திலும் அமர்ந்தன.

''நீங்க, முன்னாலே வசதியாய் உட்காருங்க. நான் வேணுமானா...'' என்ற பொன்னுதுரையின் பேச்சை, இடையிலே வெட்டி, ''வேண்டாம். நாம் இருவருமே, முன்புறமே உட்கார்ந்து கொள்ளலாம். அதுதான், வசதி. உங்களுக்கு ஒன்றும் கஷ்டமில்லையே, டிரைவர்?''

என்று, தனஞ்சயன் கேட்க, ''இல்லை, சார். பெரிய ஆளுங்க மூணு பேரை, முன்னால வச்சுக்கூட ஓட்டி யிருக்கிறேன், நீங்க ரெண்டு பேர்தானே'' என்றான் காரோட்டி.

''எதற்காகக் கஷ்டப்பட்டு, இடித்துக் கொண்டு நீங்கள் முன்புறம் உட்கார வேண்டும்? நான் நடுவுக்கு நகர்ந்து கொள்கிறேன். இங்கே வந்து விடுங்கள்'' என்று இனிய குரலில், சோனா தனஞ்சயனை அழைத்தாள்.

''எங்கே, உன் பெட்டிகளுக்கே, அங்கே இடம் போதாது. பொன்னு, நீ ஏறப்பா'' என்றான், தனஞ்சயன்.

அப்போதும் விடாமல், ''வேண்டுமானால், இரண்டு பெட்டிகளை, வசு மடியில் வைத்து விடலாமே. இடம் கிடைத்து விடும்'' என்றாள் சோனா.

சொல்வதறியாமல், வசுந்தரா உட்கார்ந்திருக்க, ''தேவையில்லை'' என்றபடி, தானும் ஏறிக் கார் கதவைச் சாத்தினான், தனஞ்சயன். ''சும்மாவே, அவளுக்கு உட் கார இடமில்லை. என்றவன் லேசாகப் பின்புறம் திரும்பி, ''ஒரு பெட்டியை, உன் தங்கை பக்கம் தள்ளி வைத்து விட்டு, ஒழுங்காக உட்காருவதற்கென்ன?'' என்று அதட் டினான்.

முதல் வார்த்தைக்குப் பிறகு அவ்வளவு நேரமாக, அவனது பாராமுகம், ஏற்கனவே, வசுவுக்குத் தொண்டை யடைத்துக் கொண்டிருந்தது. சோனா வருகிறாளே என்று, அவள் கலங்கியது. சரியாகி விட்டது போலிருக்கி றதே, என்று சும்மாவே தவித்துக் கொண்டிருந்தாள். கடைசியாக, இப்போது, அவளிடம், அவன் பேசியதும்

அதட்டலாக இருந்தது. இன்னமும் வேதனையை அளிக்க, அவள் ஒரேயடியாக வாய் மூடிப் போனாள்.

சௌந்தர்யாவின் மூளை, வழக்கம் போலவே, வேகமாக வேலை செய்தது.

இந்த இரு ஆண்களுக்கும் வசுவிடம், அக்கறை இருக்கிறது. 'ஆலையில்லா ஊரில் இலுப்பைப் பூ சர்க்கரை' என்பது போலப் பட்டணத்துப் பெண் என்ற பிரமிப்பில் பல்லை இளித்திருப்பார்கள்! இவளும் அதற்குச் சரியாக நடித்து, இவர்களைப் பிடித்திருப்பாள். முதலில் அதை உடைக்க வேண்டும்!

எண்ணியதை உடனே செய்யாதிருக்கலாமா? அதுவும், இந்த விஷயத்தில்?

தமக்கையின் பக்கம் திரும்பி, ''என்னக்கா, கிராமத்தில், நல்ல கெட்டித் தயிரும், வெண்ணையுமாகவே முழுங்குவாயா? இடுப்பு, இப்படித் தடித்து விட்டதே!'' என்று தொடங்கியவள்.

தடிக்கவில்லை, வசுந்தராவின் இடுப்பு, இதுவரை தடித்ததும் இல்லை. அவள் சோம்பியிருப்பது இல்லை. ஓடியாடி வேலை செய்வதும், நன்றாக நடப்பதுமாக இருப்பதால், அவளது இடுப்பில் சதை போட்டது கிடையாது. சோனா போல, 'டயட்' 'ஜிம்' என்று, அவள் கஷ்டப்பட நேர்ந்ததும் கிடையாது. மெய்யாகவே, பொய்யோ 'என்றிருக்கும் அவளது இடை' சோனாவுக்கு, இப்போதுமே, மிகவும் ஆத்திரமூட்டியது.

எப்போதும் போல, இப்போதும், வசுந்தராவின் இடுப்பு அழகாகத்தான் இருந்தது. ஆனால், காரில்

உட்கார்ந்திருக்கும் போது, அது வெளியே தெரியாதே! பயணம் முடிந்து காரை விட்டு இறங்கும்போது ஒன்று இந்தப் பேச்சு மறந்துவிடும். அப்படியே, நினைவு வந்தாலும், 'முன்பு இதை விட அழகாக இருந்திருக்கும் போல' என்றுதான் தோன்றும்.

மொத்தத்தில், அவள் தயிர், வெண்ணை என்று முழுங்கினாள் என்பதுதான் நினைவில் நிற்கும்.

தனஞ்சயனின் பாராமுகத்தால், ஏற்கனவே வாடியிருந்த வசுந்தரா, தங்கையின் தாக்குதலில் மேலும் மனம் சோர்ந்தாள்.

இவள் மாறவில்லை. இந்தப் பிரிவு, அவளைக் கொஞ்சமும் மாற்றவில்லை. அக்கா என்ற அன்பு சோனாவின் மனதில் கொஞ்சம் கூட ஏற்படவில்லை!

இப்போது, இவள் பேச்சை மறுத்துச் சொல்லலாம். ஆனால், என்னவென்று? 'நான் சாப்பிடவில்லை' என்றா? இடுப்புத் தடிக்கவில்லை என்று காட்டுவதா?

எல்லாமே அசிங்கமாகத் தோன்றி விட, இறுகிப் போய்க் கல்லாய் அமர்ந்திருந்தாள் வசுந்தரா.

தன் துருப்புச் சீட்டான அடுத்த தாக்குதலைத் தொடங்கினாள் சௌந்தர்யா.

''உன் நிறம் கூட, அடியோடு போய் விட்டதே! முன்பே, சுமார்தான் என்றாலும், இப்போது, அட்டைக் கரி மாதிரி ஆகி விட்டாயே., பார்!'' என்று, தமக்கையின் கன்னத்தில் கையை வைத்த சோனா, திகைத்துப் போய் பட்டேனா, கையை எடுத்து விட்டாள்.

சுத்தமான கிராமத்துக் காற்றும் தண்ணீரும் மிக மிக ஒத்துப் போனதாலோ என்னவோ, வசுந்தராவின் முகம் பளபளவென்று இருந்தது. 'ஷாப்பிங், ஷாப்பிங்' என்று அலைந்ததில், 'பார்லர்' போக நேரமில்லாமல் போனதின் விளைவாக, சௌந்தர்யாவின் கையில், நிறம் தவிரப் பழைய பளபளப்பு இல்லை!

முதலில், இங்கே ஒரு 'பார்ல'ருக்குப் போக வேண்டும்.

காரினுள் இருக்கும் மற்றவர்களுக்கும், தனக்கும், சம்பந்தமே இல்லாத மாதிரி, தனஞ்சயன், நேர் எதிரே பார்த்தபடி, பேசாமல் அமர்ந்திருந்தான்.

ஆனால், எரிகிற தீயில் எண்ணையை ஊற்றுகிற மாதிரி, பொன்னுதுரை தான் பேசி விட்டான்.

''நீ சொல்வது சரியில்லை. சவுந்தர்யா. வசுந்தரா, எப்போவும் போல, இப்பவும் நல்ல அழகுதான். அன்றைக்கு, எங்க பெரியம்மா கூட, என்கிட்டே சொன்னாங்களே, 'பொன்னு, லட்சுமி என்கிறது எனக்குப் பேரு மட்டும்தான். ஆனா, அழகிலேயும், குணத்திலேயும் மெய்யான மகா லட்சுமி வசும்மாதான்' அப்படின்னு சொன்னாங்க'' என்று கூறவும், சௌந்தர்யாவுக்கு உள்ளம் கொதித்தது.

அதை, எப்படிக் காட்டுவது என்று புரியாமல், அவள் திணறியபோது, பொன்னுதுரையின் பேச்சு பிடிக்கவில்லை என்று காரிலிருந்த இன்னொருவனும் காட்டினான்.

அதுவரை தான் கொண்டிருந்த மௌனத்தைக் கலைத்து, ''சித்தி, எப்போது, இப்படி, வசுந்தராவை, உன்னிடம் புகழ்ந்தார்கள்?'' என்று, தனஞ்சயன் ஒரு மாதிரிக் குரலில் கேட்டான்.

மற்றவன் பதில் சொல்லுமுன், பேச்சு சென்ற விதம் பிடிக்காமல், ''அய்யோ!'' என்று, சோனா கத்தினாள்.

எல்லோரும் அவளைத் திரும்பிப் பார்க்கவும், ''தாகம் தொண்டையை வரட்டுகிறது, தலைவலி மண்டையைப் பிளக்கிறது. குளிர்ச்சியாக ஏதாவது குடிப்பதற்கு வேண்டும்'' என்றாள் அவள்.

அடுத்து வந்த சாலையோரக் கடை ஒன்றில், பெப்சி வாங்கிக் குடித்துக் கொண்டே, சௌந்தர்யா, பொன்னுதுரையை அளவிட்டாள்.

என்ன தைரியம் இருந்தால், இவன் வசுந்தராவை அழகு என்பான்? மகாலட்சுமியாமே!

இவனை அடிமையாக்காவிட்டால், அவள் அழகாயிருந்து, என்ன பிரயோசனம்?

கண்களைப் படபடவென்று கொட்டியவாறு, அவனை நெருங்கும் போதே, அவளுக்குத் தாய் சொன்னது நினைவு வந்தது.

## 18

**வ**சுந்தராவின் கடிதங்களைப் படிப்பதில், வீட்டில் யாருக்கும் அவ்வளவாக, சுவாரசியம் இருந்ததில்லை. அவளைப் போல, மேகம், தண்ணீர், இலை,

செடி, என்று ரசிக்கும் தன்மை அந்த வீட்டில், வேறு யாருக்கும் கிடையாது.

'சுகமாயிருக்கிறாள்' என்பதோடு, ராகவன் திருப்தி யாகி விடுவார். சரசா கொஞ்சம் படிக்க நினைப்பாள். ஆனால், அது சின்ன மகளுக்குப் பிடிக்காது என்பதால், அவளும் விட்டு விடுவாள். எப்போதாவது, சோனா இல்லாத சமயம், பெரியவளின் கடிதங்களை அவள் பிரித்துப் படிப்பதுண்டு. அப்படிப் படிக்கும் போதுதான், அவள் தனஞ்சயனைப் பற்றி அறிந்து கொண்டது.

ஓர் எண்ணம் தோன்றவும், எல்லாக் கடிதங்களை யும் எடுத்து, தனஞ்சயனைப் பற்றிய விவரங்களை மட்டும் தொகுத்துப் பார்த்தாள்.

கணக்கில்லாத நஞ்சை பூமி, பெரிய அரிசிமில், கரும்பு ஆலைகள், டிராக்டர்கள், பம்பு செட்டுகள் இப் போது, அடுத்த பெரிய முதலீடு சர்க்கரை மில்!

இவைகளின் பொருள் பல கோடிகள்!

சௌந்தர்யாவை மணக்கப் போகிற, கோடீசுவரன், தொழிற்சாலைகள்தான் வைத்திருக்க வேண்டுமா? இப்ப டியும் இருக்கலாமே!

சரி, சௌந்தர்யாவுக்குக் கிராமம் பிடிக்கவில்லை என்றால், திருமணம் ஆன பிறகு, எல்லாவற்றையும் விற்று, பாங்க்கில் போடச் சொன்னால் போயிற்று!

சோனாவை மணப்பவன், அவள் கேட்டு, ஒன்றை இல்லை என்று சொல்லுவானா?

அத்தோடு, அவர்கள் பழகும் வட்டத்தில், தொழில் அதிபர்களைக் காணவே முடிவதில்லை! இங்கே, அப்படி

யில்லையே! தனஞ்சயனைத் தினந்தோறும் சாதாரணமாகப் பார்க்கலாம், பழகலாம், வலையிலும் பிடித்து விடலாம்!

இந்த வசுவுக்கு மட்டும் கூடக் கொஞ்சம் புத்தியிருந்தால் இதற்குள், அவனைக் கைக்குள் போட்டுக் கொண்டிருப்பாள். சரசாவுக்கும் இரண்டு கோடீசுவர மருமகன்கள் கிடைத்திருப்பார்கள்! ஆனால், அந்த அசட்டுப் பெண்ணுக்கு, அதெல்லாம் ஒன்றுமே தெரியாது. கோடீசுவர மாப்பிள்ளைக்கு சரசா, சௌந்தர்யாவைத் தான் நம்பியாக வேண்டும்.

சின்ன மகளோடு, கலந்து ஆலோசிக்க இருவருமாக அடுத்துச் செய்ய வேண்டியதை முடிவு செய்தார்கள்.

அதன்படிதான், சோனா சுனையூருக்கு வந்தது. தனஞ்சயனை, அவன் சொத்தோடு சுருட்டிக் கொள்வதற்காக.

சின்ன மகளின் தன்மை அறிந்த சரசா, அவளிடம் திரும்பத் திரும்ப ஒன்றைச் சொல்லி அனுப்பினாள். உன் ஒரே குறி, தனஞ்சயனாக மட்டும் இருக்க வேண்டும். மற்றபடி வசுவிடம் பழகுகிறவர்களிடம் மனதைச் சிதற விடாதே.'

தாயின் புத்திமதியை நினைவு கூர்ந்த சோனாவுக்கு இன்னோர் ஐடியாவும் தோன்றியது.

தன் எண்ணத்தைச் செயலாற்றுவதற்காக தனஞ்சயனைத் தேடினால், அவன் அங்கே இல்லை. தனக்குக் குடிப்பதற்கு ஒன்றும் வேண்டாம் என்று, உத்தமி மாதிரிக்

காரிலேயே உட்கார்ந்திருந்த, வசுந்தராவிடம் பேசிக் கொண்டிருந்தான்.

மீதியிருந்த பெப்சியை, அவசரமாகக் குடித்து விட்டுக் காருக்கு ஓடினாள் அவள்.

இங்கே, தனஞ்சயன் வசுவிடம் என்ன சொல்லிக் கொண்டிருந்தான் என்று மட்டும் தெரிந்திருந்தால், அவள் அப்படி ஓடியிருக்க மாட்டாள்!

அவ்வளவு சொல்லியிருந்தும், பொன்னுதுரையுடன் வந்ததற்காக அவளை வறுத்து எடுத்துக் கொண்டிருந்தான், அவன்.

அவளாக பொன்னுதுரையைக் கூப்பிடவில்லை என்று அவள் கூறியதை அவன் காதிலேயே, போட்டுக் கொள்ளவில்லை. நெல்லைக்குக் கிளம்புவது பற்றித் திட்டமிடும் போது கூட, அவன், அவள் அருகில்தான் இருந்திருக்கிறான்! அதற்கு என்ன அர்த்தம்? தனஞ்சயன், இல்லாத போது, அவள் பொன்னுதுரையோடு கொட்ட மடிக்கிறாள் என்றுதானே?

அவன் பொரிந்து கொட்டிக் கொண்டிருந்த போதுதான், சோனா காருக்கு ஓடி வந்தது.

அவள் வரும் அரவத்திலேயே, அந்தப் பேச்சை நிறுத்தி விட்டு ''பரவாயில்லை, நீ மெதுவாகவே குடி. இந்த பாட்டிலுக்கும் சேர்த்துக் காசு கொடுத்து விட்லாம்'' என்றான் தனஞ்சயன். என்னவோ, காரில் இருக்கும் அவளுக்குப் பெப்சி கொடுக்க வந்த பாவனையுடன்.

பிறர் அறியாமல் தன்னைத் திட்ட வந்தான் என்பதை விட, ''இப்போது தலைவலி பரவாயில்லையா?

தாகம் தீர்ந்ததா?'' என்று அவன் சௌந்தர்யாவிடம் கனிவாகப் பேசியதுதான், வசுந்தராவை அதிகமாக வருத்தியது.

இவர்கள் இருவரும் பெப்சி பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள் என்று சௌந்தர்யாவும் நம்பவில்லை. ஆனால், ஏதோ தகராறு என்கிற அளவில் ஊகித்தவளாய், தகராறை வலுப்படுத்தி விடும் நோக்கத்தோடு, தன் திட்டத்தைச் செயலாற்றத் தொடங்கினாள்.

தனஞ்சயன், கடைக்காரனிடம் கொடுத்திருந்த பணத்தைக் கணக்கு முடித்து, மீதியை வாங்கிக் கொண்டு, பொன்னுதுரையும், காரோட்டியும் காருக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தனர்.

''ஆகா, அதுதானே பார்த்தேன்!'' என்று தொடங்கினாள். ''இந்தப் பொன்னுதுரையைப் பார்த்தால், ஏதோ தெரிந்த மாதிரி இருக்கிறதே என்று யோசித்தேன். ஜாடை, அப்படியே அந்த சங்கர் மாதிரி இல்லைக்கா? உன்னை நாலாவதாகப் பார்க்க வந்தாரே, நீ கூட, ரொம்ப நாள், அவரையே நினைத்துக் கொண்டிருந்தாயே? சில முறை, வெளியே, அவரைச் சந்தித்ததாகக் கூட சொன்னாயே அவர் நினைவில் தான், இவரிடம் இப்படிப் பழகுகிறாயா?'' என்று கேட்டாள்.

பாவி பாவி என்று மனதிற்குள் பொருமினாலும், வார்த்தைகளால் எதைச் சொல்லவும், வசுந்தராவால் முடியவில்லை.

என்ன சொல்வது? சாயல் அப்படி இல்லை எனலாம். ஆனால், ஏங்கியது உண்மை போல ஆகும்.

ஏங்கியது இல்லை எனலாம். சோனா விவரம் சொன்ன தினுசில், இவளது மறுப்புதான் பொய் போலத் தோன்றும். கூடவே, அவளைப் பலர் பார்த்துக் கழித்ததையும் பறை சாற்றியாயிற்று. கடைசியாகப் பொன்னுதுரையிடம் விருப்பமாகப் பழகுவதாகவும் முடித்தாயிற்று.

ஒரேயடியாகச் சும்மா இருக்கவும் மனமின்றி, ''யாரையும் நான் அப்படி நினைத்தது. இல்லை'' என்றாள் அவள், சுருக்கமாக.

''ஐ.ஐ! கதை விடுகிறாயே, அக்கா'' என்று சிரித்தாள், சௌந்தர்யா.

அவளது பளிங்குக் கண்ணின் பளபளப்பைப் பார்த்ததும், மனமொடிந்து போனாள் வசுந்தரா.

''ஐந்து ரூபாய் ஏமாத்தலாம் என்று பார்த்தான், நான் விடுவேனா? இந்தாங்க, அண்ணே மிச்சம்'' என்று மீதிப் பணத்துடன் வந்து, பொன்னுதுரை, அந்தப் பேச்சை நிறுத்தியது, நல்லதா, கெட்டதா என்றே வசுந்தராவுக்குப் புரியவில்லை.

தொடர்ந்த சில தினங்களும் இப்படியே கழியவும், வசுந்தரா, தவித்துப் போனாள்.

உறுதியாகக் காதல் என்று தனஞ்சயன் ஒருதரமேனும் சொல்லியிருந்தாலாவது, ஏதாவது துணிந்து பேசலாம். அப்படியில்லாத போது, அவளால் என்ன செய்ய முடியும்?

கூடவே இருந்து கொல்லும் வியாதியாக, சௌந்தர்யா வேறு, அட்டையாய் உடனிருந்து, அவனோடு பேச வாய்ப்பே இல்லாது கெடுத்தாள்!

முன் அனுபவங்கள் ஞாபகம் வரவே, வசுந்தரா அடியோடு நம்பிக்கையிழந்தாள்.

முன்னெல்லாம், அவமானப் படுத்தப்பட்டு விட்ட ஆத்திரம்தான். அதிகமாக இருக்கும். எனவே, ஒரு சில நாட்களில் அதிலிருந்து மீள்வதும் எளிதாக இருந்தது.

ஆனால், இப்போது எல்லாமே முடிந்து விட்ட மாதிரி, ஒரு வெறுமை அவளைச் சூழ்ந்து கொண்டது.

இந்த நிலையில்தான் அந்த ஊர் அம்மனுக்குக் கொடைத் திருவிழா வந்தது.

வீட்டுக்கு வந்து விருந்துண்டு விட்டு, விழாவிலும் அண்ணன் பெண்களோடு வந்து கலந்து கொள்ளுமாறு, கேசவனுக்கு அழைப்பு வந்தது.

தனஞ்சயன் நேரே வந்து கூப்பிட்டான்.

விழா சமயம் என்பதால், சிலவித நோய் நொடி களை எதிர்பார்த்து, அந்த நோய்களைத் தீர்க்கும் மருந்து, உதவிக்கு ஆட்கள் என்று கேசவன் அதில் தீவிரமாக இருந்தார். அது பற்றி அவரிடம் பேசி விட்டு, தனஞ்ச யன், பெண்கள் இருவரும் டி.வி. பார்த்துக் கொண்டி ருந்த இடத்துக்கு வந்தான்.

''ஓ தனூ!'' என்று சௌந்தர்யா உற்சாகமாய் வர வேற்க, எழுந்து ''உட்காருங்கள்'' என்றாள், வசுந்தரா.

''நான் உட்கார வரவில்லை'' என்றான் அவன் எரிச்சலாக. ''டாக்டர் ஒரேயடியாக நோய் நொடி என்று அதே கவனமாக இருக்கிறார். பூஜைக்கு வர மறந்து விடாமல், அவரைக் கட்டாயமாக அழைத்து வா.

அப்பா, அவரிடம் ஏதோ பேச வேண்டுமாம்'' என்றவன், ஒரு சிறு தயக்கத்தின் பின், ''கருண் பற்றி, டாக்டரிடம் பேசினாயா?'' என்று கேட்டான்.

அன்றையப் பேச்சை நினைக்கையில் வசுந்தராவுக்குத் தொண்டை அடைத்தது. அன்று என்னென்ன கற்பனை செய்தாள்! சமாளித்துக் கொண்டு ''இன்னும் சரியாகச் சொல்ல முடியவில்லை'' என்றாள் வசுந்தரா.

அவன் கண்களில், கோபம் தெரியவும், சௌந்தர்யா அவசரமாகக் குறுக்கிட்டாள்.

''இதில், சரியாகவோ, சரியில்லாமலோ சித்தப்பாவிடம் சொல்ல என்ன இருக்கிறது? உங்கள் பக்கம் தான் சரி, தனு, நான் எப்போதும் உங்கள் பக்கம்!'' என்றாள், சோனா அவன் கையைப் பற்றி அழுத்தி.

ஒரு மாதிரிப் பார்த்து, ''அது, உனக்குத் தெரிகிறது. உன் அருமை அக்காவுக்குத் தெரியவில்லையே'' என்றான், தனஞ்சயன்.

அங்கே நிற்க மாட்டாமல், ''யாரோ கூப்பிடுகிறார்கள்'' என்று முணுமுணுத்து விட்டு வாயிலை நோக்கி வசுந்தரா விரைந்தாள்.

''உங்கள் கிராமத்தை எனக்கு எப்போது சுற்றிக் காட்டப் போகிறீர்கள் தனு?'' என்று, சோனா கொஞ்சுவதைத் தவிப்புடன் கேட்டவாறு வாயிலுக்குச் சென்றால், அங்கே மெய்யாகவே, பொன்னுதுரை வந்து நின்று, பரமனைக் கூப்பிட்டுக் கொண்டிருந்தான்.

''கும்பிடப் போன சாமி குறுக்கே வந்தது போலன்னு சொல்லுவாங்களாம். உன்னைப் பார்க்கத்

தான் வந்தேன், வசுந்தரா. பரமன் கிட்டே, தலைகயித்தைப் பிடித்துக் கொள்ளச் சொல்லிட்டு உள்ளே வரவேணும்னு நினைத்தேன். இப்போதானால், நீயே வந்து விட்டாயே'' என்று மகிழ்ந்தான்.

அதன் பிறகு, தான் வந்த காரணத்தைச் சொன்னான்.

பொன்னுதுரையின் ஊரிலும் கோயிலில் விழாவாம். அழைக்க வந்தானாம்.

அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, அதைக் கேட்டபடி வெளியே வந்த தனஞ்சயன், ''ஆண்டுதோறும், இது ஒரு கஷ்டம் ஒரே நாளில், இரண்டு ஊரிலும் கொடை விழாவை வைத்துக் கொண்டு! அத்தான் வீட்டில் எல்லோரும் எங்கள் வீட்டுக்கு வருகிறார்கள், பொன்னு, கிளம்புகிறாயா? இன்னும் நிறைய இடங்களில், கூப்பிடப் போக வேண்டியிருக்குமே'' என்று அவனை அப்படியே அனுப்ப முயன்றான்.

பொன்னுதுரையின் முகம் விழுந்து விட்டது. ''எ எல்லாருமா, உங்கள் வீட்டுக்கு... வசு மட்டுமாவது... சித்தி, ஒரு நாள் எங்கள் வீட்டுக்கு வருவார்களே. அப்போது வசு, நீ அவர்களோடு...'' என்று சொல்லிக் கொண்டிருந்தவனை இடைமறித்து ''அதெப்படி முடியும்?'' என்று ஆட்சேபித்தான் மற்றவன்.

''டாக்டர், எங்கள் வீட்டு மாப்பிள்ளை, அவர்குடும்பம் எங்கள் வீட்டில்தான் இருந்தாக வேண்டும்? சும்மா, நேரத்தை வீணாக்கிக் கொண்டிராமல், கிளம்புப்பா.''

என்று தனஞ்சயன் விரட்ட, வேறு வழியின்றி, மற்றவனும் கிளம்பினான்.

உரிமையை ஏற்படுத்திக் கொள்ளப் போகிறானா?

நெஞ்சு கொதித்தது சௌந்தர்யாவுக்கு.

அவள், எப்பேர்ப்பட்ட பேரழகி, இந்தப் பட்டிக்காட்டுப் பண்ணையாரை மயக்கி மணந்து கொள்ள வேண்டும் என்று சென்னையிலிருந்து இவ்வளவு தூரம் வந்திருக்கிறாள். அவளிடம் மயங்கி விழாமல் இருப்பதே பெரிய தப்பு. அதைவிடப் பெரிய தப்பு, இந்த சாதாரண வசுந்தராவை மணக்க எண்ணுவது. இதைவிடப் பெரிய அவமானம் சௌந்தர்யாவுக்கு என்ன இருக்க முடியும்?

அந்தப் பொன்னுதுரையும், 'வசுவசு' என்றுதான் உருகுகிறான்.

இப்படி ஒரு பேரழகி, அருகில் இருக்கும்போது, இரண்டு பேரும் எலும்புத் துண்டுக்குச் சண்டையிடும் நாய்களைப் போல, வசுந்தராவுக்காகப் போட்டி போடுகிறார்களே!

ஒன்றும் அறியாதவள் போல வெறும் மரக்கட்டை முகத்தைக் காட்டிக் கொண்டு, வசுந்தரா நின்றதை எண்ணும் போது, உள்ளே தீ எரிவது போல இருந்தது அவளுக்கு.

தங்கைக்கு எதுவும் தெரிந்துவிடக் கூடாது என்று, 'உம்' என்று நிற்கிறாள்.

அவ்வளவு எளிதாக இந்த சோனாவை ஏமாற்ற முடியாது என்று அந்த முட்டாளுக்குத் தெரியாது போலும்!

இருக்கட்டும்! இந்த சௌந்தர்யா எவ்வளவு கெட்டிக்காரி என்று, அந்தத் துரோகி, விரைவிலேயே தெரிந்து கொள்வாள்.

எண்ணியது போல விரைவில் செயலில் இறங்கினாள் சௌந்தர்யா

## 19

**பொ**துவாக, மேல்மட்டக் குடும்பங்களைப் பற்றிய விவரங்கள், அந்த வட்டத்தை விட, வேலையாட்களுக்கு நன்றாகத் தெரியும். இதில் நம்பிக்கை வைத்து, சௌந்தர்யா முதலில் முத்துமாரியிடம் தூண்டில் போட்டாள். அவளிடம் அறிந்து கொண்டதை, தனஞ்சயனின் வீடு வரை சென்று உறுதிப்படுத்திக் கொண்டாள்.

பின்னர், எப்போதுமே அந்தப் பக்கம் வட்டமிடும் பொன்னுதுரையிடம் பேசினார்.

அம்மன் கோயில் கொடை விழா, நாளை என்று நெருங்கியது.

பகலில், தந்தை வீட்டில் சகோதரிகளுடன் விளையாட வந்திருந்த கருணாகரைத் திருப்பிக் கொண்டு விட்டு விட்டு, இரவில் கோயிலுக்குக் கொடுக்க வேண்டிய பூஜைப் பொருட்களை, எடுத்து வைத்துவிட்டு, இருவரும் திரும்பினார்கள். அதாவது, லட்சுமி அம்மாள்

சொல்லச் சொல்ல வசுந்தரா எடுத்து, அடுக்கி வைப் பதை, சோனா, குறுங்கட்டிலில் அமர்ந்து முறுக்கை நொறுக்கியவாறு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள். அறியாப் பெண் போல இடையிடையே எதை எதையோ கேட்டபடி.

அன்று மாலை இரு பெண்களையும் மாமியாருடன், தனஞ்சயனின் வீட்டுக்கு அனுப்பி வைத்தான் கேசவன்.

மூன்று தினங்கள் நடக்கும் அந்தக் கொடை விழா வில், அவர் மறுநாள் கலந்து கொள்வதாக ஏற்பாடு.

மாலை மயங்குகிற நேரத்தில் திடுமென செளந் தர்யா, தமக்கையை அணுகினாள். "அக்கா, கருண் பாட்டி, கோயிலுக்குக் கொடுக்க வேண்டியதில் அம்மன் பாவாடையைக் காணோம். எப்படியோ விட்டுப் போயிற்று. நாம் இருவரும் போய் எடுத்து வந்து விடுவோமா? பாட்டி கண்டுபிடித்துத் தேடுமுன் எடுத்து வந்துவிடலாம்" என்று கூப்பிட்டாள்.

"இல்லையே, நான், நார்ப் பெட்டிக்குள் வைத் தேனே! எனக்கு நன்றாக நினைவு இருக்கிறதே!" என் றாள் வசுந்தரா.

"அய்யோ! என்மேல்தான் தப்பு, பாவாடை எப்ப டித் தைத்திருக்கிறது என்று பார்க்க எடுத்தேனா, திருப்பி வைக்க மறந்து விட்டேன். சீக்கிரமாகப் போய் எடுத்து வந்து விடலாம் அக்கா. பெட்டியைக் கொடுக்க வேண் டிய நேரத்தில் பாவாடையைக் காணோம் என்று பார்த் தால், அபசகுனம் என்று, அந்தப் பாட்டி அழத் தொடங்கி விடுவார்கள். இப்போது, விட்டு வந்ததையே, அபசகுன

மாகத்தான் கருதுவார்கள். சும்மாவே, அது ஓர் அழு மூஞ்சி இதுவும் சேர்ந்து கொண்டால், அவ்வளவுதான்!'' என்றாள் தங்கை.

கருணனுடைய தாய் மாமன் இறந்த விதம் தெரிந்ததிலிருந்து வசுவுக்கு லட்சுமி அம்மாளிடம் ஒரு தனிப் பரிவு. அந்தம்மாள், சகுனம், தோஷம் பார்க்கிறவர்கள் தான். இது தெரிந்தால்,

வசுந்தரா யோசிப்பதைக் காணவும், ''இன்று மட்டுமா அழுவார்கள்? ஆண்டு முழுவதும் - அடுத்த ஆண்டு பூஜை வரை அழுவார்கள். அது மட்டும் இல்லாமல், கருண் பற்றிப் புதிய முடிவு எதையும் ஒத்துக் கொள்ளவும் மாட்டார்கள். பாவம் சித்தப்பா'' என்றாள் சோனா.

''எப்படிப் போவது? இங்கிருந்து, அவர்கள் வீடு நடக்கிற தூரம் இல்லையே. யாரை, நாம் கூப்பிட்டு, வண்டி கட்டச் சொல்ல முடியும்? தனா... தனஞ்சயனிடம் வேண்டுமானால்...''

'தனாவாடி' என்று உள்ளூரக் கறுவியபடி, ''வேறே வினையே வேண்டாம். சும்மாவே, எதற்கோ, யாரிடமோ ஒரே கோபத்தில் கத்திக் கொண்டிருந்தார். இப்போது போய், இதைச் சொன்னோம் என்றால், அவ்வளவுதான் கோபமெல்லாம் நம் மீது பாய்ந்துவிடும். அப்பாடி யோவ்! என்னால் முடியாதுப்பா. வேண்டுமானால், நீ மட்டும் போய்ச் சொல்'' என்று உடம்பை நடுக்கிக் கொண்டாள், சௌந்தர்யா.

வசுந்தரா, தனஞ்சயனிடமிருந்து முடிந்த அளவு, ''ஒதுங்கிப் போவதை, சோனா கண்டிருந்தாள். 'எட்டாப்

பழம்' மாதிரிக் காட்டி, அவனது ஆசையைத் தூண்ட என்பது அவளது அபிப்பிராயம். இப்போது மட்டும், தானாக அவனிடம் போய் நின்று விடுவாளோ?

அவள் எண்ணிய காரணம் இல்லையென்றாலும் வசு தயங்கிவிட்டாள்.

''பின்னே இப்போது என்ன செய்வது?'' என்று தங்கையிடமே கேட்டாள்.

சற்று யோசித்துவிட்டு ''ஐடியா''! என்றாள் தங்கை. ''இங்கேதான், இந்தத் திருவிழாவுக்கு எல்லோரையும் அழைக்கிறார்களே, அப்படிப் பொன்னுதுரையும் வந்தி ருக்கிறார். அவரிடம் கேட்டு அவர் வண்டியில் ஓசைப் படாமல் போய்வந்து விடலாமா?'' என்று கேட்டாள்.

''அவர் ஊரிலும் கொடைவிழா என்றாரே! இங்கே எப்படி...'' என்று திகைப்புடன் கேட்ட தமக்கையை இடைமறித்து, ''அதுதான் மூன்று நாட்கள் நடக்கிறதே. ஒருநாள் தலையைக் காட்டிவிட்டுப் போக வந்திருப்பார். ஆனால், இப்போது அதுவா முக்கியம்? அம்மன் பாவாடை இங்கு வருவது இல்லையா?'' என்றாள் தங்கை.

பொன்னுதுரையின் வண்டியில் போவது, தனஞ்சய னுக்குப் பிடிக்காது. ஆனால், இப்போது வேறு வழி யில்லை. போக, வர மொத்தம் பதினைந்தே நிமிஷங்கள். தனாவுக்குத் தெரியாமலே போய்விடலாம். தெரிந்தா லும், சோனா கூட இருப்பதால், கோபமே வராமல் கூடப் போகலாம். ஆனால், சோனாவின் குணம் தெரியாமல் அவன்... வேண்டாம். இது வீண் யோசனை.

''சரி'' என்றாள் வசுந்தரா.

லேசாக இருட்டத் தொடங்கியிருந்ததும், கோவில் விழாப் பரபரப்புமாக இவர்கள் இருவரும் சென்றதை யாரும் கவனித்தது போலத் தெரியவில்லை.

கேசவனின் வீட்டை அணுகியபோது, வண்டியைக் கொஞ்சம் நிறுத்தச் சொன்னாள் சோனா. ''எனக்குத் தலையை வலிக்கிறது வசு. நான் இங்கே இறங்கி சித்தப்பா அறையில் ஏதாவது தலைவலி மாத்திரை எடுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கிறேன். நீங்கள் இருவரும் அங்கே போய், அம்மன் பாவாடை எடுத்து வாருங்கள்'' என்று இறங்கிக் கொண்டாள்.

ரேக்ளா வண்டி கண்ணுக்கு மறைந்ததும், உள்ளே சென்று கேசவனின் பழைய மொபெட்டின் சாவியை எடுத்து வந்து, ஷெட்டில் நின்ற மொபெட்டைக் கிளப்பிக் கொண்டு தனஞ்சயன் வீடு நோக்கிச் சென்றாள்.

வீட்டுக்குச் சற்றுத் தொலைவிலேயே, ஒரு மரத்தின் மறைவில் வண்டியை நிறுத்திவிட்டு, மெள்ள நடந்து வீட்டினுள் சென்றாள்.

சுமார் ஏழு மணியளவில்தான், கோவிலுக்குச் செல்வதற்காக வசுந்தராவை அங்கே தேடத் தொடங்கியது. அதுவும், கோயிலில் வெகு நேரம் ஆகிவிடலாம். அதனால், இரவு உணவு கொஞ்சம் லகுவாகச் சாப்பிட்டு விட்டுப் போகலாம் என்று தனஞ்சயனுடைய தாயார், உண்ணக் கூப்பிட்ட போதுதான்.

''அவள் ரொம்ப நேரமாகவே இங்கே இல்லையே!'' என்றாள், அவர்களுக்கெனக் கொடுக்கப்

பட்டிருந்த அறையில் கையில் புத்தகத்தோடு உட்கார்ந்தி ருந்த சௌந்தர்யா.

'எங்கே எங்கே' என்று வெளிப்படையாக வீட் டைப் புரட்டாத போதும், அவள் அந்த வீட்டில் இல்லை என்பது தெரிந்து போயிற்று.

சற்றுப் பொறுத்து, ''நானாக என் அக்காவைப் பற்றி, எப்படிச் சொல்வது? முன்னேற்பாடோ என் னவோ, பொன்னுதுரை, அவரது வண்டியோடு வந்திருந் தார் வேண்டாம், போகாதே என்று எவ்வளவோ சொல் லிப் பார்த்தேன். இப்போது போனால் தப்பாகப் பொருள் படும் என்று கூடச் சொன்னேன். புத்தியில்லாத மூடர்க ளுக்கு அப்போதுதான் புரியும் என்று விட்டாள். எப்படி யாவது புத்தி வந்து திரும்பி வந்துவிட மாட்டாளா என்று வேண்டிக் கொண்டேன். ஆனால் அவள் வராமல் இருந்து விட்டாளே!'' என்று மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்தாள்.

குழப்பமும், சந்தேகமுமாக தனஞ்செயன், அவளை வெறித்து நோக்குகையில் சோனாவின் விழிகளில் இருந்து கண்ணீர் வடியத் தொடங்கியிருந்தது.

''போவது எங்கே என்று சொன்னாளா?''

''இல்லையே! என்று அழகாகக் கைகளை விரித் தாள், அவள்

யார் முகத்தையும் நிமிர்ந்து பாராமல், தனஞ்சயன் அங்கிருந்து வெளியேறிய போது, பின்னோடு சென்று ''தனா ஒரு நிமிஷம், இங்கே வந்துவிட்டுப் போ'' என்று

அவனைத் தனியே அழைத்தாள். அவனுடைய சிறிய தாயார்.

★ ★ ★

சௌந்தர்யா இறங்கிக் கொண்டதும், பொன்னுதுரை வண்டியை வேகமாக ஓட்டத் தொடங்கினான்.

அதி வேகம்தான். சீக்கிரமாகத் திரும்பிச் சென்றாக வேண்டுமே. அதற்காக என்று எண்ணியவள், வண்டி திசை மாறிச் செல்லவும் திகைத்தாள்.

அப்போதும், அவள் ஒன்றும் அஞ்சி நடுங்கி விடவில்லை. பொன்னுதுரை, வாய்ச் சவடால் பேர்வழி. வாய்ப்பு கிடைத்தால் அன்று, கோயிலில் மாதிரி, கொஞ் சம் உரச முயற்சிக்கலாம். மற்றபடி, அவனைப் பற்றிப் பயப்படத் தேவையில்லை என்பது, வசுந்தராவின் கணிப்பு.

எனவே, அவன் திசைமாறி வண்டியை ஓட்டிய போதும், அதற்காக அவள் ஒன்றும் அரண்டு மிரண்டு விடவில்லை. மாடு தறி கெட்டு ஓடுகிறதோ இவனால் கட்டுப்படுத்த முடியவில்லையோ, என்ற கவலைதான். வண்டிகுடை சாய்ந்து விழுந்து விடக் கூடாது.

''ஜாக்கிரதை! வண்டி குடை சாய்ந்து விடப் போகிறது'' என்று எச்சரித்ததோடு, தான் விழுந்து விடா மல் இரு புறமும் பிடித்துக் கொண்டு கவனத்துடன் அமர்ந்தவளுக்குப் பொன்னான பல நிமிஷங்களுக்குப் பிறகுதான் மாடும், வண்டியும் பொன்னுதுரையின் கட் டுப்பாட்டில்தான் இயங்குகின்றன என்பது புரிந்தது.

''பொன்னுதுரை, என்ன இது பைத்தியக்காரத்த னம்?'' என்றாள் அதட்டலாக.

வண்டியின் வேகத்தைக் குறைக்காமலே, ''சும்மா ஒரு பந்தயம். இன்னைக்கு உன்னைக் கூட்டி வந்து காட்டுறதாக, என் அம்மாகிட்டே சவால். போய், சரியாக ஐந்தே நிமிசத்திலே கிளம்பிறலாம்'' என்று, அவன் கூறிய போது அவளுக்குத தலையில் அடித்துக் கொள்ள லாம் போல இருந்தது.

பந்தயம் போடுகிற நேரத்தையும் விஷயத்தையும் பார், முட்டாள், என்று உள்ளூர எரிச்சல் பட்டவள், அதை அவனிடம் சொல்லிக் கொண்டிருப்பது வீண் என எண்ணியவளாய், ''சீக்கிரம் திரும்பிப் போயாக வேண் டும்!'' என்றதோடு, நிறுத்திக் கொண்டாள்.

''வீட்டில் எல்லோரும், கோயிலுக்குப் போய்விடு வார்கள் என்கிறீர்கள். வேறு ஆளில்லாத வீடு. அவளை வீட்டுக்குள் கொண்டு போய்விட்டால் அப்புறம் உங்கள் ராஜ்ஜியம் தானே?''

அந்தப் பெண் சோனா, மெழுகு பொம்மை மாதிரி, மொழு மொழு என்று இருக்கிறாள் என்று பார்த்தால், மூளையும் இருக்கிறது என்று பொன்னுதுரை மனதிற்குள் தங்கையைப் பாராட்டியது தெரியாமல், அவனோடு சென்று, அவன் வீட்டிற்குள் வசுந்தரா அகப்பட்டுக் கொண்டாள்.

கேசவனிடம், தனஞ்சயனுடைய தந்தை பேச இருக் கும் விஷயம். வசுந்தராவை அவருடைய மகனுக்கு மணமுடிப்பது பற்றியது. டாக்டருடைய அண்ணனுக்கு

டாக்டரையே தூது அனுப்புவதற்காக என்று அறிந்த துமே, சௌந்தர்யாவுக்கு வெறி பிடித்து விட்டது.

தனக்குத் தனஞ்சயனும் அவனது சொத்தும், கிடைக் கிறதோ இல்லையோ, வசுந்தராவுக்குக் கிடைக்காமல் தடுத்தே ஆக வேண்டும் என்கிற வெறி!

எனவே, பொன்னுதுரையை உசுப்பி விட்டாள்.

அவனை தனியே சந்தித்து, ''நாங்கள் எல்லாம் பட்டணத்துப் பெண்கள் இங்கே மாதிரி இல்லை. மனதில் ஒன்று, வாயில் ஒன்றுதான். விரட்டிப் பிடித்து முரட்டுத்த னம் செய்கிறவர்களைத்தான் பிடிக்கும். எத்தனை சினிமா பார்த்திருப்பீர்கள்? பெண் பிகு செய்வதும், ஆண் பலத் தைக் காட்டி அணைத்ததும், மயங்கி விடுவதும், என்று ஆயிரம் படம் வந்திருக்குமே! அதெல்லாம், சும்மா வெறும் கற்பனை என்றா நினைத்தீர்கள்? அங்கே அன்றா டம் நடப்பதுதான். நீங்களும்தான், மனதில் வசுவை வைத்துக் கொண்டு ஏன் இப்படிச் சும்மாவே இருக்கிறீர் கள்? ஒரு வேளை உங்களுக்கு அவ்வளவு துணிச்சல் கிடையாதோ?'' என்று கேட்டாள்.

''அ... அ... அதெல்லாம் இல்லை. துணிச்சல் இல்லாமலா, ரேக்ளா ரேசில் ஜெயிக்கிறேன்?'' என்று தடுமாறினான் அவன்.

''அதனால்தான், ஒரு வீரன், இப்படி இருக்கிறாரே என்றுதான் நானும் யோசித்து சில பேருக்கு, இதுமாதிரி விஷயத்தில் கொஞ்சம் நடுக்கம் என்பார்கள். அப்படி ஏதும் என்றால், தைரியத்துக்குக் கொஞ்சம் 'தண்ணி' போட்டுக் கொள்ளுங்களேன்!'' என்று யோசனை கூறி னாள் சோனா.

அசட்டுச் சிரிப்புடன், 'ரேசுக்கு முன்னாலே மத்த வங்களுக்குத் தெரியாமல், கொஞ்சம் போடுவேன்'' என்று ஒத்துக் கொண்டான் அவன்.

''பின்னே என்ன?'' என்று சிரித்தாள், அவள். ''இப்போதும் கொஞ்சம் 'தண்ணி' போட்டுக் கொள்ளுங் கள். ஒரேயடியாக ரொம்பப் போட்டு, கட்டையாக நீட்டி விடாதீர்கள். அப்புறம், ஒரேயடியாக வெறுத்து விடு வாள்'' என்று எச்சரித்தாள், சௌந்தர்யா.

பின்னர், இருவருமாகத் திட்டம் தீட்டினார்கள்.

திட்டம் தீட்டி முடித்த பின், ''அவளை; உங்களோடு வண்டியில் ஏற்றி அனுப்புவது என் பொறுப்பு. அதன் பின் உங்கள் கெட்டிக்காரத் தனம்'' என்று சோனா கண்ணடிக்க பொன்னுதுரைக்கு, வாயெல்லாம் பல்லா யிற்று.

சோனா திட்டமிட்டபடிதான் எல்லாம் நடந்தது.

ஆனால், அதிகப்படியாக ஒன்று நடந்தது அவளுக் குத் தெரியாது.

தாமோதரனின் வீட்டில் வேலை செய்த ஒருத்தியு டைய மகளுக்கு முதல் குழந்தை பிறந்திருந்தது. அந்தப் பெண்ணின் திருமணமே, இவர்கள் உதவியில் நடந்தது தான். அவள் வீடு, தனஞ்சயனின் வீட்டுப் பக்கம்தான். குழந்தையைப் பார்த்துக் கையில் ஏதாவது கொடுத்து விட்டு வரச் சென்ற லட்சுமி அம்மாளுக்குத் திரும்பி வரும் வழியில் சற்று ஒதுக்குப் புறமாக வண்டியுடன் நின்ற பொன்னுதுரையைப் பார்த்ததும் ஆச்சரியமாகிப் போயிற்று.

என்ன, ஏது என்று அந்தம்மாள் விசாரித்த போது, முதலில் தயங்கிய போதும், பிறகு ஓரளவு சொன்னான்.

வசுவின் உள்ளம் பற்றி, அவளுடைய தங்கை கொடுத்த உறுதியின் பேரில், அவளை அவன் வீட்டுக் குக் கூட்டிப் போய், அவளோடு தனியே கொஞ்ச நேரம் பேசப் போவதாக தெரிவித்தான்.

அந்த அம்மாள் யோசனையாய் நோக்கவும், ''அவள் தங்கையே, அவளைக் கூட்டி வந்து அனுப்புகிற போது, அதில் என்ன தப்பு இருக்க முடியும்? உங்கள் பழங்காலத்திலேயே நின்னு, எங்களைத் தொல்லைப் படுத்தாதீங்க பெரியம்மா'' என்று அவன் அதட்டிப் பேசவும், அடங்கிப் போகிற குணமுள்ள அந்த அம் மாள், ''உன்னிஷ்டம் தம்பி'' என்று விட்டுப் போய்விட் டாள்.

அத்தோடு, வசு, இந்த வீட்டுக்கு வந்தாலென்ன? அந்த வீட்டுக்கு வந்தாலென்ன? அந்த அருமையான பெண், குடும்பத்துக்குள் வருவதே போதும் என்றிருந்தது அவளுக்கு.

அத்தோடு, தனஞ்சயன், தானாகவே நல்ல நெறி யில் தன்னை நிறுத்திக் கொண்டவன். பொன்னுதுரை அப்படியல்ல இங்கும், அங்குமாக ஆடுகிறவன். அவனை உருப்பட வைக்க ஒரு நல்ல பெண் வேண்டும். அந்தப் பெண் வசுவாக இருந்தால், தங்கை மகனைப் பற்றிய கவலையை, அவளும் தங்கையும் அடியோடு விட்டு விடலாம்!

அத்தோடு, அக்கா மனம் தங்கைக்குத் தெரியாதா?

இப்படியெல்லாம் எண்ணித்தான், முதலில் அந்த அம்மாள் சும்மா இருந்தது.

ஆனால், சௌந்தர்யா, வேறு மாதிரிப் பேசவும் ஏதோ சூது என்று கலங்கிவிட்டாள். எனவே, தனஞ்சய னைத் தனியே அழைத்துச் சென்று, தான் அறிந்ததைத் தெரிவித்தாள்.

''அந்தப் பெண் சௌந்தர்யாவைப் பற்றி, நான் நினைத்தது சரியாகத்தான் இருக்கிறது. ஆனால், அவளி டம் எதையும் கேட்டுப் பயன் இராது. பொன்னு வசுவை எங்கே கூட்டிப் போயிருக்கக் கூடும் என்று உங்களுக்கு ஏதாவது தோன்றுகிறதா?'' என்று சிறிய தாயிடம் தனஞ் சயன் வினவினான்.

''வீட்டுக்கு என்றானப்பா. ஆனால், நிச்சயமாகத் தெரியவில்லையே! என்று கலங்கினாள், அந்த அன்னை.

அவள் கையைப் பற்றி, ''பயப்படாதீர்கள் சித்தி; வசுந்தராவுக்கு ஒன்றும் ஆகாது. பொன்னுதுரைக்கு அவ் வளவு தைரியம் கிடையாது. சும்மா ஒரு வேகத்தில்... சரி விடுங்கள் அதை நான் பார்த்துக் கொள்கிறேன். இங்கே... ஏதோ பூஜை சாமான் எடுக்க, வசு வீடு சென்றிருப்பதாகச் சொல்லி விடுங்கள். நான் கிளம்பு கிறேன்'' என்றுரைத்து வெளியே சென்றான்.

பைக்கில் விரைந்து செல்லும்போதே, வேகமாக யோசித்த போது பொன்னுதுரையின் ரேக்ளா வண்டியில் செல்லக் கூடிய இடம் அவனது வீடுதான் என்ற முடி வுக்கு வந்தான்.

அவனது ரேக்ளா வண்டியில் செல்லக் கூடிய தூரத்தில், அவனுக்குச் சொந்தமாய் உள்ள இடங்களில், இரண்டில் அவன் வேற்று மனிதர்களைக் குடி வைத்திருந் தான். இன்னொன்று பாழடைந்து கிடந்தது. பூச்சி, பொட் டுகள் அடைந்து கிடக்கக் கூடிய இடம் அங்கே அவன் காலடி கூட எடுத்து வைக்க மாட்டான்.

மீந்திருப்பது, வீடுதான்.

டாக்சி ஏதாவது ஏற்பாடு செய்திருப்பானோ, என்று யோசித்துவிட்டு இராது என்ற முடிவுக்கும வந்தான்.

டாக்டர் மகளை, வலுக் கட்டாயமாக எங்கேயும் அழைத்துச் செல்ல, இங்குள்ள யாரும் துணிய மாட்டார் கள்!

பொன்னுதுரை, ஏதாவது தப்பு செய்ய உத்தேசித்தி ருந்தால், செய்திருந்தால் - அவனது கை, கால்கள், அவனுடையவை அல்ல - அதற்குகந்த இடம், அன்றைய அளவில் அவனது வீடுதான். ஆறரை, ஏழு மணிக்கு எல்லோருமாகக் கிளம்பினால், நள்ளிரவுப் பூஜை முடிந் துதான் திரும்பி வருவார்கள். பொன்னு கண்ட நேரத்தில் வீடு திரும்புகிறவன் என்பதால், அவனிடம் எப்போதும் ஒரு சாவி உண்டு.

வீடுதான் என்று முடிவு செய்துவிட்ட பிறகும், வழியில் அவனது இடங்களையும் கவனமாகப் பார்த்த படிதான், தனஞ்சயன் சென்றான்.

பொன்னுதுரையின் வீட்டைத் தனஞ்சயன் அடைந்த போது, வசுந்தரா, பயப்படத் தொடங்கியிருந் தாள்.

பொன்னுதுரை குடித்திருந்தான் என்பது ஒன்று, ஏதோ, முரட்டுத் தனமாக அணைத்தால் அவள் இணங்கி விடுவாள் என்ற எண்ணத்தில் அவன் பேசியது வேறு, அவளைக் கலவரப்படுத்தியது.

''அப்படியெல்லாம் இல்லை, கிட்டே வராதே.'' என்றால், ''பட்டணத்துப் பெண்களைப் பற்றி எனக்குத் தெரியாதா? இதோ பார் என் வீரத்தை'' என்று ஒரு தரம் கையைப் பற்றியே விட்டான். உதறி விடுவித்துக் கொள்ளு முன் பெரும்பாடாகி விட்டது.

பூட்டியிருந்த வீட்டை அவன் திறந்த போதே; அவள் யோசித்திருக்க வேண்டும்!

''பெண்கள் பின் கட்டில் இருப்பார்கள், நான் விருப்பம் போல வந்து போவதற்காகச் சாவி'' என்றதை நம்பியிருக்கக் கூடாது.

ஆனால், இப்போது அதை நினைத்துப் பயன் இல்லை என்று உணர்ந்து, கையில் கிடைத்ததையெல் லாம் தூக்கி எறிந்து தன்னை நெருங்க விடாமல் அவ னைத் தடுத்துக் கொண்டே பின்னடைந்தவள் முதுகில் சுவர் தட்டவும்,

''ஹாஹாஹா...!'' என்று வில்லன் சிரிப்புடன் பொன்னுதுரை வசுந்தராவை நெருங்கியபோது, கத வைத் தட்டும் ஒலி கேட்டது.

கூடவே, தனஞ்சயனின் குரலும்!

இடி விழுந்தது போலப் பொன்னுதுரை பிரமித்து நிற்க மின்னலெனப் பாய்ந்து சென்று தாள்ப்பாளை

நீக்கிக் கதவைத் திறந்த வசுந்தரா, ''தனா!'' என்ற கதறலுடன் அவன் மார்பில் அப்படியே சாய்ந்து விட்டாள்.

அவளை அணைத்தபடி உள்ளே வந்து, ''உன்னை, இப்போது அடித்துத் துவைத்திருப்பேன். ஆனால், உன் அம்மாவுக்காகப் பார்க்கிறேன். இனியொரு தரம் இவளைத் திரும்பிப் பார்த்தாயானால், அப்புறம், உன் அம்மாவுக்காகக் கூடப் பார்க்க மாட்டேன். புரிகிறதா?'' என்று இறுகிய குரலில் தனஞ்சயன் கேட்கவும், இப்போதைக்குத் தப்பினோம் என்று உணர்ந்து, பொன்னுதுரை அவசரமாகத் தலையாட்டினான்.

வீட்டை அடைந்ததும், அவளை உள்ளே அழைத்துச் சென்று, அவளது நடுக்கம் நிற்கும் வரை அவளை இறுக அணைத்துக் கொண்டு நின்றான்.

ஒருவாறு, அவள் சுய நிலைக்கு வந்து விலக முயற்சிக்கவும், விடாமல் ''என்ன திடீரென்று? நான் ஒன்றும் பொன்னுதுரை இல்லை தெரியுமல்லவா?'' என்றான் ஒரு மாதிரிக் குரலில்.

அவள் திகைத்து நோக்கவும், ''அவ்வளவு சொல்லியும், அவனுடன் சென்று மாட்டிக் கொள்ள வேண்டுமா?'' என்ற குறையுடன் கேட்டான்.

''இல்லை சோனா...'' என்று தொடங்கி, நடந்ததைச் சொன்னாள் அவள்.

''இப்படித்தான் ஏதாவது நடந்திருக்கும் என்று, நானும் சித்தியும் ஊகித்தோம்.'' என்றான் தனஞ்சயன்.

''சித்தி? பாட்டியா?''

''ஆமாம். அவர்களேதான். சித்தியின் உதவி மட்டும் இல்லாவிட்டால், நினைக்கக்கூட முடியவில்லை'' என்ற, அவளைக் கண்டுபிடித்த விவரத்தை அவனும், அவளுக்குத் தெரிவித்தான். பிறகு, உன் தங்கை இப்படி என்று உனக்குத் தெரியாதா? அவள் சொல்லை நம்பி, ஒரு காரியம் என்னிடம் கூடத் தெரிவியாமல் செய்யலாமா?'' என்றவனை, வியப்புடன் நோக்கினாள் வசுந்தரா.

''என்ன? என்ன, அப்படியொரு பார்வை?'' என்று கேட்டபடி, அவளை உட்கார வைத்துத் தானும் அருகமர்ந்து மீண்டும் அதே கேள்வியைக் கேட்டான்.

''இ... இல்லை, நீங்கள் அவளை... அவளிடம்...'' என்று இழுத்தவள், அவன் சிறு கேலியுடன் பார்க்கவும், ''என்னிடம் எரிந்து விழுந்தவர், அவளிடம் மட்டும் புன்னகை மன்னனாக இருக்க வில்லையா?'' என்று அவனை நேராகப் பார்த்துக் கேட்டாள்.

''இந்தக் கேள்விக்குப் பகுதி, பகுதியாகத்தான் பதில் சொல்ல வேண்டும். உன்னிடம், ஏன் எரிந்து விழுந்தேன்? முதல் கேள்விக்குப் பதில், நான் எவ்வளவு சொன்னாலும், புரிந்து கொள்ளாமல், பொன்னுதுரையிடம் பேசிப் பழகியதற்காக. நெருங்கிய மாமா' என்றாறில்லையா? அடுத்துப் புன்னகை மன்னனுக்குப் பதில், எப்படிப் பட்டவளாக இருந்தாலும், மைத்துனியாகப் போகிறவளிடம், வேறு எப்படிப் பேசுவார்கள்?''

''என்னது?''

''ஆமாம். ஒன்றுமே தெரியாதில்லையா? இன் றைக்கு உன் சித்தப்பாவிடம். நம் திருமணம் பற்றி, என் அப்பா பேசப் போகிறார். அதற்கு முன் கருண் விஷய மும் அவரிடம் பேசி முடித்து விட்டேன். நான் வளர்ந்த மாதிரி, அவனும் வளர்ந்தால், சந்தோஷம் தான் என்று விட்டார். என்ன, இவ்வளவு அவசரம் என்று தோன்றுகி றதா? இல்லாவிட்டால், கருண் விஷயத்தில் என் விருப் பத்தைச் சாதிப்பதற்காகத்தான், உன்னை மணப்பதாகக் கூட உன் அதி புத்திசாலி மூளை சந்தேகப் படக் கூடுமோ என்ற பயம்தான்'' என்று கிண்டலும் கேலியுமாகக் கூறினான் அவன்.

''ஓகோ!'' என்று கண்கள் மின்னக் கேட்டவள். ஆனால், மெய்யாகவே அப்படியில்லையா?'' என்று அப்பாவி போல விழி விரித்து வினவினாள்.

''இல்லையே!'' என்று கையை விரித்தான் அவன்.

''பின்னே?''

''என்னுடன் சண்டை போட என்று, சென்னைப் பட்டணத்திலிருந்து ஒரு பெண் இங்கே வந்தாள். அவ ளைப் பார்த்த அன்றே, என் மனம் அவள் காலடியில் போய் விழுந்து விட்டது...''

''பொய், பொய்! நான்தான் முதல் நாளே...'' என்று தொடங்கியவள், சட்டென உதட்டைக் கடித்துப் பேச்சை நிறுத்தினாள்.

''ஊகூம். இது ஒளிவு மறைவு விடுத்து, உண்மை விளம்புகிற நேரம். சொல்லு. நீ எப்போது என்னை

நினைக்கத் தொடங்கினாய்?'' என்று அதிகாரமாக வின வினான், அவன்.

காதல் புரிவது பற்றி, அன்று நினைத்ததை அவள் கன்னம் சிவக்கக் கூறவும், வாய்விட்டுச் சிரித்துவிட்டு, ''ஆனாலும், நான்தான் முந்திக் கொண்டவன். நினைவி ருக்கிறதா, 'உன் பக்கம் நான் வந்து விடுவேன்' என் றாயே. வரத் தயார் என்று அப்போதே தோன்றிவிட்டது. எனவே, நான்தான் முந்தியவன் இல்லையா?' 'மந்திய வன் கை மந்திரவாள்' என்று ஒரு பழமொழி உண்டு. இந்த மந்திரக் கைகளால் என்ன செய்யலாம்? பக்கத்தில் இருப்பவளை ஆசையாக அணைக்கலாமா?...'' என்று கண் சிமிட்டிக் கேட்டான், தனஞ்சயன்.

கலகல என்று நகைத்தபடி எழுந்து, ''இன்னும் கொஞ்ச நேரம் இங்கேயே உட்கார்ந்திருந்தால், ஒரு படையே நம்மைத் தேடி வந்துவிடும், கிளம்புங்கள்'' என்றாள் வசுந்தரா.

புன்னகையோடு அவனும் எழுந்தான்.

★ ★ ★ ★ ★


அன்பின் தன்மையை
அறிந்த பின்னே...
ரமணிசந்திரன்